# திருக்கோயில்

ஜூலை – ஆகஸ்ட் '83 விலை ரூ. 4-00






அருள்மிகு வடபழநியாண்டவர் திருக்கோயிலில், 24.8.83 அன்று நடைபெற்ற சிறப்புத் திருமணவிழா மேடையில், அறநிலையத்துறை மைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்**, அவரது துணைவியார் ருமதி இராஜம்மாள் வீரப்பன், அறநிலையத்துறை ஆணையர் திரு **ஷண்முகசிகாமணி** ஐ.ஏ.எஸ்., தேவிஉபாசகர் இராமதாசர்சுவாமிகள், . சுந்தரராமன், முன்னாள் அறங்காவலர் திரு. கே. எம். ாமியன். திரு. கே. கோபால் ஆகியோர்கள் உள்ளனர்.




அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில், 24.8.83 அன்று நடைபெற்ற இந்து ஆதிதிராவிடர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்குச் சிறப்புத் திருமண விழாவின்போது தமிழக அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்களும், அவரது துணைவியாரும் மணமக்களுக்கு சீர்வரிசை வழங்குதல் ஆலய நிர்வாக அதிகாரி, திரு. எஸ். சோலப்பன், பி.ஏ., உடனிருக்கின்றார்.

முகப்பு

அருள்மிகு முருகன் திருவுலாப் படிமம்,
சுவாமிமலை
தஞ்சை மாவட்டம்

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 25 | திருவள்ளுவர் ஆண்டு 2014, ருத்ரோத்காரி ஆண்டு-ஆடி & ஆவணி ஜூலை & ஆகஸ்ட் 1983 விலை ரூ. 4-00 | மணி : 10 & 11

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | |
|---|---|
| **உள்நாடு** | **ரூ. 24.00** |
| **வெளிநாடு** | **ரூ. 36.00** |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

ஆன்மிக மாநாட்டில் ஆற்றிய சிறப்புரை
—அறநிலையத்துறை அமைச்சர்

புதிய ஆணையர்—ஓர் அறிமுகம்

உலகாயதன் மதமும், அதன் மறுதலையும்
—ஆசிரியர்—

நியாய தரிசனம் ,,

வைசேடிக தரிசனம் ,,

சாங்கிய தரிசனம் ,,

யோக தரிசனம் ,,

மீமாம்சைத் தரிசனம் ,,

மூலமும் உரையும்
—திரு ம. அ. முருகேசன் அவர்கள்

திருமால் நெறி
—திரு கே. இராமநுஜாசாரியார்.

திருமந்திர யோகம்
—தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள்

கீழ்வேளூர் மாடக்கோயில்
—டாக்டர் திரு இரா. கலைக்கோவன்.

சிவஞானபோதச் செம்பொருள்
—ந. ரா. முருகவேள்

வேதாந்த தரிசனம் ,,

அகம் தரும் அருளிச் செயல்கள்
—திரு நா. வேணுகோபாலநாயகர் அவர்கள்

மேற்கியல் வேதாந்தம்
—திரு டாக்டர் டி.எம்.பி. மகாதேவன் அவர்கள்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# ஆன்மிக மாநாட்டில் ஆற்றிய சிறப்புரை *

மாண்புமிகு


இராம. வீரப்பன் அவர்கள்

*அறநிலையத்துறை அமைச்சர்.*


## முன்னுரை

வணக்கத்திற்குரிய பங்காரு அடிகளார் அவர்களே! இந்த நான்காவது ஆன்மிக மாநாட்டினுடைய மகளிர் பிரிவின் நிகழ்ச்சிகளைத் லைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கின்ற ரண்புமிகு உயர்நீதிமன்ற நீதிபதி திருகோகுல ருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு சட்டத் றை அமைச்சர் அருமைச் சகோதரர் பொன் னயன் அவர்களே! தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களே! சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்களே! இந்த மகளிர் பிரிவுக்குத் தலைமை ஏற்று, இந்த மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கின்ற திருமதி. விசாலாட்சி அம்மையார் அவர்களே! இந்த ஆதிபராசக்தி கல்வி-மருத்துவ-பண்பாட்டு அறநிலையைச் சேர்ந்த நிர்வாகிகளே! ஆயிரக் கணக்கில் திரண்டு இருக்கின்ற தாய்மார்களே! பெரியோர்களே! நண்பர்களே! 8.5.83 முதல் தொடங்கிக் கடந்த ஒருவார காலமாகச் சிறப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, இந்த நான்காவது ஆன்மிக மாநாட்டில் கலந்துகொள்ளுகின்ற, ஒரு வாய்ப்பை அளித்த, இந்த மாநாட்டுக் குழுவினருக்கு, என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## பங்காரு அடிகளார்

இந்த மாநாட்டைப் பொறுத்தவரையில், இங்கே என்ன நிகழ்ச்சி நடைபெறுகிறது என்பதையும், அறிஞர் பெருமக்கள் என்ன பேசுகிறார்கள் என்பதையும், ஒருபார்வையாளனாக இருந்து பார்க்கவேண்டும் என்றுதான் விரும்புகின்றேனே தவிர, இந்த விவாதங்களிலேயோ, அல்லது கருத்துக்கள் வழங்குவதிலேயோ, பங்கு எடுத்துக் கொள்வதிலேயோ, நான் அக்கறை காட்டவில்லைஎன்பதை, முதலிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், இவ்வளவு ஆற்றல்மிக்க சக்தியைப் பெற்றிருக்கின்ற நமது அருள்திரு பங்காரு அடிகளார் அவர்கள், இந்த மகத்தான சக்தியை வாயினாற் பேசாமலே செயலில் நடத்திக் காட்டும் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும், இங்ஙனம் பேசாமல் இருந்துகொண்டே இந்த இயக்கத்தை இன்று வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான், இந்த மகத்தான இயக்கத்திற்கே இருக்கின்ற மிகப்பெரிய சிறப்பு என்பதையும், நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்

## ஆன்மிகம்

ஆன்மிகம் என்பதற்கு, நமது தவத்திரு அடிகளார் அவர்கள், 'உயிரியல்' என்கிற விளக்கத்தைக் கூறியதை நான் கேட்டேன். உயிரியல் என்றால், மனிதன் மாத்திரம் உயிர் படைத்தவன் அல்ல. மரம் செடி கொடி புல் பூண்டு ஆகிய எல்லாமே, அந்த உயிரியலுக்குள்ளே வருகின்றன என்ற உண்மையைக் கேட்ட நேரத்தில், நம்முடைய சைவசித்தாந்தமே, உயிர் என்று சொன்னாலேயே அனைத்தையும் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒன்று என்று விளக்கம் அளித்தார்கள். ஆனால் இந்த ஆன்மிகம் என்கின்ற அந்தப் பொருள், அந்த வார்த்தை, அப்படி அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகி, மனிதனுடைய உயிரைக் குறிக்கின்ற ஒரு சொல்லாகப் பழக்கத்திலே வந்திருக்கின்றது என்று, அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். அதை இன்றைக்கு வெளியிட்டிருக்கின்ற இந்த மலரில், தமிழறிஞர் வெள்ளைவாரணனார் அவர்கள், இதைப்பற்றி விளக்கம் அளிக்கின்ற நேரத்தில், 'மெய்யுணர்வு' என்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உயிர் என்று

---

* *மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி கல்வி—மருத்துவ—பண்பாட்டு—அறநிலை மகளிர் பிரிவின் சார்பில், சென்னை தேனாம்பேட்டையில், மே மாதம் 13, 14, 15, தேதிகளில் நடைபெற்ற 'நான்காவது ஆன்மிக மாநாட்டில்', அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது.*

—ஆசிரியர்.

சொல்லுகின்ற அதே நேரத்தில், பிற உயிர்களுக்கு இல்லாத நிலையில், மனிதன் பேசுகின்ற ஆற்றலைப் பெற்றிருக்கின்றான். இந்தக் காரணத்தினால்தான், இன்றைக்கு நாம் வளர்ச்சி அடைந்திருக்கின்றோம். இந்த வளர்ச்சியின் விளைவாக ஏற்படக்கூடிய ஒற்றுமையையும் அமைதியையும் இழந்துவிட்டு, நாம் மிருகங்களைவிடக் கேவலமாக மாறுகின்ற சூழ்நிலையையும், இந்தப் பேசுகின்ற திறமையினாலேதான், இன்றைக்கு மனிதன் பெற்றுக் கொண்டிருக்கின்றான். பேசாமலே இருந்து காரியம் ஆற்றிக் கொண்டிருக்கின்ற பங்காரு அடிகளார் அவர்கள், இத்தகைய ஒரு மகத்தான சக்தியை இன்றைக்கு உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத்தான், நான் வியந்து வியந்து இங்கே பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

## அடிகளாருடன் சந்திப்பு

கடந்த 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்பு தான், அடிகளாரைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. என்னை அழைத்ததனாலே நான் அங்குச் செல்லவில்லை. அல்லது அங்கே அப்படி ஒரு அமைப்பு இருக்கின்றது என்று தெரிந்தும் நான் சொல்லவில்லை. அறநிலையத்துறையின் வேறொரு பணிக்காக நான் மயிலத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். என்னோடு அறநிலையத்துறையின் ஆணையர், பின்னாலேயே காரிலே வந்துகொண்டு இருந்தார். இந்த மேல்மருவத்தூரைத் தாண்டி ஒரு கிலோமீட்டர் அல்லது இரண்டு கிலோமீட்டர் தாண்டியதற்குப் பிறகு, நான் வண்டியை நிறுத்திக் கீழே இறங்குகின்றேன். பின்னாலே வண்டியில் வந்த ஆணையர் அவர்கள், அப்பொழுதுதான் என்னிடத்தில் விரைந்து வந்து ''அமைச்சர் அவர்கள் விரும்பினால், இப்பொழுது நாம் தாண்டி வந்தோமே, அந்த மேல் மருவத்தூரில் உள்ள நம்முடைய அடிகளார் அவர்களைப் பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று தெரிவித்தார்கள்''. நான் முதன் முதலாக மேல்மருவத்தூரைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அப்போதுதான். அங்கே அடிகளார் அவர்கள் இருக்கின்றார்கள் என்று தெரிந்துகொண்டதும் அப்போதுதான். ஆனால் நான் அதைத் தாண்டிச் செல்லுகின்ற நேரத்தில், அன்றைக்கு நூற்றுக்கணக்கானவர்கள் அங்கே குழுமியிருந்த அந்த நிகழ்ச்சி மாத்திரம், என்னுடைய பார்வையிலேபட்டது. ஆயினும் அதைப் பற்றியசிந்தனைகொள்ளாமல், அதைத் தாண்டிச்சென்றேன். ஆணையர்அவர்களுக்குத் 'தாண்டி வந்துவிட்டதனால் என்ன? அடிகளார் அவர்களைப் பார்த்துவிட்டே செல்லலாமே' என்று தெரிவித்தேன். இரண்டு கிலோமீட்டர் தாண்டிச் சென்ற நான், மீண்டும் திரும்பி வந்து அடிகளாரைச் சந்திக்கின்ற வாய்ப்பை அன்று பெற்றேன். அன்றைக்கு அவர்கள் அருள் வாக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்று சந்தித்ததற்குப் பிறகு, இரண்டு நிகழ்ச்சிகளிலேயே நான் அழைப்புப் பெற்றுக் கலந்து கொண்டிருக்கின்றேன்.

## மக்கட் பணியே மகேசன் பணி

அந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே, மக்களுக்குப் பணியாற்றுகின்ற, உதவி புரிந்து தொண்டாற்றுகின்ற நிகழ்ச்சிகள். ஆன்மிகம் என்றால் எப்பொழுதுமே இறைவனைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்; அல்லது இறைவனுக்குப் பக்கத்திலேயே இருப்பவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும் என்கின்ற ஒரு தத்துவத்தை, இந்த நாட்டிலே தெரிந்தோ தெரியாமலோ, நம்முடைய பெரியவர்கள் புகுத்திய காரணத்தினால், ஆண்டவன் பெயராலே அல்லது ஆலயத்தின் பெயராலே, மக்கள் பணிகள் நடைபெறக்கூடாது என்று சொல்லுகின்ற ஒரு தத்துவம்கூட, இன்றைக்கு நம்மிடையே வளர்ந்திருக்கின்றது.

## வார வழிபாட்டு மன்றங்கள்

ஆனால் இங்கே பேசாமல் இருந்து கொண்டே, தம்முடைய சக்தியினால் இன்றைக்குக் காரியங்களை உருவாக்கி நடத்திக் கொண்டிருக்கின்ற அடிகளார் அவர்கள், 'மக்கட் பணி தான் மகேசன்பணி' என்று இன்றைக்கு நாட்டிலே செயலாற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம். அதனுடைய விளைவாகவே இர...ா, நான்காவது ஆன்மிக மாநாட்டை நடத்...ற கொண்டிருக்கின்றீர்கள். ''500க்கு மேற்பட...து ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்க... நாட்டிலே இன்றைக்குத்தோன்றியிருக்கின்றன. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, இந்த மன்றங்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன. நேற்று இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காகவே, பகலிலே அலுவலகத்தில் இருந்து திரும்பி வந்தபோது இங்கு வந்தேன். சிவப்பு ஆடை அணிந்த ஆண்களும் பெண்களும் நூற்றுக்கணக்கில் இந்தச் சாலையிலே நடமாடிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்தேன். இதை நான் மேல்மருவத்தூர் ஆலயத்தில் சந்தித்த போது, சில நூற்றுக்கணக்கிலே இருந்தார்கள். ஆனால் மாநிலத்தினுடைய பல பகுதிகளிலேயிருந்து, தமிழகத்தில் உள்ள தலைநகரங்களிலிருந்து, ஆயிரக்கணக்கிலே மக்களைத் திரட்டுகின்ற ஒரு சக்தியை, வாய்திறந்து பேசாமலே ஒருவர் பெற்றிருக்கின்றார் என்றால், நம்மையெல்லாம் மீறிய ஒரு சிறந்த சீரிய சக்தி படைத்தவராக, அவரை நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றோம் என்பதில், யாருக்கேனும் ஏதாவது சந்தேகம் வந்தால், அந்தச் சந்தேகத்திற்கு விடை அளிப்பதுபோல்தான், இங்கே நமது மாண்புமிகு நீதிபதி அவர்களே தீர்ப்பளித்து விட்டார்கள்.

உயர்நீதி மன்றத்தினுடைய ஒரு நீதிபதியாக அவர்கள் பொறுப்பிலே இருந்தாலும்கூட, அதன் தலைமை நீதிபதிக்குரிய அந்தத் தகுதிகளையெல்லாம் இவர்கள் பெற்றிருக்கின்றார்கள். ஆகவே இவர்கள் வளர்ந்து கொண்டிருக்கின்ற வரலாறும், இன்றைக்கு இருக்கின்ற இந்த இடமும், இவர்கள் அளிக்கின்ற தீர்ப்புக்கு மிகச் சிறந்த ஒரு மரியாதையையும் மதிப்பையும் இந்த நாட்டிலே தந்து கொண்டிருக்கின்றன என்பதை, நாம் உணர்ந்தாக வேண்டும்.

## சில பத்திரிகைகள்

இங்கே இந்த மாநாட்டிற்கு வரவேற்புரை நிகழ்த்திய திருமதி விசாலாட்சி அம்மையார் அவர்களும், அதற்குப் பின்னாலே அறிக்கை வாசித்த திரு தியாகராஜன் அவர்களும், திரு. வேங்கடசாமி அவர்களும், சில கருத்துக்களை யெல்லாம் ஆங்காங்கே கோடு இட்டுக் காட்டினார்கள். நம்முடைய நண்பர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள், கொஞ்சம் உணர்ச்சி அதிகமாகப் பொங்கிச் சில கருத்துக்களை இங்கே எடுத்து உரைத்தார்கள். யார் என்ன எழுதுகிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. பத்திரிகைகளிலே எழுதுகின்றவர்கள், தங்கள் அறைக்குள்ளே இருந்துகொண்டு எழுதுகின்றார்கள். நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை, அவர்கள் அருள்கூர்ந்து தெரிந்துகொள்ளவேண்டும். இந்தநிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்ட ஒரு பத்திரிகை, அமைச்சர்கள் எல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு ஓடுகின்றார்கள் என்று, தலைப்பு இட்டு எழுதியது. ஆம். அமைச்சர்கள் எல்லாம் தாமாக இங்கே ஓடிவரவில்லை. அமைச்சர்கள் அழைக்கப்பட்டுத்தான் இங்கே ந்திருக்கின்றார்கள். அழைக்கப்படாமல் இருந் லும், அறநிலையத்துறை அமைச்சர் இதற்கு திருப்பார்! நான் அவர்களுக்குச் சற்றுப் ங்கமாகவே தெரிவிக்கின்றேன். ஒளிய லை. மறையவில்லை. நாங்கள் ஓடிவந்தது ங்களுக்குத் தெரிகின்றது. ஆனால் நீங்கள் ஓடிப்போய் நம்முடைய அடிகளாரின் காலிலேயே விழுந்தது ஊருக்குத் தெரியாது. இந்த இரட்டை வாழ்க்கையை நடத்துகின்ற முறையை, அருள்கூர்ந்து பொதுப்பணியிலே ஈடுபடுகிறவர்கள், இனிமேலாவது விட்டுவிட வேண்டும். மிகத் தெளிவான ஒரு கொள்கையை நீ ஏற்றுக்கொண்டாய் என்றால், உன்னுடைய இதயத்திற்கு அது சரி என்று படுகிறது என்றால், அதை நீ ஆண்மையோடு ஏற்றுக்கொண்டு வெளியிலேவா! அதிலே சந்தேகம் இருந்தால், அதைத் தெரிவித்துவிட்டு ஒதுங்கிவிடு. ஏற்றுக் கொள்வதும், மறுப்பதும் அவரவர்களுக்குள்ள உரிமை. ஆனால் ஏற்றுக் கொள்ளுகின்ற ஒருவனை இழிவுபடுத்துவதற்கு எந்தச் சட்டமும் எவனுக்கும்இடம் தரவில்லை.

## பகுத்தறிவு

இங்கே நம்முடைய குன்றக்குடி அடிகளார் அவர்கள், மிகுந்த எச்சரிக்கையோடு அந்த வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். ஆண்டவன் இருக்கின்றானா? இல்லையா? என்கிற விவாதம் நீண்ட நெடுங் காலமாகவே நிகழ்ந்து வருகின்றது. மனிதன் எந்த அளவுக்கு ஆராய்ந்து ,எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகுநிலவிலேகூடக்கால் வைத்திருக்கின்றான்? மனிதன் போய்க் கால்வைக்க வேண்டிய இடம், இன்னும் என்னென்னவோ, எவ்வளவோ இருக்கின்றன. அவைகள் எங்கே இருக்கின்றன என்பதே தெரியவில்லையே. ஆகவே ஆண்டவன் ஒருவன் உண்டு என்று நம்புவது பகுத்தறிவுக்கு விரோதமல்ல என்று, அடிகளார் அவர்கள் பண்போடு கூறினார்கள். நான் அதைக் கொஞ்சம் தெளிவாகவே சொல்லுகின்றேன். ஆண்டவன் உண்டு என்று சொல்வது பகுத்தறிவுக்கு விரோதம் அல்ல என்று, அவ்வளவு ஜாக்கிரதையாக நாம் வார்த்தைகளைப் போடவேண்டியதில்லை.அதை இப்படி மாற்றிச் சொல்லுங்கள். ஆண்டவன் இல்லை என்று சொல்லுவது, பகுத்தறிவுக்கு உகந்தது அல்லஎன்று சொல்லுவதற்கு முன்வரவேண்டும். எனக்குத் தெரியாத ஒன்றை நான் தெரியவில்லை என்று ஒத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அப்படி ஒரு பொருள் இல்லவே இல்லை என்று சொல்லுகின்ற உரிமையை, எனக்கு யார் தந்தார்கள்? இன்றைக்கு எனக்குத் தெரியாதவைகள் கோடி கோடி இருக்கின்றன. அவைகளெல்லாம் இல்லை என்று சொல்லுகின்ற உரிமையை, எனக்கு யாரும் தரவில்லை. உனக்குத் தெரியவில்லை என்று சொன்னால், நீ தெரிந்துகொள் என்று மற்றவர்கள் சொல்லலாம். ஆகவே உண்டு என்று சொல்லுகின்ற உரிமை ஒருவர்க்குஉண்டு என்று சொல்லுகின்ற பொழுது, இல்லை என்று சொல்லுகின்ற உரிமை, எனக்கு இருக்கின்றது என்று யார் வேண்டுமானாலும் சொல்லட்டும், ஆனால் உண்டு என்று சொல்லுகின்றவனைக் காட்டுமிராண்டி என்றும், அறிவில்லாதவன் என்றும், மூட நம்பிக்கைக்காரன் என்றும் சொல்லுகின்ற காரியத்தைத் தடுத்து நிறுத்துகின்ற அந்தப் பணியை, நமது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையேற்று நடத்தவேண்டும் என்று, நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## ஒன்றே குலம் ; ஒருவனே தேவன்

இங்கே நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்துவக்கிய நேரத்திலே தெரிவித்தார்கள், அதைத்தான் இந்த ஆதிபராசக்தி நிலையமும்தெரிவிக்கின்றதுஎன்று சொன்னார்கள். அது ஒருவகையில் உண்மைதான். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கின்ற அந்த உண்மையைப் பேரறிஞர் அண்ணா அவர்கள், தாமாகவே புதிதாக உண்டாக்கிச் சொல்லவில்லை. அதை அருள்கூர்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே, திருமூலர் வகுத்துத் தந்த தாரக மந்திரம் அது. அது திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம் என்ற நூலில் இருக்கின்றது. அந்தத் திருமந்திரத்திலே உள்ளதைத்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள், சமுதாயத்திற்குக்கொண்டு வந்து முன்வைத்துக் கொடுத்தார். இதற்கு நம்முடைய குன்றக்குடி அடிகளார் அவர்கள், ஓர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். புதுக்கோட்டையிலே தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவிலே பேசுகின்றபொழுது, 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்கிற தத்துவத்தைத் திருமூலர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே சொல்லிவிட்டுப் போனார். அதைப் பத்தாவது திருமுறையாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்

றோம். ஆனால் இதை இந்த நாட்டு மக்களிடத்தில் எடுத்து வைக்கின்ற வேலையை, நாம் செய்யத் தவறிவிட்டோம். அதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் செய்தார்கள் என்று, தவத்திரு அடிகளார் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்.

## விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும்

இங்கே நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள், விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்று என்று கூறினார்கள். அதை அவர்கள் சற்றுத் திருத்திக் கொள்ளவேண்டும். மெய்ஞ்ஞானத்திற்குள்ளேதான் விஞ்ஞானம் இருக்கிறது.ஒரு அறிஞர் மிகத் தெளிவாக ஒரு கருத்தைச் சிறப்பாகச் சொல்லியிருக்கின்றார். ''விஞ்ஞானம் எங்கே தோற்றுச் செயலிழந்து விடுகின்றதோ, அங்கேதான் மெய்ஞ்ஞானம் தோன்றுகின்றது-தொடங்குகின்றது'' என்று குறிப்பிட்டுள்ளார். விஞ்ஞானம் பிரித்துப் பார்க்கின்ற அந்த அறிவை, மெய்ஞ்ஞானம் என்பது ஒன்று சேர்த்துத் தனக்குள்ளே வைத்திருக்கின்றது. இன்றைக்கு உலகம் இயங்குவதற்கு ஐந்து அடிப்படைப் பொருள்கள் உள்ளன. அவைகளைப் பஞ்ச பூதங்கள் என்பர். இந்தப் பஞ்ச பூதங்களுக்கும், நம்முடைய முன்னோர்கள் ஆலயங்களை எழுப்பினார்கள். இந்து ஐந்து பூதங்களையும் கடந்து, இந்த ஐந்து அடிப்படைப் பொருள்களையும் தாண்டி, ஆறாவது ஒரு அடிப்படைப் பொருள் இருக்கின்றது என்று எந்த விஞ்ஞானி கண்டுபிடித்துக் கொடுத்திருக்கின்றான்? இந்த ஐந்து பூதங்களாகிய அடிப்படைப் பொருள்களால்தான், உலகம் அமைந்திருக்கின்றது ,உலகம் இயங்கி வருகின்றது. இந்த உலகம் தோன்றிய நேரத்திலேயே இறைவன் தோன்றிவிட்டான்; இறைவனைப் பற்றிய கருத்துக்கள்தோன்றிவிட்டன. இறைவன் இருக்கின்றானா? இல்லையா? என்று கண்டுபிடிக்கிற திறமை இப்போது நம்மிடத்தில் இல்லை. அதைக் கண்டுபிடிக்கின்ற முயற்சியில் யாராவது ஈடுபடட்டும். அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அந்த வேலையற்ற வேலையிலே, நாம் ஏன் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டும்? உண்டு என்று சொல்வதனால் என்ன நஷ்டம்? என்ன இழப்பு?

## பன்னிரு திருமுறைகள்

நீங்கள் சுவரிலே எழுதிய சித்திரம்,காலத்தினால் கரைந்துவிட்டது. அதனால் கால் கரைந்துவிட்ட காரணத்தினால் ஒருவன் புதியதாக வந்து அந்தக் காலை எழுதுவதற்குப் பதிலாக, வேறு ஒரு உருவத்தை எழுதிவிடுகிறான். கை போய்விட்ட காரணத்தினாலே, கையை எழுதுகிறேன் என்று ஒருவன் வந்து, அந்தக் கையை மாற்றி எழுதுகிறான். சிதைந்து குறைந்துவிட்டது. ஆகவே இந்தச்சித்திரத்தைத் திருத்திச் செம்மைப்படுத்தவேண்டும் என்பது தான், நமது இலட்சியமாக இருக்க வேண்டுமே தவிர, சுவரையே இடித்துவிடு என்று சொல்வது, நல்ல இலட்சியமாக இருக்கமுடியாது. சுவரை இடித்துவிட்டால், சித்திரமே இல்லை.

ஆன்மிகம் என்பது உயிரியல் ஆனாலும் சரி, மெய்யுணர்வு ஆனாலும் சரி, நம்முடைய முன்னோர்கள் மிகத் தெளிவாகப் பல நல்ல கருத்துக்களைச் சொல்லி வைத்திருக்கின்றார்கள். பன்னிரண்டு திருமுறைகளைப் பெற்றிருக்கின்றோமே, அருமையான செந்தமிழிலே,ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, நம்முடைய பெரியவர்கள் சொல்லிவிட்டுப் போனார்களே, அவற்றை நாம் நம்முடைய மக்களிடையிலே எடுத்து வைக்க, தெரிவிக்கத் தவறிவிட்டோம். பன்னிரு திருமுறைகளைத் தாண்டி, எந்த விஞ்ஞானக் கருத்து இன்றைக்குப் புதிதாக வந்துவிட்டது என்று, அருள்கூர்ந்து சொல்லுங்கள்.

## தாயுமானவரும், இராமலிங்கரும்

தமிழிலுள்ள தோத்திர நூல்கள் அளவற்றவை. ஆயினும் அவற்றுள் மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்தவை திருமுறைகளே. வழிவழியாக, எத்தனையோ பல நூற்றாண்டுகளாகத் தோன்றியருளிய தமிழகச்சான்றோர் பெருமக்கள் பலரும், திருமுறைகளைப்பெரிதும் போற்றியுள்ளனர்.

> ''மொழிக்கு மொழி தித்திப்பாக
> முத்தமிழ் நால்வர் சொலும் தமிழ்...''

என்று தாயுமான சுவாமிகள் திருமுறைகளைப் புகழ்ந்துள்ளார்.

> ''அந்த நால்வரும்செய் அருந்தமிழ்கேட்டுப்
> புறத்தில் நடக்கச்
> சற்றே கால்வருமோ?...''

என்று இராமலிங்கவள்ளலார் திருமுறைகளைப் பெரிதும் புகழ்கின்றார். வள்ளற்பெருமான் தேவார திருவாசகத் திருமுறைகளை எவ்வாறெல்லாம் போற்றித் துதித்துள்ளார் என்பதற்கு, எத்தனையோ பல திருவருட்பாப்பாடல்களை எடுத்துக்காட்டலாம்.

> ''தேன்படிக்கும் அமுதாம்உன்
> திருப்பாட்டைத் தினந்தோறும்,
> நான்படிக்கும் போது, என்னை
> நான்அறியேன்! நாஒன்றோ?
> ஊன்படிக்கும்! உளம்படிக்கும்!
> உயிர்படிக்கும்! உயிர்க்குஉயிரும்
> தான்படிக்கும்! அனுபவங்காண்!
> தனிக்கருணைப் பெருந்தகையே!''

என்னும் திருவருட்பாப் பாடல் ஒன்றே, திருமுறைகளில் இராமலிங்க வள்ளலார்க்கு இருந்த எல்லையற்ற ஈடுபாட்டினை இனிது உணர்த்தப் போதியதாகும்.

## மறுமலர்ச்சி இலக்கியங்கள்

சங்க காலத்திற்குப் பின்னர்ச் சுமார் 300 ஆண்டுகளுக்கு மேல் (கி. பி. 300-600), களப்பிரர் என்பவர்கள் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் கொடுங்கோல் ஆட்சி புரிந்துவந்தனர். தமிழுக்கும் தமிழர்களுக்கும் அவர்களால் விளைந்த கேடுகளுக்கு அளவேயில்லை. வரலாற்று அறிஞர்கள் அந்த 300 ஆண்டுகளைக் ''களப்பிரர்களின் இருண்ட காலம்'' என்று குறிப்பிடுவர். அந்த இருண்ட காலச் சூழ்நிலையில் தமிழ்மொழியும் இலக்கியமும், கவிதையும், கலைகளும், தமிழர் வாழ்வும், பலவகைகளிலும் நலிந்து பாழ்பட்டன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி, பக்தி இயக்கத்தைப் பரப்பித் திருமுறைகளையும், திவ்வியப் பிரபந்தங்களையும் பாடித் தமிழைப் பரப்பினர். அவற்றால்தான் தமிழகம் பல்லாற்றானும் புத்துயிர்ப்பும் புத்துணர்ச்சியும் பெற்று மறுமலர்ச்சியுற்றன. ஆதலால் திருமுறைகளையும் திவ்வியப்பிரபந்தங்களையும் ''தமிழ்நாட்டு மறுமலர்ச்சி இலக்கியங்கள்'' என்று போற்றிப் புகழ்தல் பொருந்தும். தமிழ்மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளைகொண்டு, அவர் ளைப் பெரிதும் மகிழ்வித்து வளப்படுத்திச் ழிக்கச் செய்து வாழ்வித்தவை, நம் திரு றைகளும் திவ்வியப்பிரபந்தங்களுமே யாகும். தனால், அவற்றை ''மக்கள் நல இலக்கியங்கள்'' என்றும் புகழ்ந்து பாராட்டலாம். திருமுறைகளின் சொல் புதிது; பொருள் புதிது; நடை புதிது; சுவை புதிது; குறிக்கோள் புதிது! ஆகவே இவற்றைத் தமிழ்நாட்டின் ''புதுமைப் பேரிலக்கியங்கள்'' என்றும் துணிந்து கூறலாம்.

## அயலவர் புகழுரை

திருமுறைகளின் அருமை பெருமைகளுக்கு ஓர் அளவேயில்லை. ''உலகில் வேறு எந்த நெறியிலும் மொழியிலும் இனத்திலும் இப்படிப்பட்ட சிறந்த பக்தி இலக்கியங்கள் இல்லை. உணர்ச்சி மிக்க, அழகிய கருத்துக்கள் செறிந்த, உள்ளத்தைக் கொள்ளைகொள்ளுகின்ற, சொல் வளமும், பொருள்வளமும் நிறைந்த, தெய்விகக் கவிதைகள், தமிழகத்திற்போல, உலக நாடுகள் வேறு எதிலும் தோன்றிவில்லை'' என்று எல். டி. பார்னட் என்னும் ஆங்கிலப் பேரறிஞர் எழுதியிருக்கின்றார்.

இவ்வாறே மற்றொரு மேலைநாட்டறிஞர் ''எனக்குத் தெரிந்த வரையில், நான் அறிந்த எந்தவொரு மொழியின் இலக்கியத்திலும், தனிமனிதனுடைய வாழ்க்கை, அவ்வாழ்வில் அவனுக்கு நேருகின்ற தொல்லைகள், துயரங்கள், தளர்ச்சிகள், அவனுடைய எதிர்கால நம்பிக்கைகள், அச்சங்கள், மனஉறுதி, வெற்றிப்பாடு ஆகியவைகள், இந்தத் திருமுறைகளைப்போல வெளிப்படையாகவும், பொருள் பொதிந்தனவாகவும், அழகுற எடுத்து விளக்கப் பெறவில்லை. இத்துறையில் தமிழ் நாட்டுத் திவ்வியப் பிரபந்தங்கள், திருமுறைகள் ஒப்புயர்வற்றுத் தலை சிறந்து விளங்குகின்றன'' என்று சார்லஸ எலியட் என்னும் பேரறிஞர் தம்முடைய வரலாற்று ஆராய்ச்சிநூல் ஒன்றில் புகழ்ந்திருக்கின்றார்.

## எப்படி ஒன்றுபடப் போகின்றோம்?

விஞ்ஞானம் விஞ்ஞானம் என்றால், நான் பேசிக் கொண்டிருக்கின்ற இந்த ஒலிபெருக்கியைக் கண்டுபிடித்துவிட்ட ஒருகாரணத்தினாலேயே, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பழைய அறிவு நூல்களெல்லாம் பயனற்றுப் போய் விட்டன என்று தள்ளிவிடமுடியுமா? நம்மை ஒருசிலர் வேறு எங்கேயோ திசை திருப்பி விட்டார்கள். நாம் எங்கேயோ பயணத்தை மாற்றி அமைத்துக் கொண்டுவிட்டோம். அதனால் நமக்குப் பலவகைச் சங்கடங்களே ஏற்பட்டுள்ளன. இல்லையானால், ''இங்கே எல்லோரும் ஒன்று சேர்வோம், ஆதிதிராவிடர்களே வாருங்கள், உங்களை அழைத்துக் கொள்ளுகின்றோம்'' என்று நாம் சொன்னால், அதை ஒரு சிலர் எதிர்ப்பது ஏன்? எப்படி சட்டம் படித்தவர்கள் வக்கீல்கள் ஆகலாமோ, எவ்வாறு மருத்துவக் கல்வி பயின்றவர்கள் மருத்துவர்களாக வரலாமோ, எங்ஙனம் பொறியியற் பட்டப்படிப்பு படித்தவர்கள் பொறியியல் அலுவலர்களாகப் பணியேற்கலாமோ, அதைப் போல அர்ச்சகர் என்கிற பணியாற்றுவதற்கு அதற்குரிய பயிற்சி பெற்றவர்கள் அர்ச்சகர்கள் ஆகலாம். மனிதனாகப் பிறந்தவன் யாராக இருந்தாலும், உரிய பயிற்சியும் தகுதியும் பெற்றால், அர்ச்சகராக வரலாம் என்று சொன்னால், அவ்வாறு சொல்லுவதே பாவம், நினைப்பதே தீட்டு என்று வழக்கு மன்றத்திற்குப் போய் நிறுத்துகின்றார்கள். இந்நிலை இருந்தால் எப்படி இந்த நாட்டில் நாம் ஒன்றுபடப் போகின்றோம்; அல்லது மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தப் போகின்றோம்?

## ஏதோ ஒரு சக்தி இயங்கி வருகின்றது:

இங்கே சிவப்புச் சட்டையைப் போட்டு, சிவப்பு ஆடையைக் கொடுத்து, நம்முடைய அடிகளார் அவர்கள், வாய்திறந்து பேசாமலேயே ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றுபடுத்தியிருக்கின்றாரே, அது எவ்வளவு பெரிய சாதனை! ஏற்கனவே எனக்கு ''வீரப்ப ஆழ்வார்'' என்று சிலர் பட்டம்தந்திருக்கின்றார்கள். நான் அந்தப் பட்டத்தையே உறுதிப்படுத்துகின்றேன். அந்த உணர்வோடு வேண்டுமானாலும் சொல்லுகின்றேன். ஆயிரக்கணக்கான மக்களை ஒன்று படுத்துகின்ற சாதனையை, நம்முடைய பங்காரு அடிகளார் தாமாகவே சாதாரணமாகச் செய்துவிட்டார் என்று என்னாலே நினைக்க முடியவில்லை. நாமெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற சக்தி, அது நம்மையும் அறியாமல், நமக்குள் எங்கேயோ இருந்துகொண்டு, நம்மை ஆட்டிப் படைத்து இயக்கிக் கொண்டு வருகின்றது.

நாம் எதற்கெடுத்தாலும், ஏன்? எப்படி? எதற்கு? என்று கேள்விகளைப் போடுகின்றோம்.

இக் கேள்விகளுக்கெல்லாம் நாம் உரிய விடைகளைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை. எல்லாமே தெரிந்துவிட்டால் இந்த மனிதனைப் பிடிக்க முடியுமா? ஒரு சிறிது அளவு தெரிந்ததை வைத்துக்கொண்டே, இந்த ஆட்டம் போடுகின்றோமே! எல்லாவற்றையுமே தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பைப் பெற்றுவிட்டால், நாம் எந்த அளவுக்கு ஆட்டம் போடுவோம்!

ஆணவத்தைப் பற்றிப் பேசும்போது ஸ்ரீபால் அவர்கள், ஒரு கதையைச் சொன்னார்கள். எப்படியெல்லாம் மனிதன் அரைகுறையாக விஷயங்களைத் தெரிந்து கொண்டு ஆட்டம் போடுகின்றான்; இன்னும் சொல்லப் போனால், என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமலே இவ்வளவு ஆட்டம் போடுகின்ற நாம், எல்லாவற்றையும் தெரிந்துகொண்டால் என்னவென்ன எல்லாம் செய்வோம் என்பதைச் சுவையாக விளக்கினார்கள்!

## மகத்தான மாற்றம்

இங்கே நமது அன்பிற்குரிய அருள்திரு பங்காரு அடிகளார் அவர்கள் ,ஒரு சாதாரண மனிதர்போலத்தான் தோன்றுகின்றார்; ஒரு மகத்தான சக்தி படைத்தவர் என்று சாதாரணமாக எண்ண முடியாது. இவரிடத்திலே என்ன சக்தி இருக்கிறது என்று நமக்குத் தெரியாது. ஆனால் சக்தி இருக்கிறது என்று நாம் நம்புகின்றோம். அது அவரையும் அறியாமல் இருக்கிறது. எனது காலிலே விழுங்கள் என்று அடிகளார் கேட்பதில்லை, எனக்கு உயரமான ஆசனம் போடுங்கள் என்று அவர் எதிர்பார்ப்பதில்லை. எல்லோருக்கும் சமமாகவே உட்காருகின்றார். இன்னும் சொல்லப்போனால், கூட்டத்திற்குள் போனால் யார் அடிகளார் என்றே தெரிந்து கொள்ளமுடியாது. அவ்வளவு எளிமையாக, இயல்பாக அவர் இருக்கின்றார். எந்த ஆடம்பரமும் படாடோபமும் அடிகளார்பால் காணப்படவில்லை. இது ஒரு மகத்தான மாற்றம். இதை நாம் ஏற்றுப் போற்றி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

## மழைக்காக வேள்விசெய்தால் என்ன பிழை?

அடிகளார் ஒரு சாதாரண மனிதர்தான். மனிதர்களிலே உயர்ந்தவராக அவர் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளவில்லை. சக்தி வடிவமாக அவர் வாழ்கின்றார். அதனாலே காரியங்கள் நடக்கின்றன. நடக்கின்றனவா என்று கேள்வி கேட்பது அறியாமை! இதைவிட ஒரு பயித்தியக்காரத்தனம், வேறு இருக்கமுடியாது என்பது, என்னுடைய பணிவான கருத்து. ஆன்மிக மாநாட்டால், மழை பெய்யுமா? என்று கேட்டு, ஒருசிலர் கேலி செய்ததை; அவர்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மழை பெய்துவிட்டது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். நான் அங்கே கூட நுழையவில்லை. மழைபெய்யவேண்டும் என்று, நாட்டிலே இருக்கின்ற பெண்கள் ஒரு வேள்வி நடத்தினால், அதிலே என்ன தவறு? நம்முடைய வீட்டிலே ஒருவர் உடல் நலமற்றுப் படுத்து விட்டால், அவர் பிழைத்திருக்கவேண்டுமென்று யார் யாரையெல்லாமோ வேண்டுகின்றோமே!

இந்த நாட்டிலே மழை பெய்யாமல், இயற்கை நம்மைக் கொடுமையாகச் சோதிக்கின்ற கட்டத்தில், நம்முடைய வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்திருக்கின்ற நம் தாய்மார்கள், நம் சகோதரிகள், மழை வேண்டுமென்று பிரார்த்தித்து, ஒருவேள்வி நடத்துகின்றார்கள், திருவிளக்குப் பூசை செய்கிறார்கள் என்றால், அதிலே என்ன தவறு? மழை பெய்கின்றதா இல்லையா என்பது வேறு விஷயம். நினைக்கின்றவற்றையாவது, நல்லதாக நினைக்கவேண்டாமா? நினைக்கத் தூண்டுவதாயின், நல்ல எண்ணங்களை நினைக்கத் தூண்டவேண்டாமா? அடிகளார் அதைத்தானே செய்யச் சொல்கிறார். அவர் என்ன, 'நான் உடனே மழையை வரவழைக்கின்றேன், இதோ பாருங்கள், இப்படி இடது கையைத்தூக்கினால் ஒரு 15 அங்குலம் மழைவரும்; வலது கையைத் தூக்கினால் ஒரு 25 அங்குலம் மழைவரும்' என்றா, அவர் சொல்லிக்கொண்டிருக்கின்றார்?

நாமே சில நேரங்களில் நம்மையும் மீறி சில தவறான காரியங்கள் செய்துவிட்டால், என்ன இப்படி செய்துவிட்டாயே என்று யாராவது நம்மைக்கேட்டால், என்னவோ தெரியவில்லை. அந்த நேரத்தில் இப்படி மாறிவிட்டேன் என்று சொல்லுகின்றோம். ஆகவே நமக்கு நாம் செய்வது இன்னதென்று தெரிவதில்லை. நம்மைப்போன்ற பகுத்தறிவாளிகளுக்கும் தெரிவதில்லை. நாம் மாறுவது நமக்கே தெரியவில்லை. எப்பொழுது மாறுகின்றோம்? ஏன் மாறுகின்றோம் ? யாரால் மாற்றப்படுகின்றோம்? என்பனவும் தெரியவில்லை. ஆனால் காலத்தினாலே, சூழ்நிலையினாலே மாற்றப்படுகின்றோம். ஒரு தனி மனிதனே இத்தகைய மாறுதல்களுக்கு உட்படுகிறபொழுது, சக்தி வாய்ந்த சிலர் அவர்களையும் அறியாமல் அவர்களுக்குள்ளே ஒரு சக்தி வந்து கலந்து, அவர்களை இயக்குகின்ற நேரத்தில், சில உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்கள்.

## பழித்துப் பேசாதீர்கள்

மழை வரவேண்டும் என்று விரும்பி, ஒரு வேண்டுதல் வேள்வி செய்தால், அதையும் சிலர் கேலி செய்கிறார்கள். இன்றைக்குக் காலையிலே பார்க்கின்றேன், ஒரு ஆங்கிலப் பத்திரிகையை. அதிலே நேற்று இந்த யாகம் செய்தார்கள். வேண்டுதல் புரிந்தார்கள். ஆனால் 24 மணி நேரத்திற்கு மழை பெய்யாது என்று வானிலை ஆராய்ச்சி சொல்லுகிறது என்று, இன்றைக்குக் காலையிலே பத்திரிகையில்செய்தி போட்டுப் பரப்பியிருக்கின்றனர். ஆனால் 5 மணிக்கு இடியுடன் மழை பெய்திருக்கிறது. நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகவேண்டாமா, நீ உண்மையானவனாக -மரியாதை உள்ளவனாக இருந்தால்! நாங்கள் கணித்தது தவறு,

ஏளனம் செய்தது தவறு, மழைபெய்துவிட்டது. இந்த வேளவியினால்தான் மழை வந்தது என்று ஒத்துக் கொள்ளாமற் போனாலும், மழை வந்ததையாவது ஒத்துக் கொள்ளுங்கள். நல்லவர்களையும் நல்ல செயல்களையும் இழித்துப் பழித்துப்பேசும் வழக்கத்தை ஒழித்துவிடுங்கள்.

## ''ஒரே குலம், ஒரே தாய்!''

நம்முடைய முன்னோர்கள் அறிவுறுத்திய உயர்ந்த கருத்துக்களை, நாம் நம் மக்களிடையில் எடுத்துச் சொல்லத் தவறிவிட்டோம். ''கோத்திரமும குலமும் கொண்டு என் செய்வீர்'' என்றார் திருநாவுக்கரசர். ''சாதி குலம் என்னும் சுழிப்பட்டுத் தடுமாறவேண்டாம்''. என்றார் மாணிக்கவாசகர். சாதி வேறுபாடுகள்வேண்டாம், எல்லோரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழ்வோம் என்றார் வள்ளலார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடினார் கணியன்பூங்குன்றனார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார் திருமூலர். இதுபோன்ற நம் முன்னோர்களின் அருளுரைகளை, அறிவுரைகளை, நாம் நம் மக்களிடையில் பரப்பத் தவறிவிட்டோம்.

'ஒரே தாய், ஒரே குலம்' என்று, இங்கே ஆதிபராசக்தி மன்றத்தினர், தம்முடைய இலட்சிய மொழியாகக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டி, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். நம்மையெல்லாம் பெறுவதற்கு ஒரு தாயினுடைய வயிறு இடங்கொடுக்காது என்பதனாலேயே, பல தாய்மார்கள் நம்மைப் பெற்றிருக்கின்றார்கள். ஆகவே நாம் அனைவரும் அண்ணன் தம்பியாகப்பழகுவோம்; அன்பினால் ஒன்றுபட்டு இனபுற்று வாழ்வோம்.

## இங்கே சாதி மத நிலை வேறுபாடுகள் இல்லை:

நம்முடைய முன்னோர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கின்ற நல்ல கருத்துக்களையும், சிறந்த புத்திமதிகளையும், நாம் கடைப்பிடித்து வாழ்வதற்கு முயலுதல் வேண்டும். சிவப்பு ஆடை அணிந்திருந்தாலும், கறுப்பு ஆடை அணிந்தாலும், பச்சை ஆடை உடுத்தாலும், அல்லது காவியுடை தரித்தாலும், நம்முடைய மக்கட் சமுதாயத்தைஒற்றுமைப்படுத்துவதற்கு ஆன்மிகநெறிதான் இன்றைக்கு நமக்கு மிகவும் அவசியம். ஆன்மிகநெறி என்பது எந்த மொழியிலே உள்ள வார்த்தை, அது எந்தத் தத்துவத்தை விளக்குகின்றது என்பது, பிரச்சினை அல்ல. இன்றைக்கு நாம் ஆன்மிக நெறியை இழந்துவிட்டு, எங்கேயோ பயணம் நடத்திக் கொண்டிருக்கின்றோம். மக்களையெல்லாம் இன்றைக்கு ஒன்று சேர்க்கின்ற பணியில், இந்த ஆதிபராசக்தியின் அருள்மிக்க ஆன்மிக நெறி அமைப்பு, ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது. இங்கே சாதி இல்லை ,மதம் இல்லை, பேதம் எதுவும் இல்லை. அதனால்தான் சிவப்புச் சட்டை அணிந்திருக்கிறோம். காரணம் சிவப்பு இரத்தத்தின் நிறம். இரத்தத்தை எடுத்தால், இது யாருடைய இரத்தம் என்று தெரியாது. இரத்தத்திலே சாதி இல்லை, மதம் இல்லை, இரத்தத்தில் 'ஏ'குரூப் 'பி'குரூப் என்று இருக்கிறதே தவிர, வேறு குரூப் இல்லை. அதனாலே தான் இரத்தத்தின் நிறத்திலே சிவப்பு ஆடை அணிந்துகொண்டு வார வழிபாட்டுற்கு வருகின்றோம்.

## நமக்குள் ஒற்றுமை வேண்டும்

நான்கு ஆண்டுகளாக நான் தவத்திரு அடிகளாரைச் சந்திக்கிறபொழுதும், நம்முடைய பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களைப் பார்க்கிறபொழுதும், இந்த இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு இருக்கின்ற முன்னாள் அமைச்சர் கே.எஸ். இராமசாமி அவர்களைப் பார்க்கிறபொழுதும், இசுலாமியர் வெள்ளிக் கிழமையில் மசூதிக்குப் போகிறார்கள்; கிறித்துவர்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் சர்ச்சுக்குச் செல்லுகின்றார்கள். அதுபோல வாரத்திலே ஒருநாள் இந்து மதத்தவர்கள் தம்முடைய கோயில்களுக்குத் தவறாமல் போகவேண்டும் என்கிற ஒரு நியதியை, கட்டுப்பாட்டை உருவாக்குங்கள் என்று கேட்டுக் கொள்வது வழக்கம். இந்துக்களுக்குள்ளே பேதம்எதற்கு? பிளவு எதற்கு? நமக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் வளரவேண்டாமா? நம்முடைய மாநகர்க் காவல் துறை ஆணையர் ஸ்ரீபால் அவர்கள், ஓட்டை விழுந்த படகை, ஓட்டை விழுந்தது என்று சொல்லி, எச்சரித்து, மக்கட் சமுதாயத்திற்கு அறிவுறுத்தினார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார், ஓட்டை விழாத சமுதாயத்தை அமைக்க நாம் முயன்று கொண்டிருக்கிறோம் என்று கூறினார். ஓட்டையை ஏற்படுத்தியதே நாம் தானே! ஓட்டையையும் ஏற்படுத்திவிட்டு, அதற்குள்ளே தண்ணீர் வருகிறது என்று துடிதுடித்து, தண்ணீரை எடுத்துக் கொட்டி அகற்றுவதற்கு, விவரம் தெரிந்தவர்கள் வந்தால், நாம் லபோ லபோ என்று அடித்துக் கொள்வது ஏன்? அதனால் நமக்கு என்ன லாபம்? தயவு செய்து ஓட்டை விழுந்த படகை ஒதுக்கிவிடுவோம். ஓட்டை விழாத நல்ல சிறந்த படகைத் தேடிப் பயணம் செய்வோம். அதுசிவப்பு உடையாக இருக்கட்டும், அல்லது காவியுடையாக இருக்கட்டும், அல்லது வேறு எந்த உடையாக வேண்டுமானாலும் இருக்கட்டும். மேல்மருவத்தூரில் எழுந்தருளியிருக்கின்ற ஓர் அற்புதமான சக்தி, இந்த நாட்டில் பட்டிதொட்டிகளில் எங்கும் பரவட்டும். இந்த உணர்வுகள் வளரட்டும். சாதி பேதங்கள் ஒழியட்டும். மதச் சண்டைகள் தீர்வதற்கு இது உதவட்டும்.

## '' தெய்வம் தெளிமின் ''

ஆயிரக்கணக்கான பிறவிகள், கோடிக் கணக்கான உயிரினங்கள், இவற்றுக்குள் எப்படி பேதம் வருகின்றது என்று யாருக்கும் தெரியவில்லை. ஒரு தாய் தந்தைக்கு நான்கு பிள்ளைகள் பிறக்கிறார்கள். ஆனால் அப் பிள்ளைகளில் ஒருவரைப்போல் ஒருவர் இருப்ப

தில்லை. ஏன் இப்படியெல்லாம் நேர்கிறது என்று ஆராய்கின்றபொழுது, நமக்குக் கடவுள் நம்பிக்கை இன்றியமையாததாகின்றது. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற வாதத்தை விட்டுவிடுவோம். கடவுள் வேண்டுமா, வேண்டாமா? என்ற வாதத்துக்கு வருவோம். கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பதை அறிஞர்கள் ஆராயட்டும். ''தெய்வம்தெளிமின் மின்! தெளிந்தோர்ப் பேணுமின்'' என்று கூறுகின்றது சிலப்பதிகாரம்!

இந்த மனித சமுதாய வாழ்க்கை நலத்திற்கு, அத்தகைய ஆற்றல்மிக்க ஒரு சக்தி வேண்டும். அது மேல்மருவத்தூர்ப் பங்காரு அடிகளார் உருவத்தில் வரட்டும், அல்லது தவத்திரு குன்றக்குடி அடிகளார் உருவத்தில் வரட்டும், அல்லது காஞ்சிப் பெரியவரின் வடிவத்தில் வரட்டும், அல்லது ஆண்டவன் சுவாமிகள் வடிவத்தில் வரட்டும். அவர்கள் அனைவரும் இந்து மக்களை ஒன்று சேர்ப்பதற்கு வரட்டும், மக்களைப் பிளவுபடுத்துவதற்கு வரவேண்டாம். அதைத்தான் நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்கிறோம். நேற்றும் இன்றும் நான் பார்க்கிறபொழுது, தந்தைபெரியார் அவர்களின்தொண்டனாக 45 ஆண்டுகாலம் பணியாற்றியவன் என்ற முறையில், இந்த ஆன்மிக மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

## ஆக்கவேலைகளில் ஈடுபடுவோம்

நம்முடைய குன்றக்குடி அடிகளார் அவர்கள், ஓர் இடத்திலே சொன்னதாகச் செய்தியைப் பார்த்தேன். தந்தை பெரியார் அவர்கள் கூட, கடவுள் இல்லை என்று சொன்னதில்லை. இந்தத் தத்துவத்தினாலே வளர்ந்த தீமைகளைப் பார்த்துத்தான் அவர் கொதித்து எழுந்தார் என்றுசொல்லியிருக்கின்றார்கள். இதனை அருள் கூர்ந்து, அருமை அன்பர் திரு. வீரமணி அவர்களிடத்திலே, அடிகளார் அவர்கள்சொல்ல வேண்டும் என்று, பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ''கடவுளைப் படைத்தவன் காட்டுமிராண்டி, கடவுளை வணங்குகிறவன் முட்டாள்'' என்று சொல்லுகின்ற ஓர் உணர்வை, நாம் இன்றைக்குச் சமுதாயத்திலே வளர்த்துக் கொண்டு வந்தால், நாம் முன்னாலே சொன்னதைப்போல, சுவரையே இடிக்கிற அழிப்புப் பணிக்குத்தான், நம்மை நாம் ஆளாக்கிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் பொருள். ஆகவேதான் அழிவு வேலைகளில் ஈடுபடுவதைவிட, ஆக்கபூர்வமான பணிகளிலே ஈடுபட வேண்டும் என்று நாம் தீர்மானித்துக் கொண்டாக வேண்டும்.

''எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்று, திருவள்ளுவர் மெய்யுணர்வுக்கு விளக்கம் தந்தார். அந்த விளக்கத்தை, தத்துவத்தை இன்றைக்கு ஆதிபராசக்தி, நம்முடைய அடிகளார் வடிவிலே, வாய் திறவாமல் சொல்லிக் கொண்டிருக்கின்றாள். நான் மீண்டும் மீண்டும் இந்தஆச்சரியத்தைப்பார்த்துத்தான்திகைத்துக் கொண்டும், வியந்துகொண்டும் இருக்கின்றேன். அடிகளார் வாய்திறந்து பேசுவதே இல்லை. 'ஆலமர் செல்வர்' என்றும், 'தென்முகக்கடவுள்' என்றும் போற்றப்படுகின்ற தட்சிணா மூர்த்தியாகிய இறைவனைப்போல, மௌனமாக இருந்துகொண்டே, எல்லாவற்றையும் விளக்கிக் கொண்டும், எல்லோரையும் இயக்கி ஆட்கொண்டும் வருகின்றார், நம் பங்காரு அடிகளார்!

## பெண்மணிகளும், ஆன்மிக நெறியும்

இன்றைக்கு நம்முடைய ஆதிபராசக்தி கல்வி மருத்துவப் பண்பாட்டு அறநிலையம், பெண்களை நம்பி ஆன்மிக நெறியை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்திருக்கின்றது. திரு தியாகராஜன் அவர்களும், திரு. வேங்கடசாமி அவர்களும், என்னைமன்னிக்கவேண்டும். தயவு செய்து இந்த நாட்டு மக்களை ஒன்றுபடுத்துகின்ற உணர்வை, பெண்களிடத்தில் ஒப்படைக்கவும்! அவர்களை விட்டால் வேறு வழியே இல்லை. உண்மையில் நம்முடைய ஆன்மிக நெறியை வளர்த்துக் காத்து வருபவர்கள் பெண்கள்தான். மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக்காலம்மையார், ஆண்டாள், நாச்சியார், ஔவைப்பிராட்டியார் போன்ற பெண்மக்கள்தான், தொன்றுதொட்டு நமது ஆன்மிக நெறியையும் பண்பாட்டு ஒழுக்கத்தையும் காத்து வருகின்றார்கள். இதைத்தான் ''அருளது சக்தியாகும் அரன் தனக்கு; அருளையின்றித் தெருள் சிவம் இல்லை; சிவம் இன்றிச் சக்தி இல்லை'' என்று நம்முடைய சைவசித்தாந்தம், நன்கு விளக்கியிருக்கின்றது. 'சக்தி இல்லையென்றால், சிவனே என்று கிட' என்று ஒரு பழமொழியும் வழங்குகின்றது.

''சக்திதான் இல்லை என்றால்,
சராசரம் இயங்க லேது?
சக்திதான் இல்லை என்றால்
சடந்தனில் இயக்க மேது?
சக்திதான் இல்லை என்றால்,
சீவனில் வளர்ச்சி யேது,
சக்தியே உலகின் ஆக்கம்
சக்தியைத் தொழுவோம் வாரீர்!''

—பாரதியார்

பாரதியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அவர் சக்தி வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை உடையவர். சக்தி வடிவமாக உலகத்தையே பார்க்கின்றார். அதனாலேதான் சக்தி வடிவமான பெண்களுக்கு விடுதலை இல்லையென்றால், இந்த நாடு விடுதலை பெறாது என்று பாரதியார் சொன்னார்.

அம்முறையில்தான், இந்த மேல்மருவத்தூர் அறநிலையம், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. மேல்மருவத்தூர்க் கோயிலின் கருவறையிலே பெண்கள் சென்று வணங்கலாம். அர்ச்சிக்கலாம். நாம் நோய்

வாய்ப்பட்டுப் படுத்துவிட்டால் நமக்காகக் கவலைப்படுகிறவள் மனைவிதான்; நமக்காகக் கண்ணீர்விடுபவள் தாயார்தான்; பெற்ற மகன் கூட எங்கேயோ இருப்பான். தாய்க்குப் பின் தாரம் என்பார்கள், இந்த இருவருமே பெண்'கள்தான்! இத்தகைய சிறப்புரிமை மிக்க பெண்கள் கோயிலின் கருவறைக்குள்ளே செல்லக் கூடாது என்று சொன்னால், அது என்ன சாத்திரம்? அது என்ன சட்டம்? இவ்வாறெல்லாம் பெண்களை விலக்கி ஒதுக்கித் தடுத்து வைத்து விட்டு, சமுதாயம் முன்னேற்றம் அடையும் என்று கருதுகின்றீர்களா? ஆன்மிக வழிபாட்டையுருவாக்கிப் பரப்பிட முடியும் என்று கருதுகின்றீர்களா?

## வாழ்க்கை வளம்பெற, வழிபாடு தேவை

பெண்கள்தான் உலகத்தை வாழ வைக்கின்றவர்கள். பெண்களுக்கு முதன்மை இங்குக் கொடுக்கப்பட்டு இருப்பதனால்தான், சுயம்பு லிங்கமாகத் தோன்றி, அன்னை ஆதிசக்தி ஆலயமாகமாறி, இன்றைக்கு இவ்வளவு பெரிய சிறந்த ஒரு அமைப்பாகவும், நிறுவனமாகவும் வளர்ந்து கொண்டு வருகிறது. இங்கே சித்து விளையாடுகின்றார்களா? சித்து என்னும் சக்தி இருக்கின்றதா? இதைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. ஆயிரம் பேர் கடுமையான நோய்வாய்ப்பட்டு, தங்களுடைய நோயினின்று தங்களைக் காப்பாற்றியது, இந்த அன்னை ஆதிபராசக்தியின் அருளாற்றல்தான் என்று, உண்மையாகவே நம்புகின்றார்கள் என்றால், இந்த நம்பிக்கையிலே என்ன தவறு? அப்படியானால் மருத்துவமனையே தேவையில்லையா? என்று சிலர் கேட்கக் கூடும். நாங்களும்தான் கேட்டோம். நானும் அவ்வாறு கேட்டுப் பேசியிருக்கின்றேன். ஆனால் அந்த மருத்துவமனையிலுள்ள மருத்துவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதைக் கவனிக்கவேண்டும். மருத்துவர் எவ்வளவுதான் திறமையும் ஆற்றலும் வாய்ந்தவராக இருந்தாலும், ஆபரேஷன் தியேட்டருக்கு உள்ளேபோகின்றபொழுது, ஆண்டவனை வணங்கிப்பிரார்த்தனையும் தியானமும் செய்து கொண்டுதான், ஆபரேஷனைத் தொடங்குகின்றார். ஆபரேஷனை முடித்துவிட்டு வெளியிலே மருத்துவர் வருகின்றபொழுது, 'என்ன டாக்டர், எப்படிஇருக்கிறது?' என்றுகேட்டால், 'நாங்கள் எல்லாவற்றையும் எங்களால் இயன்ற வரை யெல்லாம் செய்து முடித்துவிட்டோம். இனிமேல் அவன்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்றுதான் சொல்கிறார்கள்.

விண்வெளியில் சென்று, சந்திரனை அடைந்து, சந்திரனில் கால்வைத்தார்கள் என்கிறார்களே, அந்த விஞ்ஞானிகளும்கூட, அவர்களின் சர்ச்சுக்குப்போய்ஆண்டவனை வணங்கிப் பிரார்த்தித்துவிட்டுத்தான், விண்வெளிப் பயணம் சென்று சந்திரனை இடங்கி னார்கள். அந்த விண்வெளி விமானம் பறந்துசென்ற போது, அதற்கு ஆபத்து வருகின்றது. அதை அறிந்ததுமே உலகத்தில் இருக்கின்ற தேவாலயங்களிலெல்லாம் வழிபாடுகள் செய்யப்பட்டன. உலகமக்கள் எல்லாம் பிரார்த்தனை புரிந்தார்கள். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள், நம்மை விட்டுப் பிரிந்து விடுவாரோ? நம்மையெல்லாம் அநாதை ஆக்கிவிடுவாரோ? என்று திகைத்துக் கலங்கிச் செயலற்று நின்ற நேரத்தில், தமிழக மக்களெல்லாம கண்ணீரை வெள்ளமாகச் சிந்தி ஓடவிட்டநேரத்தில், நம்முடைய அன்றைய ஆளுநர் உஜ்ஜல்சிங் அவர்கள், இந்த நாட்டிலே இருக்கின்ற ஆலயங்களிலெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் நலம் பெற வேண்டி வழிபாடுகள் நிகழ்த்துங்கள் என்று சொன்னார்கள். அன்றைக்கு யாரும், எந்தப்பகுத்தறிவாளனும்வழிபாடுசெய்வதைத் தடுக்க முன்வரவில்லை. முன்வர முடியாது.

## நாட்டு மக்களுக்கு, நல்வழி காட்டுங்கள்

மனிதனுக்கு எங்கே எப்பொழுது, அபாயம் வருகின்றதோ, ஆபத்து நேருகின்றதோ, அங்கே அப்பொழுதுதான், மனிதன் தெய்வத்தை நினைக்க முற்படுகின்றான். தெய்வத்தைத் தேடி ஓடுகின்றான். 'நோய் உளார் வாயுளான்' என்கிறார் சம்பந்தர். மனிதனுக்குத் திமிரும் செருக்கும் இருக்கும் வரையில், அந்தப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான். அதனாலேதான், சில நேரங்களில் மனிதனின் இந்த ஆணவத்திற்கும் அகம்பாவத்திற்கும், சரியான ஒரு அடி விழுகின்றது. கோயிற் கருவறைகளில் உள்ள கதவுகளையெல்லாங்கூட, மிகவும் சிறியதாக அமைத்திருக்கின்றார்கள். ஆணவம் உள்ள மனிதன், அகம்பாவம் மிக்க மனிதன், அவற்றை அறவே விடுத்து மிகவும் பணிவுடன் தலைகுனிந்து வளைந்து அடக்கமாகத் தெய்வத்திடம் வரவேண்டும் என்ற கருத்தில் தான், கோயிற் கருவறையின் வாயில்களைச் சிறியதாக நம் பெரியவர்கள் வைத்துள்ளனர். 'பணியுமாம் என்றும் பெருமை'—'அடக்கம் அமரருள் உய்க்கும்'-'எல்லாருக்கும் நன்றாம் பணிதல்' என்பன போன்றுவரும் திருவள்ளுவரின் அறிவுரைகள், இங்கு நாம் சிந்தித்து உணரத்தக்கன.

இந்த விழா மலரிலே அற்புதமான கட்டுரைகள் அமைந்துள்ளன. அவற்றிலே அரிய பெரிய கருத்துக்கள் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. நம்முடைய முன்னோர்கள் நம்முடைய நன்மைக்காகக் கூறிவிட்டுச் சென்ற கருத்துக்கள், இம்மலரில் விளக்கப்பட்டிருக்கின்றன. கடவுளைப் பற்றி நம்முடைய முன்னோர்கள் சொன்ன தத்துவத்தைவிடவா, இப்போது பகுத்தறிவாளர்களாக இருக்கிற நாங்கள், கருத்துக்களைத் தந்துகொண்டிருக்கின்றோம்? நம்முடைய பெரியவர்கள் காட்டிய நெறியை விடவா நாங்கள் நெறிகாட்டிக் கொண்டிருக்கின்றோம்? நாம் செய்த தவறெல்லாம், நம்முடைய முன்னோர்களின் கருத்துக்களைப் புறக்கணித்து, அவற்றை நம்முடைய மக்களுக்கு எடுத்துச் சொல்லாமல் மறந்துவிட்டதுதான்.

நல்ல வேளையாக நம்முடைய பங்காரு அடிகளார் அவர்கள், வாய் பேசாமல் இருந்து

கொண்டே, நாட்டு மக்களிடத்தில் ஒற்றுமையை உருவாக்கி வருகின்றார்; உயர்ந்த பண்புகள் வளரச் செய்து வருகின்றார். இதைப்போலவே நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், மக்களிடத்தில் ஒற்மையை வளர்க்கவும், சாதி வேறுபாடுகளை நீக்கவும், மதச் சண்டைகளை ஒழிக்கவும் பணி செய்து வருகின்றார்கள். இவ்வாறெல்லாம் நாட்டு மக்களை ஒற்றுமைப்படுத்துகின்ற பணியில் அனைவரும் ஒருமுகமாக ஈடுபடவேண்டும். இங்கே பல சிறந்த தமிழறிஞர்கள் இருக்கின்றார்கள். கல்வி கேள்விகளில் சிறந்த புலமைநலம்வாய்ந்த இந்தத் தமிழறிஞர்கள், ஆன்மிகத்திற்கு வழி காட்டக் கூடியவர்கள். ஆக அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டு மக்களுக்கு நல்வழியைக் காட்டும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

## பிள்ளையார்கோயில் ஆண்டியா?

இவ்வாறு நாட்டு மக்களுக்கு நல்வழியைக் காட்டக்கூடிய, இந்த ஆன்மிக மாநாடுபோன்ற கூட்டங்கள் நடைபெறுகின்ற இடத்திற்கு, அமைச்சர்கள் ஓடிவரவில்லை யானால், அமைச்சர்களுக்கு வேறு என்ன வேலை? மக்கள் கூடுகின்ற இடத்திலே, அமைச்சர்கள் தவறாமல் போகவேண்டும். அக்கூட்டங்களிலே கலந்து கொள்ளவேண்டும். இங்கே வந்து இடத்தைப் பார்த்து, சம்பவத்தைப் பார்த்து, நிகழ்ச்சிகளைக் கவனித்து முடிவுகள் எடுக்கவேண்டும். இதுதான் இன்றைக்கு இந்த நாட்டுக்குத் தேவை. அருள்திரு பங்காரு அடிகளார் விவாதத்திற்கு உரியவர்களாக ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்ஙனம் ஆக்கிவரும் ஒருசில பெரியவர்களை, நான் பணிவன்போடு வேண்டிக் கொள்ளுகின்றேன். அருள்கூர்ந்து நீங்கள் தமிழ்ச் சமூகத்தோடு விளையாடாதீர்கள். தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களோடு விளையாடாதீர்கள். இந்து சமய மக்களை 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோயில் ஆண்டி' என்று தாழ்வாக நினைக்காதீர்கள்! கள்ளங் கபடமற்ற எளிய மக்களை இழிவாகக் கருதி விளையாடாதீர்கள். உங்களுக்கு வலிமை இருந்தால், துணிவு இருந்தால், இந்தக் கருத்துகளைச் சொல்லுகின்ற மற்ற மதங்களும் இருக்கின்றன. அங்கேபோய் வேண்டுமானாலும் மோதுங்கள். இல்லையானால் இங்குள்ளவர்களைப் பாராட்டுங்கள்.

## யாவரும் இங்கே சமம்

இங்கே சாதி இல்லை, ஏழை பணக்காரன் என்ற பேதமில்லை. எத்தகைய வேறுபாடுகளும் இல்லாமல், இங்கே எல்லோரும் சமமாகவே விளங்குகின்றனர். இங்கே ஆண் பெண் என்ற வேறுபாடுகூட இல்லை. பிற கோயில்களில் கருவறைக்குள் யாரையும் அனுமதிப்பதில்லை. ஆனால் மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்திகோயிலில், யாவரும் எந்தத் தடையுமின்றிச் செல்லலாம். பெண்கள்கூடச் செல்லலாம். அதிலும் மாதவிலக்கு ஆனவர்களும்கூட, அன்னையைச் சென்று வழிபடலாம். இக்கோயிலில் பெண்களுக்குத் தனிச் சிறப்பான முன்னுரிமை வழங்கப்பெற்றுள்ளது. இத்தகைய விரிந்த பரந்த மனப்பான்மையுடன் நடைபெற்றுவரும் கோயிலையும், அதனைச் சார்ந்த கல்வி மருத்துவப் பண்பாட்டு அறநிலையையும், நாம் போற்றி வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவ்வாறு செய்யாமல் ஏளனம் பேசுவதும், இகழ்ந்து கூறுவதும், நமது சமுதாயத்தைப் பழிப்பதற்கும், புண்படுத்துவதற்கும் சமமாகும். புண்படுத்தினால், ஒரு சில நேரத்திலே பொறுமையாக இருக்கிறவர்களுக்கும்கூடக் கோபம்வரும். ஆதலால் வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சாதீர்கள்.

## பிரார்த்தனைக்குப் பெரும் பயன் உண்டு

ஒரு சிலர் ஆன்மிக மாநாட்டில் மழைக்காக வேள்வி செய்கின்றார்களாமே, திருவிளக்கு ஏற்றிப் பூசை புரிகின்றார்களாமே, பிரார்த்தனை பண்ணுகிறார்களாமே, இவற்றால் எல்லாம் மழை வந்துவிடுமா? என்று கேட்டு ஏளனம் பேசிக் கேலி செய்கிறார்கள். தற்போது நாட்டு மக்கள் தண்ணீருக்காகப் படுகின்ற அல்லல்களும் தொல்லைகளும் அவர்களுக்குத் தெரியவில்லையா? அய்யோ! திருச்சியிலே பெய்கின்றதே, புதுக்கோட்டையிலே பெய்கின்றதே, தென் மாவட்டங்களில் பெய்கின்றதே, சென்னையில் மழை வரவில்லையே என்று துடித்துக் கொண்டிருக்கின்றோம். பங்காரு அடிகளார் மழை பெய்யும் என்று கூறுகின்றார். அதற்கு ஏற்ப இரண்டு நாட்களாக மின்னல் வெட்ட ஆரம்பித்துவிட்டது. மேகமூட்டம் காணப்படுகின்றது. சில தூறல்கள் விழுகின்றன.

நேற்று முன்தினம் நான் என்னுடைய தோழர் ஒருவருடன் இரவு எட்டு மணிக்கு மொட்டைமாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறேன். கடுமையான மின்வெட்டுகள். நண்பர் திரைப்படத் துறையிலே உள்ள ஓர் எழுத்தாளர். திடீரென்று அவர், நமது பங்காரு அடிகளார் ஜெயித்துவிட்டார் என்று சொன்னார். நான் அவரைக் கேட்டேன். 'என்ன ஐயா! கதையிலே இந்தப் பிரச்சினை வரவேயில்லையே! கதையிலே எங்கே பங்காரு அடிகளார்?' என்று கேட்டேன். இல்லை, இல்லை, பாருங்கள் மின்னலை. நாம் கொஞ்சம்உள்ளே போய்விட்டால் நல்லது, பாதுகாப்பு என்று கருதுகின்றேன். மழை வரப்போகிறது என்று முந்தாநாள், பங்காரு அடிகளார் சொல்லுகின்றார். அவர் ஜோசியம் சொல்லுபவர் அல்ல. நல்லவர்கள் எண்ணினால், சொன்னால், நடக்கும். ஒரு இலட்சம்பேரை வைத்து மழைக்காகவேள்வி நடத்தப்போகிறேன் என்று அவர் சொன்னதாகச் செய்தி வந்தது. அதற்கு ஏற்ப மின்னல் ஒளியும், இடி ஒலியும் நிகழ்கின்றன. மழை வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என்றார்.

## இறைவனும் இயற்கையும்:

மக்களெல்லாம் ஒன்றுகூடி, அன்புகொண்டு வேள்வியும் பிரார்த்தனைகளும் புரிந்தால், இயற்கை மழையைக் கொட்டும். நாங்கள்

பகுத்தறிவாளிகள், ஆதலால் இயற்கை என்று தான் சொல்லுவோம். ஆனால் ஒன்றுமே தெரியாத அப்பாவிகள் இறைவன் என்பார்கள். சொற்கள் தான் வேறுபாடே தவிர, இரண்டின் பொருளும் ஒன்றே. எனக்கும் தெரியாமல் எங்கோ மறைந்துள்ள ஒரு பெரும் சக்தியை, நான் இயற்கை என்கிறேன். மற்றவர்களும், நம் முன்னோர்களும் அதனை இறைவன் என்கிறார்கள். இறைவன் என்றால் என்ன? இயற்கை என்றால் என்ன? என்னாலே சுட்டிக் காட்டமுடியாமல், ஏதோ ஒரு பெரிய சக்தி இருக்கின்றது. அதை ஒத்துக் கொள்ளுகின்ற நான் இயற்கை என்கின்றேன். இறைவன் என்று சொல்ல, என்னுடைய தன்மானம் தடுக்கின்றது. இறைவன் என்று சொன்னால், என்னுடைய சுயமரியாதை கெட்டுப் போவதாக நினைத்து, இயற்கை என்று குறிப்பிடுகிறேன். இதை ஆண்டவன் என்று சொன்னால் என்ன குடிமுழுகிப் போய்விடுகிறது?

இயற்கை என்று கூறினாலும், இறைவன் என்று அழைத்தாலும், இந்தச் சொற்களுக்காக நமக்குள் நாம் பூசலிட்டுக் கொள்ள வேண்டாம். மக்கள் எல்லாம் ஒன்றுபடவும், ஒன்றுபடுத்தப்படவும் வேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அருள்திரு பங்காரு அடிகளார் சாதாரண மனிதர்தான். அவர் என்னை வணங்குங்கள் என்று, எப்போதுமே சொன்னதில்லை. அன்னை ஆதிபராசக்தியை வணங்குங்கள் என்றுதான் சொல்லுகிறார். ஆதிசக்தி அன்னையை வணங்கச் சொல்லுவது தவறு இல்லை. தமிழகம் முழுவதிலும் ஒரு புதிய எழுச்சியை, உற்சாகத்தை, ஒரு நல்ல இயக்கத்தை, பங்காரு அடிகளார் உண்டாக்கி வருகின்றார். அதற்குத் துணையாக, காரணமாக நீங்கள் இருக்கிறீர்கள். ஆயிரக்கணக்கான தாய்மார்கள் இருக்கிறார்கள்.

## ஆதிபராசக்தி நிறுவனம்

தற்போது தமிழகத்தில் கடுமையான வறட்சி வந்துள்ளது. என்றாலும் தமிழகம் இன்னும் பஞ்சப் பிரதேசமாக ஆகிவிடவில்லை. அரிசி விற்கிறவர்கள், இன்னும் படியரிசி 4 ரூபாயைத் தாண்டவில்லையே என்று கவலைப் படுகிறார்கள். நம்முடைய முதலமைச்சர் ஆட்சி செய்வதனால்தான், படியரிசி இன்னும் 4 ரூபாயைத் தாண்டவில்லை. வியாபாரிகளோ இன்னும் அரிசி விலை அதிகமாகவில்லையே, எப்போது உயரும் என்று கவலைப்படுகின்றார்கள். ஆனால் நமக்குள்ள கவலை, ஏழை எளிய மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் அரிசி கிடைக்கச்செய்யவேண்டுமே என்பதுதான். இன்றைக்கு இந்த நாட்டிலே இவ்வளவு துன்பங்கள் தொல்லைகள், இயற்கையாகவும் வருகின்றன. செயற்கையாகவும் தரப்படுகின்றன. இத்தகைய துன்பங்களும் தொல்லைகளும் துயரங்களுமெல்லாம் தீர்வதற்காக, மக்களெல்லாம் ஒன்று கூடி, ஒரேவழியில் ஒரேபாதையில் நடைபோட்டு, ஆன்மிக உணர்வை வளர்த்துக் கொண்டு, நல்லமுறையில் வாழ்வதற்கு இந்த ஆதிபராசக்தி நிறுவனம், மிகச் சிறந்த ஒரு பெருமுயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற கொள்கை, இலக்கணத்திற்கு, இலக்கியமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இதற்கு மூல காரணமாகவும் உறுதுணையாகவும் உள்ள பங்காரு அடிகளாரை நான் வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

## கரையான் புற்றில் கருநாகம் நுழையவிடக் கூடாது....

இங்கு ஏதோ ஒரு சிறிய பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள். இதற்குள்ளே பிரச்சினையே இல்லை. எந்தச் சட்டமும், இந்த நிறுவனத்திற்குள்ளே நுழையாது. மக்களுக்காகத் தொண்டாற்றுகின்ற, எந்த ஒரு நிறுவனத்திற்குள்ளும், சட்டம் நுழையாது. அதிலும் இந்நிறுவனத்திற்குள் அறநிலையச்சட்டம் நுழையாது. ஆனால், நான் இந்த அறங்காவலர்களுக்கு, இந்த நிறுவனத்தின் அமைப்பாளர்களுக்கு ஒன்றை எச்சரிக்க விரும்புகின்றேன். 'கரையான் புற்றெடுக்கக் கருநாகம் குடிபுகுந்துவிட்ட கதை' போலப் பின்னாலே நேர்ந்துவிடக்கூடாது. திருவண்ணாமலையிலே, ஓர் ஆசிரமத்திற்கு யார் யாரோ உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய அன்பிற்குரிய அடிகளார் அவர்கள், தமக்கு இயற்கையாகக் கிடைத்திருக்கின்ற அன்னை ஆதிபராசக்தியின் அருளாற்றலினால், இந்த நிறுவனத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இது பெரிய ஆலமரமாக வளரப்போகிறது, மிகப் பெரிய நிறுவனமாக வளரப்போகிறது! இது என்றைக்கும் பொது மக்களுடைய சொத்தாக இருந்து, அடிகளாருடைய பெருமையைப் போற்றிப் புகழ்ந்து காப்பாற்றுகின்ற நிறுவனமாக அமையவேண்டும். அறநிலையத்துறையின் அமைச்சர் என்ற முறை முறையில், இதுதான் என்னுடைய ஆசை, விருப்பம், வேண்டுகோள். வேறு எந்தச் சட்டமும், எந்த விதிகளும், இந்த நிறுவனத்திற்குள்ளே நுழையாது என்பதை, இங்கே தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## அரசு துணைபுரியும்

இந்த ஆதிபராசக்தி கல்வி-மருத்துவ-பண்பாட்டு அறநிறுவனம், பல நல்ல சிறந்த சமுதாயப் பணிகளைச் செய்து வருகின்றது. தனது கிளைகளாக உள்ள, 1008 வார வழிபாட்டு மன்றங்கள் அமைந்துள்ள பல்வேறு ஊர்களிலும், அந்தந்தப் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கட்கு இலவச உணவும், இலவச ஆடையும், வழங்குகின்றது. ஏழை எளிய விதவை மகளிர், தொழில் செய்து பிழைக்கும் வகையில், தையல் இயந்திரங்களும், பசுமாடுகளும் வாங்கிக் கொடுக்கிறது. உழைத்துப் பிழைக்க விரும்புகின்ற ஏழை உழவர்களுக்குப் பசுமாடுகள், உழவுமாடுகள், ஆடுகள் முதலிய கால்நடைகளை வழங்கி உதவி புரிகின்றது. இத்தகைய பலப்பல நல்ல காரியங்களைச் செய்து வருகின்ற இந்த நிறுவனத்திற்கு அரசாங்கம் உறுதுணையாக இல்லாமல் இருக்க முடியுமா?

## அற்றார் அழி பசிதீர்த்தல்

ஒருசிலர், ஆலய நிதியை எடுத்துச் சத்துணவுத் திட்டத்திற்கு வழங்குவதா? என்று குறை கூறுகின்றனர். ஏழை எளியவர்களின் பசியைத் தணிப்பதை, ஒரு பெரிய தருமமாக, மிகச் சிறந்த புண்ணியமான அறச் செயலாக, இராமலிங்க வள்ளலார் உபதேசித்திருக்கின்றார். சென்ற நூற்றாண்டில், வடலூரில் அன்று அவர் ஏற்றிய அடுப்பு இன்றளவும் தொடர்ந்து எரிந்து கொண்டேயிருக்கின்றது. வள்ளலாரின் அருளாணைப்படி, இன்றளவும், அந்த அன்ன தானத்தை நடத்திக் கொண்டுதான் வருகின்றார்கள். 2000 ஆண்டுகளுக்கு முன்னர், நம் தெய்வப்புலவர் திருவள்ளுவரும் ''அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி'' என்று கூறியிருக்கின்றார். அன்னதானத்திற்கு ஈடாக வேறு எந்தத் தானமும் இருக்கமுடியாது. 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே' என்றும்; 'ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர், மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை' என்றும், நம்முடைய பண்டைத் தமிழ் இலக்கியங்கள், ஏழை எளிய மக்களின் பசிதணிக்கும் அறச்செயலை வற்புறுத்திக் கூறுகின்றன.

அதனாலேயே நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 65 இலட்சம் குழந்தைகளுக்கு அரசாங்க நிதியிலிருந்து அன்னதானம் செய்து கொண்டிருக்கின்றார். அது அவருடைய பணம் என்று நான் சொல்லவில்லை. பொது மக்களாகிய உங்களுடைய பணம்தான். ஏழைகளாகப் பிறந்துவிட்ட காரணத்தால், ஒரு வேளை சோறுகூடக் கிடைக்காமல் வருந்துகின்ற, 65 இலட்சம் குழந்தைகள், இன்று சத்துணவு கொள்கின்றார்கள். இது ஒரு சிறந்த சமுதாயப் பணி அல்லவா? அதனால்தான், ஆண்டிற்கு 134 கோடிரூபாய் செலவானாலும், இந்த நல்ல பணியைச் செய்வதில், தமிழகஅரசு மிகவும் மும்முரமாக முனைந்து முயன்று செயலாற்றி வருகின்றது.

## சிறந்த சமயப்பிரசாரம்

ஏழைக் குழந்தைகள் உட்கார்ந்து சாப்பிடுவதற்காக, ஆங்காங்கே சத்துணவுக் கூடங்கள் கட்டுவதற்காக, நமது தமிழக ஆலயங்கள் ரூபா 50 இலட்சம் வழங்கியுள்ளன. அந்த உணவுக்கூடங்கள் அருள்மிகு கற்பகாம்பாள் உணவுக் கூடம், அருள்மிகு தேவி கருமாரியம்மன் உணவுக் கூடம், அருள்மிகு வடபழனியாண்டவர் உணவுக்கூடம் என்று, அங்கங்குள்ள தெய்வங்களின் பெயரால் அமைக்கப்படவுள்ளன. இவ்வுணவுக் கூடங்களிலெல்லாம் நம்முடைய ஏழைக் குழந்தைகள்தான் சாப்பிடுகின்றார்கள், சாப்பிடப் போகின்றார்கள். ஒரு சிறுவனை 'உனக்கு எங்கே சாப்பாடு'? என்றுகேட்டால், கற்பகாம்பாள் உணவுக்கூடத்தில் சாப்பாடு, கருமாரியம்மன் கூடத்திலே சாப்பாடு, என்று நம்முடைய தெய்வங்களின் பெயர்களைக் கூறுவான். குழந்தைகளின் உள்ளங்களிலெல்லாம் தெய்வத்தின் திருப்பெயர்கள் நன்கு பதியும். தமிழகப் பள்ளிகளில் பயில்கின்ற இசுலாமியச்சிறுவனும், கிறித்துவப் பையனும்கூட, இதன்மூலம் நம் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லுவார்கள். ஆலய நிதிகளின்மூலம் மதப்பிரச்சாரம் தான் நடக்க வேண்டும்; ஆலயநிதியை மத வளர்ச்சிக்குத் தான் பயன்படுத்தவேண்டும் என்று, சிலர் கூக்குரலிடுகின்றனரே, இதைவிட ஒரு சிறந்த சமயப் பிரசாரம் வேறு என்ன இருக்க முடியும்? என்று கருதுகின்றீர்கள்.

## நம்பிக்கை வாழ்க்கைக்கு மிகவும் அவசியம்

இதையெல்லாம் நான் சொல்லக்கூடாது என்றுதான் நினைத்தேன். சொல்ல வைத்து விட்டார்கள். அது சக்தியின் அருளோ என்னவோ தெரியாது. இல்லையென்றால் இரண்டு கிலோமீட்டர் தூரம் தாண்டிச் சென்ற நான், காரை நிறுத்துவானேன்? நான் அடிகளாரைப் போய்ப் பார்ப்பானேன்? செயல்கள் எப்படியெல்லாம் இணைகின்றன. எதிர் பாராமலே எவ்வெவ்வாறு நிகழ்கின்றன பாருங்கள், என்பதற்காகச் சொல்லுகின்றேன். இவைகளெல்லாம் யாரால் எதனால் நடக்கிறது என்று தெரியவில்லை. ஒருசிலர் தமக்குத் தெரியாததைத் தெரியவில்லை என்றுசொல்வதில்லை. தமக்குத் தெரியாததனால், அந்தப் பொருள் இல்லையென்று சொல்லிவிடுகின்றார்கள். இதுதான் இன்றைக்கு உள்ள பிரச்சினை. நமக்குத் தெரியாதனவற்றையெல்லாம் இல்லவே இல்லை என்று சொல்லுகின்ற புத்திசாலிகளாக நாம் மாறிவிட்டோம். நம்முடைய முன்னோர்கள் இதையெல்லாம் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கின்றார்கள். நம்பெரியவர்கள் சொல்லியதைத் தெரிந்துகொள்ளவே நம்மால் முடியவில்லை, முயற்சி செய்வதும் இல்லை. நம்பிக்கை மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். ஒருவரையொருவர் நம்பித்தான், நாம் உலகில் வாழ வேண்டியிருக்கின்றது. நம்பிக்கையில்லையேல் வாழ்க்கையே இல்லை எனலாம். "நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு'' என்று பாடுகின்றார் பாரதியார்!

## மக்கள் நலப் பணிகள்,

## வளர்க ! வெல்க !! வாழ்க !!!

எனவே இங்கு நடைபெறுகின்ற அறப்பணி, ஆன்மிகப்பணி, சமுதாயப்பணி ஆகியவற்றை நடத்திக் கொண்டிருக்கின்ற உங்களுக்கு நன்றி தெரிவித்து, அரசின் சட்டதிட்டங்கள் எதுவும், அறநிலையத்துறையின் சட்டதிட்டங்கள் எதுவும், இந்த மக்கள்நலப் பணிகளுக்கு, ஆன்மிகப் பணிகளுக்கு குறுக்கேவராது என்பதனை, இந்த மாநாட்டிலே தெரிவித்து, இதன் தொடர்பாக இந்த அறநிறுவனத்தின் நிர்வாகிகள் எப்பொழுது வேண்டுமானாலும் எங்களிடத்திலே வந்து பேசலாம் என்பதையும், இந்த நேரத்திலே அறிவித்து, ஒரு பார்வையாளனாக இருந்து, இங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை, இன்றும் நாளையும் பார்க்க இருக்கின்றேன்.

நம்முடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திருமதி விசாலாட்சி அம்மையார் அவர்கள், இதிலே கலந்துகொள்ளவேண்டும் என்று அழைத்த காரணத்தினாலே, ஒரு நல்ல காரியத்திற்கு அழைக்கும்பொழுது, அதை மறுப்பது அல்லது வரமாட்டேன் என்று சொல்லுவது, ஒரு பெரிய தவறான செயலாகுமாதலால், அதற்காக நான் இங்கு வந்தேனே தவிர, ஏதோ இங்கே நான் சொல்லுகின்ற, சொல்லிய கருத்துக்கள்தான், எல்லாக் கருத்துக்களையும் விடச் சிறந்த மேலான கருத்துக்கள் என்கிற உணர்விலே, நான் இந்த ஆன்மிக மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என்பதைப் பணிவன்புடன் சொல்லி, பேசாமலே மௌனமாக இருந்து, அமைதியாக ஆரவாரமின்றி விளங்கி, ஆற்றல் மிக்க ஒரு புரட்சியைச் செய்து கொண்டிருக்கின்ற நமது பங்காரு அடிகளார் அவர்களுடைய முயற்சிகள் வாழ்க! வளர்க! வெல்க! என்று வாழ்த்தி அமைகின்றேன்.

நன்றி, வணக்கம்!

— — —



அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களைத், தமிழ்நாடு ஆலய ஊழியர்கள் சங்கத்தின் சிறப்புத் தலைவர், சத்துணவுத்திட்ட அமைச்சர் மாண்புமிகு ஆர். சௌந்தரராசன், B.Com., அவர்கள் தலைமையில், மாநிலத்தலைவர் திருவாரூர் திரு. இரா.தென்னன், பொதுச் செயலாளர் எஸ்.முத்துகணபதி, தலைமை நிலையச் செயலாளர் திரு.எல்.கணபதிசுப்பிரமணியன், 'ஆலய ஊழியன்' ஆசிரியர் திரு.பி.ஆர்.முல்லைவேந்தன், தஞ்சை மாவட்டத் தலைவர் திரு. ஆர். ஜெயராமன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் பன்னாரி திரு.என்.முனுசாமி, தஞ்சை மாவட்ட அமைப்பாளர் திரு.சு.முத்துகிருஷ்ணன் ஆகியோர் 3.9.83 அன்று, மாலை 6 மணி முதல் 6.45 மணிவரை அவர்கள் இல்லத்தில் பார்த்து, ஆலய ஊழியர்கள் சங்கக் கோரிக்கைகளை நிறைவேற்றிட நேரில் பேச்சுவார்த்தைகளைத் தெளிவாகவும், விளக்கமாகவும் நடத்தியதில், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு கோரிக்கைகளை நிறைவேற்றிட, ஏற்று இசைவு தந்த பிறகு, சங்கப் பொறுப்பாளர்கள் விடைபெறும் முன்னர் எடுத்த புகைப்படம்.

# புதிய ஆணையர் — ஓர் அறிமுகம் (Profile)

தற்போது 1983 அக்டோபர் மாதம் முதல் நமது அறநிலையத் துறைக்கு ஆணையராக நியமிக்கப்பெற்றுப் புதிதாக வந்துள்ள ஆணையர், **திரு கு. ஆளுடையபிள்ளை, I.A.S.** அவர்கள் ஆவர். இவர் பிறந்த நாள் : 23-6-1934. 1954ஆம் ஆண்டில் இந்திய 'வருமானவரிச் சட்டம், செயல்முறை'யில் சிறப்புத் தேர்ச்சிக்குப் B. Com. (Hons.) பட்டமும்; 1960-ஆம் ஆண்டில் 'கணக்கு, தணிக்கை மற்றும் வரிவிதிப்பு' ஆகியவற்றின் தேர்ச்சிக்கு M.Com. பட்டமும்; 1962-63ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நியூயார்க் மாநிலத்தில் இதாகா நகரில் உள்ள கார்னல் பல்கலைக் கழகத்தில் 'தொழில் துறை மற்றும் தொழிலுறவு'க் கல்லூரியில் சிறப்புத் தேர்ச்சிகளும் பெற்றார். 1969இல் B.L., பட்டம் பெற்றார். சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு பெற்றுள்ளார்.

1955-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கல்வித்துறையில் நேரடி நியமனம் பெற்று, 10 ஆண்டுகள் வணிக இயற் பேராசிரியராகவும்; பின்னர் 1965 முதல் 1975 வரை தமிழ்நாடு அரசினர் கல்லூரிகள் பலவற்றில் 10 ஆண்டுகள் முதல்வராகவும்; 1975 முதல் 78 வரை சென்னையில் கல்லூரிக் கல்வியின் துணை இயக்குநராகவும்; 1978 முதல் 79 வரை கல்லூரிக் கல்வியின் இணை இயக்குநராகவும்; இந்திய ஆட்சிப் பணியில் (I.A.S.) நியமனம் செய்யப்பெற்று, 1979 பிப்ரவரி முதல் 1979 ஆகஸ்ட் வரையில் கல்வித் துறையில் அரசுத் துணைச் செயலாளராகவும்; 1979 முதல் 1980வரையில் மாவட்டப் பயிற்சி பெற்று, துணை மாவட்ட ஆட்சியராகவும்; 1980 முதல் 1981 வரையில் அரசின் உள்துறை இணைச் செயலாளராகவும்; அதன்பின் சிலகாலம் சென்னையில் போக்குவரத்து இணை ஆணையராகவும்; 1981 அக்டோபர் முதல் 1983 செப்டம்பர் முடிய மதுரை மாவட்ட ஆட்சியராகவும் பணியாற்றி, தற்போது 1983 அக்டோபர் முதல் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அனைத்திந்திய வானொலியில் பற்பல சொற்பொழிவுகள் ஆற்றியும், மாணவர்களுக்கு வானொலியில் நொடி வினாவிடைப் போட்டிகள் நிகழ்த்தியும் உள்ளார். தமிழ்நாட்டுக் கல்லூரிகள் பலவற்றில் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவுகளும், வங்கியாளர்கள்— கூட்டுறவாளர்கள்— பேராசிரியர்கள்— ரோட்டரியர்கள்—அரிமாக்கள்— கல்லூரி முதல்வர்கள் — சங்க ஊழியர்கள் ஆகியவர்களுக்குச் சொற்பொழிவுகளும், நிகழ்த்தியிருக்கின்றார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் 'வணிக இயலின் தத்துவங்கள்'—'வணிக இயலுக்கு ஓர் அறிமுகம்'— 'வங்கிச் சட்டமும் நடைமுறையும்' — 'இந்திய வங்கித்தொழில் முறை' — 'இந்தியாவில் கூட்டுறவு இயக்கம்'—'தணிக்கைமுறை'—'வணிகம் மற்றும் கணக்கியலின் அடிப்படைகள்' என்னும் பல நூல்களை இயற்றியிருக்கின்றார்.

சென்னைக்கூட்டுறவுப் பத்திரிகை-இந்துப் பத்திரிகை-'வாணிகம்'—'குருக்ஷேத்திரம்' முதலிய பத்திரிகைகள் பலவற்றிற்குக் கட்டுரைகள் வழங்கியிருக்கின்றார். 'தமிழ்நாடுப் பாட நூல் நிறுவனத்தின் வணிகவியற் சட்டம்'—'வாணிகத்தொழில் அமைப்புமுறை'—'கூட்டுறவுச்சட்டமும் வழக்கமும்' ஆகிய நூல்களையும்; மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில், பல்கலைக் கழக மான்யக் குழுவின் செயல்முறைத் திட்டத்தின்கீழ் வெளியிடப் பெற்ற 'உயர்தரக் கணக்கியல்' நூல்களையும் குறித்து, ஒருபெரும் நிபுணர் என்ற முறையில் மதிப்பீடு செய்து, ஆய்வுரைகள் அளித்திருக்கின்றார்.

மதுரை வங்கியின் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் ஆற்ற, மதுரைக்காமராசர் பல்கலைக் கழகத்தால் அழைக்கப்பெற்று, 1979-80ஆம் ஆண்டிற்குரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்.

இவருடைய தந்தையார் : திரு. வை.குஞ்சிதபாதம் பிள்ளை; தாயார் திருமதி கு. திரிபுர சுந்தரியம்மையார். இருவருமே, செந்தமிழ்ப் புலமை நலத்திற் சிறந்து விளங்கித் திகழ்ந்தவர்கள் என்பதும்; இவர்தம் தாயார் ஆகிய திரிபுரசுந்தரி அம்மையார் அவர்கள், இந்த இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற மாபெரும் பேரறிஞராக விளங்கியிருந்தவரும், வடமொழி-தென் மொழி-ஆங்கிலம் என்னும் மும்மொழிகளிலும் பெரும் புலமை வாய்ந்து, எத்துணையோ பற்பல அரிய பெரிய ஆராய்ச்சி நூல்களை எழுதியவரும் ஆகிய, சுவாமி வேதாசலம் என்னும் **அருட்திரு மறைமலை அடிகளார்** அவர்களின் அருமைத் திருமகளார் என்பதும், இங்குக் குறிப்பிடத்தக்கன.

**—ஆசிரியர்.**

# சிவஞான சித்தியாரில்

# உலகாயதன் மதமும், அதன் மறுதலையும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை

தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தொன்றுதொட்டுத் தோன்றி வந்துள்ள, சான்றோர்கள் பலராவர். அவர்களுள் அருள்நந்தி சிவாசாரியர் என்பவர் ஒருவர். நம்மிற் பெரும்பாலோர், தொல்காப்பியர் திருவள்ளுவர் இளங்கோவடிகள் நக்கீரர் கம்பர் போன்ற சான்றோர்கள் ஒரு சிலரை மட்டுமே, பொதுவாக அறிவர். அருள்நந்திசிவம் போன்ற சான்றோர்கள் பலரைத் தமிழ் மக்களிற் பெரும்பாலோர், இன்னும் போதிய அளவு அறிந்து கொள்ளவில்லை. திருநீறு அணியும் சைவர்களில் ஒருசிலருக்கு மட்டுமே, அருள்நந்திசிவம் உரியவரல்லர். தமிழ்மக்கள் அனைவருக்குமே சிறப்பாக உரிய, தொல்காப்பியர் ,திருவள்ளுவர் போன்ற சான்றோர்களில், அருள்நந்திசிவமும் ஒருவராவர் எனத் துணிந்து கூறலாம்.

## அருள்நந்தி சிவம்

இலக்கணத்திற்குத் தொல்காப்பியரும், நீதிநூலுக்குத் திருவள்ளுவரும், நெஞ்சை அள்ளும் செஞ்சொற் காப்பியத்திற்கு இளங்கோவடிகளும், கவிதைச் சுவைக்குக் கம்பரும், வரலாற்றுக்குச் சேக்கிழாரும், பக்தி இயக்கத்திற்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும், யோகஞான அனுபவங்களுக்குத் திருமூலரும் போல, நமது தமிழ்நாட்டில் தத்துவஞானத்திற்குத் தலைசிறந்த பெருஞ் சான்ரோர்களாக மதித்துப் போற்றத் தக்கவர்களுள், ஆசிரியர் அருள்நந்திசிவம் மிக்க பெரும் சிறப்புடையவர் ஆவர். உலகப் பெரும் தத்துவஞானச் சான்றோர்களின் குழுவில், ஒரு பெரும் சிறப்புறுப்பினராக ஒருங்குவைத்துப் போற்றி வணங்கத் தக்கவர், அருள்நந்திசிவம் எனலாம்.

## சிவஞான சித்தியார்

ஆசிரியர் அருள்நந்திசிவாசாரியர், ஆசிரியர் மெய்கண்டார்பெருமான் அருளிச் செய்த சிவஞானபோதம் என்னும் நூலை முதல்நூலாசிக் கொண்டு, அதற்கு வழிநூலாக, அதனை விளக்கி விரித்துரைத்துச் சிவஞானசித்தியார் என்னும் நூலை இயற்றியருளியிருக்கின்றார். அது பரபக்கம் எனவும், சுபக்கம் எனவும் இரண்டு பகுதிகளை உடையது.

பரபக்கத்தின்கண் உலகாயதன், சவுத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன், நிகண்டவாதி, ஆசீவகன், பட்டாசாரியன், பிரபாகரன், சத்தப்பிரமவாதி, மாயாவாதி, பாற்கரியன், நிரீச்சுரசாங்கியன், பாஞ்சராத்திரி என்னும் பதினான்கு (14) மதத்தவரின் கொள்கைகளையும், அவர்கள் தத்தம் கொள்கைகளை எத்தகைய உணர்ச்சிகளுடன் எடுத்துக் கூறுவரோ, அத்தகைய உணர்ச்சியோடேயே எடுத்துக்கூறி, அதன்பின் அவ்வக் கொள்கைகளின் பொருத்தமின்மையை எடுத்துரைத்து விளக்கியிருக்கும் அருள்நந்தி சிவாசாரியரின் திறன், மிகவும் வியந்து போற்றுதற்குரியது.

இவ்வாற்றால் ஆசிரியர் அருள்நந்தி சிவத்தை ஓர் 'ஓரங்க நடிகர்' (Mono-Actor) என்றும்; அவர் ஒருவரே இந்தப் பலவேறு வகையான கொள்கைகளைத் திறம்படத் தொகுத்துக்கூறியும், அவற்றைமறுத்துரைத்தும் விளக்கியிருப்பதனால் ''பலகுரல் மன்னர்'' (Monarch of Multi - Voices ) என்றும் குறிப்பிடுதல் பொருந்தும். இவ்வாற்றால் அவரை ஒருபெரும் '' பல்கலைக் குரிசில் '' (Versatile Genius) என்றும் புகழ்ந்து போற்றலாம்.

இவர், சிவஞான சித்தியார் பரபக்கப் பகுதியின்கண், அதன் தொடக்கத்தில் உலகாயதனின் கொள்கையை எடுத்துரைத்தும், அடுத்து அவ் உலகாயதக்கொள்கையை அழகுற மறுத்துரைத்தும் விளக்கியருள்கின்றார். இங்ஙனம் உலகாயதனின் இறைமறுப்புக் கொள்கையினையும், அதனைக் கடிந்து இறைநிறுப்புக் கொள்கையினையும், முறையே அருள்நந்திசிவம் எடுத்து மொழிந்திருப்பது, அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும். அப்பகுதியின்கண் வரும் பாடல்களின் திரண்ட பொருளை மட்டும், இங்கு ஒருசிறிது சுருங்கக் காண்கோம்.

(தொடர்ச்சி 50-ஆம் பக்கம்)

# நியாய தரிசனம்

முன்னுரை :

'நியாயம்' என்னும் சொல்லுக்கு 'ஒரு பொருளின் உள்நுழைந்துகாண்பது'(நி-உள்ளே, ஆய-செல்லுதல்) என்பது பொருள். இதற்கு 'ஆன்வீக்ஷிகி - தர்க்கவித்தை - வாதவித்தை' என வேறு பெயர்களும் வழங்கும். நியாய சாத்திரம் அருளிச் செய்தவர், கௌதமர் (கோதமர்). இவருக்கு அட்சபாதர் (கால்களில் கண்ணுடையவர்), தீர்க்கதபசி (நீண்டகாலம் தவம் புரிந்தவர்) என்று வேறு பெயர்களும் வழங்கும். இவரது காலம் கி. மு. 550 என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

கோதமர் :

வடபீகார் மாநிலத்தில், தற்போது தர்பங்கா என்று வழங்கும் பழைய மிதிலை நகருக்கு, வடமேற்கே 28 கல் தொலைவில் உள்ள கௌதமத்தானம் என்னும் கிராமத்தில், இவர் பிறந்தார் என்பர். அங்கு ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் 9-ஆம் தேதியில், இவர் நினைவாக ஒரு விழா நடைபெறுகின்றது. கௌதமத்தானத்திற்குக் கிழக்கே 2 கல்லில் அகல்யாத்தானம் என்னும் கிராமம் ஒன்றும், இவர்தம் மனைவியாகிய அகல்யையின் பெயரால் உள்ளது. மிதிலை நகரின் எல்லையில், ஜீரோததி ஆற்றங்கரையில், இவரது ஆச்ரமம் இருந்ததாகக் கூறுவர். கங்கையும் சரயுவும் கூடும் கோத்னா என்னும் இடத்திலும், இவர் சிலகாலம் வாழ்ந்ததாகத் தெரிகின்றது. மேற்குக் கடற்கரையில் கத்தியவார் மாவட்டத்தில் உள்ள பிரபாசா என்னும் யாத்திரைத் தலத்தில் கௌதமர் தமது இறுதி ஓய்வுநாட்களைக் கழித்தார். இவரைப் போலவேஇவரது புதல்வராகிய சதானந்தர் என்பவரும், மிதிலையில் சனகமகாராசரின் அவைக்களத்தில் அரசகுருவாக விளங்கினார் என நூல்கள் கூறுகின்றன.

பதினாறு பொருள்கள்:

கோதமர் அருளிய நியாய சாத்திரம், பிரமாணம் பிரமேயம் சம்சயம் பிரயோசனம் திருட்டாந்தம் சித்தாந்தம் அவயவம் தர்க்கம் நிர்ணயம் வாதம் செற்பம் விதண்டை ஏதுவாபாசம் சலம் சாதி நிக்கிரகத்தானம் என்னும் பதினாறு பொருள்களைப்பற்றி விளக்குகின்றது.

*(1) இவற்றுள் பிரமாணம் (அறிகருவி) என்பது, பிரத்தியட்சம் (Perception), அனுமானம் ( Inference ), ஆகமம் (Scripture), அபாவம் ( Non-Existence ), அருத்தாபத்தி (Presumption), உபமானம் (Analogy), பாரிசேடம் (Inference by Elimination) சம்பவம் (Probability), ஐதிகம் (Tradition), சுபாவம் (Natural Inference) என்னும் பத்து வகைப்படும்.*

*(2) பிரமேயம் (அறிதற்குரிய பல பொருள்கள்), ஆத்மா சரீரம் இந்திரியம் அர்த்தம் புத்தி மனம் பிரவிருத்தி தோஷம் பிரேத்தியபாவம் பலம் துக்கம் அபவர்க்கம் எனப் பலவகைப்படும்.*

*(3) சம்சயம், இதுவோ அதுவோ பிறிதோ என்னும் ஐயப்பாடு.*

*(4) பிரயோசனம், துன்பநீக்கமும் இன்ப ஆக்கமும் ஆகிய பயன்.*

*(5) திருட்டாந்தம், உதாரணம் அல்லது எடுத்துக்காட்டு.*

*(6) சித்தாந்தம் (Tenet), சான்றுகளால் மெய்ப்பித்து நிறுவப்பெற்ற முடிந்த முடிபான கொள்கைகள். அஃது எல்லோரும் உடன்படுவது, சிலரே உடன்படுவது, மற்றொன்றையும் உடன்படச் செய்வது, குறிப்பிற் பெறப்படுவது என நான்கு வகைப்படும்.*

*(7) அவயவம் (Syllogism), பிரதிஞ்ஞை ஏது திருட்டாந்தம் உபநயம் நிகமனம் என்று ஐந்து வகைப்படும். 'இம்மலை நெருப்புடையது' என்பது பிரதிஞ்ஞை. 'புகையுடைமையால்' என்பது ஏது. 'யாது யாது புகையுடையது அதுவது நெருப்புடையது. அடுக்களைபோல' என்பது திருட்டாந்தம். 'இம்மலை புகையுடையது' என்பது உபநயம். 'இம்மலை புகையுடைமையால் நெருப்புடைத்து' என்பது நிகமனம். இவ் ஐந்தனுடன் ஜிஞ்ஞாசம் சம்சயம் சக்யபிராப்தி பிரயோசனம் சம்சயவியூதாசம் என்னும் ஐந்தையும் சேர்த்துக் கூறுவதும் உண்டு.*

(8) தர்க்கம் (Confutation) என்பது, பொருளின் உண்மையை அறிவதற்காக, உண்மையல்லாத பிறவற்றை ஆராய்ந்து மறுத்தொழித்தல்.

(9) நிர்ணயம் ( Ascertainment ), மாறுபட்டோர் இருதிறத்தினரின் கூற்றுக்களையும் கேட்டு ஐயம் தீர்த்தலும், இருவேறு திறக் கொள்கைகளுள் ஒன்றனை ஏற்று முடிவு செய்தலுமாகும்.

(10) வாதம் (Discussion, Debate) என்பது, மாறுபட்ட இருவகைக் கொள்கைகளில் ஒன்றைத் தழுவி நிலைநாட்டிப் பேசுதல்.

(11) செற்பம் (Controversy, Polemics), எவ்வகையாலேனும் வெற்றிபெற வேண்டுமென்று விரும்பி, ஒரு கொள்கையினை ஆதரித்தோ எதிர்த்தோ, தவறான முறைகளில் வேண்டும் என்றே அழிவழக்குப் பேசுதல்.

(12) விதண்டை (Cavil, Wrangling), பிறகொள்கையினை எதிர்த்துரைத்தலை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு, தனக்கென்று ஒரு கொள்கையுமின்றி வீணாகப் பேசி வழக்கிடுதல்.

(13) ஏதுவாபாசம் ( Fallacy ), என்பது அசித்தம் (துணியப்படாதது); விருத்தம் (மறுதலைக்கட்படுவது); அனைகாந்திகம் (ஒருதலைப்படாதது) என மூவகைப்பட்டு, விரியால் இருபத்தொன்று ஆகும்.

(14) சலம் (Equivocation, Quibble) என்பது, ஒரு கருத்துப் பற்றிக் கூறிய சொல்லுக்கு வேறு பொருள் படைத்துக்கொண்டு பழித்தல்; அஃதாவது புதிய கம்பளம் கொண்டு வா என்னும் பொருளில் நவகம்பளம் என்றால், 'புதிய' எனப் பொருள்படும் நவம் என்னும் சொல்லுக்கே, ஒன்பது என்று பொருள்கொண்டு அழிவழக்குப் பேசுதல்.

(15) சாதி ( Futile Objection ) என்பது, உண்மையல்லாத, போலியான தடைவிடைகள் நிகழ்த்துதல்; வெறும் ஒப்புமைத் தன்மையினாலோ அல்லது ஒப்பின்மைத் தன்மையினாலோ, ஒரு பொருளை மறுத்து எதிர்த்துப் பயனின்றி வீணே பேசுதல். இது இருபத்து நான்கு வகைப்படும்.

(16) நிக்கிரகத்தானம் (Occasion for Reproof) என்பது, தோல்வித்தானம் எனவும் படும். இது அப்பிரபத்தி (அறியாமை), விப்பிரபத்தி (பிறழ அறிதல்) என இருவகைப் பட்டு விரியால் இருபத்திரண்டு ஆகும். அவை யாவன :

1. பிரதிஞ்ஞா ஆனி— மேற்கோள் அழிவு
2. பிரதிஞ்ஞாந்தரம்— வேறுமேற்கோள்
2. பிரதிஞ்ஞாவிரோதம்— மேற்கோள்முரண்
4. பிரதிஞ்ஞாசந்நியாசம்—மேற்கோள்விடல்
5. ஏதுவந்தரம்—வேற்றுஏது
6. அர்த்தாந்தரம்—வேற்றுப்பொருள்
7. நிரர்த்தகம்—பொருளின்மை
8. அவிஞ்ஞாதார்த்தம்-பொருள் அறியப்படாமை
9. அபார்த்தகம்—பொருட் போலி
10. அப்பிராப்த காலம்—காலம் பெறாமை
11. நியூனம்—குன்றக்கூறல்
12. அதிகம்—மிகைபடக்கூறல்
13. புனருக்தம்—கூறியது கூறல்
14. அநுபாஷணம்—பிற்கூற்று இன்மை
15. அஞ்ஞானம்—அறியாமை
16. அப்பிரதிபை—தடுமாற்றம்
17. விட்சேபம்— நழுவுதல்
18. மதாநுஞ்ஞை— பிறன்கூற்றை உடன்படல்
19. பரியனுயோஜ்யோபேட்சணம்— வினவற்பாலதனை வினவாமை
20. நிர்அனு யோஜ்யானு யோகம்— வினவற்பாலது அல்லாததனை வினைவுதல்
21. அபசித்தாந்தம்— கொள்கைப்போலி
22. ஏதுவாபாசம்— காரணப்போலி

**நியாய சாத்திரங்கள்:**

நியாயசாத்திரங்களில் கௌதமரின் நியாய சூத்திரம் (கி. பி. 550), வாத்சாயனரின் நியாய சூத்திர வியக்கியானம் (கி.பி. 450), உத்யோதகாரரின் வார்த்திகம் (கி. பி. 600), வாசஸ்பதி மிச்ரரின் தாற்பரியடீக்கை (கி.பி. 900), உதயனரின் தாத்பரியபரிசுத்தி (கி.பி. 1,000), சயந்தரின் நியாய மஞ்சரி (கி. பி. 1,000) பாசர்வக்ஞரின் நியாயசாரம் (கி.பி. 1,000), கங்கேசரின் தத்துவ சிந்தாமணி (கி.பி. 1,100), வாசுதேவசார்வபௌமரின் தத்துவ சிந்தாமணி (கி.பி. 1,500), அன்னம்பட்டரின் தருக்கசங்கிரகம் (கி.பி. 1,700) என்பவைகள், மிகவும் புகழ் சிறந்த நியாயசாத்திரங்கள் ஆகும்.

—ஆசிரியர்

# வைசேடிக தரிசனம்

**முன்னுரை :**

ஒரு பொருளைப் பிறபொருள்களினின்று பிரித்து உணர்த்தும் விசேடத் தன்மைகள் பற்றி ஆராய்ந்து விளக்கும் நூல்கள், வைசேடிகம் எனப்படும். வைசேடிக நூல்கள்; திரவியம் குணம் தொழில் சாதி விசேடம் சமவாயம் இன்மை என்னும் ஏழுவகைப் பதார்த்தங்களைப் பற்றி விளக்கும். அவற்றுள் **திரவியம்** என்பது, நிலம் நீர் தீ வளி ஆகாயம் காலம் திசை ஆன்மா மனம் என ஒன்பது வகைப்படும். அவற்றுள் நிலம் நீர் தீ வளி என்னும் நான்கும் அழிகின்ற அநித்தப் பொருள்கள். அவற்றின் காரணங்களாகிய நால்வகைப் பரமாணுக்களும், ஆகாயம் முதலிய ஐந்தும் அழிவற்ற நித்தப் பொருள்கள். இவற்றுள் ஆகாயம் காலம் திசை என்னும் மூன்றும், ஒரோ ஒன்றேயாய், வியாபகமாய் உள்ளன. ஆன்மாக்களாகிய உயிர்கள், வியாபகமாய் எண்ணிறந்தனவாக உள்ளன. மனமானது அணுவளவிற்றாய், ஆன்மாக்கள்தோறும் வெவ்வேறாக இருக்கும். ஆன்மா, பரமான்மா சீவான்மா என இருவகைப்படும். பரமான்மா முற்றுணர்வுடையவன், எல்லாம் வல்லவன், அவன் விருப்பத்தின் வழியாகவே உலகம் தோன்றி ஒடுங்கும். அவனால் செய்யப்பட்டதே வேதம். சீவான்மாக்கள், சிற்றறிவினவாய் வினைக்கு ஈடாகப் பிறந்தும் இறந்தும், இன்பத் துன்பங்களை அனுபவிக்கும். ஆன்மாக்களுக்கு மனத்தோடு கூடாதவழி அறிவு நிகழாது.

**குணங்கள் :**

இனி குணங்களாவன, திரவியம் பற்றுக்கோடாக நிகழ்பவை. அவை, உருவம் சுவை நாற்றம் ஊறு முதலியனவாக இருபத்து நான்கு வகைப்படும். அவற்றுள் புத்தி இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு முயற்சி அறம் பாவம் என்னும் எட்டுக் குணங்களும், பாவனை என்னும் வாதனையும், சீவான்மாக்களுக்குச் சிறப்புக் குணங்களாகும். இவற்றுள், புத்தி விருப்பம் முயற்சி என்னும் மூன்றும் பரமான்மாவுக்குச் சிறப்புக் குணங்கள்; பரமான்மாவின் குணங்களாகிய புத்தி விருப்பம் முயற்சி என்பன மூன்றும் அநித்தியம்.

தொழிலாவன, எழும்பல் ஈதல் வளைதல் நிமிர்தல் நடத்தல் என ஐந்து வகைப்படும். சாதியாவது, பல பொருள்களுக்குப் பொதுவாகிய தன்மை. அது பரம் அபரம் என இரு வகைப்படும். விசேடமாவது, ஒவ்வொரு பொருளுக்கே யுரிய சிறப்புத் தன்மை. அவை நிலவணு முதலிய பரமாணுக்களும், ஆகாயம் முதலிய ஐந்தும் ஆகிய நித்தப் பொருள்களும், வேறுபாடு உணர நிற்பனவாய்ப் பலவகைப் படும். சமவாயமாவது, அவயவம் முதலிய வற்றிற்கு அவயவி முதலியவற்றோடு நீக்கமின்றி உள்ளதாகிய சம்பந்தம், அஃது ஒன்றேயாகும். இன்மையாவது, முன்னின்மையும், அழிவுபாட்டின்மையும், என்றும் இன்மையும், ஒன்றினொன்றின்மையும் என நான்கு வகைப் படும்.

இவ்வாறு கூறப்படும் எழுவகைப் பொருள்களின் சிறப்பியல்பு, பொது இயல்பு, வேற்றியல்புகளை உணரவே, உடம்பு முதலியவற்றின் வேறாகிய ஆன்மாவின் இயல்பு விளங்கும்; விளங்கவே, உடம்பு முதலியவற்றை நான் என்று எண்ணிய மயக்க உணர்வு கழியும்; அது கழியவே முயற்சியின்மையின், அறம் பாவங்கள் இல்லையாய்ப் பிறவி ஒழியும்; பிறவி ஒழியவே, வரக் கடவனவாகிய துன்பங்கள் இல்லையாகும். துன்பங்கள் இல்லையாகவே, உடம்பு முகந்துகொண்ட வினைப் பயன் நுகர்ச்சியினால் கழியும்போது, இறுதித் துன்பங்கட்கு மனத்தோடு கூடுதற்கு ஏது இல்லாமல், அறிவு இன்றிப் பாடாணம் (கல்) போலக்கிடப்பதே முக்தி நிலையாகும் என்பது, வைசேடிக நூற்கொள்கை.

**கணாத முனிவர் :**

இவ்வைசேடிக நூலைச் செய்தவர், கணாத முனிவர்; இவரைக் காசியபர் என்றும் கூறுவர். கணாதர் என்னும் சொல்லுக்கு 'அணுவை உண்ணுபவர்' என்பது பொருள். பொருள்களையெல்லாம் அணுவினும் மிகச் சிறிய நுண்ணிய நிலையில் ஆராய்ந்து காண முயலுபவர் என்னும் காரணம்பற்றி, இவருக்கு இப் பெயர் வழங்குவதாயிற்று. உலூகர் என்றும் இவருக்கு ஒரு பெயர் வழங்கும். உலூகம் என்னும் ஆந்தையானது பகலில் உறங்கி, இரவில் இரைதேடும். அதுபோல இவர் பகலெல்லாம் தியானத்தில் கண்மூடி இருந்து, இரவில் உணவு தேடி உண்பர். அதனால் இவருக்கு உலூகர் என்றும், இவர்தம் கொள்கைக்கு உலூகம் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. இவருடைய காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு என்பர். பொருள்களின் அமைப்பு, மாறுதல், ஆற்றல் என்பனவற்றைப் பற்றியும், வெம்மை ஒளி ஒலி மின்னாற்றல் காந்தம் என்பவற்றைப் பற்றியும் உரிய ஆராய்ச்சிகளுக்கு, வைசேடிகக் கொள்கை மிகப் பழைய காலத்திலேயே ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தது. ஒழுக்க இயல், சமூகஇயல், மனஇயல் ஆகியவற்றின் அடிப்படை உண்மைகளையும் கூட, ஒருவகையில் வைசேடிக நூல்கள் ஆராய்ந்து விளக்கியுள்ளன.

**வைசேடிக நூல்கள் :**

வைசேடிக நூல்களில் பிராசஸ்தபாதரின் பதார்த்தசங்கிரகம் (கி.பி. 4 நூ.), சந்திரரின் தசபதார்த்தசாரம் (கி.பி. 648), வியோமசிவரின் வியோமவதி, சீதரரின் நியாய கண்டலி (கி.பி. 990), உதயனரின் கிரணாவளி (கி. பி. 10நூ.), சீவத்சேசரின் லீலாவதி (கி.பி. 11 நூ.), சிவாதித்தியரின் சப்தபதார்த்தி, லௌகாட்சிபாஸ்கரரின் தர்க்ககௌமுதி, சங்கரமிச்ரரின் உபாஸ்காரம் (கி.பி. 1600), விசுவநாதரின் பாஷாபரிச்சேதம் (கி.பி.16நூ.), சித்தாந்த முக்தாவளி, ஜகதீசரின் தர்க்காமிருதம் (கி.பி. 1635), ஜயநாராயணரின் விவ்விருத்தி (கி.பி. 17நூ.) என்பவைகள், வைசேடிகக் கொள்கைகளை விளக்கும் புகழ்மிக்க பெருநூல்களாகும். —ஆசிரியர்.

# சாங்கிய தரிசனம்

முன்னுரை :

இந்து சமயக் கொள்கைகளுள், மிகவும் பழமையானது சாங்கிய தத்துவமேயாகும். சாங்கியம் என்னும் பெயரானது, எண்ணிக்கை என்னும் பொருளையுடைய 'சங்கியை' என்னும் சொல்லினின்று தோன்றியது என்பர். உலகத்தினையும், உலகத் தோற்றத்திற்குக் காரணமான மூலப் பிரகிருதி, மற்றும் உலகத்தில் வாழும் ஆன்மாக்கள் ஆகிய அனைத்தினையும் ஆராய்ந்து, 25 தத்துவங்களாக எண்ணிக்கையிட்டு (சங்கியை செய்து) விளக்குவதனால், இதற்குச் சாங்கியம் எனப் பெயர் அமைந்தது என்று, அறிஞர்கள் விளக்கம் கூறுவர்.

சாங்கியம் :

மற்றும் சிலர், சங்கியை என்பதற்குத் தத்துவச் சிந்தனை ( Philosopical Reflection) என்பது பொருள் என்றும், உலகத்தின் தோற்றம் நிலை இறுதி என்பவை குறித்த தத்துவச் சிந்தனைகளை ஆராய்ந்து விளக்குவதனால், இதற்குச் சாங்கியம் என்று பெயரமைந்தது என்றும் கூறுவதுண்டு. வேறு சிலர் முதன் முதல் இக் கொள்கையைத் தோற்றுவித்தவர் சங்கா என்பவராதலால், இதற்கு இப்பெயர் அமைந்தது என்றும் கூறுவர்.

'' சாங்கியம் யோகம் என்றிரண்டு தன்மைய
வீங்கிய பொருளெலாம் வேறு கண்டன;
ஆங்கவை உணர்ந்தவர்க்கு அன்றி அன்னவன்
ஓங்கிய மேல்நிலை உணரற் பாலதோ ''?

என வரும் கம்பர் பாடலில், சாங்கிய தத்துவக் கொள்கையின் சிறப்பு, பெரிதும் புகழ்ந்தோதப் பெற்றிருத்தல் காணலாம்.

உலக மக்களுக்கு வரும் துன்பங்கள், தம்மைப் பற்றி வருவன, பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப் பற்றி வருவன என மூன்று வகைப்படும் என்று, பொதுவாக நூல்கள் கூறும். இதனை முதன் முதலில் குறிப்பிட்டது சாங்கியக் கொள்கையேயாகும். தம்மைப் பற்றி வரும் துன்பங்களை ஆதியான்மிகம் என்றும், பிற உயிர்களைப் பற்றிவரும் துன்பங்களை ஆதிபௌதிகம் என்றும், தெய்வத்தைப் பற்றி வரும் துன்பங்களை ஆதிதைவிகம் என்றும் சாங்கிய நூல்கள் குறிப்பிடும். ''உள்ளது அழியாது இல்லது தோன்றாது'' என்னும் சற்காரிய வாதக் கொள்கையினை, முதன்முதல் அறிவுறுத்தியதும், சாங்கிய தத்துவமேயாகும். சத்துவம் இராசதம் தாமதம் என்று குணங்கள் மூன்று வகைப்படும் என்று விளக்கியதும், சாங்கியக் கொள்கையேயாகும்.

25 தத்துவங்கள் :

சாங்கிய மதம், உலகத்தினைப் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம், என்னும் பூதங்கள் ஐந்து, சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்து, வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்து, சுரோத்திரம் துவக்கு சட்சு ஆக்கிராணம் சிங்குவை என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்து என்பவற்றுடன், மனம் புத்தி அகங்காரம் மூலப்பிரகிருதி புருடன் என்னும் 25 தத்துவங்களை ஆராய்ந்து விளக்குகின்றது. புருடன் 25ஆம் தத்துவம். பிரகிருதி 24ஆம் தத்துவம். ஏனைய இருபத்துமூன்று தத்துவங்களும் தோன்றுவதற்கு மூல காரணம் ஆதலின், பிரகிருதி, மூலப்பிரகிருதி என வழங்கப்பெறும்.

மூலப் பிரகிருதி, நித்தமாய்-வியாபகமாய்-சடமாய்-எல்லாப் பொருள்களுக்கும் காரணமாய்ச்-சத்துவம் இராசதம் தாமதம் என்னும் முக்குணங்களும் சமமாக நின்ற நிலையாய்-அருவமாய் உள்ளது. இத் தத்துவங்கள் இருபத்துநான்கிற்கும் வேறாய், நித்தமாய்-வியாபகமாய்- அருவாய்- பலவாய்-அறிவதும் செய்வதுமின்றி, அறிவுமாத்திரமாய் -ஒன்றற்குக் காரணமாதலும், ஒன்றின் காரியமாதலும் இன்றி நிற்கும் ஆன்மாக்கள் (புருடன்), பெத்த நிலையிலும் முத்திநிலையிலும் ஒரு தன்மையாய் இருக்கும். புருடனுக்கு மலினம் என்பது இல்லை. தாமரை இலையின்மேல் நீர்போல் எதிலும் ஒட்டுதலின்றி நிற்பது புருடனின் இயல்பு. அஃது அநாதியே புத்தியைச் சார்ந்த அவிச்சை வயத்தால், பெத்தம் எனப்படும் இன்ப துன்பஉணர்வுகளை அடைந்து நின்றது.

புத்தியாவது, மூலப் பிரகிருதியின் பரிணாமம். அதுவே மான் என்றும், அந்தக் கரணம் என்றும் கூறப்படும். அப்புத்தி, பொறிஞானமாய்ப் பரிணமித்து விடயத்தில் செல்லும். புருடன் செய்வான் என்றும், புத்தி அறியும் என்றும் சொல்லப்படுவது வேற்றுமை உணராததனால் ஆகும். மூலப் பிரகிருதியையும், புருடனையும் தனித்தனியானவைஎன்றுபகுத்து உணர்ந்தால், அவிச்சை நீங்கும். அந்நிலையே முத்தி எனப்படும்.

### கபில முனிவர் :

சாங்கியக் கொள்கையை நிறுவியவர் கபிலர் என்பவர். அவரது காலம் கி. மு. 6ஆம் நூற்றாண்டு என்பர். இவருடைய தந்தையின் பெயர் கர்த்தமர் என்றும், தாயின் பெயர் தேவஆகுதி என்றும் கூறுவர். இலங்கையில் அனுராதபுரத்துக் குகைக்கோயிலில், இவரது திருவுருவம் செதுக்கப் பெற்றுள்ளது. கல்கத்தா நகரத்துக்கு 90 கல் தொலைவில் கங்கையாற்றின் முகப்பில் உள்ள சாகரம் என்னும் தீவில் இவர் சிலகாலம் வாழ்ந்தவர் என்பர். நேபாள தேசத்தில் உள்ள கபிலவாஸ்து என்னும் நகரம், இவர் பெயராலேயே அமைந்தது என்றும், இந்நகரத்தில்தான் புத்தர்பிரான் தோன்றினார் என்றும் கூறுவர். இதனால் பௌத்தமதம் தோன்றுதற்கு முன்னரே கபிலரின் சாங்கியக் கொள்கை பழமை வாய்ந்ததாகத் தோன்றிப் பரவி இருந்தது என்பது புலனாகின்றது. சங்க காலத்திலும் தமிழகத்தில் கபிலர் என்னும் பெயரில், சில புலவர்கள் இருந்தனர். அதனால் இவர்தம் பெருமையும் சிறப்பும் பெரிதும் விளங்குகின்றன.

### சாங்கியமும், பௌத்தமும் !

முதன்முதலாகச் சுவேதாசுவதர உபநிடதத்தில்தான், சாங்கியக் கொள்கை பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. துக்கத்தை வற்புறுத்துதல், வேதவேள்விகளுக்கு முதன்மை கொடாமை, வரம்பற்ற துறவுநிலை யுணர்வின் மிகுதியை இகழ்தல், கடவுள் உண்மை பற்றியோ இன்மை பற்றியோ அறியும் ஆர்வமின்மை, மாறிமாறிச் செல்லும் உலகின் பரிணாம நித்தியத்துவம், என்பவைகளில் சாங்கியக் கொள்கைக்கும், பௌத்தக் கொள்கைக்கும் இடையே ஒரு சிறிது ஒப்புமை உள்ளது. சாங்கியம் முதலில் கடவுள் உண்மையினைமேற்கொள்ளவில்லை. நாளடைவில் கடவுளுண்மையினை உடன்பட்டு ஏற்றுத் தழுவிக்கொண்டது. ஆதலின் நிரீசுவர சாங்கியம் என்றும், ஈசுவரசாங்கியம் என்றும், இருவகையாகச் சாங்கியக் கொள்கை வழங்கப் பெறும்.

''சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு''

என்னும் திருக்குறளில், திருவள்ளுவர் சாங்கியக் கொள்கையினைக் குறிப்பிட்டுள்ளார்.

### திருக்குறளில் சாங்கியம்

இத்திருக்குறளுக்குப் பரிமேலழகர் ''சுவையும் ஒளியும் ஊறும் ஓசையும் நாற்றமும் என்று சொல்லப்பட்ட தன்மாத்திரைகள் ஐந்தன் கூறுபாட்டையும் ஆராய்வான் அறிவின் கண்ணதே உலகம்''—''அஃதாவது தன்மாத்திரைகள் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்துமாக இருபதுமாம். 'வகை தெரிவான் கட்டு' என்று உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும், அவன் தெரிதற்குக் கருவியாகிய மான் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதலாகிய மூலப்பகுதியும் பெற்றாம். தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதலாவது, மூலப்பகுதி ஒன்றிற்றோன்றியது அன்மையிற் பகுதியே யாவதல்லது விகுதியாகாதெனவும், அதன்கட்டோன்றிய மானும், அதன்கட்டோன்றிய அகங்காரமும், அதன்கட்டோன்றிய தன்மாத்திரைகளுமாகிய ஏழும், தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும், தங்கட்டோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாதலும் உடையவெனவும், அவற்றின்கட் தோன்றிய மனமும், ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் பூதங்களுமாகிய பதினாறும் தங்கட் டோன்றுவன வின்மையின், விகுதியே யாவதல்லது பகுதியாகா எனவும், புருடன்தான் ஒன்றில் தோன்றாமையானும், தன்கட் டோன்றுவன இன்மையானும்இரண்டு மல்லனெனவும், சாங்கிய நூலுள் ஓதியவற்றான் ஆராய்தல். இவ் இருபத்தைந்தும் அல்லது, உலகெனப் பிறிதொன்றில்லை என உலகினது உண்மையறிதலின், உலகம் அவனது அறிவின் கண்ணதாயிற்று'' என்று எழுதியிருக்கும் உரைவிளக்கப் பகுதி, இங்கு நாம் அறிந்து மகிழத்தக்கதாகும்.

### சாங்கிய நூல்கள் :

கபிலர், ஆசூரி, பஞ்சசிகர், ஈசுவரகிருஷ்ணர், விந்தியாவாசர் ஆகியோர் சாங்கியக் கொள்கையின் மிகப் பழைய ஆசிரியர்களாகக் கருதப் பெறுகின்றனர். கபிலரின் சாங்கியப் பிரவசன சூத்திரம், தத்துவ சமாசம், ஈசுவர கிருஷ்ணரின் சாங்கிய காரிகை, வாசஸ்பதி மிச்ரரின் சாங்கிய தத்துவகௌமுதி, சாங்கிய நாராயணரின் சாங்கிய சந்திரிகை, அநிருத்தரின் சாங்கிய சூத்திரவிருத்தி (15-ஆம் நூ.. ), மகாதேவரின் சாங்கிய சூத்திரவிருத்திகாரம் (கி. பி. 1,500), நாகேசரின் லகுசாங்கிய சூத்திரவிருத்தி, விஞ்ஞானபிட்சுவின் சாங்கியப் பிரவசன பாடியம், சாங்கியசாரம் (கி. பி. 1,600) என்பவை, புகழ்மிக்க சிறந்த சாங்கியத் தத்துவ நூல்களாகும்.

—ஆசிரியர்

# யோக தரிசனம்

**முன்னுரை :**

யோகம் என்னும் சொல், யுஜ என்னும் பகுதியினின்று தோன்றியது; அதற்கு ஒன்று சேர்தல் அல்லது இணைதல் என்பது பொருள். உயிரும் இறைவனும்-சிவாத்மாவும் பரமாத்மாவும்-ஒன்று சேர்வதற்குத் துணை புரியும் நெறியே, யோகம் என வழங்கப்படுகிறது. யோகத்தின் அடிப்படை, சாங்கிய தத்துவத்துடன் தொடர்புடையது. 'சாங்கிய தத்துவத்திற்குச் சமமான அறிவும், யோகக் கலைக்கு நிகரான ஆற்றலும் இல்லை' என்பது பெரியோர் கருத்து.

**பதஞ்சலி முனிவர் :**

முதன் முதல் யோக நெறியை விளக்கியவர் பதஞ்சலிமுனிவர். அவருக்கு முன்னரே யோகக் கலை வளர்ந்திருந்தது. அஃது எப்போது, எவரால், தோற்றுவிக்கப்பட்டது? என்று சொல்லுதல் இயலாது. ஆயினும் பதஞ்சலி முனிவரே, தமது யோகசூத்திரம் என்னும் நூலால், இந்நெறியைப் பெரிதும் விளக்கியருளினார். ஆதலின் அவரே யோகநெறியின் முதலாசிரியராகப் போற்றப் பெறுகின்றார். பதஞ்சலி முனிவரைப் பற்றி நமக்குத் தெளிவான வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் தெரியவில்லை. செவிவழிச் செய்தியாகப் பற்பல கதைகள் கூறப்படுகின்றன. பாணினீயத்திற்கு மாபாடியம் செய்த பதஞ்சலி, தில்லையம்பலம் தொழுத பதஞ்சலி என்பவர்கள் வேறு; யோக சூத்திரம் இயற்றிய இந்தப் பதஞ்சலி என்பவர் வேறு, என்று ஆராய்ச்சியறிஞர்கள் கூறுவர்.

**யோக சூத்திரம் :**

பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம், 195 சூத்திரங்களைக் கொண்டது. மனித வாழ்க்கை வளம்பெறுவதற்குரிய நடைமுறைப் பயிற்சிகளை, இவைகள் சிறப்புற விளக்குகின்றன. இந்நூல், நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. முதற்பகுதி யோகம் என்பது என்ன? அதன் குறிக்கோள் யாது? அஃது எவ்வாறு தொடங்குகின்றது? எவ்வாறு முடிகின்றது? உணர்வுநிலை, பரவசநிலை, சமாதிநிலைஎன்பன யாவை? அவைகளின் பயன்கள் என்ன? அப்பயனை அடையும் செயல்முறைகள் எவை? என்பனவற்றைப் பற்றி விளக்குகிறது. இம்முதற்பகுதிக்குச் சமாதிபாதம் என்பது பெயர்.

இரண்டாவது பகுதி, யோகத்தின் நடைமுறைக் கூறுகளையும், பொதுக்கொள்கைகளையும் விவரிக்கின்றது.. எதற்காக யோகம் செய்யப்படுதல் வேண்டும்? யோக நெறியை மேற்கொள்வதன் பயன் யாது? யோக நெறிக்குரிய ஒழுங்குமுறைப் பயிற்சிகளுக்கு உரிய சாதனங்கள் யாவை? அவற்றின் இயல்புகள் என்னென்ன? என்பனவற்றை, இரண்டாவது பகுதி விளக்குகின்றது. இதற்குச் சாதன பாதம் என்பது பெயர்.

மூன்றாம் பகுதி, முன்னர் விளக்கிய புற நிலைச் சாதனங்களுடன் தொடர்புடைய அக நிலைச் சாதனங்களைப் பற்றியும், அவற்றால் ஏற்படக்கூடிய உலகியல் அருளியல் நலங்களைக் குறித்தும் விளக்குகின்றது. இப்பகுதியானது யோகத்தின் மூலம் பெறக் கூடிய விபூதிகள் ஆகிய பலவகைச் சித்திகள் பற்றி விளக்குவதனால், இதற்கு விபூதிபாதம் என்பது பெயர்.

நான்காம் பகுதி, சீவன் குணம் சித்தம் புத்தி அகங்காரம் மனம் இந்திரியம் தன் மாத்திரை ஐம்பூதங்கள் முதலிய தத்துவச் செய்திகளை விவரிக்கின்றது. இவற்றின் முடிந்த முடிபான பயன், கைவல்யம் என்னும் ஆன்ம விடுதலை ஆதலின், இதற்குக் கைவல்ய பாதம் என்று பெயர்.

**அட்டாங்க யோகம் :**

மனிதன் பொதுவாகத் துன்பங்களையே பெரிதும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். அவன் இன்பத்திற்காக ஏங்கி நிற்கின்றான். விருப்பு வெறுப்புக்கள், செயல்கள், அவற்றின் விளைவாகிய கன்மங்கள், அவற்றால் விளையும் பலவகைக் குறைபாடுகள், பிறப்பு இறப்புக்கள், ஆகியவற்றில் அகப்பட்டுக் கொண்டு, மனிதன் சுழன்று உழன்று துயருறுகின்றான். அவன் தனக்கென ஒரு செயலும் உரிமையும் இன்றிப் பலவற்றிற்குக் கட்டுப்பட்டு, அடிமை நிலையுற்றுக் கிடக்கின்றான். மூலப் பிரகிருதியின் செயல்களுக்கு உட்பட்டு, அவனுடைய உடலும் உள்ளமும் வாழ்க்கையும்

முடங்கிக் கிடக்கின்றன. அவனுடைய நிலை, சிறைப்பட்டவனின் நிலையை ஒத்துள்ளது. எனினும், இக் கட்டுக்களினின்று விடுபட்டு, மனிதன் தன் உண்மை நிலையை உணர்ந்து, உய்தி பெற ஒரு வழியுள்ளது. அதுதான் பதஞ்சலி முனிவர் விளக்குகின்ற யோக நெறி!

இந்த யோகநெறி எண்வகைப் பகுப்புக்கள் (அஷ்ட அங்கங்கள்) கொண்டது. அவைகளின் மூலமாகத்தான் மனிதன் தூய்மையும் விடுதலையும் இன்பமும் பெற முடியும். யோகநெறியின் எண்வகைப் பகுப்புக்கள் ஆவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம் சமாதி என்னும் எட்டு ஆகும்.

**யோக சித்திகள் :**

யோகப் பயிற்சிகளின் மூலம், உடல்நலமும் வலிமையும் ஏற்படுகின்றன; நோய்கள் தீர்கின்றன. நாம் ஒன்றி நின்று நோக்கும் பொருள்களைப் பற்றிய செய்திகளையெல்லாம் உள்ளொளியுணர்வினால் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. காணாதன எல்லாம் காணும் தெளிவுக் காட்சியும் (Clair-voyance), கேளாதன எல்லாம் கேட்கும் தெளிவுக்கேள்வியும் ( Clair - audience ), நமக்குக் கிடைக்கின்றன. முக்காலமும் அறியவல்ல ஆற்றலும், எங்கும் நிகழ்வனவற்றை யுணரும் திறனும், பரசித்த ஞானம் என்னும் பிறர் மனம் அறியும் பெற்றியும் ( Thought-reading ), யோகப் பயிற்சியினால் ஒருவர் பெற முடியும். தொலைவில் இருப்பினும் ஒருவர்க்குத் தம் கருத்தை யுணர்த்தல், அவர் கருத்தைத் தாம் உணர்தல் ( Telepathy ), பின்நிகழ இருப்பனவற்றை முன்னர் உணர்தல் (Prophetic vision) போன்ற ஆற்றல்களும், யோக சாதனையாற் பெறுதல் இயலும். சுருங்கக் கூறலுறின்,

'' கந்துக மதக் கரியை வசமாய் நடத்தலாம்;
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்;
கட்செவி எடுத்தாட்டலாம்;
வெந்தழலின் இரதம்வைத்து ஐந்து உலோகத்தை
வேதித்து விற்றுண்ணலாம்; [யும்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்;
விண்ணவரை ஏவல்கொள்ளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல்மேல் இருக்கலாம்;
தன்நிகரில் சித்திபெறலாம்;
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது; சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே! ''

என்று தாயுமான சுவாமிகள் பாடுவதுபோன்ற எல்லாச் சித்திகளையும், யோக நெறியின் வாயிலாகப் பெறுதல் கூடும் என்பது, தெள்ளிதின் விளங்குகின்றது.

யோகம் என்னும் ஒன்றினையே, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், இராஜயோகம், அடயோகம் எனப் பலவகையிற் பிரித்து, வெவ்வேறாக வைத்து நூல்கள் கூறும். யோக நூல்கள் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்தி ஆஞ்ஞை சகஸ்ராரம் என்னும் ஆதாரங்கள் பற்றியும், இடைகலை பிங்கலை சுழுமுனை என்னும் நாடிகள் பற்றியும், விரிவாக விளக்கும்.*

**யோகம் பற்றிய நூல்கள் :**

பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம், வியாசரின் யோகசூத்திரபாடியம், வாசஸ்பதி மிசிரரின் தத்துவ வைசாரதி, போஜரின் இராஜமார்த்தாண்டம், விஞ்ஞானபிட்சுவின் யோகவார்த்திகம், யோகசங்கிரகம் என்பவைகள், யோகநெறியைப் பற்றி விளக்கும் நூல்களாகும், நாகேசபட்டர், நாராயணபிட்சு, மகாதேவர் முதலியவர்களும் யோகம் பற்றிய நூல்களை எழுதியுள்ளனர். மைத்திராயணம் சாண்டில்யம், யோகதத்துவம், தியானபிந்து, அம்சம், நாதபிந்து என்னும் பிற்காலத்து உபநிடதங்களும், யோகநெறியின் முதன்மையையும், சிறப்பையும் வலியுறுத்துகின்றன.

—ஆசிரியர்

*'' The Yoga has developed a system of physiology which relates to nadis, or infinitely small nerves, which traverse the body more than 700 million in number, psychic centres or cakras, a hidden energy known as kundalini, said to reside at the base of the spine, which when aroused, stimulates the cakras to activity...''

—Sir John Woodroffe,
The Serpent Power

## ஏது யோகம் ?

அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்து, அடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலால்; — மெய்ம்மைச்
சிவயோகமே யோகம்; அல்லாத யோகம்
அவயோகம் என்றே அறி.

—திருக்களிற்றுப்படியார்.

# மீமாம்சைத் தரிசனம்

**முன்னுரை :**

'மீமாம்சை' என்னும் சொல்லுக்கு, நுட்பமாக ஆராய்தல் என்பது பொருள். வேதத்தின் முற்பகுதி கருமகாண்டம் எனவும், பிற்பகுதி ஞானகாண்டம் எனவும் வழங்கும். வேதத்தின் முற்பகுதியாகிய கருமகாண்டத்தை ஆராயும் ஆராய்ச்சியே மீமாம்சை என வழங்கப்படுகின்றது. மீமாம்சைத் தரிசனம், வேதகாலத்திலிருந்தே தொடங்குகின்றது. வைதிக கருமங்களைச் செய்வதில் ஏற்படும் ஐயங்கள் விவாதங்கள் விதிமுறைகள் கொள்கைகள் ஆகியவற்றை, மீமாம்சைநூல் ஆராய்ந்து விளக்குகின்றது. மீமாம்சையானது, வேள்விகளைச் செய்யும் முறைகளைக் கூறுவதனால், வேள்வி நூல் என்றும்; வேதத்திற்குப் பொருள்கொள்ளும் முறைமைகளை விவரிப்பதனால் தத்துவ நூல் என்றும்; மீமாம்சையினைக் குறிப்பிடுதல் பொருந்தும்.

பௌத்தர்களைப்போல உலகத்தை இல்பொருள் என்று கருதாமல், உலகம் ஓர் உள்பொருளே என்று, மீமாம்சை உடன்படுகின்றது. வேள்விகளையும், அவற்றிற்குரிய பல அதிதேவதைகளையும் குறிப்பிடுவதனால், மீமாம்சை பல தெய்வ நோக்குடையதாகத் (Poly-theistic) தோன்றுகிறது; ஆயினும் ஒரு வினையைச் செய்பவனுக்கு அவ்வினையே பயனைத் தர வல்லதாகும்; கடவுள் வேண்டுவதில்லை என்று மறுத்துரைப்பதனால், மீமாம்சையானது கடவுளின்மைக் கொள்கையை உடையதாகவே (Atheistic) காணப்படுகின்றது.

மீமாம்சைத் தத்துவமும் நூலும், இந்து சமயத்திற்குப் பெரிதும் முதன்மை உடையனவாக விளங்குகின்றன. இந்து சமய மக்களின் அன்றாடக் கடமைகளை விவரிக்கின்ற தரும சாத்திரங்கள், மீமாம்சை விதிகளின்படியே பொருள்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. தற்போதைய இந்துச்சட்டத்தில் மீமாம்சைத் தத்துவத்தின் சாயல்களையும் செல்வாக்கையும் பெரிதும் காணலாம்.*

---

"The importance of Mimamsa is testified by its present-day effect, for no part of the daily life of the Hindu is without the influence of the teachings of Mimamsa. All rituals and ceremonies depend upon it; all moral conduct is guided by it; all Hindu law is founded upon it. Mimamsa breathes life into the very superstructure of Indian Culture".

**–Theos Bernard,**
*Hindu Philosophy, p.* 124
**Dr. S. Radhakrishnan,**
*Indian Philosophy, II p.* 376

**மீமாம்சைச் சூத்திரம் :**

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்தவர் எனக் கருதப்பெறும் சைமினி முனிவர், மீமாம்சைத் தரிசனத்தை விளக்கி ஒரு சூத்திர நூல் இயற்றினார். அது மீமாம்சைச் சூத்திரம் எனவும், சைமினிசூத்திரம் எனவும் வழங்கும். இந் நூல், 2621 சூத்திரங்களும், 600 அதிகரணங்களும், 60 பாதங்களும், 12 அத்தியாயங்களும் கொண்டது. பொதுவாக ஒவ்வொரு அத்தியாயமும் 4 பிரிவுகள் கொண்டது. ஆனால் 3, 6, 10 என்னும் அத்தியாயங்கள் மட்டும், 8 பிரிவுகளைக் கொண்டுள்ளன. இந்நூல் பிரமாணஇயல், கருமபேதஇயல், அங்கஇயல், அங்கிஇயல், பிரயோகஇயல், முறைமைப்பாட்டியல், மாட்டேறு, மாட்டேற்றியல், ஊகஇயல், விலக்கியல், தந்திரஇயல், பிரசங்கஇயல் என்னும் பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டிருப்பதனால், இதற்குத் துவாதசலட்சணி என்றும் பெயர் வழங்கும்.

ஆனால், இவற்றுடன் வேறு 4 அத்தியாயங்களும் ,600 சூத்திரங்களும், 350 அதிகரணங்களும், 16 அத்தியாயங்களும் கொண்ட மற்றொரு பகுதியும், இம்மீமாம்சைச் சூத்திரத்திற்கு உள்ளது. இது பலவகைப்பட்ட பொருள்களையும் கலந்து தொகுத்துக் கூறுவதனால், சங்கர்ஷ காண்டம் எனவும்; 16 பிரிவுகளைக் கொண்டிருப்பதனால் சோடசலட்சணி எனவும் பெயர்பெறும். சபரர், குமாரிலர், பிரபாகரர் என்னும் பேராசிரியர்கள், இப்பகுதியைப் புறக்கணித்துள்ளனராயினும், இப்பகுதி மேற்குறிப்பிட்ட நூலின் தொடர்ச்சியே யாகுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். வேதம் ஒருவரால் செய்யப்பட்டது (பவுருடேயம்) அன்று; அது தானே தோன்றியது (சுயம்பு) ஆதலின், வேதமே மிக மேலான சிறந்த பிரமாண நூலாகும் என்பர் மீமாம்சகர்.

**மீமாம்சையின் கொள்கைகள் :**

வேதவாக்கியங்கள் விதி (Commands), நிஷேதம் ( Prohibitions ), மந்திரம் ( Hymns ), நாமதேயம் ( Substantives ), அருத்தவாதம் (Explanations) எனப் பொதுவாக ஐந்து வகைப்படும். விதிக்கப்படும் வினைகளைச் செய்வதனால் புண்ணியமும், விலக்கப்படும் வினைகளைச் செய்தலால் பாவமும் உண்டாகும். புண்ணியத்தைச் செய்தவர்கள் இன்பத்தையும், பாவத்தைச் செய்தவர்கள் துன்பத்தையும் அடைவர்.

(தொடர்ச்சி 41ஆம் பக்கம்)

# மூலமும் உரையும்

திரு ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.
ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மதுரை.

பெரும்பாலும் நூலாசிரியர்கள் தாங்கள் செய்யுள் வடிவத்தில் எழுதிய நூல்களுக்குத் தாங்களே உரை எழுதியதாகத் தெரியவில்லை. அரங்கேற்றியபோது அவர்கள் சொல்லிய விளக்கங்களே அவர்களுடைய உரைகள் என்று கொள்ளவேண்டும். நூலாசிரியருக்குப் பின் அவருடைய மாணவர்கள் அந்த விளக்கங்களைச் சொல்லி வந்திருக்கவேண்டும். அந்த விளக்கங்கள் எழுத்து வடிவத்திலே பிற்காலச் சந்ததியினருக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. பின்னிட்டு எழுந்த உரை ஆசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும், •வியாக்கியான கர்த்தாக்களும் தத்தம் அறிவின் துணைகொண்டு, நூலாசிரியரின் கருத்தை உரை வடிவத்திலே கொண்டு வர முயன்றிருக்கின்றனர். எனவே நம்முடைய பழந்தமிழ் நூல்களுக்கு, அவைகள் காவியங்கள் ஆனாலும், சமய சாத்திரங்கள் ஆனாலும், அல்லது தோத்திரங்கள் ஆனாலும், உரைகள் பின்னிட்டே எழுதப்பட்டிருக்கின்றன. அப்படி ஒரு மூலச் செய்யுளையும், அதற்குப் பின்னிட்டு எழுந்த உரையையும் பார்ப்போம்.

திருப்பாவை பாடிய ஆண்டாள் நாச்சியார் தன்னுடைய 20ஆவது பாசுரத்தில்,

''முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்''

என்று துயிலெழுப்புகிறார். திருப்பாவை 30 பாடல்களிலும் ஆண்டாள் நாச்சியார் கண்ணனையே, அதாவது கோகுலத்தில் ஆய்ப்பாடியில் வாழ்ந்த கண்ணனையே, துயில் எழுப்பி வரம் வேண்டுகிறார். அந்தக் கண்ணோட்டத்திலே பார்க்கும்போது, 'முப்பத்து முக்கோடி தேவர்களுக்கு மடி தட்டி முன் நின்று அவர்களுடைய நடுக்கத்தை (கப்பம்) தவிர்ப்பவன் கண்ணன்', என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். ஆனால், திருமால் எடுத்த அவதாரங்களிலே தேவர்களுக்காக மடிதட்டி நின்று அவர்களுடைய துன்பத்தைப் போக்கியது கிருஷ்ணாவதாரம் என்று சொல்லுவதற்கில்லை. கிருஷ்ணாவதாரத்தில், கம்சன், சிசுபாலன், ஜராசந்தன், கௌரவர்கள் போன்ற அரசர்களின் கொட்டத்தை அடக்கி, திருமால் கீதோபதேசம் செய்திருக்கிறார். இதை வைத்து, அவர் முப்பத்து முக்கோடி தேவர்களுக்காக மடி தட்டி நின்று அவர்களுடைய நடுக்கத்தைத் தீர்த்ததாகச் சொல்வதற்கில்லை. இதை உணர்ந்த ஆறாயிரப்படி வியாக்கியானகர்த்தர் இந்த அடிகளுக்கு விளக்கம் காண்கையில் ''இராவணாதிகளுக்கு பணிப்பூவிட்டுத் திரியாமை காக்கை'' என்று சொல்கிறார். அதாவது இராவணன் போன்ற அசுரர்களுக்கு, இந்திரன் போன்ற தேவர்கள் கொத்தடிமைத் தொழில் செய்து வந்ததிலிருந்து அவர்களை மீட்டதுதான் ''முப்பத்து மூவரமரர்க்கு முன் சென்று கப்பந் தவிர்த்தது'' என்று விளக்கம் கூறுகிறார். ஆகவே, இந்த இருபதாம் பாடலில் ஆண்டாள் நாச்சியார் குறிப்பிடுவது இராமாவதாரத்தையே என்றாகிறது.

இராவணன் மூன்று உலகத்தையும்வென்று தேவர்களையும், அஷ்டதிக்குப்பாலகர்களையும் ஏவல் செய்ய வைத்தான்; இராவணன் மைந்தன் இந்திரஜித், இந்திரனை வென்று சிறையில் அடைத்தான்; மற்றும் அவர்கள் தேவர்களுக்குச் சொல்லொண்ணா இடுக்கண்களை விளைத்தார்கள்; அதைப் பொறுக்கமாட்டாமல் தேவர்கள் திருமாலிடம் முறையிடவே, திருமாலும் அவர் திருமார்பில் உறையும் திருமகளும் தங்கள் இருக்கைகள்விட்டு, மானிடர்களாய் அவதரித்து இராவண வதம் செய்தார்கள். இதுதான் இராமாவதாரம். ஆகவே, வியாக்கியானகர்த்தா ''முப்பத்துமூவரமரர்க்கு முன் சென்று கப்பந் தவிர்க்குங் கலியே'' என்ற அடிகளுக்கு, ''தேவர்கள் இராவணாதிகளுக்குப் பணிப்பூ விட்டுத் திரியாமை காக்கை'' என்று பொருள் கொண்டது ஆண்டாள் நாச்சியாரின் உள்ளக் கிடக்கையையே விண்டு வைக்கிறது. இதைக் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் மறந்ததாகத் தெரியவில்லை.

கம்பர் தான் இயற்றிய இராமகாதையை அரங்கேற்றியபோது 'சீவகசிந்தாமணியிலிருந்து ஒரு அகப்பை முகந்து கொண்டேன்'' என்று சொன்னதாகச் செவிவழிச் செய்தி ஒன்றி

ருக்கிறது. கம்பர் அப்படிச் சொன்னது உண்மையோ, பொய்யோ நமக்குத் தெரியாது. ஆனால், அவருடைய இராம காதையைப் படிக்கும்போது அவர், சீவகசிந்தாமணியை ஆழ்ந்து படித்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது. இன்னும் ஆழமாகப் பார்க்கப்போனால் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்து கம்பன் அகப்பை அகப்பையாக முகந்து கொண்டிருக்கிறார் என்பதும் தெரிய வருகிறது. இதற்கு இராமகாதையிலிருந்து பல சான்றுகளைக் கூற முடியும்.

''..........நெய்தலோடு
மயணைந்த குவளைகள் தங்கண் களென்றும்
மலர்குமுதம் வாயென்றும் கடைசி மார்கள்
செய்யணைந்து களை களையா தேறுங் காழிச்
சீராம விண்ணகரம்.....''

என்று திருமங்கைமன்னன் (பிரபந்தம்-பெரிய திருமொழி-4ஆம் பத்து 3ஆம் பாசுரம்) அருளிச் செய்ததையே,

''பண்கள் வாய் மிழற்றும் இன்சொல்
கடைசியர் பரந்து நீண்ட
கண், கை, கால், முகம், வாய்-ஒக்கும்
களை அலால் களை இலாமை,
உண் கள் வார் கடைவாய் மள்ளர்
களைகிலாது உலாவி நிற்பர்''

என்று கம்பர் பாடுகிறார். இப்படி எத்துணையோ இடங்களைத் தொட்டுக் காட்ட முடியும். விரிவஞ்சி, ஆண்டாள் நாச்சியாரின் பாடலுக்கு வியாக்கியான கர்த்தர் சொல்லிய விளக்கத்தைக் கம்பர் எப்படி வழி மொழிந்திருக்கிறார் என்பதை மட்டும் காண்போம். ''முப்பத்து மூவரமரர்க்கு முன் சென்று கப்பம் தவிர்ப்பதாகத்'' திருமால் வாக்குறுதி கொடுத்தார் என்பதைத் திரு அவதாரப் படலத்தில், ''கொலைத் தொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பென் என்று உலைவுறும் அமரர்க்கு உரைத்த வாய்மையே'' என்று கம்பர் கூறுகிறார். இராவணாதியரின் கொடுமை தாங்க முடியாமல் அரனும், அயனும் தேவர்களும் திருமால் இடத்தில் முறையிடுவதை,

''ஐஇரு தலையினோன் அனுசர் ஆதியாம்
மெய்வலி அரக்கரால் விண்ணும் மண்ணுமே,
செய்தவம் இழந்தன-திருவின் நாயக
உய்திறம் இல்லை என்று உயிர்ப்பு வீங்கினார்''

என்றும்,

''எங்கள் நீள் வரங்களால் அரக்கர் என்று உளார்
பொங்கு மூவுலகையும் புடைத்து அழித்தனர்,
செங்கண் நாயக, இது தீர்த்தி; இல்லையேல்
நுங்குவர் உலகை ஒரு நொடியில் என்றனர்''

என்றும் கம்பர் பாடுகிறார். அதன் பிறகு,

''வருந்தல், வஞ்சகர்தம் தலையறுத்து, இடர்தணிப்பன் தாரணிக்கு'' என்றும்,

''மசரதம் அனையவர் வரமும் வாழ்வும், ஓர்
நிசரத கணைகளால் நீறுசெய்ய யாம்
கசரத துரக மாக்கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி''

என்றும், திருமால் அருள் சுரந்ததாகக் கம்பர் கூறுகிறார். எனவே, இராவணாதியர் தேவர்களை அடிமைகொண்டதையும், அடிமைப்பட்ட தேவர்கள் வந்து முறையிட்டபோது அவர்களுடைய குறையைத் தீர்ப்பதற்காக 'வளமதில் அயோத்தியில் தசரதன் மதலையாய்' வருவதாகத் திருமால் அபயம் அளித்தார் என்பதையும் கம்பர் அறுதியிட்டுக் காட்டிவிட்டார்.

தங்களுக்கு அபயம் அளித்த திருமகள் கேள்வன், தசரதன் மதலையாய் அவதரித்துத் தங்கள் குறையை எவ்வாறு நீக்கப் போகிறான் என்பதை, தேவர்கள் தொடர்ந்து கவனித்து வந்தார்கள் என்று கம்பர் பல இடங்களிலே கோடிட்டுக் காட்டுகிறார். மகவில்லாக் குறையைப் போக்க, வசிஷ்டன் சொன்ன அறிவுரையின்படி, புத்திரகாமேஷ்டி வேள்வி செய்யக் கலைக்கோட்டு முனிவரைத் தசரதன் அழைத்து வருகிறான். கலைக்கோட்டு முனிவன் அயோத்திக்குச் செல்வதைக் கண்டு,

''அந்தர துந்துமி முழக்கி ஆய்மலர்
சிந்தினர், கவித்தனர்—அறமும் தேவரும்—
'வெந்துஎழு கொடும்பிணி வீட்டும் மெய்ம்முதல்
வந்துஎழுந்து அருள் தருவான்'

என்று மகிழ்கின்றனர். பிறகு தாடகை வதம் முடிந்ததும் ''யாமும்எம் இருக்கை பெற்றோம்'' என்று மகிழ்கின்றனர். வேள்விப்படலத்திலே, அரக்கர்களை இராமன் வென்ற போது,

பந்தரைக்கிழித்தன பரந்த பூ மலை;
அந்தர துந்துமி முகிலின் ஆர்த்தன;
இந்திரன் முதலிய அமரர் ஈண்டினார்;
சுந்தர வில்லியைத் தொழுது வாழ்த்தினார்

கௌதமரின் வேள்வி பழுதற முடிந்த பின், ''இன்று யான் செயும்பணி என்கொலோ'' என்று கேட்ட இராமனுக்கு, ''பெரிய காரியம் உள; அவை முடிப்பது பின்னர்'', என்று இராவண வதத்தை மறைமுகமாகக் கௌதமர் சொல்கிறார். சீதையின் திருமணத்தைக் காண வந்த வானவர், இராமனும், சீதையும் கருங்கடலில் துயிலும் திருமாலும், இலக்குமியுமே என்று தெரிந்து,

''நன்றி வானவர் எலாம், இருந்த நம்பியைத்
துன்று இருங் கருங்கடல் துவைப்பத் தோன்றிய
மன்றல் அம் கோதையாள் மாலை சூட்டிய
அன்றினும், இன்று உடைத்து அழகு....''

என்று மகிழ்கிறார்கள். அயோத்தியா காண்டத்தின் கடவுள் வாழ்த்திலேயே இமயவர் இடுக்கண் தீர்க்கவே இராமன் வனம் புகுந்தான் என்பதைக் கம்பர் அழகாகக் குறிப்பிடுகிறார்.

''வான் நின்று இழிந்து, வரம்பு இகந்த
மாபூதத்தின் வைப்பு எங்கும்
ஊனும் உயிரும்உணர்வும் போல்,
உள்ளும் புறத்தும் உளன் என்ப
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை இழைப்ப, கோல் துறந்து,
கானும் கடலும் கடந்து இமையோர்
இடுக்கண் காத்த கடல் வேந்தே''

இங்குப் பரம்பொருளாகிய இராமனே உள்ளும் புறமுமாக எல்லாவற்றிலும் இருந்து நிறைந்து நிகழ்ச்சியை நடத்துகிறார் என்பதைக் கம்பன் அழகாகச் சுட்டிக் காட்டுகிறார். ''கூனும் சிறிய கோத்தாயும் கொடுமையிழைப்ப'' என்று கம்பன் கூறுவதிலிருந்து, கொடுமை இழைத்தவர்களாகக் கருதப்படும் மந்தரை, கைகேயி ஆகியவர்களின் சிறுமை தெரிகிறது. அப்படி சக்தியற்றவர்களாலே கொடுமை இழைக்கப் பண்ணிக்கொண்டு அரசு துறந்து, அரக்கரைத் திருமால் அழித்தார் என்று கம்பர் நயமாகச் சொல்கிறார். அதுவே முப்பத்து மூவரமரர்க்குக் கப்பந்தவிர்த்தது.

இராமனுக்கு முடி சூட்டத் தசரதன் முடிவு செய்தபோது, அதைக் தடுத்து இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்காக, மந்தரை கைகேயியின் மனதைக் கலைக்கிறாள். இயல்பாகவே நற்குணங்களைக் கொண்ட கைகேயியின் தூய சிந்தை, வானவர்க்காகவே திரிந்தது என்பதைக் கம்பர் இரண்டு பாடல்களிலே மிக ஆழமாக வலியுறுத்திச் சொல்கிறார்.

''தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி
தூய சிந்தையும் திரிந்தது; சூழ்ச்சியின் இமையோர்
மாயையும் அவர் பெற்ற நல்வரம் உண்மையாலும்
ஆயஅந்தணர் இயற்றிய அருந்தவத்தாலும்''

அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்;
இரக்கம் இன்மை அன்றோ, இன்று இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றனவே

இராவண வதத்திற்காகவே இராமன் காடு செல்கிறான் என்பதை வசிஷ்டர் வாயாலும், கம்பர் மறைமுகமாகச் சொல்கிறார். இராமன் காடு செல்வது கைகேயியின் வரத்தினாலும் அன்று; வேறு யாருடைய சொல்லாலும் அன்று; அதன் காரணம் பின்பு தெரியுமென்று,

''வெவ்வினை யவள்தர விளைந்ததேயும் அன்று:
இவ்வினை இவன்வயின் எய்தற்பாற்றும் அன்று;
எவ்வினை நிகழ்ந்ததோ? ஏவர் எண்ணமோ?
செவ்விதின், ஒருமுறை தெரியும்பின்''

என்று வசிட்டன் நினைக்கிறான். வனம் செல்வதைத் தடுக்க முயன்ற வசிட்டனுக்குத் தன் உருவைக் காட்டி, தான் வந்த காரியத்தையும் இராமன் வெளிப்படுத்தினான் என்பதை, 'பன்னகப் பாயலின் பள்ளி நீங்கினான்' என்று கம்பர் மறைமுகமாகக் காட்டுகிறார்.

ஆரணிய காண்டத்தில், வனம் வந்த காரணம் யாது என்று, இராம, இலக்குவர்களைச் சடாயு கேட்க, இராமன் அதற்குப் பதில் சொல்லாமல் இலக்குவனைக் கொண்டு ''தன் சிற்றவை மாதரால் வந்த செய்கை'' என்று சொல்ல வைக்கிறான். நேரிடையாகவே, அந்தக் காரணத்தைச் சொல்ல இராமனுக்கு விருப்பம் இல்லை. ஏனென்றால், அது காரணமும் அல்ல. அவன் வனத்துக்கு வந்த காரணம் இராவண வதமே. அதை வெளிக்காட்டாமல் இலக்குவனைக் கொண்டு ''சிற்றவை மாதரால் வந்த செய்கை'' என்று சொல்ல வைக்கிறான். பிறகு பஞ்சவடியில் சூர்ப்பணகை வந்து இராமனுடன் உரையாடித் தன்னைக் காந்தர்வ முறையில் மணம் செய்து கொள்ளும்படி வேண்டியபோது, சீதை அங்கு வந்து தோன்றுகிறாள். அப்படி சீதை வந்து தோன்றியது 'தேவர் பெற்ற நல்வரத்தால்' என்று கம்பர் கூறுகிறார் மேலும் சீதையை,

''மின்சுடர் விண்ணும் மண்ணும்
விரிந்த போர் அரக்கர் எனும்
கான்சுட முளைத்த கற்பின் கனலி....''

என்று கம்பர் கூறுகிறார். சூர்ப்பணகையை விரட்டும்போதும், 'நீண்டு கரையளித்தற்கு அரிய படைக்கடல் அரக்கர் குலம் தொலைத்து நகர்ப்புகுவேன்' என்று இராமன் கூறுகிறான்.

சூர்ப்பணகையை விரட்டிய பின் திரிசிரா, தூடணன், கரன் ஆகியோர்களையும் அவர்கள் சேனைகளையும் இராமன் அழிக்கிறான். அதன் பிறகு சூர்ப்பணகை இராவணனிடம் போய் முறையிட்டுச் சீதையைச் சிறை எடுக்கச் சூழ்ச்சி செய்கிறாள். அதைத் தொடர்ந்து இராவண வதம் ஏற்படுகிறது. இராமன் முன்பு, மாரீசன் மாய மானாக வந்தபோது ''சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த பாக்கியம் உடைமை அன்றோ அன்னது பழுதுபோமோ?'' என்று இராவண வதத்தைக் கம்பர் நினைவு கூறுகிறார். மாரீச மானைத் தொடர்ந்து இராமன் போய் மாரீசனை வதம் செய்தவுடன் சீதையின் கடுஞ் சொல்லால் இராமனைத்தேடி இலக்குவன் போகாவிட்டால் சீதையை இராமன் சிறை எடுத்திருக்கமுடியாது. அப்படி இராமனைத் தொடர்ந்து இலக்குவன் போனதும் 'தேவர் செய்த தவத்தினால் செம்மல் ஏகினான்' என்று கம்பர் கூறுகிறார்.

பரம்பொருளே இராமனாக வந்திருக்கிறது என்பதை அனுமன் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளுகிறான். இராமனின் தாமரைக் கண்களையும் தாமரைக் காடுபூத்தனைய மேனியையும் கண்டு, 'இவன் வேத முதற் பொருளே' என்றும், அறத்தின் நாயகன் என்றும் அனுமன் எடைபோட்டு விடுகிறான். அசோகவனத்தில் சீதையைக் கண்டதும், 'ஐயம் இல்; அரவின் நீங்கிய தேவனே அவன்; இவள் கமலச் செல்வியே' என்று தன் அனுமானத்தை உறுதி செய்து கொள்ளுகிறான். சுக்ரீவனிடம் இராமனைப் பற்றிச் சொல்லும்போதுகூட,

''சங்குசக்கரக் குறிஉள; தடக்கையில் தாளில்
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை
செங்கண் விற்கரத்து இராமன் அத்திரு நெடுமாலே
இங்கு உதித்தனன் ஈண்டு அறம் நிறுத்துதற்கு''

என்று விவரிக்கிறான்.

வீடணன், இராமன் திருமாலே என்றும், அறத்தின் நாயகன் என்றும் உணர்கிறான். வானர சேனையின் மத்தியில் வீற்றிருந்த இராமனைப் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனாக, 'பாற்கடல் சுற்ற விற்கை வடவரைப் பாங்கு நிற்க, கார்க்கடல் கமலம் பூத்தது' என்று காண்கிறான். தேவர் குறை தீர்க்கவே திருமால் அப்படி வந்தார் என்பதை இங்கும் நினைவுபடுத்தி, 'வெள்ளி வெண் கடலுள் மேல் நாள் விண்ணவர் தொழுது வேண்டப் பள்ளி தீர்ந்து இருந்தான்' என்றே வீடணன் வாயிலாகக் கம்பர் கூறுகிறார்.

கும்பகர்ணன்கூட, இராம இலக்குவர்களை, 'அறப்பெருந்துணைவர்' என்றும், 'ஏற்றிய வில்லோன் யார்க்கும் இறைவன் இராமன்' என்றும் வீடணனிடம் குறிப்பிடுகிறான். 'இராமன் என்பானைப் பற்றிப் பிறப்பு என்னும் புன்மை தீர்ந்தாய்' என்றும் வீடணனுக்குச் சொல்லுகிறான்.

இராவணன் வீழ்ந்ததும், 'ஆ, புரந்தரன் பகை அற்றது' என்று சொல்லிக் கொண்டு பலர் இலங்கையை விட்டு விண் வழிச் செல்கின்றனர். மண்டோதரியின் வாயிலாகவும் இராமாயணமே இந்திராதி தேவர்களுக்காக நடந்தது என்பதை,

''காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேர் அழகும் அவர்தம் கற்பும்,
ஏந்து புயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பணகை இழந்த மூக்கும்,
வேந்தர் பிரான் தயரதனார் பணிதன்னால்
வெங்கானில் விரதம்பூண்டு
போந்ததுவும் கடை முறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா!

என்று சொல்லுகிறார்.

முடிவாக, திருமாலும் இலக்குமியும் இராமனாகவும் சீதையாகவும் வந்தனர் என்பதை மண்டோதரியின் வாயிலாகக் கம்பர் சொல்லி முடிக்கிறார். இராமனது வாளியால் மார்பு துளைக்கப்பட்டு, இறந்து கிடக்கும் இராவணனைக் கண்டதும், முன்பு இராமனையும் சீதையையும் குறித்துத் தான் சொன்னதும், அதை இராவணன் கேட்காததும் அவள் நினைவுக்கு வருகிறது.

'அன்னை அவள் சீதை அனைத்து
உலகும் ஈன்றாள்' என்று
உன்னி உரைத்தேன்...

'ஆரா அமுதாய் அலைகடலில் கண்வளரும்
நாராயணன் என்று இருப்பேன் இராமனைநான்...'

என்று சொல்லிப் புலம்புவதாகக் கம்பர் பாடுகிறார்.

எனவே, 'முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று கப்பந்தவிர்க்கும் கலியே' என்ற ஆண்டாள் நாச்சியாரின் பாசுரத்துக்கு 'இராவணாதிகளுக்குப் பணிப்பூ விட்டுத் திரியாமைகாக்கை" என்று வியாக்கியானகர்த்தா பொருள் கண்டதைக் கம்பர் வழி மொழிந்திருக்கிறார் என்று கொள்ளலாமே!

---

## வெள்ளி விழா, கதிர் விழா

சேலம் தமிழ்ச் சங்கத்தின் சார்பில், தமிழகப் புலவர்குழுவின் 25ஆம் ஆண்டு நிறைவு வெள்ளி விழாவும், மூதறிஞர் ''முத்தமிழ்க் காவலர்'' டாக்டர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களின் 85ஆம் ஆண்டு நிறைவுக் கதிர்விழாவும், முறையே 8.10.83, 9.10.83 ஆகிய இரண்டு நாட்கள், சேலம் விசயராகவாச்சாரியார் பெருமன்றத்தில், மிகவும் சிறப்புற நடைபெற்றன.

விழாவில் தவத்திரு.குன்றக்குடி அடிகளார், தமிழக நிதி-உணவு அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு பி.ஆர். கோகுலகிருஷ்ணன், அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு.வ.செ.குழந்தைசாமி, தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், 'செந்தமிழ்ப் பேரறிஞர்', டாக்டர் வ.சு.ப.மாணிக்கனார், தமிழக மேலவைத் துணைத்தலைவர் மாண்புமிகு புலவர் புலமைப்பித்தன் முதலிய பெருமக்கள், பற்பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாக்களில் கலைமாமணி பத்மஸ்ரீ திரு.சேக் சின்னமவுலானா குழுவினரின் மங்கள இசையும், கலைமாமணி பத்மஸ்ரீ டாக்டர் சீர்காழி கோவிந்தராசன் குழுவினரின் சிறப்பு இசை நிகழ்ச்சியும், நாட்டியப் பேரொளி திரு.நடராஜ்-சகுந்தலா குழுவினரின் நடன நிகழ்ச்சியும், சிறப்புற நடைபெற்றன.

தமிழகப் புலவர் குழுவின் 25 ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவினை ஒட்டி, அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார், தொழிலதிபர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம், திருமதி.சௌந்தரா கைலாசம், திருமதி. டாக்டர் லலிதாகாமேசுவரன், 'பன்மொழிப்புலவர்' திரு.க.அப்பாதுரையார், பேரறிஞர் திரு.மு.ரா.பெருமாள் முதலியார், இசைப்பேரறிஞர் மதுரை சோமசுந்தரம், டாக்டர் சீர்காழி கோவிந்தராசன், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு.ந.ரா. முருகவேள், இலங்கை யாழ்ப்பாணம் பாராளுமன்றம் உறுப்பினர் பண்டித திரு.கா.பொ. இரத்தினம் முதலிய 32 பேர்கள், 'தமிழ்ச் சான்றோர்' என்னும் சிறப்புப் பட்டமும் விருதும் வழங்கிக் கவுரவிக்கப்பட்டனர்.

விழாவின், தலைவராகத் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு க.இராசாராம் பி.ஏ., அவர்கள் விழாக்குழு தலைவராக இருந்து, இவ்விழாக்கள் சிறப்புறுவதற்குப் பல்லாற்றானும், முன்னின்று பேருதவி புரிந்தார்கள். விழாக்குழுவில் திரு.ஈ.ஆர். கிருஷ்ணன் அவர்கள் செயலாளராகவும் திரு. ஆ.அங்கமுத்து அவர்கள் பொருளாளராகவும், திரு.கி.ஜெயராமன், பி.ஏ., திரு.ஆ.துரைசாமி, பி.ஏ.பி.எல். திரு.சு. சுகதேவன், திரு.கே. முத்துசாமி, திரு. ஆர்.வி. நாகராசன், திரு.சி. சாக்ரடீஸ், திரு.டி.ஆர். சுப்பிரமணியம் முதலிய பலர் உறுப்பினர்களாகவும் இருந்து, இந்த வெள்ளிவிழா-கதிர் விழாக்கள் சிறப்புற நிகழ்வதற்குப் பெருந்தொண்டுகள் புரிந்தனர்.

# திருமால் நெறி

குமாரவாடி திரு. கே. இராமானுஜாசாரியார்
சென்னை.

(2). திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவை மிசை
படர்பொருள் முழுதுமாய் அவைஅவை தொறும்
உடல்மிசை உயிர்எனக் கரந்து எங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவை உண்ட சுரனே

—நம்மாழ்வார்.

எங்கும் பரந்து என்றும் நிலைத்துள்ள பொருளுக்குப் 'பரம்பொருள்' என்று பெயர். அப்பொருள் எல்லாவற்றைக் கடந்தும், எதனுள்ளும் கலந்து இருப்பதால் 'கடவுள்' என்று வழங்கப்படுகிறது. 'பரந்து உளனாம் எங்கும்' என்று இப்படி வியாபித்துப் பரவி நிற்றல் பற்றி வேதம் இறைவனை 'வியாப்னோதி இதி விஷ்ணு' என்கிறது. இதே போன்று 'ஸர்வத்ர-வஸதி இதி வாஸு தேவ:' என்பதும் வேதம் கண்ட சொல்லாகும். எல்லாவிடத்தும் வசிப்பவன்-அதாவது பரவுதல், நிலைத்துநிற்றல் மட்டுமின்றி, தான் பரவியுள்ள பொருள் அனைத்தையும் தானே தாங்கி, தன் கருத்துப்படி இயக்கி, இறைவனாய் விளங்குபவன் என்ற முழுக் கருத்தையும் கொண்ட ஒரே சொல் நாராயணன் என்பது; ''தன்னுள் அனைத்துலகும் நிற்க நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்'' என்கிறார் நம்மாழ்வார். வேதமும் வேதாந்த விளக்கமான அனைத்து நூல்களும் விவரிப்பது இதனையே.

பெயரும் வடிவமும் உள்ளது பொருள்; ஒவ்வொரு பொருளுக்கும் பெயரும் வடிவமும் இருப்பது போலவே, உயிரும் உண்டு. சொல் கல் என்று நாம் பெயர் இட்டுக் குறிப்பிடும் எந்தப் பொருளிலும் உயிர் உண்டு; உயிருக்கே உரிய அறிவும் உண்டு; ஆனால் அந்த உயிர்களை நாம் காண முடிவதில்லை, நாம் கேட்பதும் காண்பதும் பெயர் வடிவங்களை மட்டுமே; அறிதற்கு அப்பாற்பட்டு, கருதுதற்கு அரியதாய் விளங்குவது உயிர்; கருதுதற்கு அரிய உயிர்க்கும் உயிராய் விளங்குபவன் இறைவன், உயிர்களை உடையவன் இறைவன் என்பதே மறை பகரும் உண்மை.

உடல் உயிரின் பொருட்டே உள்ளதை அனுபவத்தில் அறிகிறோம்; உயிரினமாகிய நாமும், நம் உயிருக்கு உயிரான இறைவன் பொருட்டாகவே உடலுடன் படைக்கப் பட்டிருக்கிறோம் என்பதை ஊகித்தும் அறியலாமல்லவா? இவ்வாறு அறிந்து தெளிந்து வாழ்வதே உயிர் வாழ்வின் பயனாகும்; உண்மை உணர்வின் சிறப்பாகும்; இதுவே வேதக் கருத்தும் ஆகும்.

பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு, ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்கும், ஒண் தாமரையான்கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு

உண்மை உணர்வின் சிறப்பை எடுத்துக் காட்டி, உயிர் வாழ்வின் பயனைப் பெற வைக்கும் நெறியே வைணவம். அனுபவத்தை யொட்டிய அறிவியல் வைதிக நெறி, வைணவமே.

## தத்துவச் சிறப்பு

தத்துவம் (உண்மை), ஹிதம் (நன்மை), புருஷார்த்தம் (பேறு) இம்மூன்றையும் தெளிவுறுத்துவதே ஒரு மதம், தரிசனம் அல்லது சித்தாந்தம் ஆகும். வைணவம் மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட தத்துவ த்ரய தரிசனமாகும்.

தத்துவத்ரயம்: ''சித்து'' (அறிவுள்ள ஜீவன்) ''அசித்து'' (அறிவற்ற பொருள்) ''ஈசுவரன்'' பேரறிவாளன் (பேராற்றலுள்ளவன்). இவை மூன்றும் இணைபிரியா உண்மைப் பொருள்களாகும். அதில் 'சித்து' மூன்றுவகை: 1. 'பத்தர்' பௌதிக உடலில் கட்டுண்ட ஜீவாத்மாக்கள். 2. முக்தர் பூத உடல்நீங்கி அமர உடல்பெற்றுப் பரமபதம் என்னும் வீடு பேறு பெற்றவர். 'நித்யர்' இறைவனோடு என்றும் பிரியாது உடனுறைந்து அவனை உகப்பிப்பவர்.

அசித்து: 1. 'சத்வ சூன்யம்' (காலம்), 2. மிச்ர சத்வம் (முக்குணம் கலசிய பொருளியல் உலகு (இயற்கை). 3. சுத்தசத்வம், பரமபதம் (அறிவியல் உலகு).

ஈச்வரன் (உடையவன்) ஒருவனே! அசித்தை உடலாகக் கொண்ட உயிர்களைத் தனக்குச் சரீரமாய்க் கொண்டு தானிட்ட வழக்காய் இயக்கிவைக்கும் ஈச்வரன் நாராயணனே. இதனையே,

''மேவித் தொழும் பிரமன் சிவன்
இந்திரனாதிக் கெல்லாம்
நாவிக்கமல முதற்கிழங்கு''

''முதல் தனி வித்தேயோ! முழு
மூவுலகாதிக் கெல்லாம்''

''தானோர் உருவே தனிவித்தாய்த்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்

தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந்தன்எம் பெருமானே''

என்று அறுதியிட்டு வைத்தார் வைணவத்தின் பிரதம ஆசிரியரான நம்மாழ்வார். இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் ஆகையால், அவர் வாக்குக்கு மறுப்புக் கூறுவாரும் உண்டோ? சித், அசித், விசிஷ்டபிரம்மன்-''தத்துவம் நாராயண; பர;'' என்கிறபடி நாராயணனே என்பது ஸநாதன வைணவ, விசிஷ்டாத்வைத வேதாந்த தரிசனமாகும்.

இதம் (நன்மை): இறைவனை அடையும் நல்நெறிகளாகக் கர்மஜ்ஞான, பக்தி யோகங்களை வேதங்கள் நமக்குக் காட்டின. ஆனால், 'நெறி உள்ளி உரைத்த கணக்கறு நலத்தனன்' 'நெறி எல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்து ஒரு மூர்த்தி' யான கீதாசாரியன் கண்ணனே ''ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய, மாம் ஏகம் சரணம் வ்ரஜ'' என்று தன் திருவடிகளையே (ஆசார்யர்களையே )தஞ்சமாகப்பற்றும்படி காட்டினான். ''எம்பிரான் சரணே சரண் நமக்கு'' என்றார் நம்மாழ்வார்.

புருஷார்த்தம்(பேறு): ஜீவன் அடையத்தக்க நற்பேறுகளான அறம், பொருள், இன்பம் வீடு என்பவற்றுள் 'கண்ணனுக்கே ஆமது காமம் 'என்கிறபடி, 'க்ருஷ்ணாநு: ஸ்மரணம் பரம் (கிருஷ்ணனிடம் அன்பே பெரிது) இங்கும், அங்கும், எங்கும். 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று திருமாலுக்கு அடிமை செய்வதே சிறந்த பேறாக அறுதியிடப் பெற்றுள்ளது. இப்படி தத்துவ, இத, புருஷார்த்தங்களைத் தெளிவுறுத்துகிறது வைணவம்.

## பிரமாணங்கள்

ஒன்றை உள்ளபடி அறிதற்கு உதவும் சாதனத்தைப் ''பிரமாணம்'' என்பர். அந்தப் பிரமாணம் பிரத்யட்சம் (கண்கூடு), அனுமானம் (ஊகம்), சப்தம் (சொல் வழி) என மூன்று வகைப்படும். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற வகை தெரிவதற்கு உதவும் புறப்புலன்கள் ஐந்தும், நன்மை தீமைகளின் விளைவான இன்ப துன்பங்களை நுகர்வதற்கு அமைந்த உள்இந்திரியமும், சேர்ந்து அனுபவத்தில்காண்பது 'பிரத்யட்சம்'. புகை இருக்குமிடத்தைப் பார்த்து, அங்கே நெருப்பு இருக்கிறது என்று அறிகிறோமல்லவா? இது 'அனுமானம்'-ஊகம்.

ஐம்புலன்களாலும், அனுமானங்களாலும் அறிய முடியாதவற்றை அறியச் செய்வது சப்தம். அல்லது வேதச் சொற்களாகும். ஆத்ம, பரமாத்ம தத்துவங்களையும்இப்பிரபஞ்சத்தின் முழு உண்மையையும் அறிதற்கு சாஸ்திரங்களே (வேதங்கள்) நமக்குத் தஞ்சம்.

## வேதச் சிறப்பு

ஒருவனால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் படைக்கப்படாமல், என்றும் தன்னாலேயே மற்றப் பிரமாணங்களும் உண்மையாக விளங்க உதவுவதே வேதத்தின் சிறப்பு. ஒருவனால் ஆக்கப்பெற்றதில்லை (அபௌருஷேயம்) என்பதால், ஒருவனுக்குள்ள ஐயம், திரிபு, மறதி, சோர்வு, வஞ்சகம் போன்ற குறைகள் அற்றது வேதநூல். ஊகத்தாலும், கண்கூடாகவும் உணர இயலாதவற்றையே உணர்த்தும் தனிச் சிறப்பால், தனக்கு நிகரின்றித் தானே மேலான பிரமாணமாக நிற்கிறது வேதம். கடவுளைப் போல் இதுவும் என்றும் உளதால், படைக்கப் படுவதுமில்லை; அழிவதுமில்லை. இவை போன்ற சிறப்புக்கள் வாய்ந்தவை மட்டுமே மறைநூல்கள் எனப்படுவன.

## மறையாய நால்வேதம்

இப்போது நமக்குக் கிடைக்கும் மறை நூல்களில் 'ருக்வேதம்'-10 மண்டலங்களையும், 10,552 மந்திரங்களையும் கொண்டுள்ளது. வசனநடையில் உள்ள யசுர் வேதம் 40 அத்தியாயங்களையும், 1975 மந்திரங்களையும் கொண்டது. இறைவன் உகந்த இசை இன்பம் நிறைந்த சாமவேதத்தில் உள்ள மந்திரங்கள் 1875. போர்க்கருவி அழிவு சாதனங்கள், அதற்கான மந்திர தந்திரக் குறிப்புகள் நிறைந்த 'அதர்வண வேதம்' 20 காண்டங்கள் 5987 மந்திரங்கள் உள்ளது.

எழுதாக் கிளவி, செவிச்செல்வம், மறை 'சுருதி' என்றெல்லாம் கொண்டாடப்பெறும் வேதங்களிலே மிக்க இறைநிலை, மெய்யாம் உயிர்நிலை, தக்கநெறி, தடையாகி நிற்கும் ஊழ்வினை, இறை அருளால் பெறும் நிறை வாழ்வு இவை ஐந்தும் செம்பொருள்களாகக் கூறப்படுகின்றன. வேதப் பகுதியில் 'புருஷஸூக்தம்' தலைசிறந்தது, (வேதஷு பௌருஷம் ஸூக்தம்). வேதத்தின்முற்பகுதி கர்மகாண்டம், பிற்பகுதி (உபநிஷத்துக்கள்) ஞானகாண்டம்.

இறை அருள்பெற அவனை உகப்பிக்கும் செயல்களை, இயற்கையின் முக்குணங்களான தாமச, ராஜச, சாத்விகங்களான வழிகளில் வகுத்துத் தக்காருக்குப் பொதுவாகக் கூறும் இயல்புடையது வேதம். பல்வகை வேள்விகள், அரிதாயும் பெரிதாயுமான தானங்கள், தியாகங்கள், கடுமையும் கொடுமையும் வாய்ந்த தவங்கள் போன்றவையும் வேதத்தின் கட்டளைகளாக உண்டு.

''காயோடு நீடுகனி உண்டு, வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவம் செய்யும்
வழிகள் அவை''

கர்மகாண்ட விளக்கமாக, சமுதாயப் பொது அறநெறிகளாகிய கட்டளைகளை, சுருதிகளை ஸ்மரித்து (நினைத்து) மனு முதலானோர் செய்த அற நூல்கள் (தர்மசாஸ்திரம்) சுமிருதிகள் எனப்படுகின்றன. அவற்றுள் மனுஸ்மிருதி மிகச் சிறந்தது. சமுதாயமாகிய பந்தலைத் தாங்கும் நான்கு கால்கள்போல, நான்கு வர்ண தர்மங்களையும்; பொது அறங்களையும் -அனி அறங்களான ஆசிரம நிலைகளையும்அடிப்படையாகக் கொண்டவை முனிவர்கள் வெளியிட்ட நூல்கள்.

## இதிகாசங்கள்

பிரம்மகாண்டம் (உபநிஷத்துக்கள்) வேதாந்தப் பகுதி. அவற்றுள் தசோபநிஷத் (பத்து) மிக மேம்பட்டவை. அவற்றின் விளக்கமாக அமைந்தவை இதிகாசங்கள். பரப்பிரம்மன்தான் இவ்வுலகைப் படைத்துக் காத்து அழித்து விளையாடுகிறது. அதை உணர்ந்து தியானித்து அவனருளால் பிறவித் துன்பத்தை இவ்வுயிர்கள் போக்கிக் கொள்ளலாம் என்பது பிரம்மகாண்டக் கருத்து. இறைவனுக்கு லீலா விபூதி (இவ்வுலகம்) நித்யவிபூதி (பரமபதம்) இரண்டும் உடைமையாகும். இறைவனது விளையாட்டுக்குரியது இவ்வுலகு. உயிர்கள்தம் வினையடியாக அவன் விளையாட்டில் அகப்படுகின்றன. சீவன் இறந்தால் இறைவனிடம் அடைக்கலம் கோரி, அவன் அருளுக்கு இலக்காகி இவ் விளையாட்டிலிருந்தே விடுபட்டு பிறப்பு, பிணி, மூப்பு இறப்பு அற்று ஒளிகொண்ட சோதியுமாகி அவனைக் கிட்டி அவ்வுலகில் நித்திய ஆனந்தமடையலாம்.

## பிரஸ்தான த்ரயம்

'பிரஸ்தான த்ரயம்' என்று போற்றப்படும் உபநிஷத்துக்கள், வியாசரின் பிரம்ம சூத்ரம், பார்த்தசாரதியின் வார்த்தையான பகவத்கீதை மூன்றுமே, இவ்வுண்மையை விளக்குவன. உபநிஷத் வாக்கியங்களைக் குறிக்கொண்டு, இதிகாச, புராணங்கள் (அளவை) வியாகரண (சொல்இலக்கணம்), மீமாம்சை (வேதச்சொல் ஆய்வு) துணைகொண்டு, வேதாந்தநூல்கள் விரிந்தன. சங்கர, இராமாநுச மத்வ பாஷ்யங்கள் போன்றவை மலர்ந்தன. எனினும் வேதாந்த விழுப்பொருளை விளக்குவதில் வால்மீகியின் இராமாயணமும் வியாச பாரதமும் கதைசொல்வதாக அமைந்து, கருத்தைப் புகுத்துவதில் முன்நிற்பன. அதனுள்ளும் மறையாய நூல் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரான நாராயணன், சக்கரவர்த்தித்திருமகனாய் அவதரித்தபோது வேதமும், வால்மீகி முனிவரின் வாக்கில் இராமாயணமாய் வெளி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ''இதிகாச சிரேஷ்டம்'' இராமாயணமே. மற்றும் பல காரணங்களாலும் பாரதம் கூறும் தூதுபோனவன் (கிருஷ்ணன்) ஏற்றத்தைக் காட்டிலும், சிறை இருந்தவள் (சீதை) ஏற்றத்தைக் கூறும் இராமாயணம் பரம சாத்விகமாக விளங்குகிறது!

## புராணங்கள்

இதிகாச உண்மைகளை உருவகங்கள் கொண்டு மேலும் தெளிவுறுத்துபவை புராணங்கள். அவை பதினெட்டு. படைப்புக் கடவுளாம் பிரம்மாவின் வாக்கிலிருந்து வந்தவை. அவை சாத்விகம் ராஜசம் தாமசம் என மூவகை அதில் வசிட்டரின் பேரனும் வியாசரின் தந்தையுமான பராசரர் இயற்றிய 'விஷ்ணுபுராணம்' 'புராண ரத்னம்' என்று உச்சிமேல் வைத்து மெச்சப்படுகிறது. அதன் விரிவாக விளக்கமாகப் பராசரரின் பேரனும் வியாசரின் மகனுமான சுகமுனிவரின் பாகவத புராணம் தலைசிறந்து விளங்குகிறது. சாத்விக புராணங்களுள் சிறந்தவை இவையே. மற்றும் ராஜச தாமச புராணங்கள் சாத்விகர்களால் தள்ளத்தக்கன; அவை ராஜச தாமசர்களான பாமரர்களே கொள்ளத்தக்கன. இப்படி ஸ்மிருதி, இதிகாச புராணங்கள் அநாதியான வேதக்கருத்துக்களை விளக்கி எதிர் ஒலிப்பதால் 'உப ப்ருஹ்மணம்' என்று கூறப்படுகின்றன.

## மறைநுண்பொருள் நூல்கள்

பிரம்மா மற்றும் ரிஷிகள் மூலம் பொதுவாக வேதமும், நீதிநூலும் வெளியிட்ட பகவான்; தானே நர-நாராயணனாய் நின்று வேத சார தமமான அர்த்தங்களை சாத்விகர்களான வைணவர்களுக்குத்தன் அருளாலே வெளியிட்டிருக்கிறான். இவை ஆசார்ய உபதேச வழியாலே ஏழாட்காலம் (ஏழு தலைமுறை) பழிப்பிலரான வைணவர்களால், அன்றுதொட்டு இன்றுகாறும் ரகசியமாக ஆதரித்துக் கொண்டாடப் பட்டுப் பின்பற்றிவரப் பெறுகின்றன. வழிவழி வந்து 'தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி, திகழ் திருச்சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒத்துண்டு நின்று குடிகுடி ஆட் செய்கின்றோம்' என்கிற கிரமத்தில் 'லட்சுமிநாத சமாரம்பாம்' என்று தொடங்கும் குருபரம்பரையைத் தழுவி இப்படி மண்மிசை வேர்ஊன்றித் தழைத்தோங்கி நிற்கிறது வைணவம்.

தாமசர்களாலும், ராஜசர்களாலும் இடை இடையே பல தடைகள் ஏற்பட்டு வைணவம் தளர்ச்சி உற்றாலும், ஆழ்வார்கள், ஆசார்யர்களால் அவ்வப்போது புத்துயிர் பெற்றுப் பொலிந்து நிற்கிறது அது. அழிக்கவொண்ணாத பரம சாத்விக நெறியாகும் இது!

## பகவானின் ஐந்து நிலைகள்

நீக்கமற எங்கும் நிறைந்த பகவான் 'பரம்' 'வியூகம்' விபவம், அந்தர்யாமி, அர்ச்சை முதலிய ஐந்து நிலைகளிலே அண்டம் அனைத்திலும் நின்று, இருந்து, கிடந்து, நடந்து அருள் பாலிக்கிறான்.

1. பரம்: திருமகள் (ஸ்ரீ) மண்மகள் (பூதேவி) ஆய்மகள்(நீளா) தேவியரோடு பரம

பதத்தில், தன்னைவிட்டுப் பிரியாத அனந்தன், கருடன், விஷ்வக்சேனர் போன்ற நித்யர், பூவுலகு வாழ்வை விட்டுத் தன்னை வந்தடைந்து புனிதரான முக்தர்கள் ஆகியோருக்கு எப்போதும் இன்முகம் காட்டி வாழ்வளிக்கும் பரம ஆனந்த நிலையமே பரத்துவம்.

2. *வியூகம்:* 'தேவும் எப்பொருளும் படைக்க' (தன் நாபிக்கமலமாகிய) பூவில் நான்முகனைப் படைத்த பரமன், மற்றைத் தேவர்களின் குறைகளைக் கேட்டு அறிவதற்கும் அவர்களது குறைகளைக் களைய, மண்மிசை யோனிகள் தோறும் தன்னைத் தாழவிட்டுப் பிறப்புறுப்பதற்கும் பாங்காகப் பள்ளி கொண்டிருக்கும் நிலையே வியூகம். இது மூன்றுவகையில், பன்னிரு மூர்த்திகளைஆதாரமாகக் கொண்டநிலை. 'கேசவன் முதல் தாமோதரம் ஈறாக உள்ள மூர்த்திகளின் பெயர்களை ஓதாதார் வைதிகர் அல்லர்; மற்றையோர் ஓதுவதும் ஓர்வனவும் அவன் பேராயிரமே.

3. *விபவம்:* அறம் தலைநிறுத்த (தர்ம சம்ஸ்தாபனம்) நல்லவர்க் காத்து (சாது பரித்ராணம்), அல்லவர்த் தேய்க்கும் (துஷ்க்ருத் விநாசம்) பொருட்டாகப் பூவுலகில் இராமன் கிருஷ்ணன் போன்ற அவதாரங்களை அந்த ஆழி நாயகன் மேற்கொள்வது விபவமாகும். மேன்மைக் குணங்களோடு கூடிய அவனது நீர்மைக் குணங்கள் நன்கு ஒளிவிடுவது, இந்த அவதார காலங்களில்தான். நினைத்தபோது, நினைத்த இடத்து, நினைத்தவண்ணம் அவதரிக்கவல்ல சர்வசுதந்திரன் அவன் ஒருவனே. ஆதலால் 'எந் நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய் இமையோர் தலைவா!' என்று விளித்தார் நம் மாழ்வார்.

4. *அந்தர்யாமி:* கறந்த பாலுள் நெய்யே போல், எள்ளுக்குள் எண்ணையாக இவ்வையகம் எங்கும் நிறைந்து கருதற்கு அரிய உயிருக்கும் உயிராய், உயிர்களின் சத்தை (உளதாதல்) ஸ்திதி (நிலைத்தல்) பிரவ்ருத்தி (ஒருசெயலில் மூளுதல்) நிவ்ருத்தி (ஒன்றிலிருந்து விடுபடல்) அனைத்தும் தான் இட்ட வழக்காய் விளங்கும் பரமன், சிலரிடம் உவந்து கட்டைவிரல் அளவில் இதயத்தில் தனிச்சிறப்போடு எழுந்தருளியிருக்கிறான். இவ்வகையில் அமைந்த இவ் விருப்பு அந்தர்யாமித்துவமாகும்.

5 *அர்ச்சை:* எல்லாவற்றுக்கும் மேலாக, நீர்மையின் எல்லை நிலத்தில் அடியவர்களின் கண்ணுக்கு இலக்காகி அவர்கள் இட்ட வழக்காய், அடியார் விரும்பும் வகையில் பொன், வெள்ளி முதலிய உலோகங்களிலும், மரம் மண் கல் வரைசித்திரம் அனைத்திலும் பிம்ப, ஓவிய வடிவில் ''தமர் உகந்ததுஎவ்வுருவம், அவ்வுருவம் தானே'' என்று எழுந்தருளி மண்ணவர்க்கு அருள்பாலிக்கும் நாராயணனின் அழகிய வடிவமே அர்ச்சாவதாரமாகும். தன்னை அனாதரிக்குமவர்களையும் ஆதரிக்கும் நிலை இதுவான தால் இறைவனின் நீர்மைக்கு இதனின் மேம்பட்ட நிலை இல்லை.

## குணங்களின் ஒளி

நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் என்று நான்கு கோலங்களில் மண்ணுலகில் கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு ஜ்ஞானம் (அறிவு), சக்தி (ஆற்றல்) பலம் (வலிமை), ஐசுவரியம் (செல்வம்), வீரியம் (ஆண்மை) தேஜஸ் (ஒளி) இவை ஆறும் மேன்மைக் குணங்களாம்.

அறிவாற்றல்களோடு ஸ்வாமித்வம் (உடையவன் என்ற உறவு), வாத்ஸல்யம் (அன்பு), ஸௌசீல்யம் (தோழமை), ஸௌலப்யம் (எளிமை), மற்றும் கருணை (க்ருபை), க்ஷமை (பொறுமை), அழகு இளமை எளிமை போன்ற நீர்மைக் குணங்கள் நமக்காகவே ஏற்பட்டவை.

## அருளிச் செயல்

இத்தகைய குணக்கடலில் அர்ச்சாவதார அனுபவத்தில் ஆழ்ந்தவர்கள்தான் ஆழ்வார்கள். இறைவனின் காரணமற்ற கருணைக்கு இலக்கான ஆழ்வார்கள் 'மாலுகந்த ஆசிரியர்கள்' ஆவர். மண்ணில் அறம் குன்றி மறம் மிகுந்து நிற்கும்போது அவதாரங்கள் செய்த இறைவன் சாதுக்களின் நீதிநெறிகள் நிலை குலையாமல் அதனை வலியுறுத்த, தன் அவதாரங்களும் பயன்படாத நிலையில், மானிட இனத்தாரைக் கொண்டே மக்களைத் திருத்தத் திருவுளம் கொண்டான்; ராஜச, தாமசம், கலசிப் பொதுவாகிக்குழம்பி நிற்கும் வேத நெறிகள், வர்ணாச்சிரம தர்மங்கள் இவைகளையும் கடந்து, இவற்றிலிருந்து வடிகட்டியதான சாத்விக நெறிகளை வைணவ மரபுகளை வளர்க்க ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலம் அருளினன் இறைவன்.

''என் நெஞ்சத்துள் இருந்து, இங்கு இருந்தமிழ் நூல் இவை மொழிந்து'' என்றும், ''என் நெஞ்சும் உயிரும் உள்கலந்து தானே யான் என்பானாகித் தன்னைத் தானே துதித்து'' எனவும் நம்மாழ்வார் மூலம் தமிழ்செய்தான் இறைவன். நம்மாழ்வாரைத் தலைமை கொண்ட மற்றைய ஆழ்வார்களின் அருளிச் செயல்களும் 'பேசிற்றே பேசி' ஒத்த கருத்தை வெளியிட்டன. 'வேதம் தமிழ் செய்த மாறன் தமிழ் மறைக்கு ஆறங்கம் கூற அதவரித்தார், திருமங்கைமன்னன்.

ஆழ்வார்கள் பாசுரங்களிலே ஆத்ம பரமாத்மா தத்துவங்களோடு உயிர்க்குலத்திற்குக் காட்டவேண்டிய, பேரன்பின் பல்வேறு வடிவங்களைக் காணலாம். தாயின் இனிய பண்பு, தந்தை நமக்கு நாடும் நன்மை, அன்புக்கு அடிமையுற்றவர் தொண்டு, வணக்கம் மிக்க பக்தனின் வழிபாடு, தலைமகனிடம் தலைமகளின் உண்மையான உயிர்க்காதல், பொங்கும் பரிவினால் அனைவர்க்கும் வாழ்த்துரைகள் (மங்களாசாசனம்) இவை அனைத்தும் அருளிச் செயலில் காணலாம்.

***

# திருமந்திர யோகம்

'கவியோகி' 'மகரிஷி'

தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள், சிவகங்கை

(முற்றொடர்ச்சி)

## காம ஜயம் : (வேட்கை வெற்றி)

தமிழ் ஒன்றே உலகில் தொன்மொழி. இன்றும் முன்னேறும் உயிர்மொழி. தமிழ் மந்திரமே உயிர் வாழ்வில் உட்புகுந்து ஒள்ளிய தெள்ளிய தூரவாழ்வின் பெற்றியை முற்றும் விளக்குவது. திருமந்திர யோகத்தில் கருமம் பக்தி, ஞானம், ராஜம் ஆகிய வைதிக யோக விளக்கத்துடன் சிவசக்தி சாதனமான தூய தாந்திரிக யோகமும் விரிவாகக் காண்கிறது. அதனால் விந்து ஜயம் மட்டுமின்றி சிந்தையடங்கிச் சிவசக்தி சாதனத்தால் விந்தைக் கனலொளி யாக்கும் பரியங்க யோகமும் விளங்கும். யோகரகசியம் பிராணவாயுவை அடக்கிச் சுழுமுனையிற் செலுத்தி, ஆதார சக்கரங்கள் ஊடே விந்தினை ஏற்றிப் பரவிந்து, பரநாதம், பரஒளி, பரவெளி கண்டு உலகத் தலைவனாக விளங்கும் சாதனங்கள் உள்ளன.

ஆமேல் அழிகின்ற வாயுவை நோக்கிடில்
நாமேல் உறைகின்ற நன்மை அளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே யுலகில் தலைவனு மாமே

எதற்குத் தலைவன்? மனித வாழ்வை மாசறச் செய்து, உடல் உயிர் மனம் உள்ளம் எல்லாம் ஒள்ளிய மகாகுண்டலி சக்தி பரவ, சாதன சித்திபெற்ற சுத்தசக்தி யோகிகளுக்குத் தலைவனாகி-உலகிற்கு வழிகாட்டலாம்-அண்ணலைக் காணின் அவனிவனாமே-உள்ளத்தில் உள்ளமாய் ஒளிரும் அண்ணல் சிவனை, அவன் அருளே கண்ணாகக் காணின், சிவமயமாகலாம். சிவம் என்னும்போது சக்தியும் உடன் இயங்கும் சக்தியாய்ச் சிவம் ஆகி என்றிக.

ஆண் பெண் இருவருக்கும் இன்பமருளும் பரியங்க யோகத்தைத் திருமூலர் ஒருவரேதெளிவாக விளக்கினார்-ஆனால் அதன் சாதனங்களைக் குருமூலமே பயில வேண்டும். சிற்றறிமாந்தர் யாரும் வழிகாட்ட முடியாது. அதன் முதற்படி ஏழு ஆதாரங்களையும் மூலக் கனலேற்றிக் கட்டிப்பிடிக்க வேண்டும். மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை, ஸஹஸ்ராரம். இவை கீழ்வாய், குறி, தொப்புள், உள்ளம், மிடறு, நெற்றி, மண்டை, இவற்றில் கோத்த சுழி முனை நரம்பு வழியேயுள்ளன. இவற்றை ஏழு வட்டங்கள், சக்கரங்கள் என்கிறார் மூலர்.

வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் உள்ளே
சிட்டன் இருப்பிடம் சேர அறிகிலீர்
ஒட்டி இருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடம் காணலும் ஆமே

ஒட்டியிருத்தல் என்பது இருபாலாரும் மனம் உயிர் உடலொன்றிப் பரியங்க யோகம் புரிதல் ஆகும்.

ஆறுருவி ஏழேறி
ஆனந்தத் தேன்உண்ணும்
சீறியெழும் ஆதாரத் தீ

இந்த ஆதாரத் தீ பெண்மைக்குத் திண்மை தருகிறது. பெண்மையை வெறும் சிற்றின்பப் பாவையாகக் கருதாமல் பேரின்பக் கனலாகக் கருதவேண்டும்.

பெண்ணிற் பிறங்கும்
பெருங்கனலைப் புல்லினால்
மண்வாழ்வு மங்கல விண்ணாம்

பெண்ணுறுப்பு நோக்கியே பெண்ணைப் புல்லும் காமுகர் விந்தை இழந்து, மெலிந்து நோயுறுவர். பெண்ணைப் பராசக்தியாகக் கருதி வாழ்ந்தால், நமக்குச் சித்த சுத்தியுண்டாகும்.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மையுண் டாகப் பெறின்''

என்ற உண்மையை நுகரலாம். அதற்கே பரியங்கயோகம் என்ற அரிய தலைப்பை, மூல யோகி உலகிற்கு அளித்தார்.

## உயர் அநுபவம் :

இதற்கு முன்னுரையாகச் சில வரிகள் எழுதுகிறேன். ஏனெனில் மூலர்காட்டும் ஆண் பெண்யோகம், ஆண்-பெண் குறிச் சேர்க்கை யன்று. இந்த யோக விளக்கமாகவே இலிங்கத் தத்தை நாதவிந்து கலாதி சிவமாகச் சைவப் பெரியார் ஆக்கினர். நமது திருமணக் கருத்தும் பரியங்க யோகமே. எனக்கு இதை இளமை யிலேயே விளக்கியவர் மகான் ஞானசித்தர்.

உறக்கத்தை நீக்கி உணர வல்லார்க்கு
இறக்கவும் வேண்டாம் இருக்கலும் ஆமே

நான் முதலில் உறக்கத்தை யோக நித்திரை யாக்கி வாசியை சிவாசிவா என்று மேலேற்றி உச்சியில் வைத்து, மகாதுரிய சமாதியில் இருந்து, ஓங்காரமாகி ஒளியாய் உயிர்க்குயிராய் நீங்காதிருக்கும் நிலைபொருளில் ஊன்றி நின் றேன். அதனால் விந்துக் கனல் மேலே உச்சிக்கு ஏறி, பரவிந்துக் கனலாகியதாலும், எப்போ தும் வண்டுபோல சகஸ்ரார ஓங்காரம் கேட்ப தாலும், வேறு கீழ்நோக்கமில்லாது போயிற்று. இதில் நான் பூரண சித்தி பெற்றது அரவிந்த அன்னையாலேதான். அன்னையை கமலேஸ்வரி-மனோன்மணியாகவே கருதித் தியானித்தேன்.

பொன்னூற்றிற் பொங்கிப்
பொலியும் வெண்டாமரை வாழ்
அன்னமென் றுன்னை அறி

என்ற அறிவு தெளிவானது. இந்த நிலைகண்ட பிறகு, பெண்களிடையே அமர்ந்தாலும் மகா குண்டலி விறுவிறுக்கும். இதன் ரகசியம் மூலர் நுட்பமாகச் சொல்லுகிறார். இதைக் கேசரி யோகம் விளக்குகிறது.

இருந்தனள் சக்தியும் அக்கலை சூழ
இருந்தனள் கன்னியும் அந்நடு வாக
இருந்தனள் மானேர் முகநில வார
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே

''கோயிலினுள்ளே குடிசெய்து வாழ்பவர், தாயி னும் நல்லார் தரணி முழுதுக்கும்'' என்பதன் நுட்பம் பெண்மையிலே சிற்சக்தி காணலே.

இந்த சக்தி சாதனத்தால் மூச்சும் சுழி முனையிற் சுழலும், வீணாகாது. உள்ளே சுழ லும் மூச்சினால் உயிர்க்காற்று மிகும். நாடி சுத்தியாகும். மூச்சு வீணாகாது, ஆயுள்வளரும். நான் என் அன்னைக்கு முதற் பிள்ளையாகவே பிறந்து, பதினைந்து ஆண்டுகள் வளர்ந்தேன். அப்போது எனது பெரிய பாட்டனார் பூரணா னந்த மகாயோகி இமாலயத்தில் தவம் புரிந்து திரும்பினார். அவர் பரமஹம்சர், தயானந்தர், வள்ளலார் போன்ற அருட் பெரியாரைக் கண்டு மதுரைக்கு வந்து, கோச்சடைத் தோட்டத் திலே அமர்ந்தார். அவரே எனக்குப் பதஞ்சலி ராஜயோகம் பயிற்றி, கீதை உபநிஷத் எல்லாம் புகட்டி, சகஸ்ரார கமலத்தில் பிராணனை நிறுத்தி, அங்கே கேட்கும் ஓங்காரத்திலே லயிக் கும் லயயோகம் பயிற்றினார். என் பெரிய மாமா ஆங்கிலம் பயிற்றினார். ஆனால் எனக்கு உச்சியிலேயே குண்டலியை நிறுத்தி உடலை உதறிச் செல்லவேண்டும் என்று ஆர்வம் எழுந் தது. ஏனெனில் சுற்றியுள்ள மனை வாழ்வை வெறுத்தேன். எனக்கும் திருமண ஏற்பாடுகள் நடந்தது. அதைத் தப்பிப்போக நினைத்தேன். ஒருநாள் பிரமரந்திரத்திலே பிராணனை அடக்கி, லயித்தபோது உச்சி வெடித்து உடல் பிணமாகி விழுந்தது. அப்போது ''நம் அனு பவத்தையெல்லாம் எழுதாது போகிறோமே என்ற சங்கற்பம் எழுந்தது. அதனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு, என் அன்னைக்குக் கடைசிக் குழந்தையாகப் பிறந்தேன். ''அவனே இவன், இவனை நான் வளர்ப்பேன்'' என்று அதே பூரணானந்தர் மூன்று வயதிலேயே எனக்குச் சாதனங்களைப் பயிற்றினார். உலகு விவகாரங்களில் நினைவே செல்லாது.

சுத்த சக்தி சமயோகமும் உள்ளெழுச்சி யைப் பாடும் பணியுமாகவே என் வாழ்வு கழிந் தது. நான் பெண்ணைப் பராசக்தியாகவே கருதி மலர்தூவி வணங்கினேன் - என் அன்னை காமாட்சி, என் தமக்கை அரங்கம்மா, எனது அத்தை சீதம்மா, என் அடுத்தவீட்டு மகா லட்சுமி அனைவரையும் பராசக்தியாகவே கருதி வணங்கியதால், கீழ் எண்ணமில்லாது மேல்நோக்கியே குண்டலி சுழன்றது. எத்த னையோ தடவை திருமண ஏற்பாடுகள் செய் தும் அத்தனையும் விலக்கினேன். சோதனையும் சாதனையும் என்ற நூலில் இதெல்லாம் விளக்கி யுள்ளேன். என் வயதுடன் 15 வருடம் கூட்டிக் கொள்ளவேண்டும். மற்றோர் வியப்பு. எனது முற்பிறவி அறிவெல்லாம் இப்பிறவியில் அப் படியே முகிழ்த்தன. ஆதலால் ஐந்து வயதி லேயே கவிபாடினேன். வேதக் கருத்துக்களைத் தமிழ்-ஆங்கில பிரெஞ்சுக் கவிகளாக விளக்கி னேன். என் உயிர்த்தோழர் வ.வே.சு.ஐயர், பாரதியார், தாகூர், அன்னை, அரவிந்தர் அனைவரும் என் புலமையைப் பாராட்டினர். நான் பாரத சக்தி மகா காவியம் எழுதிய போது நிறைவான மௌனத் தவயோக சூழலில் திளைத்தேன்.

பகவான் அரவிந்தரும் அன்னையும் எனக்கு அருள்பாலித்து, மௌனத் தவத்தைப் பாதுகாத்தனர். மலைக் குகையிலும் காண முடியாத தனியின்பம் அன்னையின் திருவடி நிழலிற் கண்டேன். அரவிந்தரின் மௌனக் குடை நிழலிற்கண்டேன். வடலூரில் திருமந்திர ஆராய்ச்சி செய்து, அருட்சோதி வள்ளலார் என் சமாதியில் காட்சியளித்ததால், மூல யோகம் முற்றும் அனுபவத்திலே கண்டேன். சென்னை யோக சமாஜத்தில் தனித்தவம் தொடங்கினேன். என் வாழ்வின் குறிக்கோள் முடிந்து, எழுதவேண்டியதெல்லாம் எழுதி ஜீவ சங்கற்பம் முடிந்தது. நான் பிறந்த சிவகங்கை யருகே சோழபுரத்தில் 32 ஏக்கர் நிலத்தில் தவக்குடில் எழுப்பி நாளெல்லாம் தவமும் தமிழுமாயிருக்கிறேன். 1500 நூல்கள் திருப்பிப் பார்த்துச் செப்பனிட்டுத் தக்காரிடம் தந்த பிறகு இவ்வுடலை உதறி, என்னுயிர் சிவக்

கலப்பெய்தும், பிறகு பிறவி கிடையாது. நான் மட்டும் பெண்ணாசை கொண்டு கீழியக்கத்தை விரும்பினால், கோடீசுரனாயிருப்பேன். அத்தகைய இடங்கள் பல வந்தன. 'மனம் கீழ் நோக்கவில்லை. மேலே ஜீவசங்கல்பத்தை முடித்துச் செல்லவே என்னை உந்தியது. இந்த அனுபவத்துடன் பரியங்க யோகம் என்னும் நுட்பப் பகுதியினை விளக்குகிறேன்.

## பரியங்க யோக விளக்கம்:

பரியங்கயோகம் என்பது அகத் தவம். புறத்தவமான இயமநியமஆசன பிராணாயாமாதிகளைத் தாண்டியது. பெண்ணடிமைப்பட்டு, விந்தைச் செலவிட்டு, வெப்பு நோயுண்டு வெட்டை வெள்ளையாகிய வெதுப்புநோயுண்டு உடல்மெலிந்து, நரம்பு துவண்டு, மூலாதாரக் கனல் வற்றி வெதும்பிச் சாவர் பலர். ஒரு மருத்துவமனையில் வெட்டைப் பகுதியைப் பாரீர். அருவருப்பு, அசங்கியம், அழிவு, அழிவு! ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் புணர்ந்து நாதவிந்துக்களை வீணாக்கி ஆப்பும் அழிவுமாகிச் சாகின்றனர்.

சைவத்தில் சிவனிற் பாதி பெண்ணாகி உமாமகேசுவரி, சிவசக்தி, வள்ளிமுருகன், சிவ பார்வதி, மீனாட்சிசுந்தரேசர், சிவகாமி நடராசர் என்று பெண்ணின்நல்லாளொடும் பெருந்தகை இருந்தார். இராமகிருஷ்ண பரமஹம்சர் சாரதாதேவியுடன் ஒரே காளிகோயில் அறையில் சாதனவாழ்வு வாழ்ந்தார். ராஜாராம் மோகன்ராய் மனைவிகளுடனே தாந்திர சாதனம் செய்தார். சுவாமி இராமதாசர் கிருஷ்ணாபாயுடன் தவம் புரிந்தார்.

தூய சைவ சமயம் உலகநெறி. சிவம் என்றால் இன்பம். அதன் சக்தியே அம்மன். பெண்மைக்குச் சிறப்பைத் தருவது சைவம். ஆதிசங்கரர் சௌந்தரிய லஹரியில் சிவசக்தி சாதனமான பரியங்க யோகத்தையே விளக்குகிறார்.

ஸுதா சிந்தோர் மத்யே
ஸரவிடபி வாடீபரிக்ரஹே
மணித் விபேநீபோ
பவனவதி சிந்தாமணிக் ரஹே
சிவாகாரே மஞ்சே
பரமசிவ பரியங்க நிலையாம்
பஜந்தித்வாம் தன்யா
கதிசன சிவானந்த லஹரீ

அமுதக்கடலில் அமரக் கற்பக மரங்கள் அடர்ந்த மணியணித் தீவில் கதம்பவனத்தில் கவின்பெறும் சிந்தாமணி யொளிர் வீட்டில், மங்கலச் சிவமாம் மஞ்சத் தணையில் மகாசிவன் மடியில் சிதானந்த லகரி திளைக்குமுன் சேவை அரிதிற் பெறுவர் உன் அருள் பெற்றாரே. இதுவே பரியங்க யோகம். திருமூலர் தெளிவாகப் பாடுகிறார்.

அங்கப் புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப்படாமல் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனும் ஆமே

ஆண், பெண்ணைப் பராசக்தியாகவே கருத வேண்டும். பெண்மை சுத்தபராசக்தி மயம் என உணரவேண்டும். பெண் ஆணைத் தூய சிவமாக மதிக்கவேண்டும்.

பெண்ணின்றி ஆணில்லை
ஆணின்றிப் பெண்இல்லை
எண்ணிருவர் சேர்ந்தே இகம்

## ஆன்மநேயம்:

இருவரும் காம மயக்கை ஒழித்து, சிவசக்தி உணர்வில் தழுவிக்கொண்டு ஆன்ம உணர்வுடன் கூடியிருக்கவேண்டும். உபநிடதத்தில் யாக்ஞவல்கி மைத்ரேயியிடம் சொல்லுகிறார்:

நவர சுரே பத்யுக்
காமாயப்பரியம் பவதி
ஆத்மனஸ்து காமாயப்பரியம் பவது

''வெறும் உடலுறுப் புக்கன்றே,
காமத் தினவுக் கன்றே,
ஆத்தும விருப்பால் பதியாம் கணவன்
பத்தினிக் கினியன் ஆவதறிமினோ''

அதேமாதிரி பெண்ணுக்கு ஆண் பிரியமாவது இருவரிடமும் உள்ள ஆன்ம நேயமே. வள்ளலார் விளக்கும் ஆன்மநேய ஒருமையே, ஆன்மவுணர்வுடனே உட்லுடல் சேர்வது. உள்ளம் உள்ளம் இணைவது பேரின்பமாகும். வெறும் இந்திரியப்புணர்ச்சியல்ல. உயிருயிர்இணைப்பே பரியங்க யோகமாகும். திருமூலர் தெளிவாகச் சொல்லுகிறார். இந்த ஆத்மிகப் புணர்ச்சியால் சதிபதிகள் எப்போதும் உள்ளம் ஒன்றி உடல் பிரிந்தாலும் உளம் பிரியாதிருப்பர். இதைத் திருவள்ளுவர் நுட்பமாக விளக்குகிறார்.

துஞ்சுங்கால் தோள்மேலராகி விழிக்குங்கால்
நெஞ்சத்துள் ஆவர் விரைந்து

அனாகத சக்கரமான நெஞ்சில் இருவரும் பிரியா உறவு கொண்டிருப்பர். திருமூலர் மிக நுட்பமாக ஆண்பெண் ஆன்மிகச் சேர்க்கையை விளக்குகிறார்.

கண்டனும் கண்டியும் காதல்செய் போகத்து
மண்டலம் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டிமை மேற்கொண்டு வானில் உருட்டிடத்
தண்டொரு காலும் தளராது அங்கமே

கண்டன்-கண்டி என்பதில் பிராணாயாம நுட்பம் உள்ளது. அதாவது மணிபூரகத்தில் இயங்கும் மூச்சை மேலேற்றிக் கண்டத்தில் இருத்துதல். இதனால் விந்து, போக வழிச் செல்லாது தாந்திர யோக வழிச்செல்லும். இந்த நுட்பத்தை மூலர் விளக்குகிறார்.

## மேலேற்றம் :

விளங்கிடும் வாயுவை மேல்எழ உன்னி
நலங்கிடும் கண்டத்து நாடியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பித்துச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே

அதாவது நாபியில் ஒட்டியாணபந்தம் செய்ய வேண்டும். வாயுவை மேலேற்றிக் கழுத்திலே ஜலந்தரபந்தம் செய்யவேண்டும். இதனால் விந்து சக்தி மேலே உந்தி ஊர்த்துவரேதஸ் ஆகும். கீழிறங்கி அழியாது. கண்டன் கண்டி என்பது கண்டத்தில் இருவரும் காற்றை வைத்து ஜலந்தரபந்தம் செய்வதாம். வண்டியை உருட்டுதல் என்பது இடகலை பிங்கலைக் காற்றை மேலேற்றலாம். மூச்சு எங்கே கும்பித்தோமோ அங்கே விந்து சக்தியும் நிற்கும். சாதனத்தால் இந்திரியம் ஓஜஸ் தேஜஸ் ஆக பிராண சக்தியாக மாறும். விந்துவும் கீழ்நோக்கி வெளியேறாது; மேற்சென்று சகசிராரத்தில் சக்திக் கனலாக மாறும். இதை ஆதிசங்கரர் நுட்பமாகப் பாடுகிறார். அதில் திவ்வியதாந்திரமான பரியங்கயோகம் அடங்கும்.

## ஆதார சக்தி :

மஹீம் மூலாதாரே
கமபி மணுபுரே ஹுதவஹம்
ஸ்திதம் ஸ்வாதிஷ்டான
ஹ்ருதிமருத மாகாச முபரி
மனோ அபிபிரு மத்யே
ஸகலமபி பித்யா குலபதம்
ஸகஸ்ராரே பத்மே

இந்த ஆழக் கவியின் அருந்தமிழ் காணீர்.

மூலாதார மண்ணியல் உடனே
சுவாதிட்டானத் தீஇயல் உடனே
மணிபூரகத்து நீரியலுடனே
அனாகத இதயக் காற்றியலுடனே
விசுத்திமிசை ஆகாசத்துடனே
ஆக்ஞைப் புருவம் மனோமயத்துடனே
சுழுமுனை நாடியைத் துருவி மேலேறி
ஸஹஸ்ராரத்தே குல குண்டலியாய்
சதாசிவ பதியுடன் சதாவிளையாடும்
சுத்தான்ம சக்திச் சுடரே போற்றி!

தேவிபாகவதத்தில் ''சக்தி உருவாக உடலில் இயங்கும் தேவியை என்றும் வணங்கித் துதிப்போம்'' என்கிறான் சாக்தபக்தன்.

## உள்ளொருமை:

இந்தப் பரியங்க யோகத்தால் ஆத்மஜயம் பெறலாம். பேரின்ப வெற்றி இயல்பாகஎய்தும். வெறும் இந்திரியப் புணர்ச்சியால் விந்து சிதறாது, மேல்எழுந்து ஓஜஸ் தேஜஸ் ஆன உட்பொலிவாகும்.

தலைவனும் ஆகிடும் தன்வழிஞானம்
தலைவனும் ஆகிடும் தன்வழி போகம்
தலைவனும் ஆகிடும் தன்வழி யுற்றே
தலைவனும் ஆகிடும் தன்வழி அஞ்சே

அஞ்சே என்றால் ஐம்புலன்கள் (மெய் வாய் கண் மூக்கு செவி). இவை உள்ளடங்கி ஆன்மாவைப் பணிந்து நிற்கும். இதையே பகவத் கீதை ஆமைபோல ஐந்தை அடக்குக என்கிறது.

யதா ஸம்ஹரதே சாயம்
கூர்மாங்கா னீவ ஸர்வஸ:

தமிழில் திருவள்ளுவர் இதையே தெளிவாக்குதல் காண்க.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

நம்முள் இரண்டு இயக்கங்கள் உள்ளன. ஒன்று ஒருமை; பொறிபுலன்கள் மனதிலும் மனம் உளத்திலும், உள்ளம் ஆன்மாவிலும் ஒடுங்கி அடங்கியிருத்தல். அப்படி அடங்கினால் எழுமை, மனம், எழுந்து புறஞ்சென்றாலும் இன்பம் (ஏமாப்பு) எய்தும்,

## உள்ளுணர்வு :

இதைப் பரியங்க யோகத்திற் பொருத்திக் காண்போம். நமது பொறி புலன்கள் வெறும் குறி இன்பத்திலே பிடிபட்டு இந்திரியத்தை வீணாக்காது, ஆத்ம நெறியிலே அடங்கி உள்ளியங்க வேண்டும். அப்போது மற்றொரு குறளடி விளங்கும்.

ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

நம் உள்ளத்திலே துடிக்கும் ஆத்மசைதன்யத்தே மனம் ஊன்றினால், மனம் கீழியல் போகத்தையே நினையாது மேலியல் யோகத்தையே எண்ணி நிற்கும். அப்போதுதான் அருட்சோதி வள்ளலார் கண்ட ஆன்மநேய ஒருமையை நாம் உணரலாம்.

## ஐந்து நாழிகையே :

இந்தப் பரியங்க யோகத்திற்கு நாழிகை குறிக்கிறார் மூலயோகி

அஞ்சு நாழிகைமேல் ஆறாம் நாழிகை
துஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்க்கொளாதென்றல்
பஞ்ச கடிகை பரியங்க யோகமே

பரியங்க யோகம் ஐந்து கடிகை, நாழிகை மேலே கூடாது. அதற்குமேலே கலவி புலவியாகும். நாத விந்துக்கள் வெளியேறிச் சோர்வுதரும். வெள்ளியான விந்து வீணாகாது, நரம்புகள் சோராது, பவகாமத்தினவின்றி, சிவகாமவீறு கொண்டு இருபாலாரும் உள்ளொன்றி யின்புற வேண்டும். பெண்ணுக்கு இருபது ஆணுக்கு முப்பது வயது, பரியங்கயோகம் சித்திக்கும். தூய சக்தியின்பம் துளிர்க்கும்.

ஏய்ந்த பிராயம் இருபதும் முப்பதும்
வாய்ந்த குழவிக்கும் மன்னர்க்கும் ஆனந்தம்

நாதவிந்துக்கள் அழியவிடக் கூடாது. பரியங்க யோகம் என்று மைதுனத்திற் புகுந்தால், சக்தி வீணாகிச் சடலம் நோயுறும். நாம் காணும் அருவருக்கத்தக்க இந்திரிய நோய்கள் அரையாப்பு, சூதகவலி, தூரக்கோளாறு, வெள்ளை வெட்டை எல்லாம் வகையறியாத காமச்சேர்க்கையாலே வருவனவாகும். இந்திரியத்தை மகப்பேறு வேண்டும்போதே பயன்படுத்த வேண்டும். மற்றநேரம் பரியங்க யோகத்தால் அடக்கி ஊர்த்துவரேதஸ், ஓஜஸ், வர்ச்சஸ் பெற்று உடல் மனவுறுதி எய்த வேண்டும். மகப்பேறு வேண்டும்போதே நாதவிந்து சேரவேண்டும். மற்ற நாளில் இவை சக்திக் கனலாகி உடல் மனவுறுதி தரவேண்டும். இதனால் அறிவு உறுதியாகி ஆயுளும் ஆற்றலும் பெருகும்.

எழுகின்ற தீயை முன்னேகொண்டு சென்றிட்டால்
மெழுகு உருகும் பரிசு எய்திடும் உடலே
உழுகின்ற தில்லை ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லை வெளியறி வார்க்கே

மனவுறுதியற்றவர் இந்தச் சாதனத்தில் இறங்கினால் தீயில் மெழுகுபோல் உடல் வலி கரைந்துவிடும். பிராணயாமத் தியானத்தால் உள்ளுறுதி பெற்றவரே, ஞான ஒளிகண்டவர் ஆணும் பெண்ணும் ஒரே ஆன்மா என உணர்ந்து ஆன்ம நேய ஒருமை கூடியவரே இந்திரியம் வெளியேறாமல் பரியங்கயோகம் பயிலமுடியும். இந்திரிய ஜயம் பெற்று, பொறி புலன் அடக்கி நாதவிந்துக்களை வீணாக்காது வைராக்கியத்தாலே கட்டிப் பரியங்கயோகம் பயில்வோர் நீடூழி வளம்பெற வாழ்வார்.

மின்னிடை யாளும் மின்னாளனும் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லரேல்
மண்ணிடைப் பல்லூழி வாழலும் ஆமே

இங்கே பொன்னிடை வட்டம் என்பது பொன்னிற் பொலியும் சகசிராரம். அதிலே, இருவர் மனமும் லயிக்கும்படி, தியான யோகம் பயின்றால் நீடூழி வாழலாம்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்

என்றார் வள்ளுவர். மலர் என்பது உச்சித் தாமரை. இங்கே மலர்மிசை ஏகினான் என்பது உச்சித்தாமரையில் உள்ளம் நிலைத்த சிவகுருவைக் குறிக்கும். அத்தகைய பரமாசாரியார் வழிபற்றியவரே உலகில் ஆயுள் ஆற்றல் வீடுபேறு பெற்று நீடு நிலைப்பர்.

நமது மூச்சை உஸ் உஸ் என்று வெளியேற விடாமல், சுழுமுனையிலே சுழலவிட வேண்டும். நீண்ட சாதனத்தாலும் மோனதியானாதிகளாலும் மூச்சு உள்ளேயடங்கிச் சுழலும். சகஸ்ராரம் ஆயிரம் இதழ்த் தாமரை போன்றது. அதில் உயிரும் உயிர்ப்பும் வயமாகலே வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகையாகும்.


பற்றற்றுப் பற்றிப் பணிந்து உணர்வால் அர்ச்சித்துத் தொட்டுநில் அங்கே துதி. சுந்தரர் தேவாரத்தில் ''மற்றுப்பற்று எனக்கின்றி நின்திரு நாமமே மனம் பாவித்தேன்'' என்ற சாதனத்தாலே எந்த யோகமும், பரியங்கயோகமும் சித்திக்கும். இவ்வாறு எத்தனையோ அரிய பெரிய சாதன ரகசியங்கள் மூல மந்திரத்தில் அடங்கியுள்ளன. இந்தப் பரியங்க யோகம் நிறைமுறையான இல்லறத்தார் செய்யத்தக்கது. மனத் தினவான காமத்தைச் சிவ அருளாலே சிவகாமமாக்க வேண்டும்.

அர்த்த நாரீசராக, பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை அரன்இருக்கும் யோகம், ஆண் பெண் இரண்டுள்ளம் பால்வேறுபாடற்ற ஆன்மநேயத்தையே, குறிக்கும். சம்பந்தர் தேவாரத்தைப் பாடி முடிப்போம்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை
இருந்ததே.

—சம்பந்தர்.

## திருச்சிற்றம்பலம்



# கீழ்வேளூர் மாடக்கோயில்

டாக்டர் திரு இரா. கலைக்கோவன்,
திருச்சி.

''விழித்தானைக் காமனுடல் பொடியாய் வீழ
மெல்லியலோர் பங்கனைமுன் வேழநல் ஆனை
கிழித்தானைக் கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடு இலரே''

என்ற அப்பர் அடிகளின் திருப்பதிகத்தையும்,

''பொன்னுலாவிய கொன்றையந் தாரினர்
புகழ்மிகு கீழ்வே ளூர்
உன்னுலாவிய சிந்தையர் மேல்வினை
ஓடிட வீடாமே''

என்ற சம்பந்தரின் திருப்பதிகத்தையும் பெற்ற கீழ்வேளூர், நாகப்பட்டினம் - திருத்துறைப் பூண்டி சாலையில், சிக்கலுக்கு மூன்றுகல் தொலைவில் அமைந்துள்ள திருத்தலமாகும். இது காவிரியின் தென்கரைத் தலங்களுள் எண்பத்து நான்காவது தலமாகும். மாடக்கோயில் அமைப்புடைய இத்தலத்தினைச் சம்பந்தர் தன் பதிகத்தில் 'பெருந்திருக்கோயில்' என்று குறித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கோயிலின் நுழைவாயில் கோபுரம் ஐந்து நிலைகளைக் கொண்டது. ஒவ்வொரு நிலையும் பல அழகான சிற்பங்களைக் கொண்டுள்ளது. சிவபெருமானின் பலவிதத் தோற்றங்களும், புராணக்கதைகள் சிலவற்றிற்கான சிற்ப விளக்கங்களுமாக இக்கோபுரம் இழைக்கப்பட்டுள்ளது. மாடக்கோயில்களுள் எடுப்பும் சிறப்பும் நிறைந்த கோபுர வாயிலைக் கொண்டது, கீழ்வேளூர்ப் பெருந்திருக்கோயிலே எனின் அது மிகையாகாது.

கோபுர வாயிலைக் கடந்து உள்நுழைந்ததும் மாடக்கோயில் கண்களில் படமாகின்றது. இத்தலத்தில் மாடக்கோயிலைச்சுற்றிப் பல சுற்றாலைக் கோயில்கள் உள்ளன. வெளித் திருச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் விசுவநாதர், பைரவர், கதிரவர் திருமுன்களும், வடகிழக்குக் கோடியில் அஞ்சுவட்டத்தம்மனுக்கான உட்கோயிலும் அமைந்துள்ளன. இத்தலத்தினை முருகன் வழிபட்டதாகக் கதையொன்று வழங்குகின்றது. அப்படி முருகன் வழிபட்ட காலத்து, அவரின் வழிபாட்டுக்கும் தவத்துக்கும் கேடு உண்டாகாதவாறு இறைவியார் கொற்றவையின் ஓர் அம்சமாகத் தோற்றம் கொண்டு காவல் செய்தாராம். இறைவியின் இந்த நிலையையே அஞ்சுவட்டத்தம்மன் என்று சிறப்பாக அழைத்துத் தனிக்கோயில் அமைத்து வழிபடுகிறார்கள் இவ்வூர் மக்கள். இச் சிறுகோயிலில் அஞ்சுவட்டத்தம்மன் உற்சவர் வடிவிலும் மூலவர் வடிவிலும் அருகருகே இரு தனித் திருமுன்களில் வீற்றிருக்கிறார். இந்த அமைப்புமுறை சற்று புதுமையானதாக உள்ளது.

திருச்சுற்றின் தென்கிழக்குப் பகுதியில் மாடக்கோயில் படிக்கட்டுகளை ஒட்டி இரண்டு சுற்றாலைக் கோயில்கள் உள்ளன. ஒன்று விசுவநாதருக்கும் மற்றொன்று முருகனுக்குமாய் அமைந்துள்ளது. முருகனுக்கான கோயில் சிறப்புடன் உள்ளது. நீண்ட முன் மண்டபத்துடனும் இரண்டு தள விமானத்துடனும் அமைந்துள்ள இக்கோயிலில் முருகன் 'பாலசுப்பிரமணியர்' என்ற திருப்பெயருடன் திகழ்கிறார்.

திருச்சுற்றின் தென்மேற்குப் பகுதியில் நீண்ட திருச்சுற்று மாளிகை உள்ளது. இதன் தொடக்கத்தில் உள்ள மண்டப அமைப்பில்' விசுவநாதர்கோயில் கொண்டுள்ளார் அடுத்துத் திருத்தொண்டர்கள் வரிசையுள்ளது. தென் மேற்கு மூலையில் மகாலட்சுமியின் திருமுன் காணப்படுகின்றது. மேற்குப்புறத் திருச்சுற்றில் இடமிருந்து வலமாகப் பத்ரிவிநாயகர், அகத்தீசுவரர், ஆளுங்கோவேசுவரர், விசுவநாதர், மகாலட்சுமி, பிரகதீசுவரர், ஜம்புகேசுவரர், கைலாசநாதர், அண்ணாமலையார் முதலிய தெய்வங்களின் சுற்றாலைக் கோயில்கள் காணப்படுகின்றன.

வடக்குப்புறத்தில் இறைவியின் கோயில் செவ்வக வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. முகமண்டபம், முன்மண்டபம், உள்மண்டபம், கருவறை என இக்கோயில் அமைந்துள்ளது. முகமண்டபத்தில் ஆடிப்பூர அம்மையின் திருவுருவம் உள்ளது. முன்மண்டபத்தில் பலிபீடம் நந்தி இவற்றுடன் பிள்ளையாரும் அமைந்துள்ளார். காவற் பெண்டுகளுடன் அமைந்த உள் மண்டபத்தை அடுத்த கருவறையில் அம்மை

வன்முலைநாயகியாய் காட்சி தருகிறாள். 'வாரு லாவிய வன்முலையவளொடு மணி சிலம்பவை ஆர்க்க' என்று இவ்வம்மையைச் சம்பந்தர் தன் பதிகத்தில் குறிப்பிடுகிறார். தேவியின் கரு வறை, உள்மண்டபப் புறச்சுவர்களில் உள்ள தெய்வப்புரைகளில் பெண் தெய்வ வடிவங் களை அமைத்திருப்பது இக்கோயிலின் தனிச் சிறப்பாகும். தென்புறத்தில் ருத்வினியும், மேற்குப்புறத்தில் வைஷ்ணவியும், வடபுறத்தில் கொற்றவையும், உடன் நான்முகனும் உள்ள னர். மாடக்கோயிலுக்கும் இறைவியின் கோயி லுக்கும் இடைப்பட்ட இடத்தில் சண்டிகேசு வரர், சோளீசுவரர், ஏகாம்பரேசுவரர் முதலிய தெய்வங்களுக்கான சுற்றாலைக் கோயில்கள் உள்ளன. இக்கோயில்களுக்கும் அஞ்சுவட்டத் தம்மன்கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் முருகன் ,ஆடவல்லானின் செப்புத் திருமேனி களுக்கான சிறு கோயில்கள் அமைக்கப்பட்டுள் ளன.

இத் திருச்சுற்று மதிலின் உட்புறத்தில் வடக்கில் ஆஞ்சநேயர் வடிவம் புடைப்புச் சிற்ப மாகச் செதுக்கப்பட்டுள்ளது. மேற்கில் வட மலைப்பிள்ளை கட்டளைதார் வடிவமும், துக் கோஜி, துளஜாஜி, என்னும் மராட்டிய மன்னர் களின் வடிவங்களும், காட்சி கொடுத்த பெம்மா னாய் இறைவன் இறைவி திருவடிவங்களும் சிற் பங்களாய்ச்செதுக்கப்பட்டு மாடங்களில் அமைக் கப்பட்டுள்ளன. இம்மன்னர்கள் இக்கோயிலுக் குச் சொத்து வழங்கியதாகக் குறிப்பொன்றும், அதன்கீழ் மராத்தி மொழிக் கல்வெட்டு ஒன் றும் இங்குக் காணப்படுகின்றது.

மாடக்கோயிலின் கிழக்கு முகப்பில், வல மிருந்து இடமாக முருகன், பிள்ளையார் வடி வங்களும் சில அழகான சிற்பங்களும் செதுக் கப்பட்டுள்ளன. தென்கிழக்கு மூலையில் பதி னெட்டுப் படிக்கட்டுகளுடன் இம் மாடக்கோயி லின் நுழைவாயில் அமைந்துள்ளது. படிக்கட்டு களின் அருகில் இருபுறங்களிலும் பிள்ளையார் வடிவங்களும், வலப்புறத்தில் கல்யானை ஒன் றும் காணப்படுகின்றன. இப்படிக்கட்டுகளின் முகப்பில் சின்னஞ்சிறு சிற்பங்கள் பல செதுக் கப்பட்டுள்ளன.

மாடக்கோயிலின் முகமண்டபத்தில் வடக் குப்புறத்தில் ஆடவல்லானின் அழகுத் திருமுன் அமைந்துள்ளது. இங்கு இறைவன் வலது காலைத்தூக்கி, ஆடிய பெருமானாய்க் காட்சி தருகிறார். இறைவன் வலது காலைத் தூக்கி ஆடிய இடமாகக் கருதப்படுவது மதுரை. சுந்தரர் ஆடியதால் சுந்தரதாண்டவம் என்றும் இதைக் குறிப்பார்கள். இத்தகு சிறப்புக்குரிய அருமையான செப்புத்திருமேனி இங்கிருப்பது கீழ்வேளூரின் குறிப்பிடத்தக்க சிறப்புக்களுள் ஒன்றாகும்.

இம் முகமண்டபத்தை அடுத்து முன்மண் டபம் அமைந்துள்ளது. இதன் இடப்புறத்தில் தேவநாயகர் என்ற திருப்பெயருடன் இறைவ னின் செப்புத்திருமேனி அமைந்துள்ளது. வலப் புறத்தில் நந்தியும் பலிபீடமும்அமைந்துள்ளன.

முன்மண்டபத்தை அடுத்துள்ள உள்மண் டபத்தில் இன்பவல்லி அம்மையின் செப்புத் திருமேனி காணப்படுகிறது. இறைவன், கரு வறையில் இலிங்க வடிவில் கேடிலியப்பராய்க் காட்சி தருகிறார். கருவறைவிமானம் மூன்று தளக்கருங்கல் திருப்பணி. இம்மாடக்கோயிலும் மூன்றுதள அமைப்புடையது. முதல்தளத்தின் புறச்சுவர்களில் உள்ள தெய்வப் புரைகளில் தெற்கில் பிச்சையுகக்கும் பெம்மான், வீணை யேந்திய தென்திசைக் கடவுள், இலிங்கோத் பவர், பிள்ளையார், ஆலமர் அண்ணல் முதலிய தெய்வத் திருமேனிகளும், மேற்கில் இலிங் கோத்பவரும், வடக்கில் நான்முகன், கொற் றவை, பிள்ளையார் வடிவங்களும் காணப்படு கின்றன.

இரண்டாம் தளத்தில் முன்மண்டபம், கருவறை இவற்றைச் சுற்றிலும் மேடைபோன்ற அமைப்புடன் உள்திருச்சுற்று ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இங்குள்ள தெய்வப் புரைகளில் தெற்கில் ஆலமர் அண்ணலும், பிள்ளையாரும், முனிவர்களுக்குக்கற்பிக்கும் நிலையில் அமைந்த ஞானத் தென்திசைக் கடவுளும் அமைந்துள் ளனர். மேற்குப்புறத்தில் குழலூதும் கண்ண னும், லிங்கோத்பவரும் காணப்படுகின்றனர். வடக்கில் நான்முகனும் திருமாலும் அருள்செய் கின்றனர்.

இக்கோயில் முழுமையும் அடித்தளத்தி லிருந்து விமானம் வரை கருங்கல் திருப்பணி யாகும். கோயிலின் கட்டட உறுப்புக்கள் தெளி வாக, அழகாக அமைக்கப்பட்டுள்ளன. கும்ப பஞ்சரங்களும், கோட்ட பஞ்சரங்களும் நுணுக் கத்துடன் வடிக்கப் பட்டுள்ளன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் கோச்செங்கட் சோழனால் எழுப்பப்பட்ட மாடக்கோயில்களுள் இதுவும் ஒன்றாகும். இதற்கு வெகு அருகிலேயே அம்மன்னன் எழுப் பிய வலிவலம் மனத்துணைநாதர் திருக்கோயில் திருத்தேவூர் மாடக்கோயில், தண்டலை நீற் நெறிநாதர் திருக்கோயில் முதலிய ஆலயங்கள் அடுத்தடுத்து அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இக்கோயில் பிற்காலச் சோழர்களாலும், மராத்திய மன்னர்களாலும் பல திருப்பணி களுக்கு ஆளாகி, இன்று, முழுவதும் கருங்கல் கட்டடமாய் அழகுபடக் காட்சி தருகிறது. சிற்பக் களஞ்சியமான இத்திருக்கோயிலின் தூய்மைக்கும் எடுப்புக்கும் இதன் நிர்வாக அதி காரியின் கண்டிப்பும் கவனமும் முக்கியமான காரணங்கள்.

கல்வெட்டுத் துறையினரால் இக்கோயிலில் இருந்து மூன்று கல்வெட்டுக்களே படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் சிதைந்த நிலையிலுள்ள இரண்டு கல்வெட்டுக்களும் சோழமன்னன் திரி புவனச் சக்கரவர்த்தி மூன்றாம் இராசராச சோழதேவனின் ஆட்சிக் காலத்தில் பொறிக்கப் பட்டவை. மாடக்கோயிலின் தெற்குச் சுவரில்

காணப்படும் இம்மன்னனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயிலுக்குத் தரப்பட்ட நிலக்கொடை பற்றிக் குறிப்பிடு கிறது.

இம்மன்னனின் பத்தாவது ஆட்சியாண் டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு வனமுலை அம்மை கோயிலின் தெற்குச் சுவரில் சிதைந்து செய்தியறிந்து கொள்ள முடியாத நிலையில் காணப்படுகிறது. மராத்திய மன்னன் துள ஜாஜியின் கல்வெட்டு, திருச்சுற்று மதிலை அம் மன்னன் எடுப்பித்த செய்தியைத் தருகிறது. இது மராத்திய மொழியிலேயே பொறிக்கப் பட்டுள்ளது. துக்கோஜி என்ற மராத்திய மன் னன் இக்கோயிலுக்கு நிலங்கள் வழங்கியதைத் குறிக்கும் கல்வெட்டொன்று இங்கிருப்ப தாகச் சிவெல் என்ற அறிஞர் குறிப்பிட்டுள் ளார்.

ஏறத்தாழ இருபதுக்கும் மேற்பட்ட சுற் றாலைக் கோயில்கள்! வலது திருவடியைமாற்றி ஆடிய ஆடல்வல்லானின் அழகுத் தோற்றம்! அஞ்சுவட்டத்தம்மனுக்கு மூலவரும் உற்சவரும் அருகருகே அமைக்கப்பட்ட தனித்தனி திரு முன்களுடன் கூடிய உட்கோயில்! அடித்தளம் முதல் விமானம் வரை கருங்கல் திருப்பணி யாய் அமைந்த தனித்துவம்! சிற்பக் களஞ்சிய மாய் விளங்கும் கோபுரங்கள்! இப்படி சிறப்புக் களின் சிகரமாய் விளங்கும் கீழ்வேளூர் அருள் மிகு கேடிலியப்பரின் திருக்கோயில் எழிலார்ந்த மாடக்கோயில்களுள் குறிப்பிடத்தக்க தொன் றாகும்.

— — — — — —

× × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × ×

## வல்லபாசாரியார்

## ( 1440—1518 )

ஆந்திர நாட்டைச்சேர்ந்த தைத்ரீய மத்வ வகுப்பில், தைலிங்கப் பிராம்மண குடும்பத்தில், மத்தியப் பிரதேசத்தில் ரெய்ப்பூர் என்னும் நகரத்திற்கு அருகில், கம்பாரணியம் என்னும் ஊரில் அவதரித்தார். காசிக்குச் சென்று கல்வி பயின் றார். பாரதநாடு முழுவதும் மூன்றுமுறை யாத்திரை புரிந்தார். விசயநகர அரசரின் பேரவையில் விருதுகள் பெற்றார். அலகாபாத்துக்கு அருகில் உள்ள ஆடெல் என்னும் கிராமத்திலேயே பெரிதும் வாழ்ந்தார். இவரது கொள்கைகள் உத்திரப்பிரதேசம், இராசபுதனம், சவுராட்டிரம், கூர்ச்சரம் முதலிய மாநிலங் களிற் பெரிதும் பரவியுள்ளது.

இறைவன் 'ஏகம்' என இருக்கும் நிலையை விடுத்து, 'அனந்தம்' ஆக விரும்பினார். அதனால் அவர் விகாரப்படாமலே, பிரபஞ்சத்தைத் தம்மிடம் இருந்து தோற்றுவித்தார். தீயினின்று பொறிகள் உண்டாவதுபோல, கடவுளி னின்று, ஆன்மாக்கள் உண்டாயின. கடவுளின் 'சத்து' என்னும் கூற்றில் இருந்து உலகமும், 'சித்து' என்னும் கூற்றில் இருந்து ஆன்மாவும் தோன்றின. சித்து, ஆனந்தம் என்பன, பிரபஞ்சத்தில் மறைந்து கிடக்கின்றன. ஆன்மாவிடம் 'ஆனந்தம்' என்னும் இயல்பு மறைந்துள்ளது. பிரபஞ்சம் மாயையன்று; உண்மை யாகவே உலகம் உள்ளது. அது பிரமத்தின் பரிணாமமேயாகும். பிரமத்தினுடைய லீலா விநோதங்களின் விளைவே பிரபஞ்சம். அறியாமையினாலேயே உலக வாழ் வாகிய பந்தம் ஏற்படுகின்றது. ஆன்மாக்கள் நித்தியப் பொருள்கள், ஆனால் அணு பரிமாணம் உள்ளவை. வினைப் பயன்களே நமது உயர்வு தாழ்வு, இன்ப துன்பங்களுக்குக் காரணம். கடவுளின் அருள் பெற்றால், தெய்வீக உடல் பெற்றுப் பிரமத்தின் இராச லீலையாகிய தெய்விக இன்பத்தைத் துய்க்கலாம். பிரம்ம ஞானம் பெற்றுப் பிரமத்தை வழிபடுவோர் புருஷோத்தமன் ஆக விளங்கும் இறை வன்பாற் கலந்துவிடுவர். இதுவே முக்தி நிலையின் சிகரம். 'என்னால் ஆவதொன்று இல்லை. எல்லாம் அவன் செயலே' என்று தெளிந்து கடவுளிடம் அன்பு செலுத்துவது 'புஷ்டி பக்தி' எனப்படும்.

இராமாநுசரும் மத்துவரும் கூறும் பக்திக்கு அறிவு அடிநிலை; வல்லபாசாரியர் கூறும் பக்திக்கு உணர்ச்சி அடிநிலை. சங்கரரின் கொள்கை, வேதாந்தம் அல்லது மாயாவாதம் என்று வழங்கப் பெறும். வல்லபாசாரியரின் கொள்கை, சுத்தாத்வைத வேதாந்தம் எனப்படும்.

× × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × × ×

(24ம் பக்கத் தொடர்ச்சி)

கருமம் அல்லது வினையைச் செய்தவர்களுக்கு, அவ்வினையே சுவர்க்கம் முதலிய பயன்களை அளிக்கும். வினையின் பயனைத் தருவதற்குக் கடவுள் என்ற ஒரு பொருள் வேண்டுவதில்லை. ஏதேனும் ஒன்றை அடைவதற்கு விரும்பிச் செய்யப்படும் செயல், காமிய கன்மம் எனப்படும். காமியகன்மங்கள், அவரவர் விரும்பிய பயன்களை அளிக்கும். எதனையும் விரும்பாமல் வேதத்தில் விலக்கப்பட்ட செயல்களை ஒழித்து, விதிக்கப்பட்ட வேள்விகளைச் செய்யின் ,அதனால் முத்திநிலையை அடையலாம்.

வேதம் 'ஆன்மாவை அறிக' என விதித்திருப்பதால், ஆன்மாக்கள் பலவாய் நித்தமாய் வியாபகமாய்ப், பிறந்திறந்து, வினைகளைச் செய்து, வினைப் பயன்களை நுகர்ந்து வரும் என்பது பெறப்படும். இவ்வான்மாக்களுக்கு வேறாய்ப் பரமான்மா ஒன்று உண்டு என்பதும், உலகம் தோன்றியழியும் என்பதும் பொய். இவ்வுலகம் என்றும் இவ்வாறே நிலைபெறும் என்பது, மீமாம்சகரின் கொள்கை.

குமாரில பட்டர் :

சைமினி முனிவரின் மீமாம்சைச் சூத்திரத்திற்குச் சபரமுனிவர் என்பவர், பாடியம் இயற்றினார். அவர் கி.மு. முதல் நூற்றாண்டுக்கு முற்பட்டவர். அவர்க்கும் முன்னரே பர்த்துருமித்திரர், பவதாசர், அரி, உபவர்ஷர் என்பவர்களும், உரைகள் இயற்றியுள்ளனர். ஆனால் அவைகள் இப்பொழுது நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. பிற்காலத்திய மீமாம்சை நூல்களுக்கெல்லாம், சபரமுனிவரின் பாடியமாகிய பேருரையே அடிப்படையாகும். சபரமுனிவருக்குப் பின்னர்க் குமாரில பட்டர் என்பவர் (கி.பி.590-650), சைமினியின் மீமாம்சைச் சூத்திரத்திற்கும், சபரபாடியத்திற்கும் விரிவுரை இயற்றினார். குமாரில பட்டர், சங்கரருக்கு (கி.பி.788-820)முற்பட்டவர் ஆவார்.

பிரபாகரர் :

குமாரிலபட்டர், சைமினிசூத்திர நூலுக்கும், சபரபாடியத்திற்கும் இடையே, சிறுபான்மை வேறுபாடு கொண்டு, சைமினி சூத்திர மதம் தழுவி, வழிநூல்செய்தார். அவரது மாணாக்கராகிய பிரபாகரர் என்பவர், சபர முனிவரின் பாடியத்தைப் பின்பற்றி வழிநூல் செய்தார். குமாரிலபட்டர் கன்மமே பயன் கொடுக்கும் என்றும், நையாயிகர்கள் கூறுவது போல முக்திநிலையில் ஆனந்தம் உண்டு என்றும் கூறுகின்றார். பிரபாகரர், ஒருவர் செய்த கன்மும் அழிந்துபடுதலால், கன்மமே பயன்தராது; அக்கன்மத்தின் அழிவில் அபூர்வம் என்ற ஒன்று தோன்றிநின்று பயன்கொடுக்கும் என்றும்; வைசேடிகர் கூறுவதுபோல ஆன்மாவானது பாடாணம் (கல்)போல அசைவற்றுக் கிடப்பதே முக்திநிலை என்றும் கூறுவர். பொருள்களின் தன்மை பற்றிய விளக்கங்களிலும், சிறுபான்மை குமாரிலபட்டர்க்கும், பிரபாகரர்க்கும் இடையே சிறுசிறு கருத்துவேறுபாடுகள் உண்டு. இவ்வாற்றால் மீமாம்சை மதமானது, குமாரிலபட்டாசாரியர் மதம் என்றும், பிரபாகரர் மதம் என்றும் இரு வகைப்படும்.

பயன்மிக்க பகுதிகள் :

நையாயிகநூலிற் கூறப்படும் தருக்கம் போல, மீமாம்சை நூலிற் கூறப் பெறும் செய்திகள் பல, பொதுவாக எல்லா நூல்களுக்குமே உரியனவாகவும், உறுதுணை புரிவனவாகவும் அமைந்துள்ளன. (1) ஒவ்வொரு நூலுக்கும் உரிய உட்பிரிவாகிய அதிகரணம் என்பது, தன்னால் கூறப்படும் பொருள் (விஷயம்), அதன் கண் ஐயப்பாடு (சம்சயம்), அதற்குப் பிறர் கூறும் பக்கம் (பூர்வபட்சம்), அதனை மறுத்துக் கூறும் கொள்கைமுடிவு (சித்தாந்தம்), ஒன்றற்கொன்றுக்குள்ள இயைபு (சங்கதி) என்னும் ஐந்து கூறுகளை உடையதாக இருத்தல் வேண்டும். இந்த ஐந்து கூறுகளின் நிலைக்களமே அதிகரணம் எனப்படும்.

(2) ஓர் அதிகரணத்திற்கும், மற்றோர் அதிகரணத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு ஆறுவகைப்படும். அவையாவன: ஆட்சேபம், திருட்டாந்தம், பிரதிதிருட்டாந்தம், பிரசங்க சங்கதி, உற்பத்திசங்கதி, அபவாதசங்கதி என்பனவாகும்.

(3) ஒரு நூலின்கண் விதிக்கப்படும் விதியானது, எய்தாதன எய்துவித்தல்(அபூர்வவிதி), எய்தியதனை இகந்துபடாமற் காத்தல் (நியம விதி), எய்தியதனை ஒருமருங்கு மறுத்தல் (பரிசங்கியா விதி) என்று மூன்று வகைப்படும். இங்ஙனம் மீமாம்சை நூல் கூறும் இலக்கணங்கள் பலவும், எல்லா நூல்களுக்கும் பொருந்துவனவாகும்.

நியாயங்கள் :

இவைகள் மட்டுமேயன்றி, மீமாம்சைத் தத்துவ நூல்களில் இடையிடையே எடுத்துக் காட்டப்பெறும் நியாயங்கள் என்பனவும், எல்லா நூல்களின் பொருள் விளக்கத்திற்கும், சுவைநுகர்ச்சிக்கும் பெரிதும் பயன்படுவனவாக உள்ளன. மீமாம்சை நூல்களில் வரும் அந்தகஜ நியாயம், பங்கஜநியாயம், பிரமரகீடநியாயம், தாலிபுலாக நியாயம், சாகபசுநியாயம், சாகா சந்திரநியாயம், சுந்தோபசுந்தநியாயம், சியால சாரமேயநியாயம், கூபமண்டூகநியாயம், கெதானுகெதிக நியாயம், கட்டகுடிப் பிரபாத நியாயம், மயூரநிருத்தனநியாயம், காகதாலிய நியாயம், தண்டாபூபிகாநியாயம், சூசிகடாக நியாயம், இராசபுரப்பிரவேச நியாயம், ஆலிக ஜம்புகநியாயம், மர்க்கட மார்ச்சால கிசோர நியாயம், நகிநிந்தா நியாயம், பகவிருத்திநியாயம், அர்த்தவைசச நியாயம், காகாட்சகோள நியாயம், துஷ்யது துர்ச்சன நியாயம், குணாட்சரநியாயம், ஊதாதந்துநியாயம், கபிஞ்சல நியாயம் என்பன போலவரும் நியாயங்கள், எல்லா நூல்களின் பொருள் விளக்கத்திற்கும்

பெரிதும் துணைபுரிவனவாக விளங்குவதுடன், தற்காலச் சட்டங்களின் விளக்க முறைகளிலும் இவற்றிற்கு இணையான விதிகள் உள்ளன.*

**மீமாம்சை நூல்கள்**

சைமினியின் மீமாம்ச சூத்திரம்; சபரரின் மீமாம்சைச்சூத்திரபாஷ்யம்; பிரபாகரரின் பிருகதி, சாலிகநாதரின் ருச்விமாலா, பிரகரணபஞ்சிகா, பரிசிஷ்டா; பாவநாதரின் நயவிவேகம்; குமாரிலபட்டரின் சைமினிசூத்திர பாஷ்ய வார்த்திகம்; சுசரிதமிசிரரின் காசிகா; சோமேசுவரபட்டரின் நியாயசுதா, தந்திரவார்த்திகம்; வேங்கடதீட்சிதரின் வார்த்திகாபரணம்; பார்த்தசாரதி மிசிரரின் நியாயரத்னாகரம்; மண்டனமிச்ரரின் விதிவேகம், மீமாம்சானுக்கிரமணி; வாசஸ்பதியின் நியாயகணிகம்; மாதவரின் சைமினிய நியாயமாலா விஸ்தாரம்; அப்பைய தீட்சிதரின் விதிரசாயனம்; ஆபதேவரின் மீமாம்ச நியாயப் பிரகாசம்; உலூகாட்சி பாஸ்கரரின் அர்த்தசங்கிரகம்; காண்டதேவரின் பட்டதீபிகை, மீமாம்ச கவுஸ்துகம்; இராகவானந்தரின் மீமாம்ச சூத்திராதிதிட்டி. இராமேசுவரசிவயோகியின் சுபோதினி, விசுவேசுவரபட்டரின் பட்டசிந்தாமணி, வேதாந்த தேசிகரின் சேஸ்வரமீமாம்சை முதலிய நூல்கள் மீமாம்சைத் தத்துவத்தை விளக்கும் அரிய பெரிய நூல்களாகும்.

—ஆசிரியர்

---

"These and a host of other principles of inter relation, formulated and indicated by Jaimini , are-absolutely necessary for an accurate understanding of Dharmasastras. These rules have parallels in the modern legal interpretation".

—Prof.G.V.Devasthali,
*Founders of Philosophy, p.66.*

---

**செய்திச் சுருக்கம்**

# நூல் அறிமுகம்

சென்னைத் தியாகராயநகர், 158 உசுமான்சாலையில் உள்ள, தருமை ஆதீன சமயப் பிரச்சார நிலையத்தில், 16-10-83 விஜயதசமியன்று, 'திருக்கோயில்' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள் அவர்களால் எழுதப்பெற்றுக், குன்றத்தூர்ச் (சென்னை-69) சேக்கிழார் பதிப்பகத்தினரால் அச்சிடப்பெற்ற ''சிவஞானபோதம் : மூலமும்-பதவுரையும்'' என்னும் நூல் வெளியீட்டுவிழா, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு தி. ந. சிங்காரவேலர் அவர்கள் தலைமையில், சிறப்புற நிகழ்ந்தது. தவத்திரு சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறி, தருமையாதீனம் திருவார்திரு குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியுரையைப் படித்து வழங்கினார்கள். சென்னைச் சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவர் பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை, M.A., L.T., முன்னாள் அறநிலைய ஆணையரும், இந்நாள் அண்ணா பல்கலைக் கழகத் தனியலுவலரும் ஆகிய திரு M.K. பாலசுப்பிரமணியம் I.A.S., திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, I.A.S. (ஓய்வு) ஆகியோர், சிறப்புரை நிகழ்த்தினர். இராவ்சாகிப் திரு நல். முருகேச முதலியார், 'சைவ தருமபூஷணம்' திரு எம்.ஆர். தாமோதர முதலியார் ஆகியோர் முதற் பிரதிகள் பெற்றனர். திரு. தி. மா. நாகலிங்க முதலியார் அவர்கள் நன்றியுரை நவில, தேவார இன்னிசையுடன் விழா, இனிது நிறைவுற்றது. நூலின் விலை ரூ. 15. ஷை தருமை யாதீன சமய பிரச்சார நிலையத்திலேயே, இந்நூல் கிடைக்கும்.

# சிவஞானபோதச் செழும்பொருள்

[ ந. ரா. முருகவேள், M.A., M.O.L. ]

(முற்றொடர்ச்சி)

## இரண்டாம் சூத்திரம்

### முன்னுரை

''அவையே தானே யாய், இரு வினையிற்
போக்கு வரவு புரிய, ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே''

சிவஞான போதத்தின் இவ்விரண்டாம் சூத்திரம், ''மேலைச்சூத்திரத்தின்கண் எடுத்துக் கொண்ட சங்கார காரணனாகிய முதல்வன், கலப்பினால் உடலின் உயிர்போல அவ்வான் மாக்களேயாய்ப், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல அவற்றின் வேறுமாய், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம்போல உடனுமாய் நின்று, 'ஆணை' என்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சித்தியான் வரும் இருவினைகளால், அவ்வான்மாக்கள் இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பான்'' என்னும் பொருளுடையது. ''அவையே தானேயாய்'' என்பதனை இரட்டுற மொழிதலால், ''அவையேயாய்-தானேயாய்-அவையே தானேயாய்'' எனக் கூறி, மூன்று வகையிற் பொருளுரைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இச்சூத்திரம் மிக விரித்து விளக்குவதற்குரிய பல பொருள்களை உள்ளடக்கிக் கொண்டு நிற்கின்றது. அதுபற்றியே சிவஞான முனிவரின் பேருரை, இப்பகுதிக்கு மிக மிக விரிந்து சென்றுள்ளது. இச்சூத்திரத்துள், உலகிற்குக் காரணமாகிய, சத்தியும், வினையும், மாயையும் பற்றி விளக்கப்படுகின்றது. சத்தி இறைவனது குணமும், மாயை அவனது உடைமைப் பொருளுமாம். இருவினையைக் கூறியவாற்றானே, அதன் பற்றுக்கோடாகிய மாயையும் கூறினாராயிற்று. உலகிற்கு மாயை முதற் காரணமும், (Material Cause); இறைவன் நிமித்த காரணமும் (Efficient Cause); சத்தி-வினை என்பன துணைக் காரணமும் (Instrumental Cause) ஆகும்.

### அத்துவிதம்

ஐந்தொழில் நடாத்தும் நிலையில், இறைவன் உலகுயிர்களோடு இரண்டறக் கலந்து நிற்கும் முறையினை உணர்த்தப் போந்த ஞானாசிரியராகிய மெய்கண்டார், வடமொழி மறைகளில் அதன் பொருட்டு ஆளப்பட்ட அத்துவிதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இதுவாம் என்பதனை, இங்கே நிலை நாட்டினார். இதுபற்றியே அவர் 'அத்துவித மெய்கண்டான்' எனப் புகழப்படுவாராயினர். இதனை,

''பொய்கண்டார் காணாப்
புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள்
மேவும்நாள் எந்நாளோ''?

என நம் தாயுமானவ அடிகள் எடுத்தோதி வழுத்தியருள்வர். இறைவன் ஐந்தொழில் புரிதல் உயிர்களின் பொருட்டே என்றும், உயிர்களோடு கலந்து நின்றே இறைவன் ஐந்தொழில் புரிகின்றான் என்றும், ஆசிரியர் ஈண்டு விளக்குகின்றார். இறைவன் உயிர்களோடு கலந்து நிற்கும் நிலையே 'அத்துவிதம்' என்ற சொல்லாற் குறிக்கப் பெற்றது.

உயிரானது உடம்போடு கலந்து நின்று எங்ஙனம் அதனை இயக்குகின்றதோ, அங்ஙனமே இறைவன் உயிர்களோடு கலந்து நின்று ஐந்தொழில் நிகழ்த்துகின்றான். கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர்களேயாகவும், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல வேறாகவும், உயிர்க்குயிராதற்றன்மையாற் கண்ணொளியின் ஆன்ம போதம் போல உடனாகவும் நிற்கும் இறைவனின் மூவகை நிலைகளும்; ஆசிரியர் மெய்கண்ட தேவரால் தக்க எடுத்துக் காட்டுகளுடன் ஈண்டுத் திறம் பட விளக்கப்பட்டுள்ளன.

## 1) அவையே யாதல்

'முருகா! குமரா!' என உடம்பிற்கிட்ட பெயரால் ஒருவனைப் பிறர் அழைத்தவழி, அவன் 'என்னை?' என வினவி வந்து நிற்றற்குக் காரணம், அவனது உயிரேயாகும். இங்ஙனம், உடம்பின் பெயரால் அழைத்தவழி உயிர் என்னென்றற்குக் காரணம், உயிரும் உடலும் தம்முள் வேற்றுமை யின்றி அபேதமாய்க் கலந்து நிற்பதேயாம். இவ்வாறே இறைவனும் உயிர்களோடு வேற்றுமையின்றி, உயிர்கள் ஆகிய நமக்குள்ளே அபேதமாய்க் கலந்து நிற்கின்றான். உயிரும் உடம்பும் தம்முள் வேற்றுமையின்றி அபேதமாய்க் கலந்து நிற்பினும், உயிர் உயிரே; உடம்பு உடம்பே; உயிர் உடம்பாகவும், உடம்பு உயிராகவும் திரிபெய்தமாட்டா; ஆயினும், உயிர் உடம்பாகவும் அதனின் வேறாகவும் நிற்கும்; உடம்பு அங்ஙனம் நிற்றல் இயலாது. அதுபோல் இறைவன் உயிர்களோடு ஒன்றிக் கலந்து நிற்பினும், இறைவனும் உயிரும் ஒன்றாகி விடுவதில்லை. இறைவன் இறைவனே; உயிர் உயிரே; இறைவன் உயிராக மாட்டான்; உயிர் இறைவனாதல் இயலாது. ஆயினும் இறைவன் உயிராயும், அதனின் வேறாயும் நிற்பன். உயிர் அங்ஙனம் நிற்றல் ஒல்லாது. இறைவன் உயிர்களோடு கலந்து 'அவையேயாய்' நிற்கும் இவ் வியல்பே,

''கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டு, உள்ளம்
இட்டதொரு பேர்அழைக்க, 'என்? என்றாங்கு,—ஒட்டி
அவன்உளம் ஆகில்லான்; உளம்அவனா மாட்டாது;
அவன் உளமாய், அல்லனுமாம் அங்கு!''

என ஆசிரியர் மெய்கண்ட தேவரால் திறம்பட அழகுற விளக்கப்பெற்றுள்ளது.

## 2) தானேயாதல்

இனி வடமொழி வேதத்துள் 'அத்துவிதம்' என்றதுவுமன்றி 'ஏகம்' எனவும் ஓதுதலின், அதற்கு மறுதலையாய் இறைவன் உயிர்களோடு கலந்து நிற்பன் எனப் பேதப்படக் கூறுவது என்னை? என்று சிலர் வினவுவர். அவர்க்கு விடைகூறும் முகத்தான் இறைவன் 'தானேயாய்' நிற்கும் நிலையினை,

''ஒன்றென்ற தொன்றேகாண்! ஒன்றேபதி! பசுவாம்
ஒன்றென்ற நீ, பாசத் தோடுளைகாண்!—ஒன்றின்றால்;
அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்,
இக்கிரமத் தென்னும் இருக்கு!''

என்று, தொல்காப்பியர் முதலிய பண்டைச் சான்றோர் நெறிமுறைக்கியையத் தக்கதோர் எடுத்துக்காட்டால், மிக்க பொருத்தமுற மெய்கண்டதேவர் விளக்கியருள்கின்றார்.

வேதம் 'ஏகம்' என்றதற்குப் பொருள், ஒன்று என்பதேயாம்; வேறு பொருள்படாது. அதற்குக் கருத்து பதிப்பொருள் ஒன்றே; இரண்டில்லை என்பது. இதனை யறியாது 'ஒன்று' என்று சொல்லுகின்ற நீ, அப்பதிப் பொருளின் வேறாகிய பசு என்று அறிவாயாக. பதியும் அறிவுப் பொருளாக, யானும் அறிவுப் பொருளாக, என்னை மட்டும் 'பசு' என்று கூறுவதெற்றுக்கு? என்று வினவின், நீ மலத் தாற் கட்டுற்று நிற்கின்றாயாகலின், பசு எனப் பட்டனை. அங்ஙனமாயின் 'பிரமம் இல்லையாயின் ஒரு பொருளும் இல்லை' என்று வரும் வேதமொழியின் கருத்து என்னையெனின், அகரமாகிய உயிர் எழுத்து இல்லையாயின் ஏனைய பிறஎழுத்துக்கள் இல்லை என்பது போலப், பிரமப் பொருள் இல்லையாயின் பிறிதொரு பொருளும் இல்லை என்பதேயாம். இங்ஙனமன்றிப் 'பிரமத்தின் வேறாக இரண்டாவது பொருள் இல்லை' எனக் கொள்ளுதல் பொருந்தாது.

### அகரவுயிர் இன்றேல், அக்கரங்கள் இல்லை

பிற எல்லாப் பொருள்களின் இயக்கத்திற்கும் பிரமப் பொருள் இன்றியமையாததாகும் என்பதே, அம்மறைமொழியின் தெளிபொருள். இதனை விளக்குதற் பொருட்டு ஆசிரியர் மெய்கண்டார் ''அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்'' என எடுத்துக் காட்டிய உவமை சாலவும் சிறந்ததொன்றாம். தண்டமிழ் மொழியின் பண்டைப் பெரும் பேராசிரியராகிய தொல்காப்பியனார் ''மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'' எனக் கூறுதலின், அகரத்தொடு சிவணியன்றி மெய்யெழுத்துக்கள் இயங்காமை பெற்றாம். அங்ஙனமே உயிரெழுத்துக்களின் இயக்கத்திற்குங்கூட, அகரம் இன்றியமையாததாகும். இகர ஈகார உகர ஊகாரங்கள் அகரத்திற்குரிய அங்காப்பு முயற்சியோடு சிவணியன்றிப் பிறவாமையாலும், ஏகார ஓகாரம் முதலாயின முன் அகரக்கூறும் பின் இகர உகரக் கூறுகளுமாய் இயைந்தன்றிப் பிறவாமையாலும், அவையனைத்தும் அகரமாகிய உயிரை இன்றியமையாமை தெளிவு. எனவே, அகரம் பிற உயிர் எழுத்துக்களிலும் கலந்து அவற்றின் தன்மையாகவே நின்று, அவற்றையெல்லாம் இயக்கி வருதல் பெறப்படும். இவ்வாறே இறைவனும் இயங்குதிணைக் கண்ணும், நிலைத்திணைக்கண்ணும், ஏனையவற்றின்கண்ணும் கலந்து, அவற்றின் தன்மையாகவே நின்று இயக்கி வருவான் என்பது, தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற தொல்லாசிரியர்களுக் கெல்லாம் கருத்து. 'அகரம் முதல எழுத்தெல்லாம்' என்பது திருவள்ளுவர் கூற்றாதல் காண்க.

ஏனைய எல்லா எழுத்துக்களின் இயக்கத்திற்கும் இன்றியமையாததொன்றாய் அவற்றோடு கலந்து நிற்பினும், அகரம் அவற்றின் வேறாகப் பிரிந்து, தானேயாகத் தனித்தும் நிற்கும் இயல்பும் உடையது; அதுபோல ஏனைய எல்லாப் பொருள்களின் இயக்கத்திற்கும் இன்றி

யமையாத காரணமாய், அவையிற்றோடெல்லாம் கலந்து நிற்பினும், பதிப்பொருளாகிய இறைவன், அவற்றின் வேறாகப் பிரிந்து தானேயாகத் தனித்து நிற்கும் இயல்பும் உடையவன். 'அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்' என்னும் இவ்வுவமையால், ஆசிரியர் மெய்கண்டார் இறைவன் 'தானேயாய்' நிற்கும் நிலையினை விளக்கி வலியுறுத்துகின்றார்.

## 3) அவையே தானேயாதல்

இனி ''அவையே தானேயாதல்'' என்னும் உடனாதலை ஆசிரியர் விளக்கப் புகுகின்றார். வேதம் ஏகமாய பிரமத்தைப் 'பிரமம் ஏகம்' என்று மட்டும் கூறாமல், 'பிரமம் அத்துவிதம்' எனவும் ஒரோரிடங்களிற் கூறும். அத்துவிதம் இரு பொருட் கண்ணது என்பார்க்கு, ஏகமாய பிரமத்தை அத்துவிதம் என்றல் பொருந்தாதாய் முடியும் என்பர் சிலர். பண்ணும் அதனின் வேறன்றாய்ப் பிரிப்பின்றி எண்ணப்படும் ஓசையும் போலவும், பழமும் அதனின் வேறன்றாய்ப் பிரிப்பின்றிக் கருதப்படும் சுவையும் போலவும், எங்கும் பரவியுள்ள இறைவனின் திருவருள் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்கும்! பிரமம் அத்துவிதம் என்றது, பிரமம் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்கும் என்னும் பொருட்டாகலின், அஃது ஏகம் என்பதனோடு முரணுமாறில்லை. பண்ணும் ஓசையும் - பழமும் சுவையும்-தம்முள் வேறு வேறேயாயினும், பிரிப்பின்றிக் கலந்து உடனாய் நிற்றல்போல், இறைவனும் உயிரும் தம்முள் வேறு வேறாயினும், இறைவன் உயிர்களின்பாற் கலந்து பிரிப்பின்றி உடனாய் நிற்பன் என்பது ஆசிரியரின் கருத்து.

## மூவகை நிலைகள்

இறைவன் இங்ஙனம் 'ஒன்றாய் வேறாய் உடனாய்' நிற்கும் மூவகை நிலைகளையும் மூவகை உவமைகளால் விளக்கிய ஆசிரியர், அநேகாந்தவாதம் என்னும் குற்றம் நிகழாமைப் பொருட்டு, இறைவன் ''அரக்கொடு சேர்த்தி அணைத்த அக்கற் போல, உருக்கி உடங்கியைந்து நின்று பிரிப்பின்றி'' உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி யுடனாதலால், தானேயாய், உலகேயாய், தானே உலகேயாய் விளங்குவன் என ஒருமை முடிபுபட ஒருங்கேயும் உணர்த்தினார்.

## சிவப்பிரகாசம்

இவ்வாற்றால், இறைவனுக்கும் உயிர்கட்குமுள்ள இயைபைப் பேதம் என்றும், அபேதம் என்றும், பேதாபேதம் என்றும் பிணங்கும் சமயங்களையெல்லாம் மறுத்து, இறைவன் உயிர்களின்பால் அம்மூவகை இயைபும் ஒருங்கேயுடையன் என்பதனைச் சிவஞானபோதம் தெளிவுபடுத்தி நிறுவியது காணலாம். இதனையே,

''புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத்
தொளியாய்ப்,
புகல்அளவைக்கு அளவாகிப், பொற்பணிபோல்
அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும்,
சொற்பொருள்போற்
பேதாபே தமும்இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய், உடலுயிர்கண்
அருக்கன்
அறிவொளிபோற் பிறிவருமத் துவிதம்ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்க லுற்றாம்''

எனச் சிவஞானபோதத்தின் புடைநூலாகிய சிவப்பிரகாசம் என்னும் நூல் பிறிதோராற்றால் அழகுற விளக்குகின்றது. 'ஒன்றாய் வேறாய் உடனாய்' நிற்கும் இறைவனின் நிலைகளை முறையே உடலும் உயிரும், அகரமும் பிற எழுத்துக்களும், பண்ணும் ஓசையும் - பழமும் சுவையும் என்னும் உவமைகளைக் கொண்டு சிவஞானபோதம் விளக்கிற்று; உடலும் உயிரும் போல், கண்ணும் அருக்கனும்போல், கண்ணொளியும் உயிரறிவும் போல் என்னும் உவமைகளைக் கொண்டு, சிவப்பிரகாசம் தெளிவுபடுத்துகின்றது.

## திருமுறைகள்

இங்ஙனம் இறைவன் உயிர்களோடு 'ஒன்றாதல்-வேறாதல்-உடனாதல்' என்னும் மூவகையிற் கலந்து நிற்கின்றான் என்பதே உண்மை முடிபாம் என்பது,

''ஈறாய், முதல் ஒன்றாய், இரு பெண்ஆண் குணம்
மூன்றாய்;
மாறாமறை நான்காய், வரு பூதம்அவை ஐந்தாய்,
ஆறார்சுவை, ஏழோசையோடு, எட்டுத்திசை
தானாய்,
வேறாய், உடன் ஆனான்இடம், வீழிம்மிழ
லையே''

என்னும் திருஞானசம்பந்தர் திருநெறித் தமிழ் மறைப் பாடல், இனிது விளக்கி வலியுறுத்துகின்றது. இவ்வாறே இறைவன் உயிர்களோடு கலந்துநிற்கும் அத்துவித நிலையை உணர்த்துமாறு எழுந்த,

''பண்ணையும் ஓசையும் போலப், பழமதுவும்
எண்ணும் சுவையும்போல், எங்குமாம்-அண்ணல்
தாள்
அத்துவிதம் ஆதல், அருமறைகள்ஒன் றென்னாது
அத்துவிதம் என்றறையும் ஆங்கு''

என்னும் மெய்கண்ட சிவத்தின் திருமொழியுண்மையானது, ''குருகாம் வயிரமாம் கூறும் நாளாம், கொள்ளும் கிழமையாம் கோளே தானாம், பருகா அமுதமாம் பாலின் நெய்யாம் பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணாம்'' என்னும் திருநாவுக்கரசர் திருப்பாடலினையும்-''பண்ணிடைத் தமிழொப்பாய் பழத்தினிற் சுவையொப்பாய், கண்ணிடை மணியொப்பாய்'' என்னும் சுந்தரர் திருப்பாடலினையும்

எத்துணையளவிற் கலந்து ஈடுபட்டு நுகர்ந்தத தன் பயனாக எழுந்ததாகும் என்பது, இனிது உய்த்துணரற்பாலது.

இங்ஙனம், இறைவன் ஒன்றாதல், வேறாதல், உடனாதல் என்னும் மூன்று வகையுமாய் உயிர்களோடு கலந்து நிற்கின்றான் என்னும் உண்மையை நிறுவுதற்கு, உரையளவைச் சான்றாக விளங்குவது வேதத்துட் போதரும் ''அத்துவிதம்'' என்னும் சொல்லாகும். இச்சொல்லானது, கேவலாத்துவிதம் — விசிட்டாத்துவிதம் — சுத்தாத்துவிதம் என்னும் சொற்றொடர்களில் சேர்க்கப்பெற்று, செய்யுள் வழக்கினும், உலக வழக்கினும் பெருக எடுத்தாளப்பட்டு வழங்கிவருகின்றது. ஆதலின் தத்துவ நூல் ஆராய்ச்சிகளில் பெரிதும் தலைப்படுவார்க்கு 'அத்துவிதம்' என்னும் சொற்பொருள் பற்றிய ஆராய்ச்சி இன்றியமையாத தொன்றாய்த் திகழ்கின்றது. சொல்லாராயும் நெறியாற் கருதிய வழியும், 'அத்துவிதம்' என்னும் சொல், ஒன்றும் இரண்டும் அற்ற கலப்புத் தன்மையை விளக்கவந்ததே யாதல் காணலாம்.

## அத்துவிதம்: சொற்பொருள்

''நத்விதீயம்'' என்னும் வடமொழிச் சொல்லின் முன்னின்ற ''ந'' என்னும் உபசர்க்கத்தில் ''ந்'' என்னும் மெய்யெழுத்துப்போக, அம்மெய்யின்மேல் ஏறிநின்ற 'அ' என்னும் உயிரெழுத்து மாத்திரம் நின்று 'அத்விதீயம்' என்றாகிச் செந்தமிழ் வழக்கில் 'அத்துவிதம்' என்று திரிபெய்திவரும். இவ்வத்துவிதம் என்னும் சொல்லின் முன்னின்ற அகரமானது, அன்மை இன்மை மறுதலை என்னும் மூவகைப் பொருள்களை யுணர்த்தும். **அப்பிராமணன்** என்றபோது பிராமணன் அல்லாதவன் என்றே பொருள்படும்; ஏனைக் குலத்தாரைக் குறியாது. பிராமணனாக இருந்தும் பிராமணத் தன்மை இல்லாமையைக் குறித்தலால், இந்த அகரம் அன்மைப் பொருளில் வந்தது. **அமலம்** என்றபோது மலம் இல்லை எனக் குறித்தலால், அங்கே அகரம் இன்மைப் பொருள் குறித்தது. **அநீதி** என்னும் சொல்லில் நீதியின் மறுதலையைக் குறித்தலால், அகரம் அங்கு மறுதலைப் பொருளை யுணர்த்தியது. இங்ஙனம் இவ்வகரம் அன்மை-இன்மை-மறுதலை என்னும் மூவகைப் பொருள்களையும் உணர்த்துதல், எண்ணுப் பெயர் ஒழிந்த ஏனைய இடங்களிலேயே யன்றி எண்ணுப் பெயர்மேல் வருமிடத்தன்றாகும்.

எண்ணுப் பெயர்மேல் வருங்கால், இவ்வகரம் அன்மைப் பொருள் ஒன்றையன்றி வேறு பிறிது பொருள் எதுவும் பயவாது. எண்ணுப் பெயர்மேல் வர நேர்வுழியும், ஏகம் துவிதம் என்னும் இரண்டு எண்ணுப் பெயர்களின் மேல் மட்டும் வருவதின்றி, ஏனைய எண்ணுப் பெயர்களின் மேல் இவ்வகரம் வருதல் இல்லை. ஏகம் என்னும் சொல்லோடு சேர்ந்து **அநேகம்** என வருகின்றபொழுது, இஃது 'ஒன்றல்லாதது' என்னும் அன்மைப் பொருளே உடையதாதலை யாவரும் இனிதுணர்வர். இங்ஙனம் துவிதம் என்னும் சொல்லோடு சேர்ந்து ந-துவிதம் (அத்துவிதம்) என வருகின்றபொழுதும், இஃது 'இரண்டுஅல்லாதது' என்னும் அன்மைப்பொருளையே உணர்த்தி நிற்கும் என்பது தெளியப்படும். ''எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப் பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையின் நிற்பதன்றி, ஏனைய சொற்களின் மேல் வந்த நகரம் போல், இன்மை - மறுதலைப் பொருள்களை உணர்த்துதல் வழக்கின்கண் இல்லை'' எனவரும் ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவர் கூற்று, இவ்வுண்மைகளையே செவ்விதின் அறிவுறுத்தும்.

## அந்நியம் அன்மை:

''அத்விதீயம் பிரமம்'' என்றவிடத்துக் கடவுள் ஒன்றே எனப் பொருள் கொள்வார்க்கு ''ஏகமேவாத்விதீயம் பிரமம்'' என்றவிடத்து, எவ்வாறு அப்பொருள் கொள்ளல் இயலும்? அவ்வாறு கூறியது, அப்பொருளை மேலும் மேலும் வற்புறுத்தக்கூறிய அடுக்கேயாம் எனின், அஃது ஏகம் ஏகம் என்றாதல், அத்விதீயம் அத்விதீயம் என்றாதல் இருத்தல் வேண்டுமே யல்லாது, இருவேறு சொற்களாக இருத்தல் பொருந்தாது. இதனால் ''கடவுட் பொருள் ஒன்றே; அஃது எல்லா உயிர்களோடும் கலந்து நிற்கும்'' என்பதே, ''அத்விதீயம் பிரமம்'' என்பதன் உண்மைப் பொருளாதல் விளங்கும். இதனையே ''அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்'னின், ஏகம் என்று சுட்டுவது உண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நியநாத்தியை உணர்த்துமாயிட்டு'', எனவரும் ஆசிரியர் மெய்கண்டாரின் திருமொழி தெளிவித்துணர்த்துகின்றது.

> ''ஆணவத்தோ டத்துவிதம்
> ஆனபடி மெய்ஞ்ஞானத்
> தாணுவினோடு அத்துவிதம்
> சாரும்நாள் எந்நாளோ?''

என்னும் நம் தாயுமானவ அடிகள் திருவாக்கும், நாம் பாசத்துடன் கலந்து அதன் வயமாய் நிற்றல்போல், இறைமுதற் பொருளோடு கலந்து அதன் வயமாய் நிற்கும் நாள் எந்நாளோ? எனப் பொருள் பயந்து, அத்துவிதம் என்னும் சொற்குப் பொருள், இரண்டல்லாத கலப்புத் தன்மையே என்பதனை, வலியுறுத்தப் போதிய சான்றாகும்.

இவ்வாறு ஆசிரியர் மெய்கண்டார் விளக்கும் அத்துவிதமானது, ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவலம் என்றாதல், விசிட்டம் என்றாதல், மறுதலை என்றாதல், யாதானும் ஒன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாமல், அடைமொழி எதுவும் இன்றிச் சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலால், சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். இம்முறைமையினை ''விசிட்டசத்தை'' ''சுத்தசத்தை'' எனத் தருக்கநூலார் கூறும் வாய்பாடுகள் பற்றியும் உணரலாம். ஏனையோர்கள் கூறும் அத்துவிதமானது, கேவலம் விசிட்டம் என்னும் சொற்களால் விசேடிக்கப்படாதவழி, அவர்கள் கூறும் பொருள் தருவதற்கு ஏலாமையின், அவையெல்லாம் சுத்தாத்துவிதம் ஆகாமையும் காண்க!

## இறைவன் ஐந்தொழில் புரிதல்

இதுகாறும் கூறிவந்தவாற்றால், இறைவன் உயிர்களின் வேற்றுமையின்றி நிற்றலால், உயிர்களின் பொருட்டே ஐந்தொழில் செய்வன் என்பது வலியுறுத்தப்பட்டது. உயிர்களின் பொருட்டே இறைவன் ஐந்தொழில் செய்வன் எனில், சிலரை வாழ்வித்தும் சிலரைத் தாழ்வித்தும் இறைவன் ஐந்தொழில் செய்தல் எற்றுக்கு? என ஐயம் நிகழும். உயிர்களின் முற்பிறவிகளில்ஈட்டப்பட்டுக்கிடந்த இருவினைகளுக்கு ஏற்பவே, இறைவன் உயிர்களைப் படைத்தலின், இறைவனை எல்லா உயிர்களையும் ஒப்ப நோக்காமையும் அருளின்மையும் உடையன் என்றல் பொருந்தாது. இக்கருத்தினையே ''இருவினையிற் போக்குவரவு புரிய'' என்னும் சூத்திரத்தொடர் விளக்குகின்றது.

## இறைவனும் இருவினைகளும்

இருவினைகளுக்கு ஏற்பவே உயிர்களை இறைவன் படைப்பன் எனின், இருவினைக்கு முதன்மையன்றி அவற்றின் வழிநின்று உயிர்களைப் படைத்து ஐந்தொழில் செய்யும் இறைவனுக்கு முதன்மையில்லை போலும் என ஐயம் நிகழும். அதனை நீக்குதற்கே ''ஆணையின்'' என்பதனை ஆசிரியர் சிங்கநோக்காய் அருளிச் செய்தார். இருவினைகள் முதல்வன் ஆணையான் வருவனவன்றித் தாமே வரும் சுதந்திரம் உடையன அன்மையின், இருவினைகளுக்கு ஏற்ப உயிர்களைப் படைத்தலால், இறைவனுக்கு நேரும் இழுக்கு ஏதும் இல்லை என்பது.

அற்றேல், வினையுண்டு எனக் கொள்ளின் அதுவே யமையும், இறைவன் வேண்டா; இறைவனுண்டு எனக் கொள்ளின் அவனே அமையும், வினை வேண்டா; இறைவனும் வினையுமாகிய இருபொருளும் கோடல் மிகையாகும் எனச் சிலர் கருதுவர். அது பொருந்தாது. உலகத்து வேந்தரெல்லாம் தம் நாட்டின்கண் அறநெறியின் வழுவினரை வழக்கு வினவி ஒப்பநாடி, அத்தக ஒறுத்தற்குப் பாடிகாவலன் மாட்டுத் தம் ஆணையை வைத்து, அவனைக் கொண்டு அத்தொழில் செய்வித்தலே யன்றித் தாமே முன்னின்று அத்தொழில் செய்யார்; அதுபோல இறைவனும் தன் ஆணையை இருவினையின் மாட்டுவைத்து, அவற்றைக் கொண்டு உயிர்களுக்குப் பயன் நுகர்விப்பன். எனவே இறைவனும் வினையும் ஆகிய இருபொருள் கோடல் மிகையன்று.

இதனை விளக்குதற்கே " ஒரு நகரியைக் காப்பான் பாடி காவலிட்டாங்கு அவை அவனது ஆக்கினை யாகலான்'' என ஆசிரியர் அருளிச் செய்தார். 'வினைதானே உயிர்களுக் களுக்குப்பயனாகவர அமையும், ஆணைவேண்டுவதில்லை' எனச்சிலர் கூறுவர். உழவர் செய்யும் உழவு தொழிலுக்குத் தக்க பயனை விளைநிலம் விளைவிப்பதன்றி, அத்தொழில் தானே விளைவிக்கமாட்டாது; அதுபோல வினைக்குத் தக்க பயனை இறைவனின் ஆணையே உயிர்கட்கு நுகர்விப்பதன்றி, வினைதானே நுகர்வித்தல் இயலாது. இதனையே ''செய்பவர் செய்திப் பயன் விளைக்கும் செய்யேபோல், வள்ளல் அவன் செய்வன்; செயல் அணையா சென்று!'' என்று ஆசிரியர் விளக்கியருளினார்.

''செய்வினையும் செய்வானும்,
அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே,
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லைஎன,
உய்வகையாற் பொருள்சிவன்என்று
அருளாலே உணர்ந்தறிந்தார்!''

எனவரும் சேக்கிழார் அடிகளின் பெரியபுராணத்திருப்பாட்டும், ஈண்டுப் பெரிதும் கருதியுணர்தற்குரியது.

## ஆணையும் இறைவனும்

அற்றேல், ''வினை சடமாகலின், உயிர்களைச் சென்றணைந்து பயன்தர மாட்டாதாயினும், உயிர்கள் அறிவுடையசேதனப்பொருளாகலின், அவைகள் தாமே வினைப்பயனை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரவல்லனவாம். ஆணை எற்றுக்கு?'' என்று சிலர் வினா நிகழ்த்துவர். காந்தமானது இரும்பினை வலித்துக்கொள்ளும் ஆற்றலுடையதேயாயினும், அதனை ஒருவன் எடுத்துத் தனக்கு நேராகப் பிடித்த வழியன்றி, அதனைத் தானே வலித்துக் கொள்ளமாட்டாது; அதுபோலத் தமக்கென அறிவில்லாத உயிர்களும், இறைவன் நுகர்வித்தவழியன்றித் தாமே தம்வினைப் பயன்களை அறிந்து எடுத்துக்கொண்டு நுகரவல்லன வல்ல. இக்கருத்தே ''காந்தபசாசம்போல் அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் நுகராரேல், ஆர்தாம் அறிந்தணைப்பார் அங்கு'' என ஆசிரியரால் விளக்கப்பட்டது. எனவே இறைவனே ஆணையின் நீக்கமின்றி நின்று, உயிர்களுக்கு வினைப்பயனை நுகர்விப்பான் என்பது துணியப்படும்.

## இருவினையுண்மை:

அங்ஙனமாயின், இருவினையுண்மைதான் எதனாற் பெறுதும்? எனின், உயிர்களுக்கு இன்பதுன்ப நுகர்ச்சியுண்மையின், அதற்குக் காரணமாகிய இருவினையுண்மை பெறுதும் என்பது. மேலும், காரியங்களெல்லாம் ஒருங்கே தோன்றாது அடைவே தோன்றுவதற்குக் காரணம் வினையேயன்றிப் பிறிதொன்றின்மையாலும், வினையுண்மை துணியப்படும். அன்றியும், வினையில்லையாயின் விதித்தன செய்து விலக்கியன ஒழிதலாற் பயனின்றாய் முடியுமாகலானும், வினையுண்மை பெறப்படும். இன்னும் இதன்கட் படும் வினாவிடைகளெல்லாம் சிவஞான சித்தியாரின்கண் "இருவினை இன்பத் துன்பத்து'' என்னும் திருவிருத்தம் முதலாக விரித்தோதப் படுதலின், ஆண்டுக் கண்டு கொள்க.

## மலங்கள் பண்டேயுண்டு

அற்றேல், வினையுண்மை துணியப்படுமாயினும், அவ்வினையை ஆதி என்பதோ? அனாதி என்பதோ? ஆதியெனின், முன்பில்லாதது இடையே தோன்றும் என்றல், சற்காரிய வாதத்துக்கு ஏலாது; அனாதியெனின், ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை எனச்சிலர் தடைகிளத்துவர். நெல்லும் செம்பும் உண்டாயின அன்றே அவற்றில் உமியும் களிம்பும் உடன்தோன்றி உளவாயினவன்றி, இடையே வந்தன வல்ல; அதுபோல உயிர்கள் உளவாயின அன்றே, மலமாயை கன்மங்களும் அவற்றோடு உடன்தோன்றி உளவாயின, இடையே வந்தனவல்ல. முன்னரே உள்ளதாய தாமரைப் பூக்களில் ஒன்று அரும்பாக நிற்கவும், பிறிதொன்று மலரவும், வேறொன்று வதங்கி ஒழியவும், அவ்வவற்றின் நிலைக்கேற்ப ஞாயிற்றினாற் செய்யப்படுமாறுபோல, உயிர்களின்பால் முன்னரே யுள்ள மலமாயை கன்மங்களுக்கு ஏற்ப, இறைவன் உயிர்களைப் படைத்துச் செயற்படுத்தி நிற்பான். எனவே, வினை அனாதியாயின் ஒருவர் கூட்ட வேண்டுவதில்லை என்றல் பொருந்தாது.

*''நெல்லிற் குமியும், நிகழ்செம் பினிற்களிம்பும்,*
*சொல்லிற் புதிதன்று தொன்மையே!-வல்லி,*
*மல, கன்மம் அன்றுளவாம்! வள்ளலாற், பொன்வாள்*
*அலர்சோகம் செய்கமலத் தாம்!''*

என்னும் வெண்பாவினால், இக்கருத்தினையே ஆசிரியர் நன்கினிது விளக்கியருளினார். 'வல்லி' என்றது, ஈண்டு மாயையைக் குறித்தது.

## இறந்த உயிர்கள் மீளப் பிறக்கும்

எனவே உயிர்கள் முற்பிறவிகளிற் செய்த வினையே இறைவனாணையினால் இப்பிறவியின்கண் உயிர்களுக்குப் பயனாக வரும் என்பது தெளிவாம். முற்செய்வினையே இப்பிறவியில் பயனாக வரும் என்றல் அமையும் எனினும், ''குடம் உடைந்தவழிக் குடாகாயம் ஆகாயத்தோடு கூடுமாறு போல, உடம்பு நீங்கியவழி உயிர் பிரமத்தோடும் கூடும்; இறந்த உயிர் மீளப் பிறப்பதில்லை' எனச் சிலர் கூறுவரே எனின்—, தோற்றமும் கேடும், தொடர்ச்சியாய் உள்ள பொருள்களுக்கேயன்றித், தோற்றமும் கேடும் எய்துதற்குரிய உரிமையில்லாத ஏனைய பொருள்களுக்குத் தோற்றம் நிகழ்தல் கூடாமையின், இறந்த உயிர்கள் மீளப் பிறக்கும் என்று துணியலாம்.

இறந்த உயிரே மீளப் பிறக்குமாயின், முற்பிறவியின்கண் நிகழ்ந்தன வெல்லாம் இப்பிறவியின்கண் அறிதல் வேண்டுமே எனின்—, நனவிற் கண்டதனைக் கனவினும், கனவிற் கண்டதனை நனவிலும், இவ்வொரு பிறவியின் கண்ணேயே நாம் மறந்தொழிந்து மயங்கி வருதலை அனுபவத்திற் கண்டு வருகின்றோமாக லின், முற்பிறவியின் நிகழ்ச்சிகளை இப்பிறவியின்கண் அறியாமைபற்றி, இறந்த உயிர்மீளப் பிறவாது என்றல் அமையாது. குடாகாய உவமை மட்டுமேயன்றி, அரவுதன் தோலுரிவு முதலிய உவமைகளும் நூல்களிற் கூறப்பட்டுள்ளன. இவ்விரு வேறு உவமைகளும் ஒன்றற்கேயுவமையாதல் கூடாமையின், அரவின் தோலுரிவு உயிர் தூலவுடம்பை விட்டுப் போமாற்றிற்கும்; குடகாய உவமை உயிர் சூக்குமவுடம்பை விட்டுப் போமாற்றிற்கும் கூறப்படலின், இறந்த உயிர் மீளப் பிறக்கும் என்பது தெளியப்படும்.

## சிவமும் சக்தியும்

அங்ஙனமாயின், சடப் பிரபஞ்சம் போலச் சேதனப் பிரபஞ்சமாகிய உயிர்களும் மீளப் பிறத்தற்கு ஏதுவாய், இருவினைகளைச் செலுத்தி நிற்கும் ஆணை எனப்படும் சத்தியானது, சிவமாகிய இறைவனின் வேறோ? ஒன்றோ? என ஐயம் நிகழ்தல் இயல்பு. அதனைக் களைதற்கே,

*எங்குமுளன் என்றளவை ஒன்றன் றிரண்டென்னில்,*
*எங்குமுளன் அன்று ; எவற்றெவனும்—அங்கண்*
*அவையவன் அன்றில்லை; பொன்னொளிபோல் ஈசன்*
*அவையுடைமை; ஆளாம் நாம் அங்கு.*

என்னும் இனிய வெண்பா எழுந்தது! இறைவன் எங்குமுளன் என்பதனால், அவன் ஒரு பொருளாதல் கூடாது; ஏனெனில், கங்கைக் கரையில் நின்ற ஒரு மனிதனே காவிரிக் கரையினும் ஒருங்கு நிற்க மாட்டான். அதுபோல இறைவன் ஒரு பொருளேயாயின் ஒருகாலத்து ஓரிடத்து உளனாதலன்றி யாங்கணும் விரவி நிற்கமாட்டான்! இறைவன் இரு பொருளாய் நிற்பான் எனின், அவன் யாங்கணும் விரவி நிற்றல் இயலாது; ஏனெனில், தன்மாட்டே வேற்றுமையுடையானுக்குப் பிறபொருள்களின்பால் வேற்றுமையின்றி விரவி நிற்றல் கூடாது! இவ்விரு திறத்தாலும் முரணுதலின், இறைவன் எங்கும் உளனல்லன் எனத் துணியலாம் எனின், ''அகர வுயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லை'' யாமாறு போல, எவ்விடத்துள்ள எவ்வகைத்திறப் பொருள்களும் இறைவனை இன்றி அமைய மாட்டா.

## இறைவனின் பண்பே சிற்சத்தி

எனவே, எங்கும் உளனாய இறைவன், ஞாயிறும் ஒளியும்போல ஒன்றாதற்கும் இரண்டாதற்கும் பொதுவாய்த் தாதான்மியத்தாற் சிவமும் சத்தியும் என்று இயைந்து நிற்பான் என்பதே துணிபொருள். அங்ஙனமாயின், பசு பாசங்களும் வியாபகத்தன்மையுடையனவாத

லின், அவைகளும் இம்முறைமை பற்றி இறைவனைப் போலத் தத்தம் சத்திகளோடு தாதான்மியமாய் நிற்கப்பெறுமோ? எனின், இறைவனது வியாபகத்தை நோக்கப் பசுபாசங்கள் வியாப்பியமாய் உள்ளடங்கி நிற்பனவாகலின், இறைவனுக்குப் பாசங்கள் உடைமையும், பசுக்களாகிய நாம் அடிமையுமாவோம்! ஆணையாகிய சிற்சத்தி இறைவனுக்குப் பண்பு ஆகும் என்று உணர்ந்து கொள்க!

## பாசம் உண்மைக்குப் பிரமாணம் :

இவ்விரண்டாஞ் சூத்திரம் பாசமுண்மைக்குப் பிரமாணம் கூறியது. ''ஆணையின் இருவினையின் நிற்பன்'' எனவே, உலகுக்கு இறைவன் நிமித்தகாரணம்; ஆணையாகிய சிற்சத்தி துணைக் காரணம்; இருவினைகள் அதன் வழித்தாகிய துணைக்காரணம்; இருவினைக்குப் பற்றுக்கோடாகிய மாயை முதற்காரணம் என்பன பெறுதும். ''இருவினையிற் போக்கு வரவு புரிய'' எனவே, ஒடுங்கியினின்று மீளவுளதாங்கால், உலகம் இருவினைகட்கு ஏற்பப் பல்வேறு வகைப்பட்டு விரியும் என்பது போதரும். வினைக்குத் தொன்மை கூறுவார், இனம் பற்றி மாயை மலங்களுக்கும் தொன்மை கூறினார்.


## மலங்களின் காரியம்:

வினையானது, வன்னம் பதம் மந்திரம் புவனம் கலை தத்துவம் என்னும் அத்துவாக்கள் இடமாக, மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றான் ஈட்டப்பட்டு, தூலகன்மமாய் ஆகாமியம் எனப் பெயர் பெறும். பின்னர்ப் பக்குவமாங்காறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுள் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய் முறையே, சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூருவம் சஞ்சிதம் புண்ணிய பாவம் என்னும் பரியாயப் பெயர்கள் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பலதிறப்பட்டுப், பிராரத்தம் எனப் பெறும். நல்வினை தீவினை எனப்படும் இருவினையின் காரியம், முறையே இன்பம் துன்பம் என்பன. ஆணவமலத்தின் காரியம் மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்பன. மாயையின் காரியம், தனு கரணம் புவனம் போகம் என்பன. ''வள்ளலால் ஆம்'' எனவே, திரோதான சத்தியுண்மையும் பெறப்பட்டதாகும்.

## ஐவகைப் பாசம் :

திரோதான சத்தியானது, மலபரிபாகம் வருவித்தற் பொருட்டு, மலத்தின் வழிநின்று மோகம் முதலியவற்றைத் தொழிற்படுத்துவதாகிய, சிவசங்கற்பத்திற்கு ஏதுவாதல் பற்றி 'மலம்' என்று உபசரித்துக் கூறப்படும். இவ்வாறு மலம் — கன்மம்—மாயை—திரோதானம்—மாயாகாரியம் என்னும் ஐவகைப் பாசமும் கண்டு கொள்க. இவற்றுள் மாயையானது, சுத்த மாயை— அசுத்த மாயை என்று இருவகைப்படும். சுத்த மாயையினின்று நிவிர்த்தி—பிரதிட்டை — வித்தை—சாந்தி—சாந்தியதீதை என்னும் பஞ்ச கலைகளும், சூக்குமை—பைசந்தி— மத்திமை—வைகரி என்னும் நால்வகை வாக்குகளும் - சிவதத்துவங்கள் ஐந்தும்-சுத்த காலம் முதல் சுத்த நிலம் ஈறாகிய முப்பத்தொன்றும் தோன்றும். அசுத்த மாயையினின்று அசுத்த காலம் முதல் அசுத்தநிலம் ஈறாகிய முப்பத்தொரு தத்துவங்களும் தோன்றும். இந்தத் தத்துவங்கள் எல்லாம் பொதுவும்—சிறப்பும் —பொதுச்சிறப்பும் எனத் தனித்தனி மூவகைப்பட்டு, உயிர்கள்தோறும் வெவ்வேறு உளவாம். இவற்றின் விரிவெல்லாம் சிவஞானபோதப் பேருரையுட் காணலாம்.

—தொடரும்



(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உலகாயதன் மதம்

உலகாயதன், சார்வாகன், நாத்திகன் என்பன, ஒருபொருட் சொற்கள் ஆகும். உலகாயத மதத்தின் கொள்கைகள் வருமாறு: ''அளவை யாவது, பிரத்தியட்சம் எனப்படும் காட்சிப் பிரமாணம் ஒன்றே; இதன்ன் வேறாக அனுமானம், ஆகமம், அபாவம், அருத்தாபத்தி, உவமானம், பாரிசேடம், சம்பவம், ஐதிகம் முதலிய பிரமாணங்கள் தேவையில்லை. நிலம் நீர் தீ காற்று என்று பூதங்கள் நான்கே. வன்மை, தண்மை, வெம்மை, அசைவு என்பன, இப் பூதங்களின் இயல்புகள். மணம் சுவை உருவம் ஊறு என்பன, இவற்றிற்குரிய குணங்கள். மண்ணிலிருந்து குடம் அமைவதுபோல, இவற்றிலிருந்து உருவங்கள் பல தோன்றும். புத்தி குணம் பொறி புலன்கள் முதலியன, நீரில் எழும் குமிழி போல, இவற்றிலிருந்து தோன்றி அழியும்.

இவற்றிற்கு வேறாகப், புண்ணிய பாவங்கள் ஆகிய வினை, ஆன்மா என்னும் உயிர், இவற்றிற்கெல்லாம் மேலான கடவுள் என்பன, எதுவும் இல்லை. வினை உயிர் கடவுள் என்பவை இருப்பதாகச் சிலர் கூறுவது, உலகமக்களை ஏமாற்றிப் பிழைப்பதற்கே யாகும். மலடி ஒருத்தி பெற்ற புதல்வன் ஒருவன், முயலின் கொம்பின்மீது ஏறி, வானத்தில் பூத்துள்ள தாமரை மலரைப் பறித்தான் என்று ஒருவன் சொன்னால், அதனை எவ்வாறு நம்ப முடியாதோ, அதுபோலவே வினை உயிர் கடவுள் ஆகியவை உண்டு என்று சொல்லுகின்ற சிலரின் சொற்களையும், நாம் நம்புதல் இயலாது.

ஒப்பிலா மலடி பெற்ற
மகன்ஒரு முயற்கொம்பு ஏறித்,
தப்பில் ஆகாயப் பூவைப்
பறித்தமை சாற்றி னாரே

## வினை இல்லை

1. 'ஒருவன் செய்கின்ற வினை அல்லது கன்மங்கள், தம்மைச் செய்தவனைப் பற்றிக் கொண்டு, மறு பிறப்புக்களிலும் தொடர்ந்து வந்து அவனைத் துன்புறுத்தும்' என்றால்; வினையைச் செய்தவன் இவ்வுலகத்தில் இறந்து போகின்றான். அவன் இறக்கின்றபோது அவனுடைய வினையும் இறந்து போகும். அது அவனைத் தொடர்வது எப்படி? இல்லை இல்லை; வினையானது தூலநிலையில் அழிந்தாலும், சூக்கும நிலையில் தொடர்ந்து பற்றி வரும் என்றால், விளக்கு அவிந்து போனால், அதன் பின்னரும் அதனுடைய ஒளி மறையாதிருக்குமோ?

2. அவ்வாறு அன்று: நாம் வயலில் இடுகின்ற வைக்கோல் தழைகள் முதலியன, நாளடைவில் மட்கி அழிந்து போனாலும், அவற்றினால் பயிர்கள் செழித்து வளரக் காண்கின்றோம். ஆதலால் ஒருவன் இறக்கும்போதே, அவனுடைய வினைகளும் அழிந்து போவதில்லை. அவைகள் தம் பயனைத் தந்தே தீரும் என்றால்; பசித்து வந்த ஒருவனுக்கு உணவு அளிக்கின்றோம். அவ்வுணவு அவன் வயிற்றில் செறித்து மலமாகி விடுகின்றது. அந்த மலத்தினால் பின்னர்ப் பயன் விளையுமோ? விளையாது. அதுபோலவே தூலமாக இருந்த வினைகள் அழிந்து சூக்குமமாக மாறிப் பயனைத் தரும் என்பது பொருந்தாது.

3. அவ்வாறு அன்று; மக்களின் உருவும் உணர்வும் தொழிலும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. அவரவருடைய உருவமும் உணர்வும் செயலும் பிறவும் தனித்தனியே வேறுபடுகின்றன. இதற்குக் காரணம் அவரவர் செய்த கன்மமாகிய வினைகளே என்றால், நம்முடைய கையிலுள்ள விரல்களில் சில நீண்டும், சில குறுகியும் இருப்பது, அந்த விரல்களின் கன்மமா? விரல்களின் நீட்சிக்கும், குறுக்கத்திற்கும் அவ்விரல்கள் செய்த வினைகள் காரணமல்ல. அதுபோலவே மக்களிடையிற் காணப்படும் பலதிற வேறுபாடுகளுக்கும் வினை காரணமன்று.

4. 'நாம் அடைகின்ற இன்பம் துன்பம் என்பவை, முறையே நாம் செய்த நல்வினை தீவினைகளால்தான் ஏற்படுகின்றது. நமக்கு இன்பமும் துன்பமும் மாறிமாறி விளைவதற்கு ஏதேனும் ஒரு காரணம் இருத்தல் வேண்டும். அதுவே நம்முடைய வினை அல்லது கன்மம் ஆகும்' என்றால்; நீர் என்பது ஒன்றே சிலசமயங்களில் சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களுடன் சேர்கின்றது; சில சமயங்களில் நெருப்பில் காய்ச்சப்பட்டுச், சுடுகின்றவெந்நீர் ஆகின்றது. இதற்குத் தண்ணீர் செய்த புண்ணியம் அல்லது பாவம் யாது? ஏதும் இல்லை. ஆகவே நாம் அடைகின்ற இன்ப துன்பங்களுக்கும் வினைகள் காரணம் என்பது பொருந்துவதாகத் தெரியவில்லை.

## ஆன்மா இல்லை

உயிர் அல்லது ஆன்மா என்னும் பொருள் இருப்பதாக, ஆத்திகர்கள் கூறுகின்றனர். ஆன்மா என்றொரு பொருள் இருப்பதாகப் பொய் சொல்லி ஏமாற்றுதல் கூடாது. உண்மையிலேயே ஆன்மா என்னும் உயிர்ப்பொருள் இருக்குமாயின், அது மெய் வாய் கண் மூக்கு செவி மனம் என்னும் ஆறுக்கும் புலப்படுதல் வேண்டும். அங்ஙனம் புலனாகாமையினால் ஆன்மா இல்லை என்பதே தேற்றமாகும். ஒரு சிலர் ஆன்மா இருப்பதாகச் சொல்லுவது, முயலுக்குக் கொம்பு இல்லையாக இருந்தும், முயற்கொம்பு மூன்றடி நீளம் இருந்தது என்று சொல்லுவது எத்தகைய பொய்யோ, அத்தகைய ஒரு முழுப் பொய்யேயாகும். ஆன்மா என்பது கண்ணுக்குத் தெரியாமையினால், அஃது ஒருபோதும் இருத்தல் இயலாது.

## கடவுள் இல்லை

ஆத்திகர்கள் 'கடவுள் கடவுள்' என்று ஒரு பொருள் இருப்பதாக, இடைவிடாது வலியுறுத்திப் பொய்கூறி வருகின்றனர். கடவுள்

என்பவர் அருவமாக இருந்தால், அவரை நாம் அறிதல் இயலாது. மேலும் அக் கடவுள் அருவமாக உள்ள ஆகாயம் போன்ற ஒரு பொருள் என்றே கொள்ளுதல் வேண்டும். இல்லை, இல்லை. கடவுள் உருவம்தான் என்றால், அவர் நிலம் நீர் தீ போன்ற பூதங்களைப் போன்று உருவமுடைய ஒரு பொருளேயாதல் வேண்டும். அவ்வாறு இல்லை, கடவுள் அருவமும் உருவமுமாக இரண்டும் சேர்ந்த நிலையில் இருக்கின்றார் என்றால்; அருவமாகிய வானம் உருவமாகிய ஒரு பெரிய கல்லை ஏந்தி நிற்க இயலுமா? கடவுள் உருவமும் அருவமுமாகிய இரண்டும் சேர்ந்தவர் என்பது பொருந்தாது! உண்மையில் கடவுள் என்று ஒரு பொருள், நம்முடைய கண்ணுக்குத் தெரியாமையினால், ஒரு போதும் இருத்தல் இயலாது. ஆகவே, ''ஒரு குருட்டு மனிதன் ஓர் இருட்டறையில், இல்லாத கறுப்புப் பூனையை, இருப்பதாக நினைத்துக் கொண்டு இருளில் தடவிப் பிடிக்க முயன்று வருந்துதல் போல'' (A blind man, searching for a black cat, in a dark room, which is not there), உண்மையிலேயே இல்லாத பாவம், புண்ணியம், ஆன்மா, கடவுள் முதலிய பொருள்களை இருப்பதாக, நாமே கற்பனை செய்துகொண்டு, அவற்றிற்காக நாம் நம் வாழ்க்கையைத் துன்பமயமாக ஆக்கிக் கொள்ளுதல் பேதைமையாகும்.

''அருவமே இறைவன் ஆகில்,
அறிவுஇன்று; ஆகாயம் ஆகும்;
உருவமே என்னிற் பூதக்
கூட்டத்தில் ஒருவன் ஆகும்;
மருவிய இரண்டும் கூடி.
நிற்பவன் என்னில், மண்மேல்
இருவிசும்பு ஒருகல் ஏந்தி
நிற்குமோ? இயம்பி டாயே!

நிலம் நீர் முதலிய பூதங்களால் நமக்குப் பயிர் விளைந்து உணவு கிடைக்கிறது. அவ்உணவினால் நம்முடைய உடலும் அறிவும் மனமும் உருவாகி வளர்ந்து செயற்பட்டு வருதலை, மிகவும் தெளிவாகப் பிருகற்பதி முனிவர், தேவேந்திரனுக்குக் கூறிய உலகாயதநூல் ஆகிய எங்கள் நாத்திகவேதத்தில் தெளிவாகக் கூறியிருக்கின்றார். அவ்வாறு இருக்கவும், இவ்வுலக மக்கள் அறிவு இல்லாமல் மயங்கி வீணாக பல வழிகளில் வெவ்வேறு சமயங்கள் கூறுகின்ற பொய்க் கொள்கைகளைக் கேட்டு மயங்கி வருந்துகின்றனரே! இஃது என்ன பேதைமை?

## பெண்ணின்பமே பேரின்பம்

1. இவ்வுலகத்தில் எத்தனையோ பலவகையான இன்பங்கள் இருக்கின்றன. அந்த இன்பங்களையெல்லாம் நாம் நம் மனம்விரும்புமாறு எல்லாம் அனுபவிக்கலாமே? அதனை விட்டொழித்து, பொறி புலன்களை அடக்கியும், மனத்தைக் கட்டுப்படுத்தியும், கைம்மேற் கிடைக்கின்ற இம்மை இன்பங்களை இவ்வுலகில் விட்டுவிட்டு, இறந்தபின்னர் மறுமையில் வானுலகத்தில் அனுபவிக்கலாம் என்று, மறுமையின்ப வானுலக மோகங்கொண்டு, அதனை அடைவதற்காகப் பட்டினி கிடந்தும், தவம் புரிந்தும், விரதங்கள் கடைப்பிடித்தும், மூடர்களாக வருந்துகின்றனரே! இஃது என்ன கொடுமை, மடைமை! ஒருவனுக்குத் தாகம் எடுத்தால் தண்ணீர் கண்ட இடத்தில், அதனை அருந்தித் தாகத்தைத் தணித்துக் கொள்ளுவதை விட்டொழித்து, தண்ணீர் இல்லாத இடத்தில்தண்ணீர் கிடைக்குமா? என்று கேட்டு அலைந்து வருந்துவதுபோல, இம்மையிலேயே கிடைக்கின்ற இன்பத்தை அனுபவிப்பதைக் கைவிட்டுவிட்டு, மறுமை இன்பத்தை அனுபவிக்கலாம் என்று எண்ணி மயங்கி, மக்கள் வாழ்நாள்ளை வீணாக்கி வருந்துகின்றனரே!

போகத்தை மண்ணிற் கண்டு,
விட்டுப்போய், விண்ணிற் கொள்ள,
மோகத்தர் ஆகி அல்லல்
முயன்றுழல் மூடர் எல்லாம்,
தாகத்தில் தண்ணீர் கண்டு,
விட்டுப்போய்த் தண்ணீர் கேட்டுச்
சோகித்தே உண்ண எண்ணித்
துயருறு வார்கள் அந்தோ!

2. இவ்வுலக இன்பங்கள் எல்லாவற்றையும் அடைந்தே திருவது என்பதை, வாழ்க்கைக் குறிக்கோளாக உடைய, வாம மார்க்கத்தைச் சேர்ந்தவனே! என்னுடைய தோழன் ஆகிய நீதான், வாழத்தெரிந்தவன்! வல்லவன், நல்லவன்! என்னுடைய நாத்திகக் கொள்கையும், உன்னுடைய வாம மார்க்கக் கொள்கையும் ஒத்திருக்கின்றன! ஆதலின் நீதான் எனக்குச் சிறந்த உயிர்த் தோழனாவாய். உனக்குச் சமானமானவர்கள் எவரும் இவ்வுலகில் இல்லை. ஏனென்றால், கோழைகளாகிய அறிவில்லாத மனிதர்கள், கொலை களவு முதலியவற்றைக் குற்றங்கள் என்று சொல்லிக்கொண்டு, அவைகளைச் செய்யத் துணிவு இல்லாமல் அடங்கி ஒடுங்கிப் பயந்து கொண்டு வாழ்கின்றார்கள். ஆனால் நீயும் நானுமோ, கொலை களவுமுதலியவற்றை நமக்குரிய இயல்பான செயலாகக் கொண்டிருக்கின்றோம். நாம் இவைகளையெல்லாம் பாவமென்றும், புண்ணியமென்றும் கருதிக் கவலைப் படுவதே இல்லை. நமக்கு நன்மை வரும், இன்பம் கிடைக்கும் என்றால், கொலை களவு ஆகியவற்றை நாம் அஞ்சாமல் ஆண்மையுடன் செய்கின்றோம். இவைகளால் செல்வம் முதலியன தேடி, நம்மைச் சுற்றி அழகிய பெண்கள் சூழ்ந்து நிற்க, நாம் அவர்கள்பால், நம் மனம் விரும்புமாறெல்லாம் இன்பங்களை அனுபவிக்கின்றோம். இவ்வாறன்றோ, யாவரும் எதற்கும் யாருக்கும் அஞ்சாமல், சுதந்திரமாகச் செயல்பட்டுச் சுகபோகங்களை யெல்லாம் அனுபவித்து வாழவேண்டும்.

வாழவே வல்லை! வாமி!
வலக்கைதா! என் னுயிர்க்குத்
தோழன்நீ ! உன்னை ஒப்பார்
சொல்லிடின் இல்லை கண்டாய்!
கோழை மானுடர் தீது என்னும்
கொலைகளவு ஆதி கொண்டே,
சூழும்வார் குழலார் மொய்ப்பச்
சுடர்எனத் தோன்றி னாயே.

3. ஆத்திகர்கள் கூறுகின்ற புராண இதிகாச நூல்களில், சிவன் திருமால் பிரமன் தேவேந்திரன் முதலிய தேவர்களெல்லாம், பெண்கள்பால் மோகமும் காமமும் கொண்டு, என்னென்னவெல்லாம் செய்திருக்கிறார்கள் என்பது, நமக்குத் தெரியாதா? அவைகளையெல்லாம் செய்தன்றோ, அவர்கள் பெரியவர்கள் ஆனார்கள்! அவர்களைப்போல நாமும் பெரியவர்கள் ஆகவேண்டுமென்றால், அழகிய இளைய பெண்களோடெல்லாம், நம்மால் எவ்வளவுக் கெவ்வளவு இயலுமோ, அவ்வளவு கூடி இன்புற்று வாழ்தல் வேண்டும். அதுதான் நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும்.

ஈசனார் அயனார் மாலோடு,
இந்திரன் தெரிவை மார்பால்,
பேசொணா வகைகள் எல்லாம்
செய்தன்றோ, பெரியோர் ஆனார்!
ஆசையால் அவர்போல் நாமும்,
ஆகவே வேண்டும் ஆயின்,
வாசமார் குழலா ரோடும்,
வல்லவா கூடி வாழ்கின்!

4. அழகிய இளைய பெண்களை நாம் காதலித்தல் வேண்டும். அக் காதலில் அவர்கள் நம்மோடு ஊடல் கொள்ளவேண்டும். நாம் அவர்களின் ஊடலைத் தணிப்பதற்காக, அவர்களுடைய தாமரை போன்ற கால்களில் செம்பஞ்சுக் குழம்பு அணிவித்து, அப்பெண்களின் கால்கள், நம்மை ஊடலால் உதைத்து மிதிக்க, அக் கால்களை நாம் நம் தலையிலும் மார்பிலும் உடலெங்கணும் சூடிக் கொள்ளுதல் வேண்டும். அந்த இன்பத்திலும் சிறந்த மேலான இன்பம், இவ்வுலகில் வேறு உண்டோ? இதனை உணர்ந்து நம்முடைய உலகாயதமாகிய நாத்திக மதத்தின், உண்மைகளைத் தெரிந்து கொண்டு நம்மோடு சேராமல், இவ்வுலக மக்கள் அறியாமைப் படுகுழியில் விழுந்து, ஆத்திகம் என்னும் பொய்ம்மாயைச் சமயப்படுகுழிகளில் வீழ்ந்து அழிந்துபோகின்றார்களே!

தையலார் ஊடல் ஆடத்
தாம்அவ ரோடும்கூடிச்,
செய்ய தாமரையை வென்ற
சீறடி செம்பஞ்சு ஊட்டி,
மெய்எலாம் பாதம் சூடும்
வேடத்தார் மெய்யிற் கூடா
மையல் மானுடர் பொய்ம்மார்க்க
வேடத்தே மாய்கின் றாரே!

5. அழகிய இளம் பெண்களின் அல்குல் ஆகிய புனித நீரில் மூழ்க வேண்டும். அவர்களுடைய ஆம்பற் பூப்போன்ற சிவந்த இதழின் அமுதத்தை, நிரம்பப் பருகுதல் வேண்டும். அவர்களின் அழகிய மார்பிலும், தோள்களிலும் சேர்ந்து வீழ்ந்து, இன்புற்றுப் பெருமிதமாக வாழவேண்டும். இந்த வாழ்க்கை நெறியைத் தெரிந்து கொள்ளாமல், அறியாமை நிறைந்த உலகமக்கள், 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று எண்ணாமல், மறுமையை நினைந்து வருந்தி, அழிந்து போகின்றார்களே! இஃது என்னே!

வாசமார் குழலார் தங்கள்
மணியல்குல் தடத்தே மூழ்கி,
நேசமார் குமுதச் செவ்வாய்
அமுதினை நிறைய உண்டு,
தேசுலாம் மணிமென் தோள்மேற்
சேர்ந்துவீற் றிருந்தி டாதே,
மாசுலாம் மனத்தோர் எல்லாம்,
மறுமைகொண்டு அழிவர் மன்னோ!

6. சந்திரனைப் போன்று ஒளிவீசுகின்ற அழகிய பல பெண்களுடன், நிலாக் காய்கின்ற வேளையில், மாளிகையின் நிலாமுற்றத்தில் சென்று, அப் பெண்கள் புரிகின்ற புன்முறுவலாகிய இளநிலா வீச, அவர்களுடைய மார்பகத்தைத் தோய்ந்து படிந்து மூழ்கி, அடைகின்ற அரிய பெரிய நல்ல சிறந்த இன்பத்தை, ஆத்திகர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்ற, அற்பமான சமய வாதிகள் இழந்து விடுகின்றனரே! அந்தோ! அவர்கள் இரங்கத் தக்கவர்.!

மதிநிலாம் நுதலா ரொடு,
மணிநிலா முன்றில் ஏறி,
முதிர்நிலா எறிப்பச், செவ்வாய்
இளநிலா முகிழ்ப்ப, மொய்த்த
கதிர்நிலா வடங்கொள் கொங்கைக்
கண்கள், மார்பகலம் மூழ்கும்
புதுநிலா வியநன் போகம்
விடுவர், புன் சமயத் தோரே.

7. ஆத்திகர்களாகிய சமயவாதிகள் தவம் என்றும், மோட்சம் என்றும்சொல்லிக்கொண்டு, அறியாமையால் வீணே அலைந்து வருந்துகின்றார்கள். உண்மையான தவம் எது? அழகிய இளைய பெண்களுடன் ஊடல் கொள்வதும்; அவர்களின் ஊடலைப் பலவகைகளில் பணிந்து தணிவிப்பதும்; அவர்களோடு ஆசைதீரப்புணர்வதும்; புணர்ந்து பிரிந்ததன் பின்னர் அவர்களை நினைந்து வாடுவதும்; அவர்களைத் தேடிச் சென்று அவர்களைப் புணர்ந்து இன்பம் பெறுவதற்காக அவர்களின் காலடிகளில் வீழ்ந்து வருந்துவதும் அன்றோ, இணையற்ற சிறந்த பெரிய அருந்தவம்! இத்தவத்தின் பயனாக விரும்பிய மகளிரைக் கூடுவதும்; நம்முடைய அறிவு முழுவதும் இழந்து, நம்முடைய குணமெல்லாம் காம வேட்கையேயாக, அவ்வுணர்விலேயே நீண்ட நெடுநேரம் மயங்கித் திளைப்பதும்; ஆகிய இவைகளன்றோ உண்மையிலேயே பேரின்பத்தைத் தருகின்ற மோட்சமாகும்! இத்தகைய மோட்சத்தை அடைந்து அதிலேயே தோய்ந்து திளைப்பவர்கள்தாம், உண்மையிலேயே மோட்ச இன்பம் பெற்ற முத்தர்கள் ஆவார்கள்.

ஊடுவது, உணர்வது, உற்ற
கலவிமங் கையரை உள்கி,
வாடுவது, அடியில் வீழ்ந்து
வருந்துவது, அருந் தவம்;பின்
கூடுவது, உணர்வு கெட்டுக்
குணமெலாம் வேட்கை யேயாய்
நீடுவது, இன்ப முத்தி;
இத்தில் நின்றார்கள் முத்தர்!

**....தொடரும்**

# வேதாந்த தரிசனம்

## முன்னுரை

வேதமானது கருமகாண்டம் எனவும், ஞானகாண்டம் எனவும், இருதிறப்படும். இவற்றுள் கருமகாண்டம் பூர்வமீமாம்சம் எனவும், ஞானகாண்டம் உத்தர மீமாம்சை அல்லது வேதாந்தம் எனவும், பெயர்பெறும். வேதத்தின் முடிவுப் பகுதிகளாகிய உபநிடதங்களினின்று பெறப்படும் தத்துவக் கருத்துக்களை, ஆராய்ச்சி செய்துவிளக்குவது வேதாந்தமாகும். வேதத்தின் அந்தமாக விளங்கும் உபநிடதங்களைத் தழுவிய எல்லாத் தத்துவக் கொள்கைகளுமே, 'வேதாந்தம்' என்று வழங்கப்படுவதற்கு உரிமையுடையன எனினும், கேவலாத்வைதம் - ஏகான்மவாதம்-மாயாவாதம் - பிரச்சின்னபவுத்தம் என்றெல்லாம் பிறராற் சுட்டப்பெறும் சங்கரரின் அத்வைதக் கொள்கைக்கே, வேதாந்தம் என்னும் பெயர், பெரும்பாலும் வழங்கப்பெற்று வருகின்றது.

## வியாசர்

ஒவ்வொரு தத்துவ நெறிக்கும் ஓர் அடிப்படைச் சூத்திர நூல் அமைந்துள்ளது. சூத்திர நூல்கள், ஒவ்வொரு குறிப்பிட்ட தத்துவத்தின் கொள்கைகளைத் தொகுத்து வரிசைப் படுத்தித் தெளிவானமுறையில் விளக்குகின்றன. அம்முறையில் வேதாந்த சூத்திரம் என்பது, பாதராயணர் எனப்படும் வியாசர் இயற்றியதாகும். இதனை ஒவ்வொரு துவாபர யுகத்திலும், திருமால் தொகுத்து வகைப்படுத்துகின்றார் எனப் பெரியோர்கள் கூறுவர். வியாசர்என்னும் சொல், தொகுத்தவர்—ஒழுங்குபடுத்தியவர் எனப் பொருள்படும். வேதங்களைத்தொகுத்து ஒழுங்குபடுத்தியதனால், பாதராயணருக்கு வேதவியாசர் எனப் பெயர் ஏற்பட்டது. இந்த யுகத்தின் வியாசருக்குக் கிருஷ்ணத் துவைபாயனர் என்பது பெயர். வியாசர், பராசர முனிவருக்கும், சத்தியவதிதேவிக்கும் தோன்றிய மைந்தராவர். அவர் கருமை நிறம் வாய்ந்தவராகவும், ஒரு தீவில் பிறந்தவராகவும் இருப்பதனால், அவருக்குக் கிருஷ்ணத் துவைபாயனர் என்னும் காரணப் பெயர் ஏற்பட்டது. அவர் நெடுங்காலம் பதரிகாசிரமத்தில் வாழ்ந்ததனால், அவருக்குப் பாதராயணர் என்னும் காரணப் பெயர் வழங்குவதாயிற்று. அசுவத்தாமர், மகாபலி, அநுமன், விபீடணர், கிருபர், பரசுராமர் என்பவர்களுடன், இவரும் ஒரு சிரஞ்சீவி (நெடுங்காலம் வாழ்பவர்) என்று கருதப்பெறுகின்றார்.

## வியாசர் அருளிய நூல்கள்

வியாசர் வேதங்களை நான்காகப் பகுத்தார். அவைகள் முறையே இருக்கு எசுர் சாமம் அதர்வணம் எனப்படும். வியாசர் இந்தநான்கு வேதங்களையும் முறையே பயிலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்னும் நான்கு முனிவர்களுக்குக் கற்பித்தார். வேதங்களைத் தொகுத்து வகுத்தது மட்டுமன்றி, மகாபாரதம் என்னும் இதிகாசத்தினையும் வியாசர் இயற்றினார். அது ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகின்றது. இவைகளை மட்டுமேயன்றி, வியாசர் பதினெண் புராணங்களையும்கூட, இயற்றியருளினார். வேதம் தலைவனின் கட்டளை (பிரபுசம்மிதை) போன்றது; இதிகாசம் நண்பனின் நயவுரைகள் (இருத்சம்மிதை) போன்றது; புராணங்கள் காதலியின் கனிவுரைகள் (காந்தாசம்மிதை) போன்றவை. இதிகாசங்களும் புராணங்களும், வேதத்திற்கும் வேதாந்தத்திற்கும் உரிய விளக்கவுரைகள் போல்வனவாகும். அவைகள், எளிய பொது மக்கள், வேதத்தின் அரிய கடினமான பொருள்களை விளங்கிக் கொள்ளத் துணைபுரிகின்றன.

## வேதாந்த சூத்திரம்

வியாசர் இயற்றிய வேதாந்த சூத்திரம், பிரமசூத்திரம் எனவும் வழங்கப்பெறும். உபநிடதங்கள், பகவத்கீதை, பிரமசூத்திரம் என்னும் மூன்றும், பிரஸ்தானத் திரயம் என வழங்கப் பெறும். இவைகள் வேதாந்த தத்துவக் கொள்கையின் அடிப்படை நூல்களாகும். உபநிடதங்கள் சுருதிப் பிரஸ்தானம் எனவும், பகவத்கீதை ஸ்மிருதிப் பிரஸ்தானம் எனவும்,

வேதாந்த சூத்திரம் நியாயப்பிரஸ்தானம் எனவும்கூறப்பெறும். பிரமசூத்திரத்திற்குச் சாரீரக சூத்திரம், பிட்சுசூத்திரம், உத்தர மீமாம்சைச் சூத்திரம் எனவும், வேறு பெயர்கள் வழங்கும். வேதாந்த சூத்திரம் நான்கு அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வோர் அத்தியாயமும், நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாதமும், பல அதிகரணங்களை உட்கொண்டது. ஒவ்வொரு அதிகரணமும், ஒன்று அல்லது பல சூத்திரங்களால் அமைந்தது. வேதாந்த சூத்திரம் (பிரம்ம சூத்திரம்), 192 அதிகரணங்களைக் கொண்டது. அதன் மொத்தச் சூத்திரங்கள் 555 ஆகும்.

## 1) சமன்வயம்

வேதாந்த சூத்திரத்தின் நான்கு அத்தியாயங்களும், சமன்வயம் அவிரோதம் சாதனம் பலன் என்பனவற்றை முறையே விவரிக்கின்றன. சமன்வயம் என்னும் முதல் அத்தியாயம், பிரமப்பொருளைப் பற்றி விவரிக்கின்றது. பிரமம் அல்லது ஆத்மாவைப் பற்றிக் கூறும் சூத்திரங்களின் பொருளை உணர்வதில், எத்தகைய சிக்கலும் நேர்வதில்லை. ஆனால் உபநிடதங்களின் பல பகுதிகள், பிரமம் ஆத்மா என்பனவற்றை மட்டும் குறிப்பிடவில்லை.

'ஆகாசம்' என்னும் சொல், வெறும் வானத்தைக் குறிக்காமல், பல இடங்களில் பரம்பொருளைக் குறித்து வருகின்றது. ஏனெனில் எல்லாப் பொருள்களும் அதிலிருந்தே தோன்றி, அதிலேயே ஒடுங்குகின்றன. இவ்வாறே 'பிராணன்' என்று சாந்தோக்கிய உபநிடதத்தில் வரும் சொல், பிராண வாயுவைக் குறிக்காமல், எல்லாப் பொருள்களும் சென்று ஒன்றுகின்ற பிரமத்தைக் குறிக்கின்றது. இங்ஙனமே அதே உபநிடதத்தில் வரும் 'மனம்' அல்லது 'மனோ மயம்' என்பதும், மனத்தைக் குறிக்காமல், மனத்தால் தியானிக்கப்படும் பொருளைக் குறிக்கின்றது. அது பிரமப்பொருளாக இருக்க முடியுமேயன்றி, தனிப்பட்ட ஆத்மாவாக இருக்க இயலாது. இத்தகைய எல்லா இடங்களிலும், ஒரு சொல்லின் பொருளை உணர்த்துவன, அது வழங்கப் பெற்றுள்ள இடமும் குறிப்புமேயாகும்.

ஆதலின் இத்தகைய உபநிடதங்கள் ஆகிய வேதாந்தத்தின் உண்மைக் கருத்துக்களைச் சிக்கறுத்துத் தெளிவுபடுத்துதற் பொருட்டே, வியாசர் வேதாந்த சூத்திரம் இயற்றியருளினார். இத்தகைய பெயர்களால் குறிப்பிடப் பெறும் பொருள்தான், பிரமம். உலகம் தோன்றுவதற்குமூலகாரணம் எதுவோ, அதுவே பிரமம் எனப்படுகின்றது. அது சத்து சித்து ஆனந்தம் என்னும் மூவியல்புகளுடையதாகத் திகழ்கின்றது. அதுவே தியானத்திற்குரிய பொருள். அதுதான் ஆன்மிக விடுதலை பெற்ற முக்தர்களால் அடையப்படும் அநுபூதிப் பொருளாகும் என்றெல்லாம், வேதாந்த சூத்திரம் பிரமத்தின் இயல்புகளை விளக்கிக் கூறுவதனால், அதற்குப் பிரமசூத்திரம் என்றும் ஒரு பெயர் வழங்குவதாயிற்று.

சாங்கிய தத்துவம், உலகமானது மூலப் பிரகிருதியினின்று தோன்றுகின்றது என்று கூறுகின்றது. ஆனால் பாதராயணர் என்னும் வியாசர், இக்கொள்கையைத் தம்முடைய வேதாந்த சூத்திரத்தின் முதல் அத்தியாயத்தில் விரிவாக மறுக்கின்றார். சாங்கிய தத்துவக் கொள்கை, உபநிடதங்களின் கருத்துக்களுக்கு மாறாக உள்ளது என்பது, சங்கரரின் விளக்கம். 'அவ்வியக்தம்', 'மகத்' என்று உபநிடதங்களில் வரும் சொற்கள், சாங்கிய தத்துவம் கூறும் தத்துவக் கூறுகளைக் குறிக்கவில்லை. சுவேதாசுவதர உபநிடதம், செம்மை வெண்மை கருமை நிறங்களையுடையதாகக் குறிப்பிடும் அஜம் என்பதுகூட, சாங்கிய தத்துவம் கூறும் மூலப் பிரகிருதியைக் குறிப்பதன்று.

உபநிடதங்களின் கூற்றுப்படி உலகத்திற்கு மூலகாரணம், அறிவுப்பொருள் ஆகிய சேதனம் ஆதலின், சாங்கியம் கூறும் அறிவற்ற அசேதனம் ஆகிய பிரதானம் என்பது, உலகிற்கு மூலகாரணம் ஆகாது. சாங்கிய தத்துவ நூல் கூறும் பிரதானம் என்பது, கைவிடுதற்குரியது; உபநிடதங்கள் கூறும் உலக மூல காரணம் ஆகிய பிரமம், அடைதற்குரியது ஆதலின், உலகிற்கு மூலகாரணம், பிரதானம் என்பது அன்று. உபநிடதங்கள் கூறும் பிரமாத்மனாகிய பரம்பொருளே, உலகத்தின் தோற்றத்திற்கு மூல அடிப்படைக் காரணம் என்று, இப்பகுதியில் பாதராயணர் விளக்க முயல்கின்றார்.

## 2) அவிரோதம்

வேதாந்த சூத்திரத்தின் இரண்டாவது அத்தியாயம், அவிரோதம் என்பது என்று முன்னர்க் கண்டோம். இதன்கண், வேதாந்தக் கொள்கைக்கு மாறுபட்ட கருத்துக்களையும், தடைகளையும் பாதராயணர் மறுத்துரைக்கின்றார். இவ்வத்தியாயத்தில், மேற்கூறிய சாங்கியக் கொள்கையே பெரிதும் மறுக்கப்படுகின்றது. ஏனெனில் அதுதான் ஏனைய கொள்கைகளிலும், முதன்மையும், சிறப்பும் உடையதாக விளங்குகின்றது. அதனை மறுத்துவிட்டால், அதனைச் சார்ந்துள்ள பிற கொள்கைகள் எல்லாம், எளிதில் தாமாகவே மறுக்கப்பட்டுவிடும்.

உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமாகச் சாங்கியம் கூறும் பிரதானம் என்பது, அறிவற்ற சடப்பொருள். ஆனால் இவ்வுலகமோ, அறிவினால் இயக்கப்பெறும் ஒருவகை வடிவமும் ஒழுங்கும் இயக்கமும் உடையதாகத் திகழ்கிறது. ஆதலின் உலகமானது அறிவற்ற அசேதனப் பொருளால் தோற்றுவிக்கப்பட்டது ஆகாது. உலகம் எங்ஙனம் இயங்கத் தொடங்குகின்றது? எவ்வாறு இயங்காமல் நின்று விடுகின்றது? என்பதனை விவரித்தல் இயலாது.

அணுக்களும், அதிர்ஷ்டம் என்னும் காண முடியாத ஓர் ஆற்றலும், உலகின் படைப்பிற்குக்காரணம் என்று வைசேடிகம் கூறுகிறது.

இதுவும் ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. காணப்படாத ஆற்றல் என்பது, அணுக்களிலோ அல்லது உயிர்களிலோ அமைந்திருப்பதாகக் கொள்ளினும், அணுக் களின் இயக்கம் எவ்வாறு நிகழ்கிறது? என்று அறிய இயலவில்லை. அணுக்கள் அறிவற்றவை. காணப்படாத ஆற்றல் என்பதும் அத்தகை யதே. இவைகள் எவ்வாறு உலகின் படைப் பிற்குக் காரணமாதல் கூடும்? அணுக்கள் அவயவப் பகுப்புடையன. அநித்தியமாக இருப்பன. அவைகளால் உலகம் தோன்றியது என்பது பொருத்தமாகத் தெரியவில்லை.

பௌத்தர்கள், உலகப் படைப்பிற்கு ஒன் றோடொன்று இணைந்து, சங்கிலி போன்ற ஒருவகைத் தொடர்பு காரணம் என்கின்றனர். அதனை ஒத்துக் கொண்டாலும், இக்காரண காரிய முறைக்கு அவர்கள் கூறும் கணபங்க வாதம் முரண்படுகின்றது.

சமணர்கள், ஒன்றற்கொன்று முரண் பட்ட ஒற்றுமையிலும் வேற்றுமையிலும், நித் தியத்திலும் அநித்தியத்திலும் நம்பிக்கை கொள்கின்றனர். ஆனால், ஒரே பொருளில் இத்தகைய இயற்கைக்கு மாறுபட்ட பண்புகள் எங்ஙனம் அமைந்திருத்தல் கூடும்? மேலும், சமணர்கள், உயிருக்குப் பெருமை சிறுமை முதலிய அளவுகளைக் கூறுகின்றனர். இதுவும் பொருத்தமாகத் தோன்றவில்லை. அளவு டைய பொருள்களெல்லாம் சடப்பொருள்கள் ஆகும். அழிந்துபடும். அவைகள் ஒருபோதும் அறிவுடைய பொருள்கள் ஆகா. இத்தகைய பல முரண்பாடுகள் காணப்படுவதனால், சம ணர்களின் கொள்கையும் ஏற்கத் தகுந்தனவாக இல்லை.

இக்கொள்கைகளெல்லாம் பொருந்தாமை யினால், வேதாந்தமானது பிரமம்தான் முடி வான பரம்பொருள், அதுதான் உலகின் நிலைக்களம் என்று கருதுகிறது. சில கொள்கை யாளர்கள், கடவுள் உலகத்திற்கு நிமித்த காரணர் (Efficient cause) ஆக மட்டும் விளங்குகின்றார் என்கின்றனர். அது தக்க பொருத்தமான கருத்தாகத் தோன்றவில்லை. ஏனெனில், அங்ஙனம் கொண்டால், கடவுள் என்பவர் ஒரு வரையறைப்பட்ட, குறைபா டுடைய பொருளாய் முடிவர். கடவுளிலிருந்தே எல்லாப் பொருள்களும் தோன்றுகின்றன. இவ் வுலகின் படைப்பு, கடவுளால் முயன்று வருந்திச் செய்யப்படுவதன்று.

உலகப் படைப்பு கடவுளுக்கு ஒரு விளை யாட்டுப் போன்ற எளிய செயலேயாகும். பாலானது தானாகவே தயிராகப் பரிணமித் தல்போல, பிரமமானது தானாகவே உலக மாகப் பரிணமிக்கின்றது. படைப்பு என்பது, புதியதாகத் தோற்றுவிக்கப்படுவதொன்றன்று. ஓர் ஆடை மடிக்கப்படுவதும் விரிக்கப்படுவதும் போலவே, இவ்வுலகமும் ஒடுங்குகின்றது, வெளிப்படுகின்றது. உண்மையில், உலக மானது பிரமத்திற்குத் தனியே இருக்கவில்லை; உலகம் பிரமத்திற்கு வேறானதன்று; காரியம் என்பது காரணத்தின் வேறுபட்டதன்று. வேறு வகையாகச் சொல்ல வேண்டுமாயின், காரணம் ஒன்று மட்டுமே உண்மையானது. அக்காரண மாகிய பிரமமே உலகமாகின்றது.

உலகமானது பிரமத்தின் தோற்றமே எனின், தனிப்பட்ட சீவனுக்கும் பிரமத்திற் கும் உள்ள உறவும் தொடர்பும் யாவை? சீவ னும் கூட ஒரு படைக்கப்பட்ட பொருளா? அல்லது பரிணாமமா? சீவன் கடவுளிலிருந்து தோற்றுவிக்கப்பட்டது என்பது பாஞ்சராத் திரக் கொள்கை. வாசுதேவரிடமிருந்து சங்கர் ஷணர் தோன்றினார் எனப் பாஞ்சராத்திரம் கூறுகின்றது. பாதராயணர் இக்கொள்கையை மறுக்கின்றார். ஆன்மாவுக்குத் தோற்றம் என்பது இருத்தல் இயலாது. ஒரு பொருளும் அதன் நிழலும் போல, ஆன்மாவானது பிரமத் தோடு தொடர்புடையது. பிரமம்தான் தொழிற்படுகின்றது, அநுபவிக்கின்றது, பல பிறவிகளை எடுக்கின்றது, முத்தி பெற முயற் சிக்கின்றது, முத்தியை அடைகின்றது.

## 3) சாதனம்

வேதாந்த சூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயம், சாதனத்தைப் பற்றியது. இஃது ஆன்மாவானது உடல் அழிந்த பிறகு எந்தெந்த வழிகளில் பயணம் புரிகின்றது என்பது பற்றி ஆராய்கிறது. உடம்பின் வேறாக உயிர் என் பது ஒன்றில்லை, என்று கூறும் சார்வாகர் களின் கொள்கை ஏற்புடையதன்று; ஏனெனில் இறந்துபோன உடலின்கண், அறிவின் அறி குறிகள் காணப்படுவதில்லை. உடல் அழிந்த பிறகு ஆன்மாவானது, தேவயானம் எனப் படும் தேவர்களின் பாதையிலோ, அல்லது பிதிர்யானம் எனப்படும் இறந்த முன்னோர் களின் பாதையிலோ, செல்லக்கூடும். இங்ஙனம் செல்லுங்கால், ஆன்மாவானது தன்னோடு இருந்த இந்திரியங்களையும் அந்தக்கரணங் களையும், நுண்ணிய நிலையில் உடன்கொண்டு செல்லுகின்றது. இப்பிறவியில் செய்த தியா னத்தின் பயனாகத் தேவயானத்தின் மூலம் பிரம்மலோகத்திற்கும், வேள்வியின் பயனாகப் பிதிர்லோகத்திற்கும் ஆன்மா செல்லுகின்றது. இவ்விரண்டிலும் செல்லாத உயிர்கள், பிறந் தும் இறந்தும் உழலுகின்றன. தேவலோகம் சென்ற உயிர்கள், தமது நல்வினைப் பயன் களை நுகர்ந்து முடித்தபின், இவ்வுலகிற்கு மீளவும் வந்து பிறக்கின்றன.

ஆன்மாவானது எவ்வாறு இவ்வுலகத் திற்கு வருகின்றது? எவ்வாறு தாயின் கருப்பை யில் நுழைகின்றது? எவ்வாறு புதிய உடலைப் பெற்று அதனுள் இயங்குகின்றது? என்பவை களை, இப்பகுதியின் சூத்திரங்கள் கூறுகின்றன. ஒரு பிறவியில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது கூட, ஆன்மாவானது சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி (நனவு கனவு உறக்கம்) என்னும் வெவ் வேறு நிலைகளை அடைகின்றது. வெவ் வேறான இந்நிலைகளிலெல்லாம், ஓர் உயிரே தொடர்ந்து நின்று விளங்குகின்றது. பிரமத்

துடன் அத்துவிதமாகக் கலக்கும்போதே, உயிரின் பிறப்பு இறப்புகள் ஆகிய நிலைகள் முடிவுறுகின்றன.

பிரமப்பொருள், தன்னிலையில் உருவமும் குணமும், அற்றது, உபநிடதங்களில் சில இடங்களில் பிரமத்திற்குக் குணங்கள் கூறப் படுகின்றன. அங்ஙனம் கூறப்படுதல், உபா சனை ஆகிய தியானம் செய்வதின் பொருட்டே யாகும். ஒளிக்கு உருவம் இல்லாதது போலப் பிரமத்திற்கும் உருவம் இல்லை. பிரமம் என்பது, அறிவே வடிவமான சுத்த சைதன்யப் பொருள் ஆகும். சூரியன் ஒன்றே பல நீர்க் கலங்களில் பிரதிபலிப்பதுபோல, பிரமமும் பல சீவர்களைப் போலக் காட்சியளிக்கின்றது. பிரமத்தின் இயல்பினை இத்தகையதென்று வரையறுத்து ஆராய்ந்து கூறுதல் இயலாது. அதனாலேயே தத்துவசாத்திர நூல்கள் பிர மத்தினை 'அல்லைஈது, அல்லைஈது', 'நேதி நேதி' என்று குறிப்பிடுகின்றன.

சீவனின் அவிச்சை அல்லது அறியாமை அழிகின்றபோது, பிரமத்துடன் தான் அத்து விதமாகக் கலந்திருத்தலைச் சீவன் அறிகின் றது. இந்தப் பிரம அத்துவிதக் கலப்பினை உணர்ந்து கொள்ளும் உபாயங்களாகவே, வித்தைகள் எனப்படும் பல்வேறு தியான முறைகள், நூல்களிற் கூறப்பட்டுள்ளன. வித்தைகள் பல்வேறு வகைப்பட்டிருப்பினும், அவைகளெல்லாம் ஒரே பயனையே குறிக் கோளாகக் கொண்டுள்ளன. ஒரு வித்தையின் இயல்பு, அதனைச் செய்யும் முறை ஆகியவை, அது கூறப்படும் இடம் குறிப்பு என்பவற்றைக் கொண்டே, முடிவு செய்யப்பெறுதல் வேண் டும். ஒருவர் எல்லா வித்தைகளையும் செய்ய மேற்கொள்ள வேண்டும் என்பது இல்லை. ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செய்தலே போதுமானது.

வித்தைகளெல்லாம் சகுணப் பிரம்ம உபா சனையாகும். சகுண உபாசனை செய்பவர்கள் இறப்பிற்குப் பின் தேவயானத்தில் செல் வார்கள். நிர்க்குணப் பிரம்ம உபாசனை செய்பவர்கள், இவ்வுலகிலேயே பிரம்ம நிலையை அடைவார்கள். சந்நியாச ஆச்சிரம நிலையில் உள்ளவர்கள், ஞானம் பெறுதற்குத் தகுதி உடையவர்கள் ஆவர். அவர்கள் எத் தகைய சடங்குகளும் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏனையவர்களுக்கே கிரியைகள் ஆகிய சடங்குகள் விதிக்கப்பட் டுள்ளன. ஏனைய நிலையில் உள்ளவர்கள், தத்தமக்கு விதிக்கப்பட்ட கிரியைகள் ஆகிய சடங்குகளைச் செய்வதற்கு உரியவராவர், அவைகள் மன அழுக்குகளைப் போக்கி, மனத் தூய்மை பெறுதற்குத் துணைபுரிகின்றன. ஞான நெறியைப்பின்பற்றுபவர்கள், இறுதியில் முத்தி நிலையை அடைகின்றார்கள். முத்தி நிலையை இறந்தபின்பே அல்லாமல், இவ்வுலக வாழ்க்கை யிலேயே கூடப் பெறலாம். முத்திநிலையில் உயர்வு தாழ்வுகளோ, வேறுபாடுகளோ இல்லை. முத்திநிலை என்பது பிரமநிலையே யாகும்.

## 4) பலன்

வேதாந்த சூத்திரத்தின் நான்காவது பகுதி, 'பலன் அத்தியாயம்' என்பது. அது பிரமஞானத்தினால் எய்தும் பலன்களைப்பற்றி முதன்மையாக விவரித்துரைக்கின்றது. இடை யிடையே வேறு பல துணைச் செய்திகளும்கூட, அதன்கண் விளக்கப் பெறும். சகுண உபாசனை புரிவோர் தேவயானத்தில் செல்வதும், அப் பயணத்தின் பல்வேறு நிலைகளும், பருவுடல் அழிந்தபின் ஆன்மா நுண்ணுடல் கொண்டு செல்வதும், இருதய வட்டத்தினின்று சுழு முனைநாடி வழியாக ஆன்மா சூரியனின் கதிர் களைத் தொடர்ந்து பிரமலோகம் செல்வதும், அங்கங்கே அதுவதற்குரிய தேவதைகள் ஆன்மாவை வழிநடத்திச் செல்வதும்போன்ற பல செய்திகள், இப்பகுதியில் கூறப்படுகின்றன. பிரமத்தை உணர்வதன் மூலம் எல்லாப் பாவங் களும் நீங்குகின்றன. பிறப்பு• இறப்புகள் ஒழிகின்றன. இவ்வுலகில் சீவித்துக் கொண் டிருக்கும்போதே பிரமத்தை உணர்ந்த சீவன் முக்தனின் உடல், பிராரத்த கன்மம் நீங்கும் வரையில் உள்ளது. பிராரத்த கன்மம் நீங்கி யதும், உடலை விடுத்துச் சீவன்முக்தன் பிரம நிலையினை அடைகின்றான்.

## வேதாந்த நூல்கள்

இவ்வாறு வேதாந்த சூத்திரம், பல்வேறு செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் சிறப்புற விளக்குகின்றது. பாதராயணர் என்னும் வேத வியாசருக்கு முன்னரே, வேதாந்தத்தை விளக் கியவர்கள் பலர் இருந்திருத்தல் வேண்டும். அஸ்மராத்தியர், ஆதுலோமி, கார்ஷ்ணாஜினி, காசகிருஷ்ணர் என்பவர்களின் பெயர்களைப் பாதராயணர் ஆங்காங்கே குறிப்பிடுகின்றார். ஆயினும் அவர்களின் நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. பாதராயணரின் வேதாந்த சூத்திரத்திற்குச் சங்கரர் உரை வகுத்துள்ளார். மற்றும் பாஸ்கரர், யாதவப் பிரகாசர், இராமா நுசர், கேசவர், நீலகண்டர், மத்துவர், பல தேவர், வல்லபர், விஞ்ஞானபிட்சு என்னும் பற் பலரின் பேருரைகளுக்கு, மற்றும் துணைவிளக்க வுரைகள் பலப்பல எழுதப் பெற்றுள்ளன.

சங்கரரின் சம்பிரதாயத்திலேயே, சங்கர பாஷ்யத்திற்கு வாசஸ்பதி என்பவர், பாமதி என்னும் விளக்கவுரை இயற்றியுள்ளார். அதனைத் தொடர்ந்து கல்பதரு, பரிமளம் என்னும் உரைகள் எழுந்துள்ளன. பத்மபாதர் சங்கரபாஷ்யம் குறித்து, பஞ்சபாதிகம் என் னும் விளக்கவுரை எழுதியுள்ளார். அதற்கு விவரணம் என்றும், தத்துவதீபனம் என்றும் விளக்கவுரைகள் தோன்றியுள்ளன. இங்ஙனமே வேதாந்தம் பற்றிய ஒவ்வொரு சம்பிரதாயத்தி லும் பற்பல பேருரைகளும், துணை விளக்க உரைகளும் ஏராளமாக இயற்றப்பட்டுள்ளன. தமிழில் தத்துவராயர் அருளிய பாடல்களும், தாண்டவராயசுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதம் என்னும் நூலும், பிறவும், வேதாந்தக் கருத்துக்களை விளக்குவனவாகும்.

## முடிவுரை

இங்ஙனம் மேல் விளக்கிப் போந்த நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் அறுவகைத் தரிசனங்கள் பற்றிய தத்துவக்கொள்கைகளும், அவற்றினை விளக்கும் நூற்றொகுதிகளும் ஏராளமாக உள்ளன. அறிவுக்கு விருந்தாக உள்ள இத்தகைய நூல்களைப் பெற்றிருத்தல், பழமையும் பெருமையும் மிக்கதாய், விழுமிய தாய் விளங்கும் நமது இந்து சமயத்தின் பலதிறச் சிறப்புக்களுள் ஒன்றாகும். அதனாலேயே இந்து சமயத்தின் பெருமையினை விதந்து வியந்து, மேலை நாட்டறிஞர்கள் பலரும் போற்றியிருக்கக் காண்கின்றோம்.

''கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெரு மதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து மதம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சிஅனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக்கூடியதும், ஆகிய சிறந்த மதம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். அதனை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக் கொள்ளுகின்றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்.'' *(1)*

என்று, இங்கிலாந்தில் தோன்றியவரும், உலகப் புகழ்பெற்ற ஜார்ஜ் பெர்னார்ட்ஷா - சார்லஸ் பிராட்லா முதலியவர்களின் பெருமதிப்பையும் நட்புரிமையையும் பெற்றுப் பிறங்கிய பெரு நாவலரும், சிறந்த பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய அன்னை வசந்தை அம்மையார் (Annie Besant) கூறியிருப்பது, இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது.

''இந்திய நாட்டின் கவிதைகள், இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது, அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள், மிகவும்சிறப்புடையனவாகக் காணப் படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக் கொள்கை நலங்களை நம்முடைய ஐரோப்பிய அறிவு நலனுடன் ஒருங்குவைத்து ஆராயும் போது, நாம் அவற்றின்முன்னர் மண்டியிட்டு வணங்கிப் பணியவேண்டும் நிலையில் இருக்கின்றோம்'' *(2)*

என்று, விக்டர் கசின் (Victor Cousin) என்னும் பிரஞ்சு நாட்டுப் பேரறிஞர் குறிப்பிட்டிருப்பதும், நம்மனோர் உளங்கொண்டு போற்றி உவகை கொள்ளுதற்கு உரியதாகும்.

—ஆசிரியர்

---

(1) "After a study of some forty years and more, of great religions of the world, I find none so perfect, none so scientific,, none so philosophical and none so spiritual, as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it, the more you try to understand it, the more deeply you will value it". —*Dr. Annie Besant.*

(2) "When we read with attention, the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the measures, or the results at which the European genius has sometimes stopped that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race, the native land of the highest philosophy". —*Victor Cousin.*

---

# இந்திய ஆன்மீக ஞானம்

நமது இந்தியநாடு, பழமையும் பெருமையும் நிறைந்தது; நாகரிகமும் கலைவளமும் பண்பாடும் செறிந்தது; ஞானத்திலும் பரமோனத்திலும் சிறந்தது. பிற துறைகளில் எவ்வாறு இருப்பினும், சமய அனுபவத்திலும், தத்துவ உணர்விலும் தலைசிறந்து விளங்கி, ஏனைய பிற நாடுகளுக்கெல்லாம் இனிய நல்ல வழிகாட்டியாகத் திகழ்தற்குரியது. நமது இந்திய நாடேயாகும். தொன்றுதொட்டு நமது இந்திய நாட்டில், சமயப் பெருஞ் சான்றோர்களும், தத்துவ ஞானிகளும் மிகப் பலர், வாழையடி வாழையாகத் தோன்றி வந்துள்ளனர். இங்ஙனம் வழிவழியாக, இறையருள் பெற்ற இணையிலாச் சான்றோர்களும், சிறந்த தத்துவ ஞானப் பெருஞ் செல்வர்களும் தோன்றி வாழ்ந்து வருவதனால், நமது இந்திய நாடு ஆன்மீக நெறியில், ஒப்புயர்வற்று விளங்குகின்றது. இந்திய நாட்டின் சடும் எடுப்பு மற்ற ஆன்மீக ஞா ச் செல்வத்தின் மேன்மையினை, எத்தனையோ பல மேலைநாட்டுப் பேரறிஞர்கள் மிகவும் வியந்து புகழ்ந்து போற்றியுள்ளனர்.

1952-ஆம் ஆண்டில், எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஒன்றில், உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த வரலாற்றுப் பேரறிஞராகிய, டாக்டர் ஆர்னால்ட் டாயின்பி அவர்கள், ''இன்னும் ஐம்பது ஆண்டுகளில் இவ்வுலகமானது ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைமையில் அடங்கி ஒடுங்கி நிற்கும்; ஆனால் 21-ஆம் நூற்றாண்டில், சமயமானது தொழிலியல் துறையின் இடத்தை வென்று கைப்பற்றிக் கொள்ளும்பொழுது, இப்பொழுது பிறரால் வெல்லப்பெற்று அடங்கியுள்ள இந்தியாவானது, தனது ஆன்மீக ஞானப் பெருமையினால், தன்னை வென்றவர்களை வெற்றி கொண்டு சிறப்புற்றோங்கி மேம்பட்டு, விளங்குவதற்குரிய வாய்ப்பு உள்ளது'' என்று, குறிப்பிட்டிருக்கின்றார். எனவே எதிர்காலத்தில், இந்திய ஆன்மீக ஞானம் உலகம் முழுவதும் பரவி, அனைவராலும் மிகவும் வியந்து மகிழ்ந்து போற்றிக் கடைப்பிடிக்கக்கூடிய, ஒரு பொற்காலம் இறையருளால் வரும் என நாம் எதிர்பார்க்கலாம்.

—ஆசிரியர்

# அகம் தரும் அருளிச் செயல்கள்

திரு நா. வேணுகோபாலநாயகர், பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர்

செயலாளர்: ஸ்ரீ வைஷ்ணவ மகா சங்கம், சென்னை.

## முன்னுரை

திருமால் நெறியை வளர்த்தருளிய ஆழ்வார்களின் பக்திப் பாடல்களை 'அருளிச் செயல்கள்' என்று போற்றுகின்றோம். 'அகம் தரும் அருளிச் செயல்கள்' என்ற தலைப்பு மூன்று பொருள்களைத் தரும். முதலாவது: ஆழ்வார்களின் பாடல்களான அருளிச்செயல்கள் தம் நெஞ்சில் (அகத்தில்) நடுநாயகமாகவைத்து நமக்கு அருளிச் செய்கின்ற கருத்துக்கள். இரண்டாவது: உலகில் வாழும் நம்முடைய அகத்தில் (மனத்தில்) ஊன்றியுள்ள ஆசைகளை வெளியிடும் அருளிச் செயல்கள். மூன்றாவது: சங்க காலத் தமிழர்கள் தங்கள் நூல்களை அகம் அல்லது அகத்திணை என்றும், புறம் அல்லது புறத்திணை என்றும் பிரித்தனர். அகத்திணைப் பாடல்கள் (அகநானூறு போன்றவை), தலைவன் தலைவியின் இல்லற வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறும். புறத்திணைப் பாடல்கள் ஆகிய புறநானூறு போன்றவை, இல்லற வாழ்க்கைக்குப் புறம்பாய் வெளியே நிகழும் போர்ச் செயல், பொருளீட்டுதல் ஆகிய செய்திகளைக் கூறும்.

திருமால்நெறி அன்பர்கள் தம்முடைய அகத்துறையிலே, இல்லற வாழ்விலே மேற்கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய குறிக்கோள்களையும் கொள்கைகளையும் அருளிச் செய்கின்ற ஆழ்வார்களின் பாடல்களை 'அகம் தரும் அருளிச் செயல்கள்' என்றும் பொருள் கொண்டு போற்றலாம்.

வைணவ பரிபாஷையிலே, பொதுவாகச் சுவாமிகள் வசிக்கும் இல்லத்தைத் 'திருமாளிகை' என்றும், பாகவதர்கள் வசிக்கும் இல்லத்தைக் 'குடிசை' என்றும் குறிப்பிடுவது உண்டு. சிறப்பாக, ஒரு வைணவர் மற்றொரு வைணவருடன் உரையாடும்போது தமது இல்லத்தைக் 'குடிசை' என்றும், மற்ற வைணவரின் இல்லத்தைத் 'திருமாளிகை' என்றும் கூறுவது வழக்கம் இது தன்னைத் தாழ்த்தியும், பிறரை உயர்த்தியும் பேசும் சிறந்த வைணவநெறிப் பண்பாட்டையும் மனப்பான்மையையும் விளக்கும்.

(1) திருமாளிகையிலோ குடிசையிலோ இல்லத்திலோ வசிக்கும் அனைவரையும் 'அருளிச் செயல்கள்' 'தொண்டக்குலத்தில் உள்ளீர்' என்று பாகுபாடு இன்றிப் பொதுவாகச் சமநிலையில் வைத்துத் தொனிகொடுத்து யாவரையும் அழைக்கின்றது. மற்றையன எல்லாம் 'பண்டைக் குலம்' என்று, தவிர்த்துக் கொள்ள வேண்டியவை. இத்தொண்டக் குலத்தில் உள்ள வைணவப் பெருமக்களுக்கு, ஆழ்வார்கள் தமது அருளிச் செயல்கள் மூலம் • உபதேசித்தருள்கின்ற அகவாழ்க்கையை, அதாவது கருக் கொள்ளுவது முதல் காலன் குறுகுவது வரையிலான, இல்லற வாழ்க்கையைப் பற்றிக் கவனிப்போம்.

(2) ஒரு வைணவ இல்லத்திலே கருத் தரிக்கப்பெற்றது என்றால், அதனை 'மணி வயிறு வாய்த்தவனே' (பெருமாள் திருமொழி 10-8) என்று வரவேற்க வேண்டும். காரணம், வைணவக் கருவானது கருப்பப் பையில் இருந்தே, 'கருவரங்கத்துள் கிடந்து கை தொழுதேன்! கண்டேன் திருவரங்கம் மேயான் திசை' (முதல் திருவந்தாதி, 6) என்று கை கூப்பும், கனியும்! இதனையே 'ஜாயமான கடாட்சம்' என்று சிறப்பிப்பார்கள். எதற்காக வைணவக்கரு வாய்க்கின்றது? உலகத்தை உய்விப்பதற்காகவே. 'உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்' (பெருமாள் திருமொழி 10-8) மேலும் அக்கருவானது 'தாயைக் குடல் விளக்கம் செய்யும்' (திருப்பாவை. 5). அக்கரு 'உலகனைத்தும் விளக்கும் ஜோதி' 'குலத்துக்கு ஓர் விளக்கு' (பெருமாள் திருமொழி 10-1).

(3) ஒரு வைணவக் கரு, குழந்தையாகி உலகிற் பிறந்தவுடனே, நாம் செய்ய வேண்டியது என்ன? அதற்கு இறைவனின் பெயரிட்டு ஏத்தவேண்டும். அதனால் அக்குழந்தை மட்டுமா? அதனைக் குடலில் சுமந்து பெற்ற அதன் தாயும்கூட நரகம் புகமாட்டாள்.

காசும் கறையுடைக் கூறைக்கும்
அங்கோர் கற்றைக்கும்,
ஆசையினால், அங்கவத்தப் பேரிடும்
ஆதர்காள்!

கேசவன் பேரிட்டு நீங்கள் தேனத்
திருமினோ!
நாயகன் நாரணன் தம் அன்னை
நரகம் புகாள்!

மானுட சாதியில் தோன்றிற்று,
ஓர் மானுட சாதியை,
மானுட சாதியின் பேரிட்டால்,
மறுமைக் கில்லை!
வானுடை மாதவா! கோவிந்தா!
என்று அழைத்தக்கால்;
நாமுடை நாரணன் தம்
அன்னை நரகம்புகாள்!

நம்பி பம்பிஎன்று மானிடப் பேர்இட்டால்
நம்பும் பிம்பு மெல்லாம், நாலுநாள்ல்
அழுங்கிப்போம்!
செம்பெருந் தாமரைக் கண்ணன் பேரிட்ட
டழைத்தக்கால்,
நம்பிகாள்? நாரணன் தம் அன்னை நரகம்
புகாள்!

மூத்திரப் பிள்ளைக்கு முகில் வண்ணன்பேர்!
ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வதுபோல்,
உங்கள்
மூத்திரப் பிள்ளையை என்முகில் வண்ணன்
பேரிட்டு,
கோத்துக் குழைத்துக் குணாலம் ஆடித்
திரிமினோ!
நாத்தகு நாரணன் தம் அன்னை நரகம்புகாள்

நாரணன் பேர்களை நாடித் திரிய வேண்டுமோ? பன்னிரு திருநாமங்களாகப் பரவியுள்ளவனே! பிறந்துள்ள புதியது எது? புதியவர் யார்? ''கேசவன் தமர்!'' இதற்குஉரிமை உடையவன் யார் ? 'நாரணன்!' மூஏழ் உலகுக்கும் நாதன்! அள்ளி அணைத்திடவே வந்துள்ள இது, மாதவன்! கன்னல் கட்டி! இது ஆடும் கூத்து, குடக் கூத்து, 'கோவிந்தன், குடக்கூத்தன்'. ஆர் இவர் கொல்? 'எம்பிரான், விட்டுவே!' கீழ்மேல் எழுபிறப்பும் தேசடைய இவர்கள் பெறும் திருநாமங்கள், 'மது சூதனன், திரிவிக்கிரமன், செந்தாமரைக்கண் எம்மான். வாமனன், என் மரகதவண்ணன், சிரீதரன், செய்ய தாமரைக்கண்ணன். இருடீகேசன், எம்பிரான், பற்பநாபன், தாமோதரன், தனி முதல்வன்.''

(4) இப்பன்னிரு திருநாமங்கள் தரும் பலன் என்ன?''அண்ணல் தாள் அணைவிக்குமே. இங்கு நாம் பெறும் பலன். அண்ணல்தாள்! முன்பு அருளப்பட்டது. தவிர்த்தல் வகையில். அதாவது'நாரணன்தம் அன்னை நரகம்புகாள்'. சிக்கென வந்து பிறந்த நம் சிசுவுக்குத் திரு நாரணன் திருநாமம் சாற்றுவதினாலே, பெறுவதும், பெறாததும் பேசப்பட்டது.

(5) ஸ்ரீவைணவக் குடியில் தோன்றிய சிசுவைத் தொட்டிலில் இட்டல்லவா தாலாட்ட வேண்டும்.

மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணி வயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன் முடிகள்
சிந்துவித்தாய், செம்பொன்சேர்
கன்னி நன்மா மதிள்புடை சூழ்
கணபுரத் தென்கருமணியே
என்னுடைய இன்னமுதே!
இராகவனே, தாலேலோ

கொங்குமலி கருங்குழலாள்
கோசலை தன் குலமதவாய்
தங்கு பெரும் புகழ்ச் சனகன்
திரு மருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்த மலி
கணபுரத்தென் கருமணியே!
எங்கள் குலத்து இன்னமுதே
இராகவனே தாலேலோ.

(6) இங்ஙனம் தாலாட்டி மகிழ்பவர்கள் பாங்காய பக்தர்களே. தொட்டிலிடப்பட்ட குழந்தையைத் திருமாலின் அடியாராக்கத் திருவிலச்சினை செய்தல் வேண்டும். இதனைப் பஞ்ச சம்ஸ்காரம் என்பர். அதாவது திருவாழி திருச்சக்கரத்தைத் தோள்களிலும், திருவடியைச் சிரசின்மீதும் பொறித்தல்.

சென்னி ஓங்கு தண் திருவேங்
கட முடையாய் உலகு
தன்னை வாழநின்ற நம்பீ!
தாமோதரா, சதிரா,
என்னையு மென் னுடைமையும், உன்
சக்கரப் பொறியொற்றிக் கொண்டு,
நின் அருளே புரிந்திருந்தேன்,
இன் என்? திருக்குறிப்பே!

திருவிலச்சினை பொறிக்கப்பட்ட ஸ்ரீவைணவன் திருமாலுக்கு உரித்தானவனே!

பருப்பதத்துக் கயல் பொறித்த
பாண்டியர் குலபதி போல்
திருப் பொலிந்த சேவடியென்
சென்னியின் மேல் பொறித்தாய்;
மருப்பொசித்தாய், மல்லடர்த்தாய்
என்றென்றுன் வாசகமே
உருப்பொலிந்த நாவினேனை
உனக்குரித் தாக்கினையே!

சங்கொடு சக்கரம் ஏந்தி நிற்கும் ஸ்ரீவைணவன்; வாழையடி வாழையாக வழுவிலா அடிமை செய்யும் குடியைச் சேர்வான். ''தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி, திகழ் திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடி குடி யாட் செய்கின்றோம்''. ஸ்ரீவைணவனின் திருநெற்றியில் இலங்கும் இறைவனின் இணையடிகள் அவனுக்குக் காப்பாகவே அமைகின்றன. திருமண் காப்பு. முழுதலர்ந்த தாமரை (முளரி) ஒன்று, இவ்இணை அடிகளைத் தாங்கி நிற்கின்றது. ''நெற்றியில் நின்று என்னை ஆளும் நிரை மலர்ப் பாதங்கள்.''

திருவலச்சினை பொறிக்கப் பெற்ற ஸ்ரீவைணவன், திருஉள்ளத்தையே பனிக் கடலையும், பள்ளி கோளையும் விட மேலான தென்று உகந்து, திருமால் அதில் வாழ்கின்றான். ''பனிக் கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு, ஓடிவந்து என்மனக் கடலில் வாழவல்ல மாய மணாள நம்பீ! தனிக் கடலே, தனிச் சுடரே, என்றென்று உனக்கு இடமாயிருக்க, என்னை உனக்கு உரித்தாக்கினையே.''

(7) ஸ்ரீவைணவச்சிறார்கள் ஆன்மிகத்தின் அடிப்படையில் இறை அறிவு தரும் கல்வியைப் பெறுவார்கள். புத்தகக் கல்வி தரும் அறிவிலே ஆன்மிகத்தை இழக்கமாட்டார்கள். ''பள்ளியில் ஓதிவந்த தம் சிறுவர் வாயில் ஓர் ஆயிரம் நாமம், ஒள்ளியவாகிப் போத....'' ''மல்லாண்ட திண்தோள் மணி வண்ணா!'' எனப் போற்றப் பயிலாதவர்களைப் பற்றி என்ன சொல்லலாம்? அவர்கள் தங்கள் தாயர்களின் வயிற்றினில் தோன்றிய குருதிக் கட்டிகளே!

துற்றியேழுல குண்ட தூமணி
வண்ணன் தன்னைத் தொழாதவர்
பெற்றதாயர் வயிற்றினைப் பெரு
நோய் செய்வான் பிறந்தார்களே!

(8) ஆனால் ஸ்ரீவைணவ நற்குடியில் தோன்றினோர்க்கு இங்ஙனம் நேராது. அவர்கள் பழிப்பிலார், பல்லாண்டு கூறுவார். ஏழு ஜன்மங்களிலும். அவர்கள் ''வாழாட்பட்டு நின்றவர், ஏழாட்காலும் பழிப்பிலர், இராக்கதர் வாழ்இலங்கை பாழாளாகப் படை பொரு தானுக்குப் பல்லாண்டு கூறுவர்.'' கருவிலே திருவுடையவராகி, திருவிலச்சினை பெற்று, இறைஉணர்வின் அடிப்படையில் ஆன்மிக அறிவுபெற்ற ஸ்ரீவைணவர்களின் சிறந்த இல்லறக் கடமைகள் யாவை? நமக்கு ஈசுவரன் அளித்துள்ளவை, மெய்வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்கள். இந்த ஐந்து புலன்களைக் கொண்டு, நாம் ஐந்து பெருங் கடமைகளை, வேள்விகளை நிறைவேற்ற வேண்டும்.

## ஐம்பெருங் கடமைகள்

கடமைகள் அல்லது வேள்விகள் என்ற ஐந்து யாவை? 1. இறைவனுக்குப் புரிய வேண்டியவை-தெய்வம். (2) முன்னோர்கள் திறத்து ஆற்ற வேண்டியவை-தென்புலத்தார். (3) ஸ்ரீவைணவ ஆத்ம பந்துக்கள், அதிதிகள்பால் இயற்ற வேண்டியவை-விருந்து. (4) தேக பந்துக்களுக்குச் செய்ய வேண்டியவை-ஒக்கல். (5) ஸ்ரீவைணவனிடம் இறைவன் உறைவதாலும், மேற்கூறிய நான்கு வேள்விகளை இயற்றும் தன்திறத்தும் செய்து கொள்பவை-தான்.

''தாமரைக் கண்ணான் உலகு'' என்றதால் பரமபதத்தையும், ''அடி அளந்தான் தாயது'' என்றதால் திருவிக்கிரம-வாமன அவதாரத்தையும், ''ஆதி பகவன்'' என்றதால் அனைத்திற்கும் ஆதிகாரணமான இறைவனையும், ''தாமரையினாள்'' என்றதால் இலட்சுமிப் பிராட்டியையும், திருக்குறளில் குறிப்பிட்டுள்ள பொய்யில் புலவராம் திருவள்ளுவரும் இந்த ஐந்து வேள்விகளையும், ஒருங்கே ஒரு குறளில் அமைத்தருளுகிறார்.

தென்புலத்தார், தெய்வம் விருந்து ஒக்கல்
தான் என்றுஆங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.

ஸ்ரீவைணவன் தனக்கு அளிக்கப்பட்டுள்ள ஐந்து புலன்களைக் கொண்டு, ஐம்பெருங் கடமைகளை-வேள்விகளை எப்படி ஆற்றுவது என்று திகைக்க வேண்டாம். இதற்காகத்தானே பரம கருணாமூர்த்தியான இறைவன், ஐந்து பூதங்களைப் பெரும் சக்திகளைக் கொண்ட இப்பிரபஞ்சத்தையே படைத்துள்ளான். இந்த ஐம்பூதங்களும், அவைகளின் சேர்க்கையால் ஏற்படுபவைகளும், தராத வசதியும் உண்டோ? எனவே பூதம் ஐந்தொடு, பூரண சந்திரோதயமாக வெளிவரும் இப்பாடலின் தலைப்பகுதியைச் சேவிக்கலாம்.

''பூதம் ஐந்தொடு, வேள்வி ஐந்து
புலன்கள் ஐந்து''

இவ்விதமாக இறைவனால் அளிக்கப்பட்ட ஐந்து புலன்களைக் கொண்டு, ஐந்து வேள்விகளையும், ஐம்பெரும் பூதங்களின் உதவி கொண்டு ஆற்றினால், என்ன அற்புதல் நிகழும். மக்கள் தமது ஐந்து பொறிகளாலும் குற்றம் ஒன்றும் இல்லாதவர்களாகவும், வள்ளல் தன்மையுடையவர்களாயும் வாழ்வார்கள்.

''ஏதம் ஒன்றும் இலாத வண்கையி
னார்கள் வாழ் திருக்கோட்டியூர்''

நினைத்த மாத்திரத்தில் இடரைத் தீர்க்க வல்ல நரசிம்மமூர்த்தியை நாதனாகக் கொண்டு, அவன் கீர்த்திகளை நாவினால் நவின்று பாடி ஆடும் வைணவ இலட்சியப் புருடர்களின் பாதப் பொடி பட்டதனாலேயே, இவ்வுலகம் சகல பேறுகளையும் பெறும். ''நாதனை, நரசிங்கனை நவின்று ஏத்துவார்கள் உழக்கிய பாத தூளிபடுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே''.

நாவினால்கூடத் தீயவைகளைச் சொல்லாத வைணவர்கள், நித்தலும் வைணவ பாகவதர்களை ஆதரிப்பது கடமை. ''நா அகாரியம் சொல்லிலாதவர், நாள்தொறும் விருந்து ஓம்புவார்,'' பஞ்சம் பரவினாலும், தானத்தில் சிறந்த காசிப்பதியினிலே தானியத்தைக் கைப்பிடியையே அளவாகக் கொண்டு விற்றாலும் கூட, வைணவபெருமக்கள் ததியாராதன கைங்காரியத்தில் தவறமாட்டார்களாம். ''காசின் வாய்க் கரம்விற்கிலும் கரவாது, மாற்றிலி சோறிட்டுத் தேசவார்த்தை படைக்கும் வண்கையினார்கள் வாழ். திருக்கோட்டியூர்''. இது மிகச் சிறந்த இலட்சியம். இயன்றவரை இயற்றல் வைணவர்கள் கடமை.

சுடராழி வானுயர்த்த சுந்தரனை நினையாத கல்நெஞ்சினார், பூமி பாராங்களே. தவ

றாக அவர்களுக்கு உணவிட்டிருப்பின், அவ்வுணவை நீக்கி வாயில் புல்லைத்தான் அடைக்க வேண்டும். பிழைப்பதற்குப் புல்போதுமே. ''நேமி சேர் தடங் கையினானை நினைப்பிலா வலி நெஞ்சுடைப் பூமிபாரங்கள் உண்ணும் சோற்றினை வாங்கிப் புல்லைத் திணிமினே'' (பெரிய திருமொழி, 4.4.5.). நம்பியின் நாமங்களை நவிலாத மானிடங்கள் அருந்தும் நீரும், அணியும் ஆடையும், பாவந்தான் செய்திருக்க வேண்டும். ''நரக நாசனை நாவிற் கொண்டும் அளையாத மானிட சாதியர் பருகும் நீரும், உடுக்கும் கூறையும் பாவம் செய்தன தான் கொலோ'' (பெரிய திருமொழி, 4.4.4.). பெருமாளை நினையாதவர்களை, வைணவர் ஒரு பொழுதும் நினைக்கலாகாது.

இறைவனது இணையடிகளை என்றும் எண்ணுபவர்களை, எண்ண எண்ணத் தேன் பெருகித் தித்திக்கும், வைணவரின் உள்ளத்தில்.

சந்தப்பூ மலர்ச்சோலை தண்சேறை
எம்பெருமான் தாளை, நாளும்
சிந்திப்பார்க் கென்னுளம் தேனூறி
எப்பொழுதும் தித்திக்குமே.
—(பெரிய திருமொழி 7.4.5.)

வையத்துள் வைணவனாக வாழ்வாங்கு வாழ விரும்புகிறவர்கட்கு, அவர்களுடைய கடமைகளைத் திரட்டித் தரும் ஒரு கவி. பரமனடி பாடினால், நெய் வேண்டாம், பால் வேண்டாம். அவனே நெய்யும் பாலும்! நாட்காலே நீராடினால் போதும். மை வேண்டாம், மலர் வேண்டாம். மேலையார் செய்யாதனவற்றைச் செய்தல் ஆகாது. அவர்கள் ஓதாதவை தீக்குறளை (புறங்கூறல்)களே. எனவே அவைகளையும் கூறலாகாது. வெண்பல் தவத்தவர்க்கும், பாகவதப் பெருமக்களுக்கும் இயன்றவரை உதவவேண்டும். இதுவே ஆத்ம உயர்வும், உய்வும். இவைகளே வைணவ வாழ்வுமுறை. வாழ்க்கையே ஒரு கைங்கரியச் சங்கிலிதானே!

வையத்து வாழ்வீர்காள், நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம், பாலுண்ணோம், நாட்காலே
நீராடி,
மையிட் டெழுதோம், மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம், தீக்குறளை
சென்றோதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

வாசுதேவனுடன் இணைபிரியாமல்வாழும் எத்தனை பிறவியும் வரவேற்க வேண்டியதே. அவனுக்கு அடிமை செய்யும் ஆசை வைணவன் மனதில் புகுந்துவிட்டால், பிற ஆசைகளைத் தலைகாட்ட விடுவானா? ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும், உன்தன்னோடு உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம் மற்றை நாம் காமங்கள் மாற்று''. எம்பெருமானுடன் இணைபிரியாத உறவு எண்ணற்ற ஆண்டுகள் வேண்டும். அவன் மார்பிலே உறையும் மங்கையும் கருணை ஊற்றாக அமைந்து நெடுமாலைத் திருமால் ஆக்குவதால், அவள் ஆதரவால் வைணவன், ஸ்ரீவைணவன் ஆகின்றான்.

அடியோ மோடும் நின்னோடும், பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு.

உலகம் வைணவனுக்கு நரகம் அன்று; வளத்துடனும், ஆன்மீக உணர்வுடனும் வாழ்ந்து திருமணமும் செய்து கொள்ள வேண்டும். திருமணம் புரிந்து கொள்வது வைணவனின் கடமை.

''திண்ணார் வெண்சங்கு உடையாய்! திருநாள்
திருவோணம் இன்றேழாம் நாள்முன்,
பண்ணோர், மொழியாரைக் கூவிமுறையட்டிப்
பல்லாண்டு கூறுவித்தேன்;
கண்ணாலம் செய்யக் கறியும் கலத்தது
அரிசியும் ஆக்கி வைத்தேன்
கண்ணா நீ நாளை தொட்டுக் கன்றின்பின்
போகேல், கோலம் செய்துஇங்கே இரு''

ஸ்ரீவைணவன் தன் வாழ்க்கைத் துணை நலத்தைத் தேடிக் கொள்ள எம்முயற்சியையும் மேற்கொள்ளவேண்டும். பின்னடைதல் ஆகாது. சிவனின் சினம் அவன் எறிய எருதிலும் பாய்ந்தாலும், அவனுடைய வில்லேயானாலும், அதை மணமாலைபோல் எடுத்து ஒரு கை பார்க்க வேண்டும். ''சினவிடையோன் சிலையிறுத்து''. ஏழு நரகங்களுக்கே இழுத்துச் செல்லும் ஏழு காளைகள் ஆனாலும், கலங்காமல் அவைகளை அடக்க வேண்டும். ''ஏறு அடர்த்ததும்''. வைணவக் கன்னிகை தக்க கணவனை அடைவதற்காகக் காமனையும் கை தொழலாம்; காலிலும் விழலாம்.

''தையொரு திங்களும் தரை விளக்கித்
தண்மண் டலமிட்டு மாசி முன்னாள்
ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக்கு அலங்கரித்து அனந்ததேவா!
உய்யுமார் கொலோ என்றுசொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் அழலுமிழ் சக்கரக்கை
வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே''.

''வெள்ளை நுண் மணல்கொண்டு தெருவணிந்து
வெள்வரைப் பதன்முன்னம் துறைபடிந்து
முள்ளுமில் லாச்சுள்ளி யெரிமடுத்து,
முயன்றுன்னை நோற்கின்றேன், காம தேவா!
கள்ளவிழிப் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கடல் வண்ண னென்பதோர் பேரெழுதி,
புள்ளினை வாய்பிளந் தானென்பதோர்
இலக்கினில் புகவென்னை எய்கிற்றியே!''

(தொடரும்)

# 'மேற்கியல் வேதாந்தம்'

''வேதாந்த வித்தகர்''
திரு டாக்டர் T. M. P. மகாதேவன், M. A., Ph. D., அவர்கள்
(தமிழாக்கம்: ந. ரா. முருகவேள்)

''ஒரு புதிய பொருள், வரலாற்றுக்குள்
வந்திருக்கின்றது;
அதுதான் மேற்கியல் வேதாந்தம்''
—கெரால்ட் இயர்ட்

வேதாந்தம் என்பது, முழு அநுபவத்தின் அல்லது எல்லையற்ற ஞானத்தின் தத்துவமாகும். அஃது, இனம் அல்லது நிறம், தட்பவெப்பம் அல்லது தேசம் என்னும் வேறுபாடுகளை அறியாதது. இந்தியாவிலேயே முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பெற நேர்ந்தபோதிலும், அஃது இந்தியநாடு ஒன்றிற்கு மட்டுமே உரியதாகக் கருதப்பெறவில்லை. வேதாந்தப் பயிற்சி பெறுதற்குரிய தகுதிகள் பலவற்றுள் ஒரு குறிப்பிட்ட இடத்தின் பிறப்பு அல்லது இனம் என்பது, சேர்க்கப்பெறவில்லை. வேதாந்தத்தின் தலை ஊற்றாக விளங்கும் உபநிடதங்கள்''அழியாப் பேற்றுக்குரிய குழந்தைகளாகிய நீங்களெல்லாம்'' என்றே, தம்முடைய அழைப்பை அமைத்து, அனைவரையும் ஒரு சேர விளிக்கின்றன.

அவ் உபநிடதங்களிலிருந்து பெருகுகின்ற அத்துவைதம் என்னும் அழிவற்ற தத்துவமானது, என்றும் உள்ள பரம்பொருளைப் பற்றிய எல்லோருடைய தாகத்தையும் தணிக்க வல்லதாகத் திகழ்கின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், உலக மக்களில் ஒரு சிலர் மட்டுமே இந்தத் தாகத்தை உணரக் கூடியவர்களாக இருப்பர் என்பது உண்மைதான். உபநிடதம் ஒன்று குறிப்பிடுவதுபோல், ''பிரமத்தைப் பற்றிக் கேட்டுணர்வது கூடப் பலருக்குக் கடினமாக இருக்கும்; ஒருகால் கேட்டாலும், பலர் அதனைப் புரிந்து கொள்வதில்லை. அதனைப் பயிற்றுவிக்கக்கூடியவன் வியக்கத்தக்கவன். அதனைக் கண்டுபிடிப்பவன், மிக வல்லமை உடையவன். ஆற்றல் மிக்க ஆசிரியர் ஒருவர் கற்பிக்க, அதனை உணர்பவன் மிகவும் நற்பேறுடையவன்''. அழியாத ஆன்மாவைத் தேடுபவர்கள், அதைத் தேடுவது எங்ஙனம் கடினமோ, அங்ஙனமே மிக அரிய ஆர்வலர்கள், ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது தேசத்துக்குத் தனிச் சிறப்பாக உரிய பொருள்கள் அல்லர். மிகவும் எதிர்பார்க்கப்படாத காலங்களில்கூட, அவர்கள் காணப்படலாம். இடம் காலம் என்னும் நிபந்தனைகள், ஆன்மாவிற்குப் பொருந்துவதில்லை. இடம்-காலம் என்பவற்றைத் தவறாகப் பயன்படுத்துதலே, மாயையாக அமைகிறது.

காலம் இடம் என்னும் தடை நிலைகளினின்று, நம்மை விடுவிக்கும் குறிக்கோள் கொண்ட ஒரு தத்துவமானது, ஆன்மிகச்செய்திகளில், ஒருசார் நிலப்பகுதி உரிமைகளின் பொய்யான எந்தக் கொள்கையையும், உடன்படுவதில்லை. இந்திய நாட்டின் இயற்கைப் பரப்பளவு, எல்லைகளை உடையதாக இருந்தாலும், இந்தியாவின் ஆன்மிகக் குடியரசுக்கு எத்தகையதோர் எல்லைப் பாகுபாடும் இல்லை. பழங்காலத்தில் இருந்ததுபோலவே, இந்தியாவின் ஆன்மிக நற்செய்தி, உலகின் எல்லாப் பகுதிகளிலும், தனக்குரிய ஆர்வலர்களை, இந்நாளிலும் மீண்டும் பெற்று வருகின்றது. மேலை நாடுகளில், அதுவும் குறிப்பாக அமெரிக்க நாட்டில், வேதாந்தத்தின் செல்வாக்குப் பரப்பளவு—அங்கேயுள்ள நம்முடைய பல சுவாமிகளின் முன்னோடியான பணிகளின் மூலம், மெல்ல மெல்ல விரிந்து பரவி வருகின்றது. மேலைநாடுகளின் சிறந்த பேரறிஞர்கள் சிலர் வேதாந்தத்தின் உயரிய சிறப்பினை உணரவும், அது திறந்துள்ள வழியினைப் பின்தொடரவும், தொடங்கியுள்ளனர். மனிதகுல வரலாற்றில் ''மீளவும் விழிப்பூட்டப் பெற்ற மேலை நாடுகளின், வேதாந்த தத்துவ ஆர்வம்'' என்னும் ஒரு புதிய பகுதி, சேர்க்கப்பெற்று வருகின்றது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வேதாந்த மையங்களில், மேலை நாட்டுக்கு வேதாந்தம் கற்பிக்கும் முறை பற்றிய சிக்கல், தீர்க்கப் பெற்றுக் கொண்டு வருகின்றது. வேதாந்த உணர்வு என்பது ஒன்றாகவே உள்ளதாயினும், அதனைப் பற்றிய விளக்கங்கள், இந்தியாவிலும்கூடப்பலவேறு வகையாக விளங்குகின்றன. சங்கரரின் கலப்பற்ற அத்வைதக் கொள்கை முதல், மத்துவரின் நெகிழ்ந்து கொடாத துவைதக் கொள்கை வரையில், இடைப்பட்டனவாக எத்தனையோ பலவகையான வேதாந்தக் கொள்கைகள் இருந்து வருகின்றன. அவைகள் அனைத்தும் ,வேதங்களையே தம்முடைய பிரமாணங்களாக உரிமை கொண்டாடி வருகின்றன. வேதங்களின் சமய தத்துவச் சிந்தனையில் நிர்க்குணப் பிரமம் என்றும், சகுணப் பிரமம் என்றும், முதன்மையான இருவகைப் போக்குகள் உள்ளன. இவற்றில் ஒன்று அல்லது மற்றொன்று; வேதாந்தத்தின் பிரிவுகள் ஒவ்வொன்றிலும், முதன்மை இடம் பெறுகின்றது.ஆனால் இந்த எல்லா வகைப் பிரிவுகளிலும், ஒருபெரும் பொதுக்கூறு அமைந்துள்ளது. அதுதான், உபநிடதங்களால் பிரமம் என்று அழைக்கப்படுகின்ற ஓர் அடிப்படைப் பரம்பொருளை உடன்படுவது. இவைகளுள், ''பிரமத்தை உருவமுடைய கடவுளாகக் கொள்வதா? அல்லது உருவமற்ற ஒரு பரம்பொருளாகக் கொள்வதா?'' என்பது பற்றி, மிகச் சிக்கலான வேறுபாடு உள்ளது. அத்துவைதம் அல்லது இரண்டின்மையாகிய சங்கரரின் வேதாந்தக் கொள்கை, பிரமம்

உருவமற்றது என்னும் பின்னைய கொள்கையினை ஆதரிக்கின்றது. ஏனையபிறவோ கடவுள் உருவம் உடையவர் என்னும் கருத்தினைத் தழுவுகின்றன. சுவாமி விவேகாநந்தர், ''மேலை நாட்டு உள்ளத்திற்குப் பெரிதும் இயைந்தது, பிரமம் உருவமற்றது என்னும் அத்வைத வேதாந்தமே என்பதனைத் தெளிவாகக் கண்டுணர்ந்தனர். அவருக்குப் பின்னர், அவருடைய பணியினை மேலை நாடுகளில் செய்துகொண்டு வருபவர்களும்கூட, தங்களின் அனுபவத்தின் மூலம், சுவாமி விவேகானந்தரின் கண்டுணர்வு எவ்வளவு பிழையற்றது, மிகவும் சரியானது என்பதை, ஆராய்ந்து உணர்ந்துள்ளனர்.

இந்தியநாடு, மேலைநாடுகளுக்கு வழங்குவதற்கு, அத்துவைத வேதாந்தமே சிறந்தது என்பதற்குப் பலவகையான காரணங்கள் உள்ளன. அத்துவைதம் அல்லாத இந்தியச் சிந்தனையின் மற்றைய கொள்கைகளுக்கு, மேலை நாடுகளில் ஒப்புமைப் பகுதிகள் பல காணப்படக்கூடும். ஆனால் அத்துவைதத் தத்துவத்திற்கு, அத்தகைய ஒப்புமைக்கூறு எதுவும் இருப்பதாகத் தோன்ற வில்லை. ஃபிக்டே, பிராட்லி போன்ற தத்துவப் பேரறிஞர்களின் சிந்தனைகளுடன், அத்துவைதக் கொள்கை ஒப்பிடப்படுவதுண்டு. என்றாலும் அவைகள் கூட, முதன்மையான பகுதிகளில் அத்துவைதத்தினின்று வேறுபடுகின்றன. ஆதலின்மனிதகுலத்தினின்று சிந்தனையிலும் அனுபவத்திலும், அத்துவைதமானது தலைசிறந்த ஓர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. மேலைநாட்டு உள்ள மானது, தனக்குரிய சூழ்நிலையினின்று நீங்கி, ஒரு நல்ல வாய்ப்பான இடத்தில் இருந்து கொண்டு உண்மையை நோக்கவும் உணரவும் விரும்புமாயின், அந்த இடமானது மேலைநாட்டுச் சூழல்களுக்குள் காணப்படமுடியாத ஓர் இடமாகவே (இந்தியாவாகவே) இருக்கும். அத்துவைதமானது தனக்கேயுள்ள சிறப்பியல்பைப் பெற்றுள்ளது. அச்சிறப்பியல்பானது, மேலை நாட்டுச் சிந்தனையின் தரங்களால்மட்டுமன்றிக் கீழைநாடு மற்றும் இந்திய நாட்டின் தரங்களாலும், ஆராய்ந்து அளந்து மதிப்பிடப்பட்டதாகும். மேலும் அத்துவைதமானது, பரப்பிரம்மத்தின் கடவுளியல் அணுக்கத்தினைத் தழுவி உள்ளடக்கியதேயன்றி, அதற்கு மாறுபட்டதன்று. அத்துவைதத்தில் கடவுளுக்கு இடமில்லை என்று வாதிடுவது, பயனில் வீண் செயலேயாகும். பரம்பொருளின் இரண்டின்மையாகிய அத்துவைதக் கொள்கையினை விளக்கும் பேருரையாளராகிய சங்கரர் பல்வேறு வகையான வடிவங்களைக்கொண்ட, உருவமுள்ள பரம்பொருளைக் குறித்து, உயிரை இயக்கும் அழகிய பற்பல துதிப்பாடல்களைப் பாடியுள்ளார். தமக்குப் பின்னர், அவர் விட்டுச் சென்றுள்ள அப்பாடல்கள், அவருடையஆழ்ந்த சிறந்த நல்ல பக்தியுணர்வுகளுக்குச் சான்று பகர்கின்றன. ''வழிபடுபவர்-வழிபடப் பெறும் தெய்வம்'' என்னும் உறவு, ஒரு சிறந்த உறவாகும். அவ்உறவு, ஏனைய பிற எல்லாவகையான உறவுகளையும்விட, மிகவும் புனிதம் வாய்ந்ததாகும்.

ஆனால் அதுவும்கூட, பிரித்துணர இயலாத இறுதிநிலை அநுபவத்தில் கடக்கப்பட்டு விடுகின்றது என்று, அத்துவைதம் கூறுகின்றது. எது மிகுதியானதோ, அது குறைந்ததாக இருக்க முடியாது. அத்துவைதமானது கடவுள் உணர்விலும் மேம்பட்டது என்றால், அது கடவுளின்மைக் கொள்கையாகவோ, அல்லது கடவுள் எதிர்ப்புக் கொள்கையாகவோ இருத்தல் இயலாது. கடவுள் உணர்வுக் கொள்கைகள் பலவும் தமக்குள் ஒன்றோடொன்று பூசலிட்டுப் பிணங்கிக் கொள்ளலாம். அத்துவைதத்திற்கு அவைகளுள் எதனோடும் பூசல் இல்லை. சங்கரரின் குருவுக்குக் குரு என்று தொன்றுதொட்டுக் கருதப்பெறுகின்ற, பழமையான அத்துவைத தத்துவ ஆசார்யர் ஒருவர், ''அத்வைதமானது பல்வேறு சமய தத்துவக் கொள்கைகளுக்கும், மூலமும் முழுமையும் ஆக விளங்குகின்றது; சமய தத்துவங்கள் யாவும், அத்துவைத தத்துவத்தின் பகுதிகளும் பாகுபாடுகளுமே ஆகும்'' என்று கூறுகின்றார்.

தற்காலத்திய மேலைநாட்டு உள்ளத்திற்கு அத்துவைதத்தின் கொள்கைப் பிடிவாதமற்ற தன்மை, மிக்கபெரும் கவர்ச்சியை விளைவிப்பதாகும். பழைய கால ஐரோப்பியத் தத்துவ ஞானிகள், வெவ்வேறு வகையான கொள்கை வகைகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியுற்றுத் திளைத்து நின்றனர். ஆனால் இப்பொழுது தற்காலத்திய சிந்தனையாளர்கள் பலர், ஏதேனும் ஒரு கொள்கையைத் தழுவுவதற்குத் தயங்குகின்றனர். ''நீர் எந்தவகையான சிந்தனைப் பிரிவைச் சேர்ந்திருக்கின்றீர்?'' என்னும் வினாவிற்கு, அமெரிக்க நாட்டுத் தத்துவ அறிஞர்களில் பலர் எத்தகைய விடையும் அளிக்க இயலாதவர்களாக இருக்கின்றனர். இருக்கத்தகும் நிலைக் கொள்கை (Idealism), இருக்கும் நிலைக் கொள்கை (Realism). உலகாயதக் கொள்கை (Materialism), மன இயல்புக் கொள்கை (Mentalism) போன்றவற்றிற்கு இடையே இருந்துவந்த பழைய காலத் தடை நிலைகள், இந்நாளில் மறைந்து வருவதாகத் தோன்றுகின்றன. அதன் விளைவாக மேலை நாட்டு உள்ளம், அத்துவைதக் கொள்கையை அறிந்து வியந்து போற்றுதற்கு ஏற்றதாக உள்ளது. ஏனெனில் அத்துவைதம் உலகில் நிலவிவரும் பலவகைக் கோட்பாடுகளுள் ஒன்றன்று. அங்ஙனமாயின், 'அத்துவைதமானது இரண்டின்மையன்றா?' என்று, எவரேனும் கேட்கக்கூடும். அத்வைதம் என்னும் சொல்லிலுள்ள முன்னொட்டானது, இரண்டெனும் தன்மைக்கு மட்டுமின்றி, கோட்பாடு என்பதற்கும்கூட, எதிர்மறையாகும் என்பதுதான், அதற்குவிடை. அத்வைதத்தின் குறிக்கோள்களில் ஒன்று, ''தத்துவங்கள் என்று சொல்லப்படுகின்றனவும், ஒன்றோடு ஒன்று முரண்படுவனவும் ஆகிய கருத்துக்கள், பல குறைபாடுகள் கொண்டவை; ஏதோ ஒன்றிற்கு அப்பால் நம்மைக் கொண்டு செல்லுகின்ற வரையில்தான், அவைகள் பயன்படும்'' என்னும் உண்மையை, உணர்த்துவதேயாகும். முழு அநுபவத்தைப் பெறுவதுதான் நம்முடைய குறிக்கோள். அத்துவைதத்தின் மிக மேலான குறிக்கோளானது, அந்த அநுபவத்தை அடையும் வரையில், ஓயாமல் உழைத்தலை வற்புறுத்துவதேயாகும்.

அத்துவைதத்தின் கொள்கைப் பிடிவாத மற்ற தன்மையைப் பற்றி, மேலே நான் குறிப்பிட்டேன். அங்ஙனம் அதன் பண்பைச் சுட்டிய தற்குரிய காரணங்களுள் ஒன்றையும் குறிப்பிட்டேன். அதற்கு வேறு காரணங்களும் கூட உள்ளன. அறிவின் கருவியாகத் தகுந்த இயற்காரணம் அமைவது பற்றிய, அத்வைதத்தின் நிலையை, உதாரணமாக நாம் எடுத்துக் கொள்வோம். மரபுநெறிமதங்கள் அறிவை நம்புவதில்லை; நம்பிக்கையினையே அவைகள் வற்புறுத்துகின்றன. மேற்கில் பலவும், கிழக்கில் சிலவும் ஆகிய தத்துவநெறிகள், பகுத்தறிவைத் தவிர வேறு எந்தவகையான அறிவையும் ஏற்பதில்லை. இந்த இருவகையான நிலைகளும், கொள்கைப் பிடிவாதத் தன்மை உடையவை என்று காண்பது கடினமன்று. நம்பிக்கையைப் பொறுத்தவரையில் அறிவிற்கு இடமில்லை என்று கொள்வதில், சமயங்கள் பிடிவாதத் தன்மை உடையனவாக இருக்கின்றன. அறிவுக்கு மேலானதோ அல்லது அப்பாற்பட்டதோ எதுவும் இல்லை என்று கொள்வதில், தத்துவ நெறிகள் பிடிவாத இயல்புடையனவாக இருக்கின்றன.

சமய தத்துவ ஆராய்ச்சியில் அறிவுக்குரிய சரியான இடத்தைக் கொடுப்பதுடன், ''மனிதனின் குறிக்கோள் பரம்பொருளின் இயல்பினைக் கொள்கையளவில் உணர்ந்துகொள்வதனால் மட்டும் அடையப் பெறுவதில்லை'' என்று அத்வைதம் சுட்டிக் காட்டுகின்றது. தத்துவம் என்பது அநுபவம்; அது வெறுந் தருக்க இயல் அறிவு மட்டும் அன்று. அநுபவத்தை விளக்கி விரித்துரைப்பதற்குத் தருக்கநெறிஅறிவு, இன்றியமையாததாக இருந்தபோதிலும், தருக்கநெறி அறிவே தத்துவமாகாது. முழு அநுபவம் தருக்க நெறி அறிவைக் கடந்து நிற்கின்றது. ஆயினும் அஃது அறிவுக்கு மாறுபட்டதன்று. கவுடபாதரின் நான்கு அத்தியாயங்கள் கொண்ட மாண்டூக்கிய காரிகை என்னும் நூலின் உரையில், வேதப் பிரமாணம் பற்றிய முதல் அத்தியாயத்தில் நிறுவப் பெறுகின்ற அத்வைத தத்துவக் கொள்கைகள், அடுத்த மூன்று அத்தியாயங்களில் தருக்க இயற் காரண விளக்கங்களின் மூலம், புரிந்து கொள்ளுவதற்கு உரியன வாகத் தெளிவுபடுத்தப்படுகின்றன. ஆதலின் அறிவாராய்ச்சி என்பது பயனுடையதாகவே விளங்குகின்றது. ஆனால் அதே சமயத்தில், அது தனக்கே எல்லாம் தெரியும் என்று அகந்தை கொள்ளவும், தன்னுடைய அறிவின் எல்லைக்கு அப்பால் அனுபவம் எதுவும் இல்லை என்று உரிமை கொண்டாடவும், முற்படுதல்கூடாது.

அத்வைதத்தின் கொள்கைப் பிடிவாத மற்ற தன்மை, அதன் வரலாற்றைக்கற்றுணர முற்படுபவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அத்வைதத்தில் கொள்கை வேறுபாடுகள் உள்ளன. ஏனெனில் அத்வைத ஆசிரியர்கள், உண்மையினை விளக்குவதற்குப் பலவகையான முறைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என்று கண்டுள்ளனர். ''ஆன்மா ஒன்றா பலவா?'' ''உலகத்தின் நிலைமை என்ன''? என்பன போன்ற வினாக்களுக்கு, அத்வைத ஆசிரியர்கள் வெவ்வேறான விடைகளை அளித்துள்ளனர். விடுதலைப்பேறு குறித்தும் கூட, அவர்கள் தமக்குள் வேறுபட்டுள்ளனர். விடுதலைப் பேற்றிற்கு வழிவகுப்பது ஞானநெறியா? அல்லது இறைவனிடத்து அன்பு செலுத்தும் பக்தி நெறியா? என்னும் வினாக்களில், சங்கரர் ஞான நெறியே விடுதலைப் பேற்றிற்கு வழி வகுக்கும் என்கின்றார். பிற்காலத்தில் அவரது வழிவந்த மதுசூதனர் என்பவர், அத்வைத தத்துவங்களை முழுவதும் ஒப்புக் கொண்டபோதிலும், பரப்பிரமத்தை உணர்வதற்குப் பக்தி நெறியே எளிய நெறி என்கின்றார். இங்ஙனமே அத்வைதத்தை அணுகும் முறைகளில் ஒன்றற்கொன்று முரணான நிலைகள் உள்ளன. அத்வைதத்தின் கொள்கை வேறுபாடுகளை விளக்கப் புகுகின்ற ஒருநூல், அத்வைதத்தை ஒரு பெரும் ஆற்றுக்கு ஒப்பாகக் கூறுகின்றது. ஆறானது தொடக்கத்தில் ஒரு மூலத்தினின்றே தோன்றிய போதிலும், சமவெளியை அடைகின்றபோது பல கிளைகளாகப் பிரிந்து, பல திற மக்களுக்கும் பயன்பட்டுப் பணிபுரிகின்றது. அதுபோலவே அத்வைதமும் வேதம் ஆகிய ஒரே மூலத்தினின்று தொடக்கத்தில் தோன்றி, மக்களிடையில் பலவேறு வகையாகப் பிரிந்து, அவரவர்களின் அறிவுக்கும் மனப்பக்குவத்திற்கும் ஏற்பப் பயன்பட்டுப் பணிபுரிகின்றது.

தத்துவ விசாரம் புரிபவர் அனைவரும், ஒரே வகையான உள்ளமும் அறிவும் உடையவர்கள்அல்லர். அவரவர்களின் இயல்புகளுக்கும் மனநிலைகளுக்கும் ஏற்ப, அத்வைத ஆசிரியர்கள், தம்முடைய கொள்கைகளை விளக்குவதற்கு வெவ்வேறு வகையான முறைகளைக் கைக்கொள்கின்றனர். பௌத்தமதம் இந்தியாவில் பரவலாகச் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், அத்வைதக் கொள்கையினைக் கற்பிப்பதற்குக் கௌடபாதர் பௌத்த மதத்தின் சொற்கள்-சொற்றொடர்கள் ஆகிய குறியீடுகளைக் கடன் பெற்றுப் பயன்படுத்தினார். சங்கரர் தம்முடைய பாடல்கள் ஒன்றில் காசுமீரச் சைவத்தின் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றார். பரமார்த்தசாரம் என்னும் அத்வைத நூல், சாங்கியக் கொள்கைபற்றி முதன் முதல் அறியப் பெற்றதொரு நூலின் மூலத்தைத் தழுவி, அமைக்கப்பெற்றுள்ளது. ஆதலின் மேலை நாடுகளில் நுழைந்து இடம் பெற்று வரும் அத்வைத வேதாந்தமானது, மேலை நாட்டு உள்ளத்திற்கு ஏற்ற முறையிலேயே விளக்கப்பெறுதல் வேண்டும். அது குறித்து வியப்படைதற்கு ஏதுமில்லை. அத்வைதத்தின் தனிச் சிறப்பியல்புக்கும், சம்பிரதாய நெறி முறைக்கும், அது முற்றிலும் மிகப் மிகப் பொருந்துவதேயாகும்.

இந்தத் தத்துவத்தை விரும்புபவர்கள் அனைவரும், அவர்கள் எங்கிருந்தாலும், மேலை நாடுகளில் அதன் வளர்ச்சிப் போக்கினைக் கூர்ந்து நோக்கிக் கவனித்து வருவதற்கு ஆவலுடன் இருப்பர். மேலைநாட்டு வாழ்க்கையில் வேதாந்தத்தைப் புகுமுகம் செய்து பரப்புவதின் மூலம், இந்திய நாடு மட்டுமன்றி, இவ்வுலகம் முழுவதுமே நலம்பெறும். மதவெறி உணர்வுகளுக்கும், மதமாற்ற முனைப்பு முயற்சிகளுக்கும், அத்வைதத்தின் இந்தப் புகுமுகப் பரப்பு முறை, அறவே பெரிதும் மாறுபட்டதாகும்.

— — —



தென்னாற்காடு மாவட்டம மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலுக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள் வருகை தந்தபொழுது, ஷை திருக்கோயிலின் தக்கார் திரு T. S. **முருகேசன்** M.A. B.L., அவர்கள் வரவேற்பிதழ் வாசித்து அளித்தல். *(5.10.83)*

பதிவு எண். எம் 7039



தென்னாற்காடு மாவட்டம், மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலின் இராசகோபுரத் திருப்பணிக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் அடிக்கல் நாட்டிச் சிறப்புரை நிகழ்த்துதல் (5.10.83)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.